

கலை மலர்

கோப்பாய்,
அரசினர் மகளிர் ஆசிரியர் கலாசாலை.
வெளியீடு.

மலர் 10 1969

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தமிழ்ப் பயிற்சி மாலைகள்

இனிய தமிழில் செந்தமிழில்

ஆக்கப்பட்டவை.

மாணவரது மொழிவளமும்

இலக்கிய நயமுஞ் சிறக்க உதவுபவை

கல்விமுறைப் புலமையாளரினதும்

மொழி வல்லாரினதும் பாராட்டுக்குகந்தவை.

பாடநூற் பிரசுர ஆலோசனைச் சபையின்


அங்கீகாரம் பெற்றவை.

நூலாசிரியை :

செல்வி. க. செள. சந்தனநங்கை அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

for QUALITY PHOTOGRAPHS



GNANAMS

JAFFNA. PHONE: 7067

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏ. கே. எஸ். அன் சன்ஸ்

வட இலங்கையின் மிகப் பெரிய

நகை, வைர வியாபாரிகள்

நகை மாளிகை

யாழ்ப்பாணம்.

போன்: 519 ஆரம்பம்: 1914

உங்கள் தேவைகளுக்கான எசன்ஸ், கலர், மின்சார உபகரணங்கள், நெற்குத்தும்-மாவு அரைக்கும் இயந்திரங்கள், அதன் உறுப்புக்கள், விளையாட்டுச் சாதனங்கள், வெகுமதிப் பொருட்கள் மற்றும் எல்லா வகைச் சில்லறைச் சாமான்கள்

வாங்குவதற்கு இன்றே விஜயம் செய்யுங்கள்.

ராஜு ஸ்ரோர்ஸ்

67, 69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

தந்தி: ராஜு போன்: 372


RAJU STORES

P. O. Box 64

67—69, KASTHURIAR ROAD, — JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைமலர்



மலர் 10

1969

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளடக்கம்

		பக்கம்
1.	இதழாசிரியர் குழு ...	1
2.	விரிவுரையாளர் குழு ...	2
3.	இதழாசிரியர் உரை ...	3
4.	சக்தி வணக்கம் ...	4
5.	கழக வாழ்த்துப்பா ...	5
6.	கலைமலரே வருக ! ...	6
7.	அமிழ்தின் மலரே நீ வாழி ! ...	7
8.	Foreword ...	8
9.	ஆசிச் செய்தி : திரு. சி. தணிகாசலம் ...	9
10.	அணிந்துரை : திரு. க. சொர்ணலிங்கம் ...	10
11.	அதிபர் ஆசியுரை ...	11
12.	ஊர்வலப் பாடல் ...	12
13.	வாழ்த்துப்பா ...	13
14.	அந்நிய நாட்டு யாத்திரை அனுபவங்கள் ...	14
15.	சமயமும் விஞ்ஞானமும் ...	20
16.	அப்பர் சுவாமிகளின் வாழ்க்கையனுபவம் ...	22
17.	சமயம் கற்க விழைமின் ...	25
18.	வாய்மை ...	28
19.	கன்னிமரியாளும் கத்தோலிக்கரும் ...	29
20.	என்றுமுள தென்தமிழ் ...	32
21.	ஆ. மொழி வி. காணும் சில தனியான பிரச்சினை. ...	33
22.	அன்புமுகம் நாடிக் கால் செல்லுதம்மா ...	38
23.	இலக்கணங் கற்பித்தல் ...	39
24.	ஆற்றங்கரை ...	44
25.	கலாட்டாக் கல்யாணம் ...	45
26.	சமணந் தந்த தமிழ் ...	48
27.	மறப்பதும் எளிதாமோ ? ...	51
28.	வெண்ணிலாவே ! ...	53
29.	உள்ளம் கவர் கள்வன் ...	56
30.	நாதஸ்வர ஓசையிலே ...	58
31.	தமிழ் விழாவில் கவியரங்கம் :	
	(i) கவியரங்கு ...	62
	(ii) எது இறைமை ? ...	66
	(iii) எது வாழ்வு ? ...	68
	(iv) எது அன்பு ? ...	75
	(v) எது புகழ் ? ...	80
32.	கிறித்தவ தின விழா ...	84
33.	பாலருக்குக் கதைகூறும் ஆசிரியர் ...	86
34.	அந்த நாள் வாராதோ ? ...	87
35.	பிரச்சினை மாணவர்கள் ...	89
36.	கவனப் பிரயோகம் ...	93
37.	தாயன்பு ...	95
38.	ලමා කාලය ...	97
39.	வன்னி வள நாடு ...	99
40.	புவியியற் கல்வியும் பாட ஆய்வும் ...	101
41.	புவியியல் சமூகப் பாடந்தானே ?	106
42.	இலங். உணவு அபிவிருத். வர. பிர. வாய்ப். இருக்கிறது	108
43.	இலங்கையும் வேளாண்மையும்	111
44.	குடி. பாடத். புள்ளி விபரங். வரைபடங். உபயோகம் ...	113
45.	விண்வெளிப் பயணம் ...	118
46.	கவிதை ஊற்று ...	122
47.	மனையியலில் விஞ்ஞானம் ...	123
48.	பெண்கள் தொழில் பார்ப்பு. எமது கருத்து	125
49.	இசைக்கலை அன்றும் இன்றும்	128
50.	ஓவியக்கலையும் கற்பித்தலும்	138
51.	விளையாட்டு விழாக்காண வாரீர்	141
52.	ஓடி விளையாடு பாப்பா ...	144
53.	மனிதன் திருந்த ...	146
54.	வளரும் எங்கழகம் ...	147
55.	இங்கு இவ்வாண்டில் ...	149
56.	ஆளுமன்றம் ...	152
57.	தமிழ் மன்றம் ...	154
58.	நுண்கலை மன்றம் ...	155
59.	சமூக இயல் மன்றம் ...	156
60	இந்து மகளிர் மன்றம் ...	157
61.	கிறித்தவ மகளிர் மன்றம் ...	158
62.	விளையாட்டு மன்றம் ...	159
63.	அருணை இல்லம் ...	160
64.	இராதா இல்லம் ...	161
65.	சுவர்ணை இல்லம் ...	162
66.	1969-ம் ஆண்டு பயி. பெ. ஆசி. வெ. மாணவிகள் ...	163
67.	மணமக்கள் வாழ்த்து ...	165

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதழாசிரியர் குழு

காப்பாளர் : திருமதி. இ. ஆனந்தக்குமாரசாமி

ஆலோசகர் : செல்வி. க. செள. சந்தனநங்கை

,, திருமதி. சு. செல்வத்துரை

,, திருமதி. ம. திருச்சிற்றம்பலம்

இதழாசிரியர் : திருமதி. இராசேஸ்வரி மயில்வாகனம்.

திருமதி. ஆச்சி சின்னத்தம்பி

செல்வி. சி. சுப்பையா

திருமதி. த. தம்பித்துரை

திருமதி. சி. சின்னத்தம்பி

செல்வி. செள. செபஸ்ரியன்பிள்ளை

திருமதி. பூ. அந்தோனிப்பிள்ளை

திருமதி. இ. வல்லிபுரம்

செல்வி. கொ. நீக்கிலாப்பிள்ளை

திருமதி. மே. யோ. வேதநாயகம்

திருமதி. அ. நடராசா

திருமதி. செ. இராசரெத்தினம்

செல்வி. ம. செல்லையா

திருமதி. பி. அன்ரன்

திருமதி. ஞா. பொன்னையா

திருமதி. நா. மோகனசுந்தரராசா

திருமதி. த. சிவபாலன்

திருமதி. ப. முருகேசு

செல்வி. பு. பொன்னம்பலம்

செல்வி. தி. வேலுப்பிள்ளை

திருமதி. பு. பேரம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரிவுரையாளர் குழு

அதிபர் : திருமதி. இ. ஆனந்தக்குமாரசாமி, M. A., M. Sc.

விரிவுரையாளர் : திருமதி. சு. செல்வத்துரை, B. A. Dip. in Edn.

திருமதி. ஜீ. கூல், B. Sc. 1st. Class Hons. (Lond.)

திருமதி. மி. தாஸ், B. A.

செல்வி. க. செள. சந்தனநங்கை, 1st. Class T. Trd.

திருமதி. ம திருச்சிற்றம்பலம், B. A.

செல்வி ஜீ. ஆர். செல்லப்பா, 1st. Class Eng. Trd.

திருமதி. பொ. பத்மநாதன், சங்கீத பூஷணம்.

திருமதி. லூ. லூ. ஜேக்கப், Art. Teach. Cert.

திருமதி. டெ. தருமராசா, P. T. I.

செல்வி. சி. செல்லையாபிள்ளை, B. Sc. Home Science.

செல்வி. மே. ஜே. மே. பாக்கியம், Demonstrator. in Agriculture.

பகுதி நேர விரிவுரையாளர் :

திரு. க. பாலசுப்பிரமணியம், (Health Educator).

சங்கைக்குரிய சகோதரி. ஜெறடீன்.

விடுதி மேற்பார்வையாளர் :

திருமதி. செ. பரமானந்தன்.

எழுதுவினைஞர் :

செல்வி. இ. கணேசபிள்ளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதழாசிரியர் உரை

அருணனை அன்பனைகக் கொண்ட அம்புஜமலர்போன்று ஆண்டுதோறும் அரிவையர் கழகத்திற் புத்தம் புதுமலராகத் தோன்றி உத்தம ஒளி வீசுவது எங்கலைமலர்.

இவ்வரிய மலர் ஆண்டொருமுறைதான் அலர்கின்றதெனினும், அறிவின் உறைவிடமாய், அன்பின் பிறப்பிடமாய், கலையின் களிப்பிடமாய், பேரறிவுப் பெட்டகமாய், காண்போர், கேட்போர், கருத்தாய்வோர் என்போரின் தகமைக் கேற்பப் போதவிழ் மலரெனப் பொலிவதுகண்டு பூரிப்படைகின்றேம்.

உயர்கருத்துடைய உன்னதமான கட்டுரைகள், உள்ளத்தை ஈர்க்கும் ஒப்பற்ற கவிதைகள், பழைய புதிய மாணவிகளின் சீரிய கருத்துக்கள் அடங்கிய அரிய உரைகள், சிறுகதைகள், உள்ளம் உவக்கும் உயரியல்புகள் ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்டு தண்ணொளிவீசும் தாமரையெனச் சிறந்து விளங்குகின்றது எம்மலர்.

இம்மலரின் காவலராய் இருந்து கருத்துவழி காட்டி, ஆர்வமும், ஆசியும், உதவியும் அளித்த எங்கள் அதிபர் அவர்களுக்கும், உன்னியபோதெல்லாம் உதவிகளை உவந்தளிக்கும் எங்கள் விரிவுரையாளர்களுக்கும், எமதரிய மலருக்கு அழகூட்டிய அறிஞர்களுக்கும், வாழ்த்துரை வழங்கிய பெரியார்களுக்கும், புகைப்படத் துறையினர்க்கும், மனங்களையாது மகிழ்ச்சியுடன் ஒத்துழைத்த மலர் வெளியீட்டுச் செயற்குழுவினர்க்கும், அழகுற அச்சேற்றி உதவிய அர்ச். சூசைமாமுனிவர் அழுத்தகத்தாருக்கும் எனது உள்ளம் நிறைந்த நன்றி உரித்தாகுக.

வணக்கம்.

திருமதி. இராசேஸ்வரி, மயில்வாகனம்.
(இதழாசிரியர்)

அ: ம: ஆ: க.
கோப்பாய்.
22-11-69.

எங்கள் கலாசாலைக்குத் தங்கள் சஞ்சிகைகளை
அனுப்பிவைத்த கல்லூரிகளுக்கு
எமது உளங்கனிந்த நன்றிகள் பல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தி வணக்கம்

பெருந்தே னிறைக்கு நறைக்கூந்தற்
பிடியே வருக முழுஞானப்
பெருக்கே வருக பிறைமௌலிப்
பெம்மான் முக்கட் சுடர்க்கிடுநல்
விருந்தே வருக மும்முதற்கும்
வித்தே வருக வித்தின்றி
விளைக்கும் பரமானந்தத்தின்
விளைவே வருக பழமறையின்
குருந்தே வருக அருள் பழுத்த
கொம்பே வருக திருக்கடைக்கண்
கொழித்த கருணைப் பெருவெள்ளங்
குடைவார் பிறவிப் பெரும்பிணிக்கோர்
மருந்தே வருக பசுங்குதலை
மழலைக் கிளியே வருகவே
மலயத்துவசன் பெற்ற பெரு
வாழ்வே வருக வருகவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழக வாழ்த்துப்பா

இராகம் : மோகனம். தாளம் : ஆதி.

பல்லவி

யாழ் நகர் மீதமர் கோப்பாய் மகளிர்
ஆசிரிய கலாசாலை வாழ்க.

அநுபல்லவி

அறிவொளி பெருக்கியே வாழ்க
ஆசிரியர் மாணவர் வாழ்க.

சரணங்கள்

1. அறிவியற் கலையுடன் அழகியற் கலைகள்
அறிந்திடும் பான்மையை அறிவோம்
அருந் தமிழ் அகநூல் அறிவுறு கணிதம்
ஆவன நிறைந்திடப் பயில்வோம். (யாழ்)

2. ஒழுக்கமும் நேர்மையும் உடலுறு பலமும்
உண்மையில் ஓங்கிடப் பயில்வோம்
ஓரிரண்டாண்டாய் ஓர்ந்திடும் கலைகள்
உலகினில் ஓங்கிடப் பயில்வோம். (யாழ்)

3. தண்டமிழ் ஓங்கவே தொண்டுகள் புரிந்து
தரணியிற் காப்போம் எம்மானம்
எண்டிசை புகழக் கலாசாலை வாழ்க
இயன்ற நற்பணிகளைப் புரிவோம். (யாழ்)

4. அரசினர் ஆசிரியர் ஆற்று நல்லுதவி
அகிலத்தில் என்றென்றும் மறவோம்
அதிபரும் ஏனைய ஆசிரியர் குழாமும்
ஆண்டவனுல் என்றும் வாழ்க. (யாழ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரம் நீட்டி அழைக்கின்றோம்
கலைமலரே வருக

நிகரற்ற புகழ்தந்து நிறைவு தந்து
நிலையான மலராக எம்முன் நின்று
மகரந்தப் பொடிகாட்டு மாறுபோல
மங்களமாய்க் கலாசாலைச் சின்னந் தாங்கி
மிகநல்ல கலைகளெல்லாம் சுவையாற் கொண்டு
மெல்லியல் போல் மிடுக்காக நடையும் போட்டு
புகழுடையோர் புவனிதனில் வருக வென்று
புன்னகையாய்க் கரம் நீட்ட வருக அம்மா.

அன்பான அதிபருடன் குழாமும் மற்றும்
ஆசிரிய மாணவிகள் தாமுங் கூடி
உன்னை அலங்கரித்தின்றே உலகிற்கீய
ஓயாது உழைக்கின்ற மலராய் உற்றுய்
நின்பெருமை பேசுதற்கு நானிலத்தின்
நீங்காத பேர்களுண்டு நினைவால் நாமும்
அன்புடனே கரம்நீட்டி அழைக்கின்றோமால்
ஆவலுடன் எங்கரத்தில் அமர்க அம்மா.

திருமதி. சா. சீனிவாசகம்,
பழையமாணவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமிழ்தின் மலரே நீ வாழி

காண்பார் கலைச்செந் தேன்சுவைத்துக் கருந்தாள் திறத்தின் கவின்நயக்கப்
பூண்பார் அவாவிப் பொன்மணியின் குவைக ளென்னப்பொருள் கொள்ள
மாண்பார் கோப்பாய்க் கலாசாலை மகளிர் கன்னிச் செந்தமிழில்
ஆண்டோர் அழகாய் அலர்விக்கும் அமிழ்தின் மலரே நீ வாழி.

கண்டா னந்தச் சவுந்திரியக் களிவை அள்ளிச் சிந்தையினுல்
உண்டோர் தெவிட்டாச் சுவைசுரந்து உள்ளம் வேட்க உயர்வுடைத்தாய்
நுண்தேர் கலையின் நுகர் மணிகள் நுதலப் பயிற்சிப் பெண்மணிகள்
கொண்டார் கலையின் மலராகக் கூர்ந்த மதிவல் லோர் வாழ்த்த.

நிறைவார் ஆண்டிற் கலாசாலை நிகழ்சீர் விழாக்கள் பண்டிகைகள்
மறையார் சமயத் தினநிகழ்ச்சி மதிநுண் வல்லோர் மாண்புரைகள்
இறைசேர் துறவோர் ஆசியுரை இலங்கை இந்திய உலாக்காட்சி
துறைசேர் பயிற்சித் திறம்சேரத் திகழும் மலரே ! நீவாழி !

பேரா சிரியப் பெருந்தகையோர் பெட்பார் புலமைத் திறத்தாலும்
ஆரா தவர்தம் வினைத்திறத்தின் அருமை யாலும் ஆசிரியச்
சீரார் மகளிர் செழுங்கலைகள் துருவத் துரந்த செம்புலனுல்
தீராச் சுவைச்செந் தமிழ்வாழ்க! துளும்பும் பயனுல் நீ வாழ்க!

திருமதி. வ. குலசேகரம்பிள்ளை,
இறுதியாண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FOREWORD

S. Thanikasalam,

Director Of Education, Jaffna.

I am happy to send you a message for publication in your magazine. I am happy to note that you are continuing the tradition set by your predecessors in publishing the Annual.

The magazine gives an opportunity to the Trainees to give expression on Literary and Educational matters of current importance. The articles will be of use to future trainees to appreciate the trends with years gone by.

I have had the opportunity of visiting your Teacher's College and seeing the various activities that the teachers were engaged in and I am happy to record that you are all conscious of the duties that we owe to the student population of our country.

I wish that your College Magazine will continue to maintain the standard which it had been maintaining in the past.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாநிலக் கல்வி அதிபதி
திரு. சி. தணிகாசலம் அவர்கள்
உவந்தளித்த
ஆசிச் செய்தியின் தமிழாக்கம்

உங்களுடைய கலாசாலைச் சஞ்சிகையிற் பிரசுரிப்பதற்கு எனது செய்தியினைத் தருவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இவ்வருடாந்த சஞ்சிகை வெளியிடப்படுவதன் மூலம் இக்கலாசாலைப் பாரம்பரியம் பேணப்பட்டு வருவது போற்றுதற்குரியது.

இலக்கியம், தற்காலக் கல்விசம்பந்தமான விடயங்களைப்பற்றித் தமது கருத்துக்களை வெளியிடுவதற்கு இச் சஞ்சிகை ஆசிரிய மாணவர்க்கு அரிய சந்தர்ப்பத்தை அளிக்கின்றது.

காலப்போக்கில் கல்வித்துறையில் காணப்படும் புதிய பழைய கருத்துக்களுக்கிடையே உள்ள தொடர்பை அறிய வருங்கால ஆசிரிய மாணவிகளுக்கு இச்சஞ்சிகை பெரிதும் உதவியாக இருக்கும்.

உங்களுடைய கலாசாலைக்குச் சமுகம் தந்து ஆசிரிய மாணவிகள் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஈடுபட்டிருப்பதைக் காண எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. நாங்கள் எமது நாட்டு மாணவர் குழாத்திற்கு ஆற்றவேண்டிய கடமைகள் பற்றிய விழிப்புடையவர்களாக நீங்கள் இருப்பதை அறிந்து ஆனந்தமடைகிறேன்.

சென்ற காலங்களில் உயர்ந்த தரத்தினை உடையதாயிருந்த உங்கள் கலாசாலைச் சஞ்சிகை தொடர்ந்து சிறந்த தரமுடையதாக இருக்க வேண்டுமென்று நான் வாழ்த்துகிறேன்.

சி. தணிகாசலம்,
வடமாநில கல்வி வித்தியாதிபதி

வித்தியா கந்தோர்,
யாழ்ப்பாணம்,
13-11-69.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலையரசு திரு. க. சொர்ணலிங்கம்

அவர்கள் அளித்த

அணிந்துரை

கோப்பாய் அரசினர் மகளிர் ஆசிரிய பயிற்சிக் கழக வெளியீடான கலைமலருக்கு வாழ்த்துரை வழங்குவதிற் களிப்படைகின்றேன்.

நாடகத்துறையிற் பெருமுயற்சியும், நல்லூக்கமும் எடுத்துத் தனக்கென ஒரு பாதையை வகுத்துச் சிறந்த வெற்றியுடன் இக்கலாசாலை நாடகங்களை நடாத்துவதைப் பார்த்துப் பெருமிதமும், பூரிப்பும் அடைந்து வரும் நான், இக்கலாசாலை எழுத்துத் துறையிலும் ஆர்வம் காட்டுவதால் ஆண்டுதோறும் 'கலைமலர்' கற்பகப் பூங்கொத்தாக மலர்ந்து மணம் பரப்புவதையும் நுகர்ந்து இன்பம் அடைந்து வருகிறேன்.

பணத்திற்காக கீழ்த்தரமான வகையிற் சஞ்சிகைகளையும், பத்திரிகைகளையும், நூல்களையும் பலர் வெளியிட்டு அநேக வாசகர்களைச் சம்பாதித்துக் கொண்ட இக்காலத்தில், உயர்ந்த அறிவு சான்ற நூல்களையோ, சஞ்சிகைகளையோ பெரும்பாலானவர்கள் திரும்பியும் பார்ப்பதில்லை. காரணம், வாசகர்களின் இரசனையை அத்தகைய நிலைக்கு இன்று வெளியாகும் பெரும்பாலான வெளியீடுகள் மழுங்கச் செய்து விட்டமையாகும்.

கல்வி கல்லாத மக்களின் அறிவுக்கும், பண்பாடு தெரியாதவர்களின் தரத்திற்கும் அறிவின் தூதுவர்களாக விளங்கவேண்டிய பத்திரிகைகள், சஞ்சிகைகள், நூல்கள் என்பன தாழ்ந்து விடக்கூடாது. அவர்களுக்கு நல்ல றிவையூட்டி, உயர்ந்த பண்பைப் புகட்டி, அவர்களது வாழ்வு நிலையை உயர்த்த உழைக்கவேண்டும். அத்தகைய நோக்கில் இக் 'கலைமலர்' வெளிவருவதுகண்டு பெருமகிழ்வடைகிறேன்.

கலை, இலக்கியங்கள் ஒழுங்காகவும், செம்மையாகவும் வளர்வதற்கு, கலாசாலைகளும், கல்லூரிகளும் மிகவும் வசதியானவை. கலை, இலக்கியங்களை மாணவர்கள் அறிவது படிப்புக்குப் புறம்பானது என்று நினையாது கல்வி நிறுவனங்கள் அனைத்தும் இப்பணியில் ஈடுபட வேண்டும் என்று இவ்வேளையிற் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் அதிபர்



திருமதி. இ. ஆனந்தக்குமாரசாமி அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர் ஆசியுரை

மனிதனை மனிதனுக்கு அவனைத் தெய்வநிலைக்கு உயர்த்துவது ஆசிரியப்பணி. ஆசிரியர்கள் தூய வாழ்க்கையுடையவராய்ச் சமுதாயத்தைத் துலங்கவைக்க வேண்டியவர்களாவர். இத்தன்மைத்தான ஆசிரியர்கள் மாணவர்களுக்கு எடுத்துக்காட்டாக இருப்பதுடன், அவர் களுடைய ஆற்றல்கள், ஆர்வங்களுக்கேற்பத் தரம் பிரித் துக் கல்வி கற்பிப்பார்களேயாஞல் அவர்களுக்கு நிகர் அவர்களேதான்.

வருடந்தோறும் எங்கழகத்திற் பயிற்சி பெறும் ஆசிரிய மாணவிகள், எவ்விடயத்தையும் எண்ணி ஆராய்ந்து சீர்தூக்கிப்பார்த்துத் திறம்படச் செய்யவேண்டு மென்பது எனது அவா. மாணவிகளின் அயராத உழைப் பினுல் மலரும் இக்கலைமலர் மேலும் மேலும் புதுப்புது முறையிற் பொலிவுடன்திகழ மனமார வாழ்த்துகின்றேன்.

ஆசிரிய மாணவிகள் ஒவ்வொருவரும் நாட்டின் நலனே தமது நலனுகவும், சமுதாயத் தேவையே தந் தேவையாகவுங் கொண்டு நாடெங்குங் கல்விப்பணியாற் றிச் சிறப்புடன் வாழ்வார்களாக.

இ. ஆனந்தக்குமாரசாமி.

அரசினர் மகளிர்,
ஆசிரியர் கலாசாலை,
கோப்பாய்,
25-10-69.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் உருவச்சிலை ஊர்வலப் பாடல்

(மேற்படி பெரியாரின் உருவச்சிலை ஊர்வலமாக எங்கழக வாயிலை அடைந்தபொழுது ஆசிரிய மாணவர்களாற் பாடப்பட்டது.)

நானிலம் போற்றிடும் நாவலர் பதமலர்
நாளிதிற் பணிந்திடுவோம் — பெரும்
பாவலனுய் இந்தப் பாரினிற் தோன்றினன்
பாடி மகிழ்ந்திடுவோம்.


நல்லூநகர் தரு ஞான ஒளிநிறை
வல்லவன் நாவலனே — புவி
உள்ளளவும் புகழ் பொங்கி மிளிர்ந்திடச்
சொல்லிசை பூண்டவனே — நானி.....

ஆன்மநற் பணிகளை ஆர்வமதாகவே
ஆற்றிய ஆர்வலனே — தெய்வ
நாமறை சாற்றிடும் நல்வழி காட்டிடும்
நாவலனைப் பணிவோம்.

சொன்னயம் பொருணயம் சொரிந்து நல்லுரைதனில்
இன்னமுதாய் அளித்தான் — எங்கள்
கன்னல் மொழிக்குயிரூட்டிய வண்மையை
உன்னியே வாழ்ந்திடுவோம்.

திருமதி. இராசேஸ்வரி மயில்வாகனம்.
விடுகை வருடம்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சைவமும் தமிழுஞ் செழித்தோங்கச் சீரிய பணிபுரிந்த
செம்மல் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எங்கழக அன்பையும், அபிமானத்தையும் பெற்ற
கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலையரசு திரு. க. சொர்ணலிங்கம் அவர்களின்
எண்பது வயது நிறைவு விழாவை நடாத்திய ஞான்று
கோவை அரசினர் மகளிர் ஆசிரியர் பயிற்சிக் கழகம்
பாடி உவந்தளித்த
வாழ்த்துப் பா

இராகம்: பிலஹரி. தாளம்: ஆதி

பல்லவி

மாநிலம் புகழ்வோனே — மா பெருந்தலைவ
மகிழ்வுடன் வாழ்த்தினமே.

அனுபல்லவி

இயலிசை நாடகம் எழில் நிறைந் தோங்க
இயைபுடன் பணிசெய்யும் இன்புடையாள — மாநிலம்

சரணம்

கலையர சேயெங் கவின்பெறு தமிழின்
நிலையுயர்ந் திலங்க நீள்புவி தனிலே
மகிழ்வுடன் விளங்கும் மானிப்பாய்ப் பதியில்
மாண்புடன் தோன்றிய மகிமைப் பிரதாப — மாநிலம்

கம்பன் படைத்தநற் கூனியாய் நின்றுய்
வம்பு செறிபல வேடம் புனைந்தாய்
இன்ப நினைவாலெம் இதயம் புகுந்தாய்
அன்புடன் நாமுனை வாழ்த்துகின் றேமே — மாநிலம்

எண்ப தகவையிலு மிளந்தமிழ் வீர
மண்புகழ் தமிழின் மாண்புறு தீர
எழிலுறு ஈழத்தின் கலைவளர் அரசே
ஏழிசை மன்ன இன்றமிழ்ப் பயனே — மாநிலம்

ஆய கலைபயில் அரிவையர் நாமே
ஆர்வமாய் விளங்க அருந்துணை புரிந்தாய்
கார்மேக மன்ன கருணை பொழிந்தாய்
கலையர சேயெங் கருத்தில் நிறைந்தாய் — மாநிலம்

ஆண்டுபல் லாண்டுகள் அருளுடன் வாழி
அழகுறு கலைநிறை அன்பநீ வாழி
அரனருள் பொலிந்து அவனியில் வாழி
ஆயகலை தரு அரசே வாழி — மாநிலம்

வணக்கம்.

அ. ஆ. ம. க.
கோப்பாய்
18-3-69.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நிய நாட்டு யாத்திரை அனுபவங்கள்

திரு. க. இராமச்சந்திரன், (ஆசிரியர் 'சமயமஞ்சரி').

இந்தக் கட்டுரையின் தலையங்கம் எமது சொந்தச் சிருஷ்டியன்று. கோப்பாய் அரசினர் மகளிர் ஆசிரியர் கலாசாலை அதிபர் திருமதி. இ. ஆனந்தக்குமாரசாமி அவர்களின் விருப்பத்திற்குப் பொருந்தச் சூட்டப்பட்ட தொன்றுகும். நாற்பது ஆண்டுகளாக இலங்கையிலும், இந்தியாவிலும் செய்து முடித்த எமது யாத்திரையானது, சென்ற பதினெரு ஆண்டுகளாகத் தொடர்ந்து நடந்து வருகின்றது. ஐப்பான் வரையிலுமுள்ள தென்கிழக்கு ஆசியநாடுகள், மத்திய ஆசியநாடுகள், ஐரோப்பிய நாடுகளில் பெரும்பாலானவை, அமெரிக்கா, கனடா ஆகிய இருகண்டங்கள் எல்லாம் பிந்திய யாத்திரையில் இடம்பெற்றுள்ளன. குறைந்தது முந்நூறு பக்கங்கள் கொண்ட ஒரு நூலை நிரப்பக்கூடிய அனுபவங்கள் உள. இவற்றுள் எதைஎடுப்பது எதை விடுவது என்பதே எமக்குள்ள முதலாவது பிரச்சனையாகும். எனவே சில முக்கிய அற்புத ஆன்மீக அநுபவங்களை மாத்திரம் இக் கட்டுரையில் அடக்க விரும்புகின்றேம். இதுவே மேலே குறிப்பிட்ட அம்மையாரின் கோரிக்கையுமாகும். "ஒன்றே டொன்று தொடர்பில்லா துணுக்குகளின் கூட்டாயிருந்தாலும் போதும்" என்பது அன்னார் வாக்கு.

வாழ்க்கையானது வெவ்வேறு மக்களால் வெவ்வேறு குறிக்கோள்களுடன் நோக்கப்படுகின்றது. பெரும்பாலான மக்கள் அதை ஒரு போராட்டமாக எண்ணுகின்றனர். மேல்நாட்டு உலகாயதக் கொள்கைகள் பரவியபின் இக்கருத்து (struggle for existence) நன்கு செறிந்துள்ளது. வாழ்க்கையைக் களியாட்டமாகவோ சூதாட்டமாகவோ பாவித்துத் திண்டாடுவோருமுண்டு. "நாடகமே உலகம்" என்று வெறும் வேதாந்தம் பேசி வாழ்க்கையின் பொறுப்பை ஏற்காது ஒரு மூலையில் ஒடி ஒதுங்கிக் காலங்கழித்து இறுதியில் ஏமாற்றும் கடையர்களும் உண்டு. இவர்கட்கு எதிர்மாறாய் இருட்டுச்சந்தையிலோ அல்லது வேறு எந்தவிதத் திருட்டு முறையிலோ பணந்தேடிக் குவிப்பதையே தனிநோக்காக் கொண்டு வாழ்வைப் பாழாக்குவோருமுளர். இவற்றிற்கெல்லாம் புறம்பாக, இருபதாம் நூற்றாண்டில் புதிதாகத் தோன்றிய அரசியல் வாழ்க்கை என்ற ஒன்றும் உண்டு. பதவிமோக அடிப்படையில் உதயமான இந்த நவீன சூதாட்டமானது கிராம சபையிலிருந்து பாராளுமன்றம் வரையில் பரவியுள்ளது. மனித வாழ்க்கையின் பிரச்சனைகளைப் பன்மடங்காகப் பெருக்கும் சக்தியுண்டு இதற்கு. எனவே பலர் எளிதில் இந்தப் பெரிய சூதாட்டத்தில் சிக்கி, நாட்டின் அமைதியைக் கெடுக்கின்றனர்.

மேலே தரப்பட்டுள்ள மாறுபட்ட கொள்கைகள், கருத்து வேற்றுமைகள் எல்லா நாடுகளிலும், எல்லாச் சமயச் சார்புகளிலும் உள்ளன. மேல்நாடுகளில் உலகாயதமும் கீழ்த்தேசங்களில் பாரமார்த்திகமும், செல்வாக்கில் இருக்கின்றன எனப் பொதுப்படப் பிரித்துக்கூறுதல் தப்பாகும். இவ்விரு பிரிவினர்களின் மத்தியில் வாழ்க்கையை ஒரு யாத்திரையாகப் பேணும் மக்கள் வாழவே செய்கின்றனர். சிவத்திலிருந்து வந்த சீவன், மறுபடியும் சிவத்தை நோக்கிச் செல்வதே மனிதப் பிறவியின் உன்னத நோக்கம் என்பது இவர்கள் கருத்து. இவர்கள் தொகை சிறிதாயிருக்கலாம். ஆனால் இச்சிறு கூட்டத்தினரை நாம் ஆர்வத்துடன் விரும்பித்தேடின் எல்லாநாடுகளிலும், பல்வேறு மொழி பேசும், வித்தியாசமான சமயநெறிகளைப் பின்பற்றும் மக்களிடையே சந்திக்கமுடியும். யான் பெற்ற அநுபவங்கள் இப்பேருண்மையை வலுப்படுத்தும் முறையில் அமைந்திருந்தன வெனக்கூறி மேற்செல்வோம். இந்தச் சந்தர்ப்பத்தில் திருவாசகம், யாத்திரைப்பத்தில் மணிவாசகப் பெருமான் எழுப்பிய அறைகூவல் "போவோங் காலம் வந்தது காண் பொய்விட்டு உடையான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழல் புகவே'' என்றது சாதாரண மக்களுக்கல்ல, மெய்யடியார்கட்கும், சித்தர்கட்கும், யோகிகட்கும் என்பதை நாம் நினைவில் வைத்திருத்தல் வேண்டும்.

முதலில் ஆசியாக் கண்டத்திலுள்ள ஜப்பான்தேச யாத்திரையைச் சிந்திப்போம். இந்தியாவோடும், சீனத்தோடும் ஒப்பிடும்போது ஜப்பான் மிகவும் இளைய நாடு மாத்திரமன்றி, மிகவுஞ் சிறிய தேசமுமாகும். 4200 தீவுகளைக் கொண்ட இப்பிரதேசத்தில் 500 தீவுகளிற்றான் மக்கள் சீவிக்க முடியும். ஏனையவற்றில் எரிமலைகள் உள்ளன. அவற்றுள் சில அக்கினியைக் கக்கிக்கொண்டிருப்பதை இன்றுங் காணலாம். இலங்கையின் குடிசனங்களின் முழுத்தொகையானது, ஜப்பான் தலைநகரான ரோக்கியோவின் சனத்தொகைக்கு ஒத்துள்ளது. இதிலிருந்து அந்தத் தேசத்தின் சன நெருக்கத்தை உணரலாம்.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஜப்பான் ஒரு விருத்தியடைந்த நாடாகக் கருதப்படவில்லை. 1904 ஆம் ஆண்டில் ரஷ்யாவைப் போரில் வென்று அதன் பெரிய துறைமுகமான போட் ஆர்தரைக் கைப்பற்றிய பின்தான் ஐரோப்பிய வல்லரசுகள்போல் தானும் இயந்திர நாகரிகத்திலும், கப்பல் படையிலும், போர்க்கருவிகளைப் பெருக்குவதிலும், முன்னேறி அயல் நாடுகள்மீது தன் அதிகாரத்தைச் செலுத்த வேண்டுமென்ற ஆசை பிறந்ததாகும். முதலாவது உலகமகா யுத்தத்தின் பயனாக வந்து சேர்ந்த இலாபங்கள் இந்த ஆசையைப் பன்மடங்காக்கி விட்டதெனலாம். பழைய சம்பிரதாயத்தில் பிதுர்வழிபாட்டின் அடிப்படையில் தோன்றிய 'ஷின்ரோ' மத ஆலயங்களில் போரின் வெற்றிச் சின்னமான வாள் வைத்துப் பூசிக்கும் வழக்கங் கூடத் தலைகாட்டியது. 1868 ஆம் ஆண்டில் ரொக்கியோவைத் தலைநகராகக் கொண்டு ஆரம்பித்த மெயிஜி ஆட்சியின் செல்வாக்கு இந்தக் கொள்கைகளால் உச்ச நிலையடைந்தது.

ஜப்பான் சனத்தொகையில் நூற்றுக்குத் தொண்ணூறுவீத மக்கள் மஹாயன பௌத்த மதத்தைச் சேர்ந்தவர்கள். இம்மதம் பல்வேறு பிரிவுகளைக் கொண்டது; எனினும் அன்பின் வழிச்சென்று வந்தது. இவர்கள் எல்லோரும் தங்கள் புராதன சமயமான 'ஷின்ரோ' மார்க்கக் கொள்கைகளைப் புறக்கணித்தவர்கள் அல்லர்; அன்பும் நன்றியுணர்ச்சியுமே அப்பிதுர் வழிபாட்டின் முக்கிய தத்துவங்களாகும்; பின்னளில் கிறிஸ்தவர்களாக மாறியவர்கள் தாமும் இப்பிதுர் வணக்கத்தைக் கைவிட்டவர்களல்லர். இந்தப்பழைய பண்பாட்டில் தோன்றியவர்களே ஜப்பானில் புதிய பக்தி மார்க்கங்களை ஸ்தாபித்த பெரியவர்களெனலாம். இவர்களுள் முக்கியமானவர்கள் மூன்று பெண்கள். அந்த மூவரும் பிறந்தது எளிய கமக்காரக் குடும்பங்களிலாகும்; இந்த மூன்று மங்கையர்க் கரசிகளுள் காலத்தால் முந்தியவரும், தொண்டினால் முதன்மை பெற்றவரும், ஆத்ம சக்தியாலும் சித்தியாலும் இணையற்றவரும் 'மிக்கி நகயாமா' ஆவர். இந்த அம்மையார், பழுத்த இல்லற ஞானியும் அரிய தீர்க்கதரிசியுமாவர். அவர் காலம் கி. பி. 1797—1887; அவர் வாழ்க்கை வரலாறு மிகவும் அற்புதமானது. முதல் நாற்பது ஆண்டுகளில் அன்னை அரியபுத்திரியாய், பிரிய பத்தினியாய், அன்பும் அடக்கமும் உருவான தாயாகக் காண்கின்றோம். அவருக்குத் தெய்வக் காட்சியும் ஆதர்சனமும் கிடைத்தது; 1838-ம் ஆண்டு பொருந்திய நாற்பத்தோராவது வயதில் ஆகும். அக்கால அரசாங்கம் கொண்டிருந்த போர்க்கோலத்திற்கு எதிர்ப்புக்காட்டி அன்பையும் சமாதானத்தையும் போதித்த குற்றத்திற்காக பதினேழுமுறை சிறைவாசம் இருந்து பெருங் கஷ்டங்கள் அனுபவித்துள்ளார். அம்மையார் நிறுவிய அன்புமதம் அவர் மறைந்து இருபத்தொரு ஆண்டுகள் கழிந்தபின்தான் (அதாவது 1908 ஆம் ஆண்டில்) அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்டது. போர் வெறியில் மதியிழந்திருந்த அரசியல் வாதிகட்கு அவர் அருளிய எச்சரிக்கைகளில் அடங்கியிருந்த தீர்க்கதரிசனம் உலகறிய வந்தது இரண்டாவது உலக யுத்தத்தின் பின்னராகும்;

அம்மையார் பரம்பொருளின் உருவம் ஒளியென்றும், அதன் குணம் கருணையென்றும் உபதேசித்தார்; அதேகாலத்தில் தமிழ்நாட்டில் இராமலிங்க சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அருட்பெரும் சோதி, தனிப்பெரு ங் கருணை" என்று முழக்கஞ் செய்ததை வாசகர்கட்கு நினைவூட்ட விரும்புகின்றோம். இருவரும் தங்கள் புகைப்படங்களை எவரும் எடுத்துவைத்துப் பூசிக்கக் கூடாதெனக் கண்டிப்பாய்க்கூறி மறுத்தார்கள். அம்மையார் வள்ளலாரைப்போலவே ஓர் அருட் கவியுமாவர். அவர் அருளிய 1711 பாடல்கள் அவரது சொந்தக் கையெழுத்திலேயே நீண்ட கண்ணுடி அலுமாரிகளில் நவீன விஞ் ஞான ரீதியாகக் காப்பாற்றப்பட்டுக் காட்சியளிக்கின்றன; அப்பாடல்களுட் சில,

"எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்றறியேன் பரா
பரமே",

"அன்பர் பணிசெய்ய எனை ஆளாக்கி
விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந்தெய்தும் பரா
பரமே"

முதலாய தாயுமானவரின் பராபரக் கண்ணி களின் அருங்கருத்துக்களை அடக்கியுள்ளன.

அம்மையாரின் வாழ்க்கை அற்புதமானதென்றோம். அன்னார் புகழுடம்பெய்தியபின் நடந்துள்ள சம்பவங்கள், நிறுவப்பட்ட நிலையங்கள், அவரது ஆத்மசக்தியின் அற்புதத் தன்மையை ஆயிரம் மடங்காக விளக்குகின்றன. எளிய கமக்கரர் வாழ்ந்த முப்பது குடிசைகளைக்கொண்ட கிராமம், இன்று ஏறக்குறைய ஒருலட்சம் சனத் தொகையை யுடைய நவீன பெரிய நகரமாய் விளங்குகின்றது. இதின் அமைப்பு விநோதமானது, விசித்திரமானது. உலகில் வேறெங்கும் காணமுடியாத காட்சியைத் தருகின்றது. புத்தம்புதிய இப்பட்டணத்திற்கு நடுநாயகமாக விளங்குவது அம்மையாரின் சமாதிக்கோயில். அதன் முன்றிலில் 50,000 மக்கள் ஒரேகாலத்தில் பத்மாசனத்தில் உட்கார்ந்து தியானஞ் செய்யக் கூடிய பெரிய மண்டபம் அமைந்துள்ளது; இவற்றைச்சுற்றி நாலாபக்கங்களிலும் சிறுவர் பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், சர்வ கலாசாலை, வாசிகசாலை, நூதனசாலை, வைத்தியசாலை, விஞ்ஞான ஆராய்ச்சிக்கழகம் முதலானவை கட்டப்பட்டுள்ளன; மாணவ மாணவிகளின் விடுதிச்சாலைகள் மாத்திரம் இருநூறுவரையில் உள்ளன. அவற்றில் இருலட்சம் பிள்ளைகள் தங்கக் கூடியவசதிகள்உண்டு. இந்த ரென்றி நகரம் (Tenri) ஜப்பானுக்கு மாத்திரமன்றி உலகம் முழுவதற்குமே பெருமையளித்து நிற்கின்றது; நேரில் பார்த்தாற்றான் அதின் மகிமையை ஒருவர் பூரணமாய் விளங்கமுடியும்; உடல் உழைப்புக்கு இங்குள்ள கல்விச் சாலைகளில் முக்கிய இடமுண்டு. அயலில்உள்ள விவசாயப் பண்ணையில் சங்கத் தலைவர் முதல் ஐந்துவயசுப் பிள்ளை வரையில் கட்டாயமாக வேலை செய்யவேண்டும். கட்டிடவேலையிலும் அதேவிதம் மாணவிகளும் மாணவர்களும் ஈடுபடுகின்றார்கள்; 1945 ஆம் ஆண்டில் ஜப்பானின் நாலாபக்கங்களிலும் அமெரிக்க விமானங்கள் குண்டுகளைப் பொழிந்த வேளையிலும் இந்தக் கட்டிடவேலை தொடர்ந்து நடந்துகொண்டிருந்தது. ஒரு குண்டுதானும் ரென்றி நகர எல்லைக்குள் விழவும் இல்லை. அம்மையாரின் வாக்கில் அவரது அடியார்கள் கொண்டிருந்த விசுவாசம் அவ்வளவுக்கு அசைவற்றதாய் இருந்ததாகும். கிறிஸ்தவ மதஸ்தாபனங்கள் பல நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து பணிசெய்து பெற்ற சித்திகளை இந்த ரென்றி அன்புமார்க்க நிலையம் அரை நூற்றாண்டு எல்லைக்குள் பூர்த்தியாக்கி உள்ளது. ஜப்பானிலும் வேறுபல நாடுகளிலும் இப்புதிய சமயக்கோவில்கள் 16,000 வரையில் நிறுவப்பட்டுள்ளன. அதின் உண்மைகளை உலகெங்கும் உபயோகிப்பதற்கு ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட போதகர்கள் போதனைசாலையிற் பயிற்சிபெற்று வெளிவந்துள்ளார்கள்; சாதிப்பிணக்குகளும் சமயப் பூசல்களும், மொழிப்பிரச்சனையும் இல்லாத இடத்து மக்களின் பொதுநலசேவை, அரசாங்கத்தினதும், அரசியல் வாதிகளினதும் தொடர்பு எதுவுமேயின்றி, எவ்வாறு மக்களின் வாழ்வை அதின் எல்லாத் துறைகளிலும் முன்னேறக்கூடும் என்பதற்கு இந்தநிலையம் ஓர் ஒப்பற்ற எடுத்துக் காட்டாகும்; 1958 ஆம் ஆண்டில் ரொக்கியோவில் நடைபெற்ற உலக சமய சரித்திர மகாநாட்டில் அதின் தலைவரும் பல அங்கத்தவர்களும் முக்கிய பங்கெடுத்தனர்; இந்தியப் பிரமுகர்கள் சிலர் 1902 ஆம் ஆண்டில் சர்வமத சம்பந்தமான ஒரு மகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டை ரொக்கியோவில் நடாத்த உத் தேசித்தபோது, ஜப்பான் நாட்டுத்தலைவர் கள் மதசம்பந்தமான கூட்டம் தேவை யில்லை யெனக்கூறிவிட்டனர். 56 ஆண்டு கள் கழித்து, அவர்களே உலகசமயப் பெரி யார்களையும் தத்துவப் பெரியார்களையும் உலகின் நாலாபக்கங்களிலுமிருந்து அழைத்து மிகவும் சிறப்பாகவோர் மகா நாட்டை நடாத்தி முடித்தனர். தனி மனித வாழ்வில்சரி ஒருசமுதாய வாழ்விற் சரி வாழ்வானது துன்பக்காட்டில் அலையும் போதல்லது துயரக்கடலில் அமிழ்ந்தும் வேளையிற்றான் தெய்வத்தைப் பற்றியோ, ஆன்மார்த்த உண்மைகளைக் குறித்தோ சிந்திக்கும் சந்தர்ப்பம் மணிதனுக்கு வலிய வந்து சேர்கின்றதெனலாம். குறித்த மகா நாட்டிற்கு ஜப்பானின் அரசகுடும்பமும், அறிஞர்களும் அரசியல் தலைவர்களும் அளித்த ஆதரவு இந்த உண்மைக்கு ஒரு பிரத்தியட்ச உதாரணமாய் விளங்கியதென லாம்.

அடுத்தபடியாக, ஜப்பானிலிருந்து பல தேசங்களைத்தாண்டி இத்தாலிக்குச் செல் வோம். ரோமாபுரியில் முதலாவதாகத் தரி சித்த இடம் செயின்ற் பீற்றர் (St. Peter) ஆலயம். அது ஒரு பிரமாண்டமான கட் டிடம். வேறுசில இடங்களுக்குச் சென்று பழைய நாகரீகத்தின் சின்னங்களாகப் பேணப்படும் காட்சிகளைப் பார்த்தேன். சன நெருக்கடியும், சந்தை இரைச்சலும், அமைதியை நாடிய எனது மனோநிலைக்குப் பிடிக்கவில்லை. விடுதிச்சாலைகூட நடுநிசி வரையும் சத்தமயமாக விருந்தது. இந்த ஐரோப்பிய யாத்திரைக்குத் தூண்டுகோ லாக இருந்தது ஜேர்மனியில் மார்பேக் சர்வகலாசாலையில் நடைபெற்ற சர்வமத மகாநாடாகும். ஆனால் யாத்திரையின் அட்டவணை அதற்கெனவே திட்டமிடப் படவில்லை. பல வருஷங்கட்கு முன்னரேயே என் உள்ளத்தில் சில அந்தரங்கக் கருத் துக்கள் பதிந்திருந்தன. சின்னஞ்சிறு வய தில் இருந்தே எனது தெய்வ வழிபாட்டில் அடியார் பக்தி முதன்மையான இடம்பெற் றிருந்தது. நாவலர் பெருமான் வகுத்த கல்வித்திட்டத்தின்படி ஆரம்பக்கல்வியைப் பெற்ற புண்ணியத்தால் சுந்தரமூர்த்தி நாய னார் அருளிய திருத்தொண்டத்தொகை முழுவதையும் மனப்பாடமாகச் சொல்லும் பாக்கியம் எட்டாவது வயதிலேயே கிடைத் தது. அப்பதிகத்தின் பத்தாவதுபாடல் என்றுமே என்சிந்தனையுள் இருந்துள்ளது: அதில்வரும் "அப்பாலும் அடிச்சார்ந்த அடியார்க்கும் அடியேன்" என்ற வரி ஒரு தனி மந்திர வாக்காகவும், அமைந்துவிட் டது. அறிவு மலரமலர பிறமொழி பிற சமய ஆராய்ச்சி வளரவளர ஆன்மீக சாத னைகள் உயர உயர அதனுல் உள்ளம் விரிய விரிய "அப்பாலும் அடிசார்ந்த அடியார் பெருமை"க்கு கொற்றவன் குடி உமாபதி சிவாச்சாரியார் சேக்கிழார் புராணத்தில் தந்துள்ள விளக்கம் (தாராளு மூவேந் தர் பயிலுந்தொல்லைத் தமிழ்நாட்டு அப் புறத் தெனவரும்பாடல்) புதுப்புதுக் கருத்துக்களுடன் விரிந்துகொண்டு வந்தது. அங்கிங்கெனாதபடி எங்கும் நீக்கமற நிறைந் து நிற்கும் இறைவன், குருமார்கள் வாயி லாக பல நெறிகளை அருளுகிறான். அந்த மஹான்கள் எல்லாரிடத்தும் ஒளிர்வது இந்த இறைவன் ஒருவனே. இப்பெரியார் களின் வருகை ஒரு தனிச்சாதியினருக்கோ சமயத்தினர்க்கோ மாத்திரம் பொருந்துந் தனிச்சிறப்பன்று. அஃது எல்லா மதத்தி னருக்கும் பொதுவான ஒன்று, என்ற உண்மைகள் எனது உள்ளத்தில் பதிந்து விட்டன.

இவற்றின் பயனாக இத்தாலியில் அஸிசி என்ற நகரில் கி. பி. பதின்மூன்றும் நூற் றாண்டில் அவதரித்த ஃபிரான்ஸிஸ் தேவர் மீது பிரேமை கொண்டிருந்தேன். இப்பி றப்பில் ஐரோப்பாவுக்கு யாத்திரை செய் யும் பாக்கியம் கிடைப்பின், அவரது சமா தித் கோயிலில் கட்டாயமாகத் தியானஞ் செய்வதெனப் பிரதிக்கினை செய்திருந் தேன். இந்த மஹான் புல்லுடனும், பூண் டுடனும், புலியுடனும், நரியுடனும், ஆன்ம நேய ஒருமைப்பாடுடன் வாழ்ந்த கருணை வடிவினராவர். பல அற்புத சித்திகள் புரிந் தவர், இன்றும் புரிபவர். புனித அந்தோ னியார் எனக் கத்தோலிக்க மதத்தினர் போற்றிப் பணியுஞ் சித்தரின் குருவானவர். உள்ளத்தை உருக்கும் அவர் பாடல்களின் அருங்கருத்துக்கள் அருட்பிரகாசவள்ளலா ரின் பாடல்களில் எதிரொலிக்கின்றன:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களது பாடல்களுள் "சமாதானப் பிரார்த்தனை" (Prayer for Peace) என்பது உலகப் பிரசித்திபெற்றது. உலகின் பல் வேறு மொழிகளில் கோடிக்கணக்கான பிரதி கள் பிரசுரிக்கப்பட்டுள்ளன. "ஆண்ட வனே என்னை உன் கருவியாகக்கொண்டு பகைமை உள்ள இடங்கட்கு அன்பையும், வேற்றுமை செறிந்த மக்களிடையே ஒற்று மையையும், சந்தேகம் நிறைந்த இடத்தில் விசுவாசத்தையும், பரவச்செய்ய அருள்வா யாக" என ஆரம்பிக்கும் இப்பிரார்த்தனை பல வருஷங்களாக எனது காலைமாலை இறை வழிபாட்டில் இடம் பெற்றுள்ளது. எனவே இத்தாலியில் இறங்கியதும் அஸிசியே முத லில் நினைவுக்கு வந்ததில் வியப்பொன் றில்லை.

உரோமிலிருந்து அஸிசிவரைக்கும் நடந்த யாத்திரையில் அந்தர்மியாக அப் பெரியாரே வழிகாட்டியதாக உணரக்கூடிய முறையில் எல்லாம் நடந்தேறின. அவரது சமாதிக்கோயில் மூன்றடுக்குக் கட்டிடம். கீழ்மாடிக்கதவுகள் தெருவருகில் உள்ளன. நான் ஆலயத்தை அடைந்தசமயம் கதவு கள் மூடப்பட்டிருந்தன. முற்றத்தில் நா னூறு அமெரிக்க உல்லாசப்பிரயாணிகள், ஆங்கிலந் தெரிந்த ஒரு குருவந்து தாங்கள் குறித்துக்கேட்ட நேரத்தில் கதவுகளைத் திறப்பாரென எதிர்பார்த்துக் காத்திருந் தனர். யான் அங்குசென்றதும் என்னைப் படம்பிடிப்பதற்குப் பலர் தங்கள் புகைப் படக் கருவிகளை அசைக்குஞ் சத்தம் எழும் பியது. அங்கு சற்றும் நில்லாமல் உள் ளறிவுதூண்ட அருகில் தென்பட்ட படிகள் மூலம் மாலியின் உச்சிக்கு ஏறிவிட்டேன். ஆலயத்தின் இரண்டாம் மாடியின் முற்றம் அங்கிருந்தே உண்மையை உடனே உணர்ந் தேன். அங்குள்ள மூன்று கதவுகளும் கீழ்மாடியிற் போலவே மூடப்பட்டிருந் தன. சிறிதுநேரம் முற்றத்தில் இருந்து 'அஸிசி' நகரத்தின் இயற்கை அழகை இர சித்தபின்னர், ஃபிரான்சிஸ் தேவர் தியா னத்தில் ஆழ்ந்துவிட்டேன். எவரோ உள் ளிருந்து நடுக்கதவைத் திறக்குஞ்சத்தம் என் தியானத்தைக் குலைக்கவே கூட்டம் வந்துவிட்டதாகக்கருதி அவசரமாக எழுந்து சென்றேன். கத்தோலிக்க சுவாமியாரின் வழக்கமான கருநிற உடைஅணிந்த ஒருவர் மாத்திரம் நிற்கக்கண்டேன். என் தலைமீது தமது வலக்கரத்தை வைத்து ஆசீர்வாதஞ் செய்துவிட்டுத் திறந்த கதவை மூடிவிட் டார் அவர். அவசரம் அவசரமாக ஒரு சொல்லும் பேசாது அவர் முன்செல்ல அவர் கையால் செய்த சைகைகளை விளங்கிக் கொண்டு பின்சென்றேன். ஃபிரான்சிஸ் தேவரின் கல்லறையைக் கொண்ட இந்தப் பெரிய மண்டபத்தில் இருமருங்கிலும் அவ ரின் வாழ்க்கைவரலாறு ஓவியத்தில் அமைந் திருந்தது. அதைக்கவனமாய்ப் பார்ப்ப தற்கு எனது வழிகாட்டி சந்தர்ப்பம் அளிக் கவில்லை. கல்லறைக்குமுன் வணக்கஞ் செய் ததும் மூன்றும் மாடிக்கு அழைத்துச் சென்று அங்கே பக்திச்சிரத்தையுடன் பாது காக்கப் பட்டுள்ள சின்னங்களை ஒரு நிமி டம் பார்க்கச் செய்துவிட்டு ஒட்டமாக நில மட்டத்திற்குச் செல்லும் படிகள்மூலம் இறங்கினர். அந்தவேளையில் அமெரிக்கப் பிரயாணிகள் ஆலயத்துள் புகுந்து கொண் டிருந்தனர். இந்த அமளியில் வழிகாட்டிய பெரியார் மறைந்துவிட்டார். அவரைப் பின்னர் தேடிக் கண்டு நன்றி கூறலாமென எண்ணிக்கொண்டு, யானும் அமெரிக்கக் கூட்டத்தின் பின் சென்றேன். அவர்க ளுக்கு ஆங்கிலத்தில் விபரங்களைச் சொல் லிக்கொண்டு வழிகாட்டிச்சென்ற ஐறிஸ் குருவானவரும் ஓடிஓடியே தமது கருமத் தைச் செய்தார். இருபத்தைந்து நிமிடங் களுள் மூன்று மாடித்தரிசனமும் முடிந்து விட்டது. அமெரிக்கக் கூட்டம் பிரிந்தபின் அக்குருவானவர் சும்மா நின்ற தருணம் பார்த்து யான் அவர் அருகேசென்று அவ ருக்கு முன்னதாக ஆலயத்துள் இருந்த குரு வைக்கண்டு நன்றிகூற நான் விரும்புவதா கக்கூறி, அவர் விடுதியைக்காட்ட முடியுமோ வென மிகவும் அடக்கமாக விசாரித்தேன். கையில்இருந்த சாவிக்கோர்வையைக் குலுக் கியவண்ணம் "இதனைக்கொண்டு கதவைத் திறந்தவன் யான். எனக்குமுன் வேறெவ ரும் உள்ளே பிரவேசித்திருக்க முடியா தென" வெடுக்கென்று பதில் கொடுத்தார். இதனைக்கேட்ட ஒரு அமெரிக்கச் சோடி அவர் கேட்கக்கூடிய முறையில் என்னை நோக்கி "ஐயா நாங்களெல்லோரும் ஆல யத்துள் பிரவேசிக்கும்போது நீங்கள் உள் ளிருந்து வெளிவாசலைப் பார்த்து வந்து கொண்டிருந்தீர்களல்லவா?" என்று கேட் டார்கள். அதைத்தான் இக்குருவானவர்க்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குச் சொன்னேன். அவர் நம்பவில்லை என்று பதில் சொன்னேன். குருவானவர் உடனே அகன்றுவிட்டார். மேலும் நடந்தவற்றை இங்கு விபரிக்க மனமில்லை: ஏனெனில் அந்தரங்கமான அற்புத சுத்யாத்ம அனுபவங்கள் மிகவும் இரகசியமாகப் பேணப்பட வேண்டியவை. என்னை முதலில் ஆலயத்துள் அழைத்து ஆசிசெய்தவர் புனித ஃபிறுன்ஸிஸ் தேவரே என்பது எனக்கும் அந்த இரு அமெரிக்க அன்பர்கட்கும் தெளிவாக விளங்கிவிட்டது. அன்றுதொட்டு இன்றுவரைக்கும் பிரசித்திபெற்ற நீதவானை அந்த அன்பரும் அவரது அரிய பிரிய பத்தினியாரும் எனது ஆன்மீகச் சகோதர சகோதரியாய் விட்டார்கள். அமெரிக்கா சென்றபோது அவர்களது அன்பு இல்லத்தில் ஐந்துநாட்கள் தங்கும் பாக்கியமும் எனக்குக் கிடைத்தது.

இறுதியாக ஜேர்மனியில் நடந்த ஒரு ருசிகரமான சம்பவத்தை மாத்திரம் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். தெய்வ நம்பிக்கையாற் பெறும் பலாபலன் அதில் மிளிர்கின்றது. வியாபார அலுவலாக ஜேர்மனியில் சுற்றுப்பிரயாணஞ் செய்துவிட்டு இங்கிலாந்து சென்றுகொண்டிருந்த ஒரு பம்பாய் மாகாண இந்துவைத் தற் சமயமாக 'ஃபிறுங்போட்' விமான நிலையத்தில் சந்திக்க நேர்ந்தது. கீழைத்தேசச் சம்பிரதாயப்படி ஊர், பேர், உத்தியோகம் முதலியவற்றை விசாரித்தபின்னர் "நீங்கள் ஐரோப்பாவந்த நோக்கம் யாதோ?" என்று அவர் கேட்டார். "யாத்திரை செய்கிறேன்" என யான் இருசொற்களில் கொடுத்தபதில் அவருக்கு வியப்பைக் கொடுத்தது. "என்ன ஐயா! இந்தியாவில் இருந்து ஐரோப்பாவுக்கு யாத்திரைக்காக வரும் இந்துவும் இருக்கமுடியுமா?" என்று இரண்டாங்கேள்வி போட்டார். "இந்தியாவில் இயந்திரசாலைகளும், வியாபார நிலையங்களும் இருப்பதுபோலவே, ஐரோப்பாவில் யாத்திரைக்குரிய புண்ணியஸ்தலங்கள், தரிசிக்கவேண்டிய பெரியார்கள் உளர்" என அடக்கமாய் இனிமையாகப் பதில் சொன்னேன். "உங்கள் சுத்த வெள்ளைப் பருத்தி உடையே இக்கண்டத்துக்கு அசாதாரணமாகத்தான் இருக்கிறது" என்று புன்சிரிப்புடன் கூறிவிட்டு, சம்பாஷணையை மேலுந் தொடர்ந்து நடத்தினர்.

இங்கிருந்து அடுத்தபடியாக எங்கே செல்கின்றீர்கள் என்று கேட்டார். பரிஸ் நகருக்கு என்றேன். "முன்னர் அங்கு சென்றிருக்கிறீர்களா? ஃபிறெஞ்சு மொழி தெரியுமா?" என்று கேள்விகள் போட்டார். இரண்டிற்கும் "இல்லை" என்றேன். "இந்தநிலையில் நடுநிசி யாத்திரையைத் திட்டம்போட்டது தப்பு, மிகவும் கவனமாக இருங்கள்" என்று அவர் அன்புடன் கூறிய புத்திமதிக்கு நன்றிகூறி "ஐயா! உள்ளத்தில் அன்பு என்னும் மொழி சதா பேசிக்கொண்டிருந்தால் எல்லார்க்கும் அது விளங்கும்; எவ்வித தீங்கும் நேராது, என்று சொல்லிப் பிரிந்தேன்; திருவருட் சித்தம் போலும் அதே அன்பருடன் பம்பாய்க்குத் திரும்பும் சந்தர்ப்பம் எதிர்பாராமல் ஜெனீவாவில் பொருந்திவிட்டது. பரிஸ் நகரத்திலும் ஏனைய பெரிய பட்டணங்களிலும் யான் பெற்ற அற்புத அனுபவங்களைக் கேட்டு அவர் முன்னிலும் பன்மடங்கு வியப்புற்றார். பம்பாய் விமானநிலையத்தில் அவரது சொந்த ஊரில் அவரது செல்வாக்குச் செல்லக்கூடிய சூழலில் சுங்க அதிகாரிகள் எனது பெட்டிகளைத் திறந்து பார்க்காமலே எடுத்துச்செல்ல உத்தரவிட்டபின் எனக் கருகில்நின்ற அவரது பெட்டிகளைத்திறந்து சாமான்கள் முழுவதையும் மேசைமேல் பரப்பினர்கள். இக்காட்சி எனக்கே வருத்தத்தைக் கொடுத்தது: என் முகத்தில் கவலைக்குறியைக் கண்ணுற்ற அந்த அன்பர் "தாங்கள் கூறியது முற்றுஞ்சரி" என்ற கருத்துப்படி "you were perfectly right, Sir," என்று சொல்லி விடைபெற்றுக் கொண்டனர். "கடவுளை நம்பினோர் கைவிடப்பட மாட்டார்கள்" என்ற உண்மை இத்தால் விளங்க நிற்கின்றது.

என் அந்நிய நாட்டு யாத்திரைகள் மூலம் யான் அறிமுகம் பெற்ற பெரியார்கள், ஆண்களும் பெண்களும் அநேகர். அவர்களைப்பற்றி ஒரு தனிக்கட்டுரையே எழுதலாம். மிகவும் விசேடித்த ஐவரின் பெயர்களை மாத்திரம் இங்கு குறிப்பிட இடமுண்டு. இத்தாலி நாட்டின் புகழ் பெற்ற விஞ்ஞானியும் மெய்ஞ்ஞானியுமான கலாநிதி ரெவேட் அஸசிஒலி (R. Assagioli) (2) பெல்ஜியத்தில் மகாத்மா காந்தி போல் 'சர்வகலாசாலை ஸ்தாபித்த வண. குருபியர் (Late Father Pire) (3) ஃபிறெஞ் சுநாட்டு ஏழைபங்காளனை வண. அவே பியறே (Rev. Abbe Piere) (4) ஐரோப்பிய பிரே ரெஸ்ரன்ற் சமயத்தலைவரான வண. மாட்டின் நை மொலலர் (Rev. Dr. Martin Neimoller) (5) ஜப்பானிய மகாத்மாவான ககாவா (Late Dr. Kagawa);

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயமும் விஞ்ஞானமும்

(சித்தாத்த வித்தகர் திரு. க. சோமசுந்தரம் செட்டியார்)

நமது முன்னோர்கள் நாம் நல்ல வகையில், வாழ்வாங்கு வாழ்ந்து நற்கதி அடைய வேண்டுமென்றும் கடவுள் அருளுக்கு அருளாகி நிலையான இன்பத்தைப் பெறவேண்டுமென்றும் எண்ணி நமது அன்றூட வாழ்க்கையினை அமைத்துள்ளார்கள். நம் வாழ்க்கை எவ்வளவு தூரம் விஞ்ஞானத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது என்பதை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்.

"விடியற் காலையில் எழுந்திரு" என்றுள்ளார். அப்போதுதான் நம்மூளை சுறுசுறுப்பாகவுள்ள நேரம் என்பர். மேல் நாட்டாரும் சுயாதீனத்தை முன்னிட்டு "Early to rise" என்றனர். காலைக்கடன்களை முடிக்கவேண்டி ஊருக்கு வெளியே இருந்தால் ஊர் சுற்றியாக இருக்கும். நோயும் அணுகாது; மேலும் அப்படி வெளியே போகும்போது சாலையின் இரு பக்கங்களிலுள்ள பச்சைப்பசேல் என்றுள்ள செடிகொடிகளைப் பார்த்துக்கொண்டே போனால் கண் குளிர்ந்து நம் கண் பார்வை ஒளியுடன் விளங்கும், கண்ணுடிபோட அவசியம் ஏற்படாது. குளிர்ந்த நீரில் நீராடினால் நம் உடம்பிற்கு ஆரோக்கியம் உண்டு என்று மருத்துவர்கள் கூறுகின்றூர்கள். நீராடி உடம்பைத் துடைத்து ஈரம் போக்கித் தோய்த்து உலர்ந்த ஆடை அணிந்து கொள்ளல்வேண்டும். வெயிலில் துணிகள் உலர்ந்தால்தான் அதிலுள்ள கிருமிகள் அழிந்து விடும். பின் நந்தவனம் செல்லவேண்டும். கண்களுக்கு அழகிய காட்சி காதுகளுக்குப் பட்சி சாலங்களின் ஓசை, மூக்கிற்கு நல்ல நறுமணம். உடம்பிற்கு நல்ல ஆரோக்கியமான காற்று, நந்தவனத்திலுள்ள பலவிதமான பூக்களைப் பறித்துக் கூடைகளிலிட்டு மண்டபத்திற்குச் சென்று அப்பூக்களை மாலையாகக்கட்ட வேண்டும். நெற்றியிலும் உடம்பிலும் திருநீறு அணிந்துகொள்ளல் வழக்கம். இதனால் உடம்பில் உள்ள சருமநோய்கள் எல்லாம் நீங்கும். உருத்திராட்சம் அணிவதால் அதன்மீது பட்ட நீர் நம் உடம்பில் பட்டால் நாம் புனிதமாவோம். பின் ஆலயத்திற்குச் செல்லலாம்.

கோயில்களுக்குச் சென்று திருவலகு கொண்டு குப்பைகளை அகற்றவேண்டும்; பசுச்சாணம் கொண்டு தரையினை மெழுகலாம்; இதனால் விஷக்கிருமிகள் தங்க மாட்டா. மேல் நாட்டார் இதற்குப் பதிலாக hyed. Detol முதலியவற்றை உபயோகிக்கின்றனர். என்னே நம் முன்னோர்களின் விஞ்ஞான அறிவு;

அரிசி மாவினால் அழகான கோலங்களை வீடுகளிலும், திருக்கோவில்களிலும் போட்டு அலங்கரிக்கவேண்டும். இதன் பயன் கண்களுக்கு இனிய காட்சி. ஆலயங்களில் இட்டு வைத்தால் மனம் ஒருமைப்படும். குனிந்து கோலம்போடுவதால் பெண்கள் உடம்புகளுக்கு நல்ல வலுவைக் கொடுக்கும். அழகான கோலங்களை மனதில் கற்பனைசெய்து அவற்றைப் போடும்போது மனம் நல்ல எண்ணங்களை எண்ண வழிவகை ஏற்படும்.

நாம் நம்மைப்போன்ற பிறமக்களுக்கு விருந்தளிப்போம் உபசரிப்போம். ஆனால் வாயில்லாப் பிராணிகளான எறும்பு முதலியவற்றிற்கும் உதவிசெய்ய வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன்தான் அரிசி மாவினால் கோலம் போடச் சொன்னர்கள் அறிஞர்கள். எறும்புகள் இம்மாவை ஆகாரமாக உட்கொண்டு வாழும். இத்தர்மத்தால் நம் கண் தெரியவரும் என்பது பண்டைக்காலப் பெரியவர் அனுபவம். ஒரு பழமொழியும் உலகில் வழங்கி வருவது எல்லோரும் அறிந்ததொன்று. அது பின் "எறும்பு தின்ரூல் கண்தெரியும்" என்று தற்காலத்தில் பிழையான வகையில் வழங்கி வருகிறது.

பிறகு ஆண்டவனை வணங்குதல்; விநாயகப் பெருமானை வணங்கும்போது மட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டும் நாம் நம் தலையில் குட்டிக்கொண்டு இரு கைகளையும் மாறி இரு செவிகளையும் பிடித் துக்கொண்டு தோப்புக்கரணம் போட்டு வணங்கவேண்டும். இதன் மூலம் மூளை சுறுசுறுப்பாக வேலைசெய்யும், அறிவு வள ரும் என்பர் ஆன்றோர்.

சிறப்பாக மாணவ மாணவிகள் உண்மை பேசவேண்டும், தூய மனத்துடன் இருத் தல்வேண்டும். நல்லொழுக்கத்துடன் பழ கல்வேண்டும். தெய்வ நம்பிக்கை உடைய வராய்த் திகழுதல் அவசியம். கூடுமான வரை பிறருக்கு நம்மால் இயன்ற அளவு உபகாரம் செய்தல் நம் தலையாய கடமை. மாணவமாணவிகள் ஆசிரியரிடம் விசுவாச மாக நடந்துகொள்வது பழங்கால மரபு.

இவற்றை எல்லாம் உணர்ந்து கொண்டு மாணவமாணவிகள் நல்வாழ்வு வாழ்ந்து மொழிக்கும் சமயத்திற்கும் நாட்டிற்கும் தொண்டுசெய்து சிறந்து விளங்கவேண்டும் என்று எல்லாம்வல்ல இறைவனை இறைஞ் சுகிறேன்.

வணக்கம்.

பண்புடையாளரின் தொடர்பைவிட, உயர்ந்த நூற் பயிற்சி மிக்க நன்மை தருவதாகும். பண்புடையாளர் உல கிற் கிடைத்தற்கு அரியர். கிடைத்தாலும் இடமும் கால மும் பிரிக்கும் பிரிவுக்கு உட்படவேண்டி நேர்கின்றது. அத னல் ஒருங்கே வாழ்ந்துபழகும் வாய்ப்பு அரிதாகின்றது. நல்ல நூலின் தொடர்போ என்றும் நிலையாக உள்ளது.

மு. வரதராஜன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பர் சுவாமிகளின் : : : : : : வாழ்க்கையனுபவம்

தமிழோடிசை பாடிச் சைவம் வளர்த்த சமய குரவர் நால்வருள் அப்பர் சுவாமிகள் முக்கியமானதோர் இடத்தைப் பெறுகின்றார். இவரது வாழ்க்கை முறையும், இவர்பாடிய தேவாரங்களும் எமக்கு அரிய பெரிய உண்மைகளைப் புகல்வதாயுள்ளன. இவர் பாடிய தேவாரங்கள் நாற்பத்தொன்பதாயிரம் என்பர் ஆராய்வாளர். ஆனல் அவற்றுள் முன்னூற்றுப்பதின்மூன்று பதிகங்களே கிடைக்கப்பெற்றுள்ளன. இத் தேவாரங்கள், பன்னிரு திருமுறைகளில் நாலாம், ஐந்தாம், ஆறும் திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இத் தேவாரங்களில் இவரின் வாழ்க்கை யனுபவங்களைக் காணக்கூடியதாக இருக்கின்றது: அரனை வணங்காத ஆக்கையாற் பயனில்லை என்ற உண்மையினை விளக்க,

"ஆக்கையாற் பயனென்—அரன்
கோயில் வலம் வந்து
பூக்கையால் அட்டிப் போற்றியென் னுதவிவ்
வாக்கையாற் பயனென்"

என்று பாடுகின்றார். இதைவிட, பற்று மற்றின்றி இறைவனிடம் இவர்கொண்ட நீங்காத பற்றினை "புழுவாய்ப் பிறக்கினும்" என்னும் பதிகத்தால், தெற்றெனப் புரிந்துகொள்ளலாம். இவற்றினை ஆராய ஆராய சுடச்சுடரும் பொன்போல், எமதுள்ளமும் நன்னெறிப்படும் என்பதற்கையமில்லை.

அப்பர் சுவாமிகள் தம்வாழ்க்கையிலே அளவில்லாத துன்பங்களை அனுபவித்தவர். வேளாண் மரபைச் சேர்ந்த இவர், இறைவனுல் வலிய வந்து ஆட்கொள்ளப்பட்டவரல்லர். சிறுவயதிலேயே தாய் தந்தையரை இழந்தவர். பரசமயத்திற் சேர்ந்து அல்லற்பட்டவர். சமணசமயத்திலிருந்து திரும்பிவந்த தன்னை, இறைவன் ஏற்றுக் கொள்வானே என்ற ஏக்கம், வாழ்நாளின் பெரும்பகுதியை வீணளாகக் கழித்துவிட்ட கழிவிரக்கம், பரசமயத்தின் மேலுள்ள வெறுப்பு, சமணசமயப் பாதிப்பால் ஏற்பட்ட நிலையாமைக் கொள்கை, உடம்பை அருவருப்புடன் நோக்குந்தன்மை முதலிய பண்புகளை நாவுக்கரசரின் தேவாரங்களிற் காணலாம். சம்பந்தரைப்போன்ற குதூகல உணர்ச்சியோ சுந்தரர் இறைவனிடங் கொண்ட தோழமையுணர்ச்சியோ அப்பரிடங் காண்பதரிது. வாழ்க்கையில் ஏற்பட்ட துன்பத்தின் பிரதிபலிப்பு இவரிடங் காணக்கூடியதாக இருக்கின்றது. சமணர் அறத்தை அறியாதவர், ஊத்தை வாயையுடையவர். அறிவிலிகளாகிய இவருடன் சேர்ந்து, தன்வாழ்க்கையை வீணைக் கழித்ததாகவும், மறந்துங்கூடச் சிவனது திருவடியைச் சிந்தியாது இருந்ததாகவுங் கூறுகின்றார்:

"அறந் தெரியா ஊத்தை வாய் அறிவில் சிந்தை
ஆரம்பக் குண்டரோடயர்ந்து நாளும்
மறந்தும் அரன் திருவடிகள் நினைய மாட்டா
மதியிலியேன் வாழ் வெலாம் ....."

சைவ சமயத்தைவிட்டுச் சமண சமயத்தைச் சேர்ந்தமையை,

"கரும்பிருக்க இருப்பு கடித்தேய்த்த வாறே"

என்றும்,

"கனியிருக்கக் காய்கவர்ந்த கள்வனேனே"

என்றும்,

"மூயல்விட்டுக் காக்கைப் பின்போனவாறே"

என்றும், பலவாறு கூறித் தனது அறியாமையை எண்ணி வருந்துகின்றார். சமண சமயத்தைச் சார்ந்திருந்து கடுமையான ஒழுக்க நெறிகளைக் கடைப்பிடித்த இவருக்கு உலக வாழ்வு நிலையற்றது என்னுங் கருத்து உள்ளத்தே செறிந்திருந்தது. இதனல் உடலை வெறுத்தார். இவ்வெறுப்புச் சைவராகிய பின்னும் மாறவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" பொய்விரா மேனி தன்னைப்
பொருளெனக் காலம் போக்கினேன் "

என்றும்,

" புழுப் பெய்த பண்டிதன்னைப்
புறமொரு தோலால் மூடி "

என்றும்,

" பிணி யுடையாக்கைக்காகப்
பித்தராய்த் திரிகின்றீர்கள் "

எனவும் பாடுகின்றார்.

" கேளுமின் இளமையது கேடுவந்து
ஈனையோடிருமல் எய்தல்முன் "

என இளமை நிலையாமையைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். உழவர் மரபில் தோன்றிய அப்பர் உழவுத் தொழிலோடு தொடர்புடைய உவமை உருவகங்களைக் கையாளுகின்றார். போதனையோடுமட்டும் நின்றுவிடாது, சாதனையில் கடைப்பிடிக்கவேண்டிய நெறிகளைக் கூறுகின்றார். தாமே உழவாரப் படைகொண்டு ஆலயத்தின் சுற்றுப் புறங்களைச் சுத்தமாக்குவதன்மூலம் சரியை வழிபாட்டிற்கு முன்னோடியாகத் திகழ்கின்றார்.

" மெய்மையாம் உழவைச்செய்து
விருப்பெனும் வித்தைவித்தி
பொய்மையாங் களையை வாங்கிப்
பொறையெனும் நீரைப்பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக்கண்டு
தகவெனும் வேலியிட்டு
செம்மையுள் நிற்பராகில்
சிவகதி விளையுமன்றே "

என்னும் தேவாரத்தில் உழுதல், விதைத்தல், களைகட்டுதல், நீர்ப்பாய்ச்சுதல், வேலியிடல் போன்ற உழவரின் வாழ்க்கையனுபவம் பிரதிபலிப்பதைக் காணலாம்.

" நிலை பெறு மாறெண்ணுதியேல்
நெஞ்சே நீவா " என்னும் தேவாரத்தில், சரியை வழிபாட்டில் ஈடுபடுபவர், ஆலயத்திற் செய்யவேண்டிய திருத்தொண்டுகள் குறிப்பிடப்படுகின்றன:

"கூற்றுயினவாறு விலக்கலீர்" என்று தொடங்கும் திருவதிகை வீரட்டானத் திருப்பதிகத்தைத்தான், அப்பர் முதன்முதலில் பாடினார் என்று வரலாறு கூறுகின்றது: இப்பதிகத்தில் அப்பர் தாம் சைவராக இருந்தபோது, அதாவது சமணசமயத்திற் சேரமுன்னர் தாம் இறைவனுக்கு ஆற்றிய தொண்டினை, இடையில் சமண சமயப் பாதிப்பால் மறந்திருந்தமையால் இப்பதிகத்தில்,

" ஏற்றுயடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும் "

என்று, அன்று தொடக்கம் இனிமேல் தனது வழிபாடு உறுதிப்பாடு உடையதாக இருக்கும் என்று கூறும் கருத்தமையப் பாடியிருத்தலைப் பார்க்கும்போது, அவரது கழிவிரக்கம் எமக்கும் இரக்கத்தைக் கொடுப்பதாக இருக்கின்றது. இத்தொடரில்வரும், " சலம் பூவொடு தூபம் மறந்தறியேன் " என்னுந் தேவாரம் அப்பரின் சரியை வழிபாட்டின் சிறப்பைக் கூறுவதுடன் எமக்கும் வழிகாட்டியாகத் திகழ்கின்றது.

நாவுக்கரசு நாயனார் திருமணஞ்செய்து இல்லறம் நடாத்தியதாகவோ அன்றிப் பெண்களின் தொடர்புடையவராக இருந்தாரென்றோ, அவர்களின் வரலாறு கூறவில்லை. ஆனால் அவரது தேவாரங்களிற் பல இடங்களில், அவர் வாழ்க்கையில் பெண்களால் துன்பம் அனுபவித்ததாகக் கூறுகின்றார்.

" பாலனுய்க் கழித்த நாளும்
பனிமலர்க் கோதை மார்தம்
மேலனுய்க் கழித்தநாளும்
மெலிவொடு மூப்புவந்து
கோலனுய்க் கழித்தநாளுங்
குறிக்கோளிலாது கெட்டேன் "

" மையரிமதர்த்த ஒண்கண்
மாதரார் வலையிற்பட்டு
கையெரி சூலமேந்தும்
கடவுளைநினைய மாட்டேன் "

" கற்றதேல் ஒன்றுமில்லை காரிகையார்
ரோடாடிப்
பெற்றதேற் பெரிதும் துன்பம் ...."

என்னும் செய்யுட் பகுதிகள் இவ்வனுபவத்தைக் கூறுகின்றன. மனைவி மக்கள் சுற்றத்தவரால் வெறுக்கப்பட்ட செய்தியொன்றையும் குறிப்பிடுகின்றார் போலத் தெரிகின்றது:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சுற்றமுந் துணைநன் மடலாரொடு
பெற்றமக்களும் பேணலொழிந்தனர்."

அப்பர் தேவாரங்களில் முத்திரைப்பாடல் களைக் காணமுடியாது: சம்பந்தர் பாடிய தேவாரங்கள் பலவற்றின் இறுதியில், நற் றமிழ் "ஞானசம்பந்தன்" "செந்தமிழால் மிகுஞானசம்பந்தன்" என்பனபோன்ற தொடர்களால் தன்னைக் குறிப்பிட்டுத் தனது தேவாரப் பதிகங்களைப் பாடுபவர் சிவகதி அடைவார் என்றே, பிறவியறுப் பார் என்றே பாடுகின்றார். சம்பந்தரின் தேவாரங்களைவிட உணர்ச்சித் துடிப்புக் கூடிய தேவாரங்களைப் பாடிய நாவுக்கரசர் அதையிட்டுத் தற்பெருமை பேசவில்லை.

அப்பர் சுவாமிகளின் பெரும்பாலான தேவாரப் பதிகங்களின் கடைசித் தேவா ரங்களில் இராவணன் கைலைமலையைத் தூக் கியபோது, இறைவன் கால்விரலால் ஊன்றி அவன் தருக்கையடக்கிய செய்தி கூறப்படுகின்றது. இறைவன் இராவண னுக்கு அருள்புரிந்த செய்தியும் பல இடங் களில் வருகின்றது. இதேபோலவே, ஆளு டைய பிள்ளையாரும் தாம் பாடிய பல பதி கங்களில் இராவணன் மலையெடுத்த செய்தி யைக் குறிப்பிடுகின்றார்: ஆனால் அப்பர் இலங்கை வேந்தனைப்பற்றிக் குறிப்பிடும் நோக்கம், ஆளுடைய பிள்ளையாரின் நோக் கத்தைவிட வேறுனதுஎன ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். சம்பந்தர் சைவசமயத்தை அலட்சியம் செய்து சமண பௌத்த மதங் களைச்சார்ந்த மன்னரைஎச்சரிக்கும் நோக் கத்துடனேயே இராவணன் தருக்கடக்கிய செய்தியைக் குறிப்பிடுகின்றார்: ஆனால் நாவுக்கரசரோ எனின், குற்றம் செய்த இலங்கைமன்னன் இன்னிசை பாடிவணங்கி இறைவனது அருள் பெற்றதுபோல் பரசம யத்திற் சேர்ந்ததாகிய தனது தவறையும் இறைவன் மன்னித்துத் தன்னை ஆட் கொண்டு அருள்புரிவார் என்ற கருத்துப் படப் பாடுகின்றார். தனது வாழ்க்கையனு பவத்தின் பிரதிபலிப்பாகவே இராவணன் பற்றிய செய்தியை அப்பர் கையாள்கின் றார் எனலாம்.

இவ்வாறு அப்பர் சுவாமிகளின் தேவா ரப் பதிகங்கள் அவர் வாழ்க்கையனுபவங் களைப் பிரதிபலிக்கின்றன. ஏற்கனவே சேக் கிழார் பெருமானால் இயற்றப்பட்ட நாவுக் கரசரின் வாழ்க்கை வரலாற்றில் காணப் படாத பல புதிய தகவல்களையும் நாம் அவ ரின் தேவாரப் பதிகங்களிற் காணலாம்.

திருமதி. த. சிவபாலன்,
(நிறைவாண்டு)

இலட்சியங்கள் தாரகைகள் போன்றவை. அவை களைக் கைக்குள் அடக்கிவிட முயன்றால், தோல்வி நிச்சயம். ஆனால், அவைகளை வழிகாட்டிகளாகக் கொண்டு பின் தொடர்ந்து சென்றால் போகவேண்டிய இடத்தை அடை வது உறுதி.

கார்ல் சூர்ஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" சமயம் கற்க விழைமின் "

இவ்வுலகின்கண்ணே பல்லாயிரக்கணக்கான மக்கள் வசிக்கின்றனர். இவர்கள் ஒவ்வொருவரும் பல சமயத்தை உடையவராகவோ சாகியத்தை உடையவராகவோ இருந்தபோதிலும், தம் வாழ்வில் கடைப்பிடிக்கவேண்டிய உண்மை நெறிகளைப் போதித்து வருகின்றனர். ஒவ்வொரு சாதியினரும், சமயத்தினரும் தத்தம் நிலைக்கேற்றவாறு வெவ்வேறு வழியினைக் கடைப்பிடித்து இறைவனை வழிபடினும் கடவுள் என்று சொல்லப்படுபவர் ஒருவரேயாம். மக்கள் ஒவ்வொருவரும் கடவுளை அடைதற்குச் சமயம் வழிகாட்டியாக அமைந்துள்ளது. மாந்தரை நல்வாழ்விலே இருத்தி ஒரு புதிய உலகத்தைத் தோற்றுவிப்பதற்குச் சமயக் கல்வி இன்றியமையாததாக இருக்கின்றது. அன்பு, அறன், பொறுமை ஆகிய நற்குணங்களை வளர்ச்சியடையச் செய்து தன்னலங்கருதாது பிறர் நலங்கருதி வேண்டிய பணியாற்றுவதும் இச்சமயமே; தீய வழியிற் செல்லும் மக்களைத் தடுத்துத் திருத்தி உணர்ச்சியற்றவர்களுக்கும் ஊக்கத்தைக் கொடுத்து ஆக்கத்தை அளிக்கவல்லதும் சமய நெறிகளேயாம்; அன்பும் அறனும் கொண்டு பண்பும் பயனும் அடையச்செய்து மக்களை அமரத்துவம் பெறச்செய்வதே சமயத்தின் நோக்கம் என்பது யாவரும் கண்ட உண்மையாகும்.

இத்தகைய உயரிய நெறிகளைத் தன்னகத்தே கொண்ட சமயத்தை வளர்ப்பதில் ஒவ்வொருவரும் முழுமனத்துடன் ஈடுபடவேண்டும்; பிறவியின் முன்னேற்றத்துக்கு வழிகாட்டியாக உள்ளது கல்வி. நன்மை தீமைகளை ஆராய்ந்து பகுத்தறிவைப் பயன்படுத்திக் கொள்வதற்குக் கல்வி மிகவும் முக்கியம்; இத்தகைய கல்வியினை வாழ்க்கையிலே கலந்து நெறிப்படுவதற்கு உதவி புரிவது சமயம்; சமயத்தை அத்திவாரக் கல்வியாகப் பதித்து வாழ்க்கையென்னும் வீட்டைக்கட்டிக் கல்வியின் துணைகொண்டு வாழ்பவர் என்றுமே இன்பமாக வாழ்வார்கள்; கற்ற கல்வியின் அறிவைக் கொண்டு இறைவனின் திருவருளை அறிந்து கொள்வதற்குச் சமயம் இன்றியமையாதது;

" கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக "

என்னும் வள்ளுவர் வாக்கிற்கிணங்க கற்ற கல்வியின்படி நடக்க வழிகாட்டியாக உள்ளது சமயம்; இன்னும்

" கற்றதனலாய பயனென் கொல் வாலறி
நற்றாள் தொழாஅர் எனின் " [வன்

என்னும் கூற்றுக்கிணங்கத் தெய்வ வழிபாடின்றி அறிவைத்தேட முயல்வது திசையறிகருவி யின்றிக் கப்பலோட்ட முயற்சிப்பதற்கு ஒப்பாகும். உதாரணமாகப் பல சமயங்களுள் ஒன்றுகிய சைவசமயத்தை உற்றுநோக்கின் அது எவ்வாறு வளர்ந்தது, அது மட்டுமன்றி இச்சமயத்தை எவ்வாறு மேலும் வளர்க்கலாம் என்பதுபற்றி சிறிது ஆராய்வாம். சைவசமயத்தை வளர்ப்பதில் சமய குரவர் நால்வரும் நாயன்மார்களும் அருஞ்செயல் புரிந்தார்கள் எனச் சமயநூல்கள் எடுத்து விளம்புகின்றன. இத்தகைய பெருமை வாய்ந்த இச்சமயம் எப்போ தோன்றியது என எவராலும் வரையறுத்துக் கூற முடியாது; அதனுடைய எடையை நாம் ஆராயப்புகின் என்று உலகம் தோன்றியதோ அன்றே சைவமும் தோன்றிச் சைவவழிபாடும் இருந்திருக்கிறது என்ப தெளிதிற் புலனாகும். சைவசமயத்தின் முழுமுதற்கடவுளான சிவபெருமான் " ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெரும் சோதி " என மாணிக்கவாசகர் கூறியதிலிருந்து சைவசமயமும் ஆதி அந்தமில்லாத ஒருசமயமென ஊகித்தறியக்கூடியதாக இருக்கிறது;

மனித வாழ்க்கையிலே லௌகீகம் ஆத்மீகமென இரு வேறு பிரிவுகள் இருக்கின்றன. சமய அடிப்படையில் இவ்விரண்டையுமெடுத்து ஆராயப்புகின் இரண்டும் ஒன்றுடனொன்று பின்னிப் பிணைந்து ஒன்றுக்கொன்று ஆதாரமாக இருக்கின்றன என்பதை அறியலாம். இல்லறத்தில் நெறிதவறாது ஒழுகியவர்களே துறவறத்துக்குரியவராவர் என்பது ஆன்றோர்வாக்கு. இன்பம் துன்பம் என்னும் இரு வேறு துருவங்களும் இல்லற வாழ்க்கையிலேதான் நிகழ்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளமையிலேயே துறவு பூண்டு கந்தள் உடைதரித்துக் கானகம் சென்று கடவுளை யடைய விரும்புவோனுக்கு இன்பத்தில் இனிமையோ துன்பத்தில் கசப்போ தெரி யாது; எனவேதான் லௌகீக வாழ்வு ஒவ் வொருவருக்கும் இன்றியமையாதது;

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல் பண்பும் பயனும் அது" [வாழ்க்கை

என்ற வாக்கிற்கிணங்க இறைவனை யடைய வேண்டுமாயின் தூய்மையான அன்பு இருக்கவேண்டும். அப்போதான் இறைவனின் அருளை இலகுவிற் பெறலாம். இல்வாழ்விலே ஏற்படும் இன்ப துன்பங் களே இறைவனை நினைக்க அவனருளை நினைந்து வியப்புறச் செய்கின்றன. இந்த வித முதிர்ந்த லௌகீகத்தின் முடிவே ஆத் மீகத்தின் தொடக்கமாகும். சைவசமயத் தின் நான்கு படிகளாகிய சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவற்றை அனுட் டித்தே சமயகுரவர் நால்வரும் ஆத்மீக வாழ்வு வாழ்ந்து அரும்பெரும் சமய நெறி களை உலகத்தோருக்கு விளக்கி இருக்கின் றார்கள்;

ஆத்மீக நெறியை ஒருவன் அடைய வேண்டுமாயின் அவன் தினமும் இறைவன் மேல் "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஒதுதல்வேண்டும்" இவர்தமை இறைவன் நன்நெறிக்குய்த்து விடுவார்; ஏனையோரை நன்னெறிக்கு விடமாட்டாரா? என ஒரு கேள்வி எழலாம்; விடுவார் எப்படியெனில் அவர்கள் எண்ணிய கருமங்கள், ஆசைகள் யாவும் பூர்த்தியாகி உலகப்பற்று நழுவும் போது கடவுட்பற்றுத்தானே வந்து சேரும் என்பதற்கு ஐயமில்லை. மாணிக்க வாசகர் குருந்தமர நீழலிலிருந்து பெற்ற ஞான உப தேசத்தை நாம் நன்னெறியைக் கடைப் பிடித்து ஒழுகின் எமது இல்லத்தின்கண்ணே யிருந்துகொண்டு பெறலாம் என்பது எமது நம்பிக்கையான முடிவு. இறைவன் நேரே வராவிட்டாலும் இறைவனாலே படைக்கப் பட்ட அருட்சக்தி எமக்கு எடுத்துக்காட் டக் கூடும்.

பிறவியின் பயனையடைவதற்கு நாம் எத்தனையோ சாதனைகளை ஆற்றவேண்டும்; எண்ணற்ற பிறவிகளில் மானிடப் பிறவிக்கு மட்டுமே பகுத்தறிவு என்னும் கொடையை அளித்திருக்கிறார் இறைவன். மற்றும் ஐந் தறிவுபடைத்த பிராணிகளைப்போல் உண்டு களித்துச் சோம்பேறிகளாக வாழ்வதற்கு மட்டும் மானிடப்பிறவி யமையவில்லை. பகுத்தறிவு என்னும் கோலைத் துணைக் கொண்டு வாழ்க்கைப்பாதையைத் தாண்டி இறைவனின் பாதார விந்தங்களிலே இரண் டறக் கலப்பதற்கு ஏற்றது மானிடப்பிற வியே. வாழ்க்கையென்பது மென்மலர் தூவிய பஞ்சணை மெத்தையல்ல; அது ஓர் ஆழமறியமுடியாத ஆழி. அதிலே தன்ன லத் திமிங்கிலங்கள் ஏப்பமிடாவிட்டால் வாழ்க்கைப்படகு அமைதியாகச் சென்று பிறவிப் பெருங்கடலைத்தாண்டி இறைவ னடியைச் சேரலாம். வாழ்க்கையில் ஏற் படக்கூடிய இன்பதுன்பங்களை நுகர்ந்து அதர்மத்தைக் கைவிட்டுத் தர்மத்தை நிலை நாட்டி இன்பவீட்டையும் அடையும் நோக்க மாகவே இறைவன் உயிர்களுக்குப் பிறவி யைக் கொடுத்திருக்கின்றான். இன்பத்தைக் கண்டு விருப்பும், துன்பத்தைக்கண்டு வெறுப் பும் கொள்வது மக்கள் இயல்பு. வாழ்வு மேடும் பள்ளமுமுள்ளது. சோலைகளும் நந்நிழற் சாலைகளும் பூத்துக்குலுங்குகின் றன; ஆணிகளும் கண்ணுடிச் சில்லுகளும் சிதறிக் கிடக்கின்றன; இப்பாதையைத் தாண்டிச்செல்லும்பொழுது மென்மையான கால்களைக் கூரிய முட்கள் முத்தமிடலாம். ஆனால் பகுத்தறிவு என்னும் விழியைக் கொண்டு இறைவனுடன் இரண்டறக் கலப் பதற்கு வேண்டி மார்க்கத்தைப் போதிப் பது சமய நெறியாகும்.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவார் நீந்தார் இறைவனடி சேராதார்."

என்பதற்கிணங்க இறைவனது மலரடி யை அடைந்தாற்றான் பிறவிக்கடலைத் தாண்டலாம்; ஒருவன் தன் மனைவிமக்க ளிடம் அன்பைச் செலுத்தி அவர்களிடம் இருந்து அன்பைப் பெறும் பொழுது இன்ப மடைகிறான்; சிறிதுகாலம் செல்ல அவ னின் அன்பு முதிர கடவுளின்மீது அவ்வன் பைச் செலுத்துகின்றான். அப்பொழுது தான் வாழ்க்கையிலடையும் இன்பம் நிலை யற்றதெனவும் இறைவனில் கொண்ட இன் பம் நிலையானது எனவும் உணர்கின்றான்; இந்த நேரத்திலேதான் என்றும் அகலாத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்ப ஒளியைக்கண்டு நிறைந்த இன்ப வீடாகிய மோட்சத்தை யடையக்கூடும்; இந்நெறியைப் போதிக்கும் சமயக் கொள் கைகளைக் கைக்கொண்டே காந்தியடிகளும் திருவள்ளுவரும் தம் பூதவுடம்பைப் பூமி யிலே அழியவிட்டுப் புகழுடம்பைத் தேடிக் கொண்டமைக்கு அவர்கள் ஏற்றுக்கொண் ட கடவுள் நெறியே காரணமாகும்.

இத்தகைய சமயநெறி பரவிவருவதி னாலே மக்கள்இனத்தில் இன்று மறுமலர்ச்சி காணக்கூடியதாக இருக்கின்றது. பாட சாலைகளில் ஒரு குறித்த நேரத்திற்குச் சம யக் கல்வியைப் போதித்து வருகிறார்கள். இதனாலே மாணவர்களுக்கு இளமையி லிருந்தே இறைபக்தியும் சகோதர அன்பும் பதிகின்றன. இச்சமயக் கல்வியை வளர்ப் பதற்கு இன்றைய அரசாங்கம் பல பரீட்சை கள் நடாத்தியும் பரிசில்கள் வழங்கியும் வரு வது கண்கூடு; அதுமட்டுமன்றி சிரேஷ்ட வகுப்புகளுக்குச் சமயம் ஒரு கட்டாய பாட மாக இருக்கவேண்டுமென அரசாங்கம் வகுத்த திட்டம், மக்களை மாக்களாக்காது மனித சமுதாயம் மாண்புற்று விளங்குவ தற்கும், மறுமலர்ச்சி உண்டாக்குவதற்கும் எடுத்துக்கொண்ட ஓர் அரிய உயரிய சாதனை யாகும். மனித வாழ்க்கையிலே செல்வத் தைப் பெரிதென்றும் மனிதன் சாதாரண மாகத் தான் விடும் தவறுகளையும் பாவச் செயல்களையும் சில சமய நூல்களைக் கற் பதன் மூலம் விலக்கிவிடக் கூடியதாக இருக் கின்றது. ஆகவே சமயத்தை வளர்ச்சி யடையச் செய்வதற்கு நாம் ஆற்றவேண் டிய பணிகளோ மிகப்பல. சமய குருமா ரைப் போற்றவேண்டும். கோவில்களிலும், பொது இடங்களிலும் சமயத்தைப் பரப் பத் தகுந்த சமயப்பற்றுள்ள பெரியோர் களை வரவழைத்துப் பிரசங்கமூலமாகக் கட வுளை யடையும் மார்க்க நெறிகளைப் போதிப் பதற்குரிய வழிவகைகளைச் செய்ய வேண் டும். உலகில் பொருட் செல்வமானது நிலையற்றது. ஒருசில காலங்கட்கு மட்டும் மனிதர்களுடன் இருந்து அவர்களுடைய சுகபோக வாழ்க்கையை நிறைவேற்றி ஈற் றில் அழிந்துபோகும் தன்மையுடையது. இச் செல்வமானது ஒரு கூட்டத்தில் எப் படி ஜனங்கள் வந்து கூடுகின்றார்களோ அதேபோல செல்வமும்வந்து பெருகிக் கூட் டம் முடிந்ததும் அவர்கள் குலைந்து போவது போலச் செல்வமும் அழிந்துபோவது மட்டு மல்ல, அங்கு முன்பிருந்த செல்வத்தையும் கொண்டு செல்கின்றன. இதையே வள்ளு வரும்:

'' கூத்தாட்டவைக் குழாத்தற்றே பெருஞ் செல்வம்
போக்குமது விளிந்தற்று.''

எனக்கூறுகின்றார்.

இதிலிருந்து பொருட்செல்வத்தை விட்டு அருட்செல்வத்தை அடைய நாம் முயற்சி செய்ய வேண்டுமென்பதும் அதற்கு வழி காட்டியாகவுள்ளது சமய மென்பதும் புல னாகும்.

ஆகவே சமயப்பற்றுமிக்க நல்லறிவுடை யோரே வாரீர்! சமயத் தொண்டை வளர்த்து நன்னெறியில் நம்மைப் புகுத்த விழைமின்!! சமய நெறிதனைப் பரப்ப எழு மின்!!! சமயநூல்களைக் கற்று ஒழுக உலக மக்களுக்கு சமயநூல்களை அச்சடித்து வெளி வீடுங்கள்; இதனாலே நாம் அனைவரும் அவ னருளாலே அவன் தாழ்வணங்கி அவனடிக் கீழ் அடிமைபுகும் ஆனந்தப்பேற்றை அடை யலாம்.

வளர்க சமயம்! வாழ்க இறைஅருள்!! வாழ்க இறைவனடி!!!

செல்வி. வே. திவ்யநாயகம்,
விடுகைவருடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்மை

(அருட்டிரு. நீ. மரியசேவியர் அவர்களால் வானொலியில் ஒலிபரப்பிய நற்சிந்தனை)

கடவுள் ஒளியாக இருக்கின்றார்; ஒளியைப் பரப்புகின்றார். அவர் இருளில் லாதவர்; இருளை அகற்றுகின்றவர். அவர் உண்மையின் பிறப்பிடம் — உறைவிடம் — நிறைவிடம். அதனால் உண்மையை விரும்புகின்றார். உண்மையை உலகிற்கு அளிக்கின்றார். உண்மையை அறிவதற்கு — உணர்வதற்கு அறிவையும், செயற்படுத்துவதற்கு மனச்சான்றையும் கொடுக்கின்றார். அறிவுள்ள மனிதன் இவ்வுண்மையாகிய வாய்மையை அறநெறியாகக் கொண்டு வாழ வேண்டும். ''பொய்யாமை யன்ன புகழில்லை'' என்று கூறுகின்றார் திருவள்ளுவர். பொய்யாமை — உண்மை — வாய்மை மனிதனுடைய தனிப்பெரும் பண்பு.

இந்த நல்ல பண்பு உள்ளத்தில் இருக்க வேண்டும்; உள்ளத்தின் உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் சொல்லில் இருக்கவேண்டும்; சொற்கள் வெளிவடிவம் எடுக்கும் செயல்களில் இருக்கவேண்டும். உள்ளத்தில் இருப்பதற்கும், சொல்லில் வருவதற்கும் வேறுபாடு இருந்தால் அது பொய்மையாகும். உள்ளத்திலே உள்ளதை ஒழிப்பு மறைப்பின்றி எடுத்துக் கூற வேண்டும். ''மனத்தொடு வாய்மை மொழியில் .....'' என்று கூறுகின்றார் திருவள்ளுவர். செயலிலும் கள்ளங் கபடு இருத்தலாகாது; உள்ளத்திற்கும், உரைத்த சொல்லுக்கும் இசையச் செயல் அமையவேண்டும்.

''உங்கள் பேச்சு 'ஆம்' என்பதற்கு 'ஆம்' என்றும், 'இல்லை' என்பதற்கு 'இல்லை' என்றும் இருக்கக்கடவது, இவைகளுக்கு மேற்பட்டது தீமையால் உண்டாகின்றது'' என்று கிறீஸ்துநாதர் கூறுகின்றார். எதற்கும் எப்பொழுதும் வாய்மையைக் காப்பாற்ற வேண்டும்; பிறரில் பொறுமை கொண்டு பொய் பேசுவது கூடாது. பிறருக்குத் தீங்கு விளைவிக்கும் பொய்ச்சாட்சி சொல்வதும் கூடாது. பிறரின் நன்மதிப்பைக் கெடுப்பதற்காகப் பழிகள், குற்றங்குறைகள் கூறுவதும் கூடாது; உண்மையில் நீதி உண்டு. நாம் எப்பொழுதும் உரியதை உரியவனுக்குக் கொடுக்க வேண்டும். உரியவனிடமிருந்து எதையும் களவு செய்யக் கூடாது. மற்றவர்களுக்கு உரித்தான எதையும் மனத்தாலும் விரும்பாது இருக்கவேண்டும்.

பிறருடைய நன்மதிப்பு அவர்களுடைய உயிர் போன்றது. அதைக் களங்கப்படுத்த முயலுதல் உயிரைக் கொல்லுவதற்கு ஒத்தது.

நேர்மையற்ற மனிதன் உலகத்தை ஏமாற்றலாம். தன்னுடைய மனச்சான்றையும் முடியுமானால் ஏமாற்றிவிடலாம். ஆனால், எல்லாம் அறிந்த இறைவனை ஏமாற்றிவிட முடியுமா? ''களவு செய்யாதே'', ''பொய் சொல்லாதே''. இவை கடவுள் கொடுத்த கட்டளைகள். இவற்றை மீறுவது பாவம்; உள்ளத்தின் அழகை அழித்துவிடும்.

எனவே, வாய்மையை விரும்பி அதை வாழ்வில் கடைப்பிடித்தால் நன்மதிப்புக் கிடைக்கும்; எவரும் நம்பிக்கை வைப்பார்கள். மனத்திலே உண்மை (வாய்மை) ஒளி உண்டாயின், வாழ்வினிலே ஒளி உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னிமரியாளும் கத்தோலிக்கரும்

நமது இரட்சகரும் ஆண்டவருமாகிய யேசுக்கிறீஸ்து இவ்வுலகிற்கு வந்து திக்க உதவியாயிருந்த பரிசுத்த கன்னிமரியம்மாள்தான் மனுக்குலம் முழுவதற்கும் தாய் என்பதைச் சிலுவை மரத்திலிருந்து தமது தாயாரோடு பேசிய சில வார்த்தைகளாலே கிறீஸ்துநாதர் நிரூபித்துள்ளார். சிலுவையினடியிலே தமது ஏக குமாரனின் பரிதாப நிலையைக் கண்ணுற்றுப் பதறித் துடித்துப் பரதவித்து, மனம் வெதும்பித் தாங்கொணு வேதனையை அனுபவித்துக் கொண்டிருந்த தாய்மரியைச் சிலுவையின் மீதிருந்து கருணைக்கண் களால் கனிவுடன் நோக்கி, அங்கு பக்கலில் நின்றுகொண்டிருந்த தம்மால் சினேகிக்கப்பட்ட சீடனை அருளப்பரைக் காட்டி, ''ஸ்திரியே, இதோ உன் மகன்'' என்று திருவாய் மலர்ந்து, பின்னும் மாதாவைக்காட்டி, அருளப்பரை நோக்கி: ''இதோ உன் தாய்'' என்று வசனித்தார் (அருளப். 19-ம் அதிகாரம், 26-ம் வசனம்); அந்நேர முதல் அந்தச் சீடன் அவளைத் தன் இல்லத்தில் ஏற்றுக் கொண்டான்.

இவ்வாக்கியங்களிலிருந்து நாம் இரு வித உண்மைகளைக் கண்டுகொள்ள முடிகிறது. முதலாவதாகக் கிறீஸ்துநாதர் மரித்தபின் அவரது அன்னையை அன்புடன் ஆதரிக்க இவ்வுலகில் யாரும் இல்லை. அவளது பத்தாவாகிய புனித சூசையப்பரும் ஏற்கனவே இம் மண்ணுலகை விட்டு விண்ணுலகு சென்றமையால் அவளது லௌகீக வாழ்விற்கு எதுவித ஆதாரமும் இல்லை; ஆகவே, இவ்வன்புச் செய்கையை ஆற்றுவதற்குத் தமது சீடனை அருளப்பரைத் தெரிந்திருக்கிறார் என நாம் கருதுதல்கூடும்; அடுத்ததாகச் சரீரத்தோடு சம்பந்தப்பட்ட இக்கருத்தை நீக்கி முக்கியமான ஆன்ம அம்சத்தை நோக்குங்கால், அந்நேரத்தில் பின்தொடர்ந்த சீடனையே உலகின் மக்கள் எல்லோரதும் பிரதிநிதியாகக் கொண்டு கன்னிமரியம்மாளை இவ்வுலகத்தார் யாவருக்கும் பொதுவான ஆன்ம தாயாக நியமித்தார் என்று எண்ணுதல் கூடும்; ஆனால், முன்னையதிலும் பின்னைய கருத்தே மிகவும் பொருத்தமானது: தனது ஏக குமாரனை இழக்கும் நாவா லெடுத்துரைக்க முடியாத துன்பத்தையே மனுக்குலத்தைப் பெறுவிக்கும் பிரசவ வேதனையாகக் கொண்டு சிலுவையடியில் நம்மைப் பெற்று எடுத்து எம்மனைவரினதும் தாயானாள்.

மேலும் ஞான முழுக்கு மூலம் பிதாவாகியசருவேசுரன் அருள்களைப் பொழிந்து எம்மைத் தமது பிள்ளைகளாக்குகின்றார்; எனவே, பிதாவின் சுதனாகியயேசுக்கிறீஸ்து நமக்குச் சகோதரர் ஆகின்றார். எமது சகோதரராகிய இயேசுக்கிறீஸ்துவை ஈன்ற அன்னை எமது அன்னை என்பதில் எவ்வித தவறுமில்லை. உலக தாய்மாரிலும் மேம்பட்ட ஜென்ம மாசனுகாப் பரிசுத்தவதியை, 'எங்கள் தாய்' என்று அழைக்கும் சலுகை எத்தகைய மகிமையுடைத்தானது!

இத் தேவதாய் தமது திருக் குமாரனுடன் இணைந்து உடன் இரட்சகியாகி, எம்மைப் பாவத்தளைகளில் இருந்து மீட்டு இரட்சித்து மோட்ச வாசலைக் காட்டினாள் என்று சொல்வது மிகையாகாது. அன்றொருநாள் பரலோக பிதாவினால் அனுப்பப்பட்ட தூதுவன் கபிரியேலின் வார்த்தைகளுக்குச் செவிமடுத்துக் கன்னிமரியாள் தமது இசைவினைத் தெரிவித்திராவிட்டால் இன்னும் மக்கள் பாவத்தின் அந்தகாரத்தினால் அமிழ்ந்தி மீள வழியற்றவர்களாக இருந்திருப்பார்கள். கிறீஸ்து இவ்வுலகில் தமது அலுவலைத் தொழிற்படுத்தத் தெரிந்த கருவி கன்னிமரியே. அவள் குழந்தைக் கிறீஸ்துவைக் கையிலேந்தி ஜெருசலேம் மகா தேவாலயத்திற்குச் சென்ற வேளையில் சிமியோன் என்ற தீர்க்கதரிசி மரியம்மாளை நோக்கிச் செப்பியதாவது: ''இதோ, இவர் இஸ்ராயேலரில் அனேகருக்குக் கேடாகவும், உத்தானமாகவும், விரோதிக்கப்படும் குறியாகவும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறார்; உம்முடைய ஆத்துமத்தையும் ஒரு வாள் ஊடுருவும்; இதனாலே அனேகருடைய இருதய சிந்தனைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படும்படியாகும்'' என்றார் (லூக்: 2-ம் அதி. 34—35 வசனம்); இவ் வசனங் களைக் கேட்ட கன்னிமரியம்மாளின் இருத யம் மிகவும் வேதனையடைந்தது. ஏனெ னில், இரட்சணிய அலுவலை நிறைவேற்றும் பொருட்டுப் பரத்தை விட்டு இகத்தை நாடிய தேவ சுதனுகிய கிறீஸ்துவிற்குத் தன் குருதியையே உடலாக அளிக்க ஒருப் பட்ட மரியாள் அவ்விரட்சணிய வேலையை நிறைவேற்றும் பொருட்டுச் சிலுவை மட் டும் உடன் நின்று உழைக்க வேண்டியவளா னாள். இதனாலே அவள் தாங்கொணு மன வேதனைகளை அனுபவிக்கவேண்டியிருந்தது; மனுக்குலத்தின் மீட்பிலே கிறீஸ்துவுடன் சேர்ந்து உழைத்தமையாலேயே அவளை எம் இரட்சணியத்தின் உடன் இரட்சகி என அழைக்கிறோம்.

எனவே, கத்தோலிக்கர்மத்தியில் தேவ னுக்கு அடுத்தபடியாகக் கன்னிமரியம்மாள் ஒரு பிரதான ஸ்தானம் வகிக்கின்றாள். தேவன் இவ்வுலகிற்கு வருவதற்கு ஒரு பால மாக அமைந்தாள். எவருக்கும் கிடைக்க முடியாத 'தேவதாய்' என்ற உன்னத நிலை அவளுக்குக் கிடைத்துள்ளது; தமது ஆண் டவரும், இரட்சகரும் என்று கிறீஸ்துவை ஏற்றுக்கொள்ளும் கத்தோலிக்கர்களைப் பொறுத்தமட்டில் அவளது ஸ்தானம் சாலச் சிறந்ததும் உயர்ந்ததும் அன்றோ! இவ்வுலகில் ஒரு நாட்டை ஆளும் மன்ன னின் தாயார் ஒரு நாட்டிற்கு விஜயம் செய்கிறார் என்றால், அல்லது அவரின் வாழ்க்கையின் விசேட தினங்களென்றால் அந்நாட்டு மக்கள் அரசனைப் பெற்ற தாய் என்னும் விசேட சலுகையை மனதில் வைத்து எத்தகைய மரியாதை செய்வார் கள். ஆனால், அண்டசராசரங்கள் அனைத் தினதும் ஆண்டவனின் அன்னை என்னும் வாய்ப்புப் பெற்ற கன்னிமரியாள் எத்த கைய சங்கை பெறத் தக்கவள் என்பது சொல்லாமலே விளங்கும்.

அவள் எப்படி எங்கள் இரட்சணியத்தில் உடனின்று உதவினாளோ அதேபோன்று இன்றுவரை தேவசமூகத்திலே எங்களுக் காகப் பரிந்து பேசும் மத்தியஸ்தியாக இருக்கின்றாள். லூர்துதிருப்பதியிலும், பத்தி மாபதியிலும் பன்முறை தரிசனையாகி எமது பாவத்தின் அகோரத்தையும், அத னால் தேவகோபம் எம்மைச் சூழாமல் இருக் கச் செபதபம் செய்யவேண்டுமென்றும் அறி வித்துள்ளமை இதற்குச் சான்று; எம்மை நல்வழிபடுத்தி நாம் இறைவாழ்வில் பங்கு பெற வேண்டுமென்ற அவாவே அவள் தரி சனங்களின் போது பன்முறை கூறியவற்றி லிருந்து புலனாகிறது.

கன்னிமரியாள் லூர்துபதியில் காட்சி யருளினாள் என்பதற்காக லூர்துமாதா வென்றும், பத்திமாபதியில் தரிசனமான தால் பத்திமாமாதாவென்றும், பற்பல சகா யங்களைப் புரிந்து வருவதால் சகாயமாதா வென்றும், தனது திருக்குமாரன் சிலுவை மரத்தில் மரித்ததைக்கண்டு, வியாகுலத் தால் அவள் இருதயம் ஊடுருவப்பட்ட தால் வியாகுலமாதாவென்றும் பல கார ணப்பெயர்களால் அழைக்கப்படுகின்றாள். இதேவிதம் கன்னிமரிக்கு மக்களால் இடப் பட்டுள்ள நாமங்கள் எண்ணில் அடங்கா தவை, இவ்வளவு மகோன்னதமாக அவள் சங்கிக்கப்பட்டபோதிலும் கடவுளின் ஸ்தா னம் ஒருபோதும் அவளுக்கு அளிக்கப்படுவ தில்லை. கடவுள் வழியாகச் சகாயங்களை யும், சலுகைகளையும் அவள் எங்களுக்குப் பெற்றுத்தரமுடியுமல்லாமல் அவளாக எச் சகாயங்களையும் நேரடியாக எங்களுக்கு அளிக்கமுடியாது. உதாரணமாகக் கானா ஊர்க் கலியாணத்திலே இயேசுநாதர் ஆறு குடம் தண்ணீரைச் சுவைமிக்க இரசபான மாக்கியபொழுது, தேவதாயின் வேண்டு கோளுக்கிசைந்தே அவ்வற்புதம் புரியப்பட் டது. எனவே இயேசு தேவதாயை இவ்வி டத்திற் சங்கித்தார் என்பதுடன், அவர் தம் சரீரத்தை எடுக்க உதவிய தாய் என் பதற்காக அவளுக்கு விசேட மதிப்பு அளித் தார் என்றே சொல்லவேண்டும். இவ்வி டத்தில் இயேசுநாதர் அவள் விருப்பிற்குச் செவிசாய்க்காமல் இருந்திருக்கலாம். ஏனெ னில் அதிசயங்களைப் புரிய அவரது காலம் வரவில்லையென்று அவரே குறிப்பிட்டுள் ளார். அவருடைய காலம் வருமுன்னரே வெறும் சரீரத்தை எடுத்ததற்காகவும், அவளால் பராமரிக்கப் பட்டதாலும் தன் னால் சிருட்டிக்கப்பட்ட சிருட்டியைச் சங் கை செய்துள்ளார் என்றால், நாம் தேவ னைப் பெற்றுத்தந்ததற்காக அவளுக்கு எவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளவு சங்கை கொடுக்கவேண்டுமென்பது தெளிவாக விளங்கக்கூடியதாய் இருக்கின்றது;

எனவே, கன்னித்தாய் எல்லா மோட்ச வாசிகளுக்கும் மேலாகக் கடவுளுக்கு அடுத்தபடியாகச் சங்கிக்கப்படுகிறாளே தவிர அவள் கடவுளின் இடத்திலுமில்லை, கடவுளுக்குரிய மேலான ஆராதனை அவளுக்குச் செலுத்தப்படுவதுமில்லை.

பலர் அபிப்பிராயப்படுவது போல் தேவதாய் தேவனுடைய வரிசையில் வைத்து ஆராதிக்கப்படத் தகுந்தவளல்லள், ஏனெனில் அவள் எம்மைப்போல் ஒரு சிருட்டி. சிருட்டிக்குச் சிருட்டிகரின் இடம் கொடுபடமுடியாது. ஆனால் அவள் கொண்டுள்ள விசேட அருள்களினாலும், வரப்பிரசாதங்களினாலும், பாக்கியங்களினாலும் கடவுளுக்குப் பின் ஆராதிக்கப்படவல்லள்; ஆனால் சங்கிக்கப்பட வேண்டுமென்று விரும்பிக் கத்தோலிக்க திருச்சபை அவள் நாமத்தினால் பல விழாக்களை எடுக்கின்றது;

செல்வி. மனோன்மணி தோமஸ்,
முதலாம் வருடம்;

அறிவு வளர்ச்சிக்கு ஒரே ஒரு முறைதான் உண்டு. அதுதான் மனத்தை ஒரு முகப்படுத்தல் என்பது. கல்வியின் அடிப்படையான இலட்சியமும் அதுவேதான். சாதாரண மனிதனிலிருந்து சகல சித்திகளையும் பெற்ற யோகிவரை, எல்லோரும் தங்கள் அறிவுவளர்ச்சிக்கு அம்முறையைத்தான் பின்பற்றியாக வேண்டும்.

சுவாமி விவேகானந்தர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றுமுள தென்றமிழ்

அமிழ்தைக் கவர்ந்து — சுவை
அனைத்தும் நிறைத்தே — இறை
புவியில் விடுத்த தமிழ்.

உருவிற் சிறிய — முனி
உலகிற் களித்த — இயல்
மருவச் சிறந்த தமிழ்.

கழகப் புலவர் — பலர்
கருதிப் படைத்த — வுயர்
அழகுக் கலைகொள் தமிழ்.

பழமைச் சிறப்பு — மிகு
மொழிகள் இழந்தும் — எழில்
பழக நிலைத்த தமிழ்.

காலம் வகுத்த — மொழி
நூலோர் மயங்கி — முதற்
காலம் வகுக்காத் தமிழ்.

செல்வி. மே. பி. ஸ்ரனிஸ்லாஸ்,
விடுகை வருடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சி மொழி விடயத்தில் காணும் சில தனியான பிரச்சினைகள்

இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டுக் கருத்தரங்கின் நிறை கூட்டத்தில் இலங்கைப் பிரதிநிதியாகச் சென்ற திருமதி. மகேசுவரி பாலகிருஷ்ணன் அவர்கள் படித்த ஆங்கிலக் கட்டுரையின் மொழிபெயர்ப்புச் சுருக்கம்.

வெளிநாட்டவர் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றுள்ள நாடுகள் யாவற்றிலும், ஆட்சிப் பணிகளுக்குத் தாய்மொழியையே உபயோகிப்பது பற்றிய பிரச்சினையைச் சமாளிக்கவேண்டியிருக்கிறது. தமிழ் மொழிபேசும் மக்கள் சம்பந்தப்பட்டமட்டில் ஆங்கில மொழியே ஆட்சிமொழியாக இருந்ததைவிட்டு, தமிழ்மொழியை ஆட்சிமொழியாகக் கொள்வதில், மொழிபெயர்ப்பாளர்கள்மீது ஒரு பெரியபொறுப்பு ஏற்பட்டிருக்கிறது.

பிற மொழியிலுள்ள கருத்தைத் தம் மொழிமூலம் வெளியிடுவதான 'மொழிபெயர்ப்பு' என்பது தமிழுக்குப் புதிது அல்ல. வடமொழி இலக்கிய நூல்களையும், இலக்கிய அம்சம் மிகுதியாக இல்லாத அறிவுநூல்களையும் தமிழாக்குவது நெடுங்காலமாக இருந்து வருகின்றது. சமீபகாலத்தில் ஆங்கிலம்போன்ற அன்னிய மொழிகளிலிருந்து மொழிபெயர்ப்புக்கள் செய்யப்பட்டிருக்கின்றன. நமது இலக்கண நூல்களில் மிகவும் தொன்மைவாய்ந்ததான தொல்காப்பியத்தில் இதுபற்றிப் பேசப்பட்டிருக்கிறது.

'வழிநூல்கள்' எழுதுவதற்கு நான்கு வழிகள் அதில் சொல்லப்படுகின்றன. 'மொழி பெயர்த்து அதர்ப்பட யாத்தல்' என்பது அந்த நான்கில் ஒன்று. இந்தச் சூத்திரம் இலக்கியத்தன்மை வாய்ந்த நூல்களைப் பற்றியது. பிறமொழி நூல்களிலிருந்து மொழிபெயர்ப்புச் செய்வது என்ற பணியைத் திறமை வாய்ந்த புலவர்கள் மிகவும் சுலபமாகவும் இயல்பான வடிவத்திலுஞ் செய்துள்ளார்கள். இதை ஒரு 'கலை' என்று மட்டும் கொள்ளாமல் 'நுண்கலை' என்றே சொல்லலாம்.

ஆட்சிமொழி பற்றிய மொழிபெயர்ப்புத் தனிவகைப்பட்டது

இலக்கிய மொழிபெயர்ப்பு என்பதில் முக்கிய இயல்பு முதநூலிலுள்ள கருத்துக்கள் வழிநூலிலும் காணும்படி செய்வதுதான் வார்த்தைக்கு வார்த்தை நூற்றுக்கு நூறு சரிபார்க்க வேண்டியதில்லை. இங்கொன்று அங்கொன்றுகச் சிறிது மாறுதல் இருப்பினும் மொழிபெயர்ப்பானது குறைபாடுள்ளதாகக் கருதப்படுவதில்லை. அந்த மாறுபாடு மொழிபெயர்ப்பாளரின் சிந்தனைச் செறிவுக்கு அத்தாட்சியாகப் போற்றப்படுவதுகூட உண்டு.

ஆனால் அரசாங்கத்தின் ஆணைகள், சாதனங்கள் முதலியவற்றை மொழிபெயர்ப்போருக்கு இந்தச்சுதந்திரம் கிடையாது. முதல் நூலில் இருப்பது அப்படியே மொழிபெயர்க்கப்பட வேண்டும். கருத்திற் சிறிதும் மாறுதல் கூடாது. மொழிபெயர்க்கப்படும் வாசகத்திலுள்ள கருத்தைச் சிறிது கூட்டுவது குறைப்பது இரண்டும் தவிர்க்கப்பட வேண்டும். இது எளிதல்ல.

அதிலும் மொழி பெயர்க்கப்படும் பொருளானது அரசாங்க ஆணையாகவோ, அரசாங்க ஒழுங்கினைப் பற்றியதாகவோ, நிதி விடயம்பற்றிய ஒழுங்குகளாகவோ இருக்குமாயின், மொழிபெயர்க்கப்படும் வாக்கியத்திலுள்ள கருத்து இம்மியளவும் மாற்றப்படாமல் மொழிபெயர்ப்பில் காணப்பட வேண்டும்.

மொழி பெயர்ப்பாளரை எதிர்நோக்கும் இடர்ப்பாடுகள்

இந்தக்குறிக்கோளை நிறைவேற்றுவதில் மொழிபெயர்ப்பாளருக்கு எவ்வளவு சிர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கள், எத்தனைவிதமான சிரமங்கள் இருக்கின்றன என்பதைச் சற்று ஆராய்வோம். ஒருமொழியை உபயோகிக்கும் நாட்டின் பண்பாட்டுக்குப் புறம்பான கருத்துக்களை அந்த மொழியில் ஆக்கும்போது, மொழி பெயர்க்கப்படும் வாக்கியத்திலுள்ள கருத்துக்கள், சிந்தனைகள் முழுமையுடன் மொழி பெயர்ப்பில் காணப்படுவது சாத்தியமாவதில்லை. புதிய கருத்துக்களின் அளவு பெருகிக் கிடக்கும்போது, இந்தச்சிரமம் மேலும் அதிகமாகின்றது.

அண்மையில் விடுதலையடைந்த நாடுகளின் மொழிகள் ஆட்சித்துறையில் நெடுங்காலமாக அலட்சியம் செய்யப்பட்டிருக்கின்றன. ஆதலின் அம்மொழிகள் இந்தத் துறையில் பயன்படவேண்டிய உருவத்தில் போதியஅளவு வளர்ச்சி பெறவில்லை. ஆட்சி மாறும்போது ஆட்சிக்கருவிகளும், நடைமுறைகளும் மாறுவதில்லை. உபயோகிக்கும் மொழியைமட்டுமே மாற்றிவிட்டுப் பிறமொழி இருந்த இடத்தில் தாய்மொழியை உபயோகிக்க வேண்டியிருக்கிறது. இந்த மாறுதல் என்பது மொழி பெயர்ப்பு மூலமே ஏற்படவேண்டியிருக்கிறது. நேற்றுவரை இருந்த ஒரு நிலையை இன்று திடீரென்று மாற்றுவது என்பது உண்மையிலேயே சிரமமான தொன்றுதான். மொழிபெயர்ப்பாளர் ஒரேநாளில் 'அதிசயம்' விளைவிக்கவேண்டியிருக்கிறது.

இலக்கண அமைப்புப்பற்றிய சிரமம்

எந்த இரண்டு மொழிகளும் ஒரேமாதிரியான அமைப்புடன் இருப்பதில்லை. இலக்கண அமைப்பு, கருத்தமைப்பு இரண்டிலும் அவை வெவ்வேறு தன்மையுடன் இருக்கும். கருத்தமைப்பு, இலக்கண அமைப்பு இரண்டும் தம்மிடையே தொடர்புள்ளவை. ஏனென்றால், கருத்தும் இலக்கணமும் சேர்ந்துதான் வாக்கியம். இலக்கணம் பற்றிய வேறுபாடுகளில் இரண்டு அல்லது மூன்று அமைப்புகளிலிருந்து ஏதேனும் ஒன்றைப் பொறுக்கிக்கொள்ளலாம். ஆனால் சொற்களுக்கு மாற்றுச் சொற்கள் இரண்டு மூன்றாக இல்லாமல் ஐந்தாறுஎன்று பலவாக இருக்கும். அதாவது ஒரு சொல்லுக்குப் பதிலாக உபயோகிக்கக்கூடிய பிறமொழிச் சொற்கள் பல்வேறாக இருக்கமுடியும்.

ஆங்கிலமொழியின் இலக்கணஅமைப்பு 'எழுவாய், பயனிலை வரிசை' தமிழின் இலக்கண அமைப்பிலிருந்து மாறுபட்டது. பல உபவாக்கியங்கள் இணைந்து அமையும் ஒரு முழு ஆங்கில வாக்கியத்தை அப்படியே தமிழில் ஒரே வாக்கியமாக அமைப்பதிற் சில புதிய பிரச்சினைகள் கிளம்பும். ஒரு ஆங்கில வாக்கியத்தை அதன் பல பகுதிகளாகப் பிரித்துப் பார்த்து ஒவ்வொரு பிரிவினையும் தனி வாக்கியமாக அமைத்து (தமிழில்) இணைக்கும்போது, பொருள் சிறிது மாறுபடக்கூடும். இணைப்பின் இணக்கம் குன்றக்கூடும்.

போதிய சொற்கள் இல்லாத குறைபாடு

இரண்டாவது இடர்ப்பாடு, நம் தாய் மொழிகளில் போதிய சொற்கள் இல்லாமை. இந்தக்கூற்றுக்குச் சான்றாக ஒன்று குறிப்பிட விரும்புகின்றேன். ஆக்ஸ்போட் சொல்லகராதியின் நூன் முகத்தைப் பார்த்தால், இந்த அகராதியில் சொற்கள் எவ்வாறு கையாளப்பட்டன என்பதற்கு மேற்கோளும் சான்றும் கூறுவதற்காக 50 இலட்சம் இலக்கிய வாசகங்கள் பரிசீலனை செய்யப்பட்டதாகவும், 5 இலட்சம் சொற்கள் 15 இலட்சம் எடுத்துக்காட்டுகள் பயன்படுத்தப்பட்டதாயும் காண்கின்றோம். இந்த நோக்குடன் தமிழ் அகராதியைப் பார்த்தோமானால் 1,24,405 சொற்களே காணப்படுகின்றன.

அவ்வாறு பார்க்கும்போது ஆங்கிலத்தின் சொற்களஞ்சியத்தில் தமிழின் சொற்களஞ்சியத்திலுள்ளதைப்போன்று 4 மடங்கு சொற்கள் இருக்கின்றன. ஆங்கில மொழியில் இவ்வாறு சொற்கள் பெருகிக்கிடப்பது, அந்த மொழியின் இயல்பான சிறப்பினாலோ, அதன் இலக்கண அமைப்பினாலோ ஏற்பட்டதல்ல. சொற் பெருக்கத்திற்கு உண்மையான காரணம், அதன் நெடுங்காலத்து வளர்ச்சி வாய்ப்பின்போது வெவ்வேறு அறிவுத்துறையிலும் கையாளப்பட்ட சொற்களில் நுட்பத் தெளிவும் ஒரு சொல்லுக்கும் மற்றொரு சொல்லுக்கும் கருத்துப்பாகுபாடும் இருக்கவேண்டிய அவசியம் தோன்றியதால் சொற்பெருக்கமும், வளர்ச்சியும் ஏற்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறு ஆங்கிலத்துக்கு வளர்ச்சி வாய்ப்பு ஏற்பட்ட காலத்தில், வாழ்க்கை முற்போக்கில் சில துறைகளில் குறிப்பாக, ஆட்சி ஆணைக்கருவியாக உபயோகிக்கும் துறையில் தமிழானது வளர்ச்சியற்று, இருந்த இடத்திலேயே இருக்கும்படி ஆயிற்று. ஆகவே, ஆட்சித்துறையில் பயன்படும் மொழி என்ற வகையில் தமிழில் குறைபாடு இருப்பதாகச் சொல்லும்போது அந்த மொழியின் அமைப்பு முழுதுமே, குறைபாடுடையது என்று சொல்வதாக யாரும் கருத வேண்டியதில்லை.

'சொல்லாக்கல்' வேலைபற்றிய சில கொள்கைகள்

எந்த மொழியின் சொற் களஞ்சியத்தையும் அந்தமொழியில் எழுதுவோரின் தேவைக்குத்தக்கபடி பெருக்க இயலுமாதலின் இந்தக் குறைபாடுகளை நீக்குவதும் இயலாததல்ல. எந்த மொழியானாலும் சொற்களின் பொருள்களை விரிக்கவும், குறைக்கவும், மாற்றவும், முடியும். ஆங்கிலச் சொற்களஞ்சியத்தில் ஏராளமான சொற்கள் இருப்பது அம்மொழியின் தனி உயர்வால் ஏற்பட்டதல்ல; அந்தமொழியைக் கையாண்டவர்கள் முயற்சியெடுத்து சொற் செல்வத்தைப் பெருக்கியிருக்கிறார்கள் என்பதுதான் காரணம். அதுபோலவே நாமும் தமிழ்மொழியின் சொற்செல்வம் பெருக வகைசெய்து, வாழ்க்கையின் எல்லாத்துறைகளிலும், அது திறனுடன் பயன்படும்படி செய்து, மொழியை வளப்படுத்துவதைக் குறிக்கோளாகக் கொள்ளுதல் வேண்டும்.

தமிழ் ஆட்சிமொழியாகச் செயற்பட வேண்டுமானால், ஒவ்வொரு கருத்தின் வெவ்வேறு சாயல்களையும் புலப்படுத்தும் வகையில் தேவையான சொற்களை நாம் உருவாக்குதல் வேண்டும்.

இவ்வாறு புதியசொற்களை 'ஆக்குவது' எப்படிஎன்ற பிரச்சினையைக் கவனிப்போம்.

சரியான சொற்களை எப்படி 'ஆக்குவது'? இக்காலத் தேவைகளைச் சமாளிப்பதற்கேற்றவாறு சொற்செல்வத்தை வளம்படுத்துவதற்கு மூன்று வழிகள் இருக்கின்றன: (1) வழக்கொழிந்துபோன பண்டைச் சொற்களை மீண்டும் வழக்கிற் கொண்டுவருதல், (2) புதிய சொற்களையும், சொற்றொடர்களையும் உண்டாக்குதல். (3) பிறமொழிகளிலிருந்து சொற்களை 'இரவலாக' எடுத்தல்:

1. பண்டைச் சொற்களை மீண்டும் கையாளுதல்

இப்போது வழக்கில் இல்லாமல் மறைந்துள்ள சிலசொற்கள் இப்போதைய கருத்துக்களைப் புலப்படுத்துவதற்குப் பயன்படுமாயின் அத்தகைய சொற்களுக்கு மறுபடியும் உயிர்கொடுத்துப் பயன்படுத்தலாம். உதாரணமாக சங்க இலக்கியத்தில் பூட்கை என்று ஒருசொல் வழங்கப்பட்டது. Policy என்ற ஆங்கிலச்சொல்லுக்கு அதைப் பயன்படுத்துவது பொருத்தமுடையதாகும். ஓர் அலுவலுக்குப் பொறுப்பை வகிக்கும் அலுவலகத்துக்கு (அல்லது பொறுப்பின் உறைவிடத்துக்கு) வாரியம் என்றசொல் பழைய கல்வெட்டுகளில் இருக்கிறது. இதை எடுத்துக் கொள்ளலாம் (தென்னிந்திய கல்வெட்டுகள் (III 80).

வாரியன் என்ற சொல்லை அந்த அலுவலகத்துக்குப் பொறுப்பான அதிகாரிக்கு உபயோகிக்கலாம். சோழ, பாண்டிய, மன்னர்கள் காலத்துத் தமிழ்க்கல்வெட்டுகளில் அரசியல் நிர்வாகம் பற்றியனவாகப் பல சொற்கள் கிடைத்திருக்கின்றன. உதாரணமாக திணைக்களம் என்று இவற்றில் காணப்படும் சொல்லை (Department) என்பதற்கான தமிழ்ச்சொல்லாகக் கையாளலாம் இப்போது. பகுதி, இலாகா, துறை என்ற சொற்கள் நிச்சயமான பொருளாக இன்னதுக்குத்தான் என்றில்லாமல் உபயோகிக்கப் பெறுகின்றன.

இலங்கையில் இப்போது திணைக்களம் என்ற சொல் அரசகருமச் சொற்தொகுதியிற் தரப்பட்டு அதிகமாக உபயோகிக்கப்பட்டு வருகிறது.

இதுபோன்று கல்வெட்டுச்சொற்களை எடுத்து இப்போதைய தேவைகளுக்குப் பயன்படுத்தலாம். இந்த மாறுதலுடன் இனி ஏற்படும் தேவைகளுக்கும் இந்தச் சொற்களினடியாக வேறுசொற்கள் அமைக்கப் பெறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யுள் வடிவத்தில் பல சொற்பட்டியல்கள் தமிழில் திவாகரம், பிங்கலாதை, சூடாமணி போன்ற நிகண்டுகளாக இருந்து வருகின்றன. சித்தர் பாடல்களிற் சில தத்துவச் சொற்கள் இருக்கின்றன. வைத்தியநூல், சோதிடநூல் என்ற பலவகைகளில் சில இலக்கிய நூல்கள் இருக்கின்றன. அவற்றிலுள்ள சொற்களைக் குணநலம் பற்றிய கண்ணோக்கோடு ஆராய்ந்தாற் சில சொற்கள் கிடைக்கக்கூடும்.

2. புதிய சொற்களையும் சொற்றொடர்களையும் ஆக்குதல்

தமிழில் ஆழ்ந்த படிப்புள்ளவர்கள் ஆராய்ந்தாற்றான் ஓர் ஆங்கிலச் சொல்லுக்குச் சமமான தமிழ்ச்சொல் ஏற்கனவே இருக்கிறதா இல்லையா என்பதை நிச்சயமாகச் சொல்ல இயலும். தமிழ்ச்சொல் இல்லையென்பது உறுதியானபின்னரே புதிய சொற்களை உருவாக்குவது என்ற தேவை ஏற்படும். இதுகாறும் பல சொற்கள் போதிய சிந்தனையும் ஆய்வுமின்றி அவசர அவசரமாக உருவாக்கப்பெற்றுப் பத்திரிகைகளிலும், சீரற்ற வேறுபல மொழிப் பெயர்ப்புகளிலும் உபயோகிக்கப்பட்டு வந்திருக்கின்றன.

சில சொற்களில் மொழிபெயர்க்கப்படாமல் ஒலி பெயர்க்கப்பெற்று டிஸ்ட்ரிக்ட், கமிட்டி, கமிஷன், யூனியன் என்று உபயோகத்தில் இருந்து வருகின்றன. தமிழில் பொருள்தராத அழகற்ற இச்சொற்களை அரைகுறையாகப் படிப்புள்ள மக்களிடையே பழக்கப்படுத்தப்பத்திரிகைகளால் முடிந்துவிடுகிறது. இந்த அழகற்ற சொற்களை ஒருமொழியிலிருந்து நீக்கி மொழியைச் சுத்தப்படுத்த அனைத்துநாட்டுத் தமிழ் ஆராய்ச்சிச் சங்கம் வழிமுறைகள் வகுக்க வேண்டும்.

உரிச்சொல் இடைச்சொல் இவற்றைப் பயன்படுத்தல்

தமிழிலுள்ள வினைச்சொல், பெயர்ச்சொல் பகுதிகளிலிருந்து புதுச்சொற்களை, எல்லாப் புதிய கருத்துக்களுக்கும் வேண்டிய சொற்களைத் தயாரிக்க முடியும். காலமாறுபாட்டால் ஏற்படும் பொருள், இடம், ஏவலுக்குத் தக்கபடி வளைந்து கொடுக்கும் தன்மையும் உயிர்க்களையும் தமிழுக்குஉண்டு. உரிச்சொல், இடைச்சொல் ஆகியவை தமிழில் ஏராளமாக இருக்கின்றன. உரிச்சொற்களும் இடைச்சொற்களும் ஒருசொல்லிலிருந்து மற்றொரு சொல் பிறக்கும்படி செய்யவல்லவை. ஒருவாறு கவனிக்குமிடத்து இப்போதுள்ள பெயர்ச்சொற்கள் பலவும், வினைச்சொற்கள் பலவும், உரிச்சொல்லைக்கொண்டும் இடைச்சொல்லின் துணையுடனும் உருப்பெற்றவையேயென்று சொல்லலாம்: புதுச்சொற்களை உருவாக்குவதற்கான தொடக்கவேலையாக, தமிழ் மொழியிலுள்ள எல்லா உரிச்சொற்களும் இடைச்சொற்களும்கொண்ட ஒருபட்டியல் தயாரிக்கப்படல் வேண்டும்.

புதிய சொற்கள் அதிக நீளமில்லாதவைகளாக அதாவது குறுகியனவாகவும் எளிதில் உச்சரிக்கக்கூடிய ஒலியமைப்புடனும் கருத்தில் பொருந்துவனவாகவும் அமைக்கப்பட வேண்டும். அந்தச் சொற்களின் ஈற்றெழுத்து வேற்றுமை உருபுகளை எளிதில் சேர்க்கக்கூடியதாகவும் அடுத்துவரும் மற்றொரு சொல்லுடன் எளிதில் புணர்ந்து மற்றொரு 'கூட்டுச்சொல்லாக' அமையக்கூடியவாறும் இருத்தல் வேண்டும். தமிழிலுள்ள பல சொற்களைப்பார்த்தால் அவை பெரும்பாலும் ஒன்று அல்லது இரண்டு உயிர் ஒலிகள் கொண்டனவாகவே இருப்பதைக் காணலாம். உதாரணமாகக் காசு, நாள், மலர், பிறப்பு இவற்றைச் சொல்லலாம். மூன்று உயிர் ஒலிகளுக்கு மேற்பட்ட உயிரொலி உள்ளவை மிகவும் அருகியே காணப்படும். ஈரொலிச் சொற்களே அதிகம் புதிய சொற்களைத் தயாரிக்கும்போது தமிழின் இந்தத் தன்மையைக் கருத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

3 பிற மொழிகளிலிருந்து சொற்களைப் பெறுதல்

தமிழிலிருந்து ஒரு சொல்லைப் பெற முடியாது என்றநிலை இருப்பின் மட்டுமே வேறுமொழிகளைத் தேடவேண்டும்.

பல நூற்றாண்டுகளாக, தமிழ்மொழியானது, வடமொழியிலிருந்து சொற்களை வாங்கியிருந்தது. அவ்வாறு நம்மொழியில் கலந்துபோய் உபயோகத்திலிருக்குமாயின் அவை நம்மொழியை வளப்படுத்தியிருக்குமாயின் அச்சொற்களை உபயோகிப்பது பற்றி நாம் கூச்சம் கொள்ள வேண்டியதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவரை தமிழ்மொழியை வளப் படுத்துவதில் சமஸ்கிருதத்தைப் பயன்படுத் தியது போல இனிமேல் அதிலும் குறிப் பாக விஞ்ஞானம், தொழிலியல் இரண்டி லும் சமஸ்கிருதத்திலிருந்து சொற்களை எடுத்துக்கொள்வதற்குப் பதிலாக ஆங்கி லத்திலிருந்து எடுத்துக் கையாளலாம்.

பிற மொழியிலிருந்து சொற்களைக் கடன்வாங்கும்போது அந்தச்சொற்களின் வடிவம் தமிழில் ஒலியமைப்புக்கு ஒத்ததாக இருக்கவேண்டும். அல்லது ஒக்குமாறு மாற்றி அமைத்து அதை எழுதும்போதும் சொல்லும்போதும் தமிழ்போலவே இருக் கும்படியும் செய்துகொள்ளவேண்டும்.

எடுத்த எடுப்பிலேயே ஆராய்வும் சிந் தனையும் இல்லாமல் கண்டாற் கண்டபடி பிறமொழிச் சொற்களை எடுத்துக் கொள் ளக்கூடாது. அது நம் மொழியின் இயல் பான வளர்ச்சிக்கு தீங்குவிளைவிக்கும். மொழியென்பது "உயிர் இல்லாத ஒன் றல்ல." அது உயிர்த்துடிப்பும் உயிரமைப் பும் கொண்ட ஒன்றாகும். உயிருள்ள உடலில் ஒரு வெளிப்பொருளைப் புகுத்தினோமாயின் அந்தப்பொருள் சீரணமாகக் கூடியதாக இல்லாவிடின் அந்தஉடல் அதை வெளியே தள்ளவே முயலும். வெளியேதள்ள இயலா விடின் உயிருக்கே அபாயம் ஏற்படும். இது சம்பந்தமாக "மன்னரின் ஆங்கிலம்" என்ற நூலின் ஆசிரியர் ஆங்கிலம் பற்றிக் கூறியுள்ள கருத்துக்கள் தமிழிலும் பொருந் தும்.

ஆங்கில உருவத்தில் இல்லாத எழுத் துக்கள் ஆங்கில எழுத்தினூடே இருப்பின் அது விகாரமாகவும் அழகற்றதாகவும் இருக்கும். நல்ல எழுத்தாளராக ஆக விரும்புகிற எவனும் பிற சொற்களைவிடப் பழைய தனி ஆங்கிலச்சொல்லையே உபயோ கிக்க முயலவேண்டும். எவனுடைய எழுத் தில் ஸாக்ஸன் சொற்களின் வீதாசாரம் அதிகமாகக் காணப்படுகிறதோ அவனது எழுத்தில் வழிவிலகிய சொற்களும், நீண்ட சொற்களும், எளிதில் பொருள் விளங்காத தத்துவச்சொற்களும், விளக்கம் கோரும் சொற்களுங் குறைவாக இருக்கும்" எனக் கூறுகிறார்.

மொழி பெயர்ப்புக் கழகம் ஒன்று அமையவேண்டும்

ஆட்சி நிருவாக அலுவல்களில் பயன் படும் மொழியில் ஒவ்வோர் உத்தியோகத் துக்கும் (பதவிக்கும்) தனித்தனிச் சொற் கள் தேவையாகும். உதாரணமாக: (President—Superintendant, Director Principal) என்ற சொற்களைக் குறிப்பதற்கு அதிபர் என்ற ஒரேசொல் கையாளப்படுகிறது; சிலர் ஒவ்வொரு பதவிபற்றிய ஆங்கிலச் சொல்லுக்கும் வேறுவேறு தமிழ்ச்சொற் களைக் கையாண்டபோதிலும், ஒவ்வொரு வர் ஒவ்வொருசொல்லை ஒவ்வொருசொல் லுக்கு மொழிபெயர்ப்பாகக் கையாளுகிறார் கள். இதுபற்றி எல்லோரும் ஓர் ஆங்கி லச் சொல்லுக்கு ஒரே தமிழ்ச் சொல்லை உபயோகிப்பதுஎன்றநிலை ஏற்படவேண்டும். இந்தநிலை இன்னும் ஏற்படவில்லை. இது பற்றி ஒருமைப்பாடு ஏற்படுவது அவசியம்.

ஆங்கிலமொழி துரிதமாக வளர்ச்சி பெறும் காரணத்தால் அம்மொழியில் புதிய புதிய சொற்கள் வந்துகொண்டே இருக் கின்றன. இவையாவும் ஆங்கிலத்தில் தோன்றும் போதே மொழிப்பெயர்ப்பும் தோன்றுவது என்பது எளிதல்ல. நாம் தமிழிலேயே சிந்தனைசெய்வது என்ற மனப் பழக்கம் ஏற்படும் காலம்வரையில் நமது மொழியில் போதியகவனம் செலுத்தும் காலம்வரையில் மொழிபெயர்ப்பு என்ற பணி இருந்துகொண்டுதானிருக்கும். ஆகை யால் மொழிப்பெயர்ப்புவேலை ஒழுங்குடன் உருப்பெறும்படி செய்வதற்கு ஒரு 'மொழிப் பெயர்ப்புப் பணியகம்' அமைக்கப்படுதல் இன்றியமையாததாகும். இது இந்தியாவி லேயே நிறுவப்படலாம். நிறுவனத்தின் ஆலோசனையைநாடும் நிலையிலுள்ள எல்லா நாடுகளின் பிரதிநிதிகளும் அதில் இடம் பெறுவதாக இருக்கலாம்.

தமிழை ஆட்சிமொழியாகச் செயற் படுத்துவதற்கு வேண்டிய சிறப்பினைப் பெறும்படி செய்வது என்ற பெரும் பொ றுப்பை ஏற்கத் தகுதியுள்ளது, இந்த அனைத் துலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழக நிறுவனமே யாகும்.

முற்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புமுகம் நாடிக்கால் செல்லுதம்மா

1. "காதினிலே சோகஒலி கேட்ப தாலே
கலாசாலை செல்லக்கால் ஏவு தில்லை"
ஈதுரைத்தாள் இப்பேதை சென்ற ஆண்டின்
இனியகலை மலரதனில் இன்று அந்த
வேதனையை மறந்தாளோ வெறுஞ்சொல் தானே
விரைந்தங்கு செல்லுகின்ற விந்தை ஏதோ
ஆதரவு காட்டுமுகம் அழைக்கு தம்மா
அன்புள்ள மெனையங்கு இழுக்கு தம்மா.

2. வேதனையின் மத்தியிலே வாழ்ந்து சாகும்
வேடிக்கைப் பிறவியிவள் விடிவு இல்லை
நாதனுக்கும் நான்பெற்ற செல்வங் கட்கும்
நயந்தென்னை ஈன்றெடுத்த தாயா ருக்கும்
மேதினியில் நோயரக்கன் நண்ப னுக
மிகவாடி அப்பப்பா இந்த வாழ்க்கை
போதுமுயிர் மாய்ப்பமெனும் எண்ணம் போக்கப்
பொன்முகத்தை நாடிக்கால் செல்லு தம்மா.

3. இளமைதனில் வறுமைகொடி தென்று ஒளவை
எடுத்துரைத்தா ரென்றோநான் கற்ற துண்டு
குளம்பெருகு மாப்போல என்றன் கண்ணிற்
கொட்டவைக்கும் வறுமையினைக் கண்டு நித்தம்
உளமுடைந்து உயிர்போக்கும் எண்ணந் தோன்ற
ஒருபுறத்திற் பாசவலை பற்றி யீர்க்க
அளவிறந்த அத்துன்பம் போக்கு தற்கு
அன்புமுகம் நாடிக்கால் செல்லு தம்மா.

4. புத்திசொல எத்தனையோ பேர்க ளுண்டு
போதனையைப் பெற்றிடநன் னூல்க ளுண்டு
சித்தமதிற் சிலமணிகள் துன்பம் போக்க
சினிமாவைப் பார்த்திடநல் வாய்ப்பு மூண்டு
நித்தமெனைச் சூழ்ந்துகற்கும் பாலர் பேச்சில்
நெடுந்துன்பம் போக்குதற்கு மார்க்க மூண்டு
எத்தனைதான் இருந்தென்ன என்றன் துன்பம்
என்னதிபர் முகங்கண்டே பறக்கு தம்மா.

பழைய மாணவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கணங் கற்பித்தல்

(திருமதி. நேசமலர் வேலாயுதபிள்ளை)

இலக்கணம் என்றாலே இக்கால மாணாக்கர் பலருக்கு வேப்பங்காயாக விருக்கின்றது. ஏன்? ஆசிரியர் சிலருக்கும் அப்படியே இருக்கின்றது! முன்பு தமிழ்ப்பாடத்திட்டத்தில் வலியுறுத்தப்பட்டு வந்த இலக்கணம், இடையிலே சிறிதுகாலம் புறக்கணிக்கப்பட்டமையாலே இந்த வருந்தத்தக்க நிலை உண்டாகியிருக்கின்றது. இப்போது கல்விப் பொதுத் தகுதிப்பத்திர வகுப்புக்கான புதுக்கிய பாடத்திட்டம், இலக்கணக் கல்வியை மீண்டும் வற்புறுத்துவதால், தமிழ்மொழி கற்பிக்கும் ஆசிரியர் இலக்கணத்தையும் முறையாகக் கற்பிக்க வேண்டியவராகின்றார். இவ்வாசிரியர்களுள் ஏலவே இலக்கணத்தை முறையாகக் கற்றுத் தேறியோர், தமதுகடமையை இடர்ப்படாது செய்யவல்லவராவர். ஏனையோர் தாமுங்கற்று மாணாக்கருக்குங் கற்பிக்க வேண்டிய நிலையிலுள்ளனர். இலக்கணம் கற்பிக்கும் ஆசிரியர் (எப்பாடத்தையேனுங் கற்பிக்கும் ஆசிரியர்) தாம் கற்பிக்கும் விடயத்தை ஐயந்திரிபற விளங்கியிருத்தல் வேண்டும்; அப்போதுதான் அவர் மாணாக்கர் உளங்கொள்ளுமாறு, எடுத்த விடயத்தைக் கற்பிக்க வல்லவராவர். ஆசிரியரே அரைகுறையான அறிவோடு, வேண்டாவெறுப்புடன் இலக்கணங் கற்பிக்கப் புகுவாராயின், அது மாணாக்கருக்கு வேம்பாகத் தானே இருக்கும்?

எம் முன்னோர் இலக்கணக் கல்விக்கு மிக்க முதன்மையளித்து வந்துள்ளனர். அவர்கள் இலக்கணத்தை 'எழுத்து' என்று வழங்கினர்; 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்ற ஔவையார் வாக்கு வள்ளுவரின் குறட் கருத்தைச் (குறள் 392) சூத்திரமாகத் தருகின்றது. இனி, இக்காலக் கல்விக் கொள்கையாளரிடையே இலக்கணங் கற்பித்தல்பற்றிக் கருத்து வேறுபாடு நிலவுகின்றது: ஒரு சாரார் இலக்கணமே வேண்டா என வாதிப்பர்; மற்றொரு சாரார், இலக்கண நுணுக்கங்களை விளங்கிக் கொண்டாலன்றி, மொழியைச் செம்மையாக அறிந்து ஆளுதல் இயலாது என்று கூறுவர்; இன்னொரு சாரார் நடைமுறைக்கு வேண்டிய இலக்கண அறிவு இருந்தாற்போதும் என்று கூறுவர். இவர்கள் ஒவ்வொருவரும் கூறுவனவற்றில் ஓரளவு உண்மை உண்டே ஆயினும் இவர்கள் எத்திறத்தார் பக்கமுஞ் சாராது, ஒவ்வொருவரும் கூறுங் கருத்துக்களிற் பயனுள்ளவற்றையும் நல்லனவற்றையும் ஏற்றுக் கொண்டு, எமது தாய்மொழியை நல்ல முறையிற் கற்பித்தலே வேண்டற்பாலது.

''கற்றூரை யான் வேண்டேன், கற்பனவும் இனியமையும்'' என்ற மனப்பான்மை ஆசிரியர்களுக்கு ஆகாது. ''சாந்துணையுங் கற்பதே'' ஆசிரியர்களுக்குக் குறிக்கோளாக இருத்தல்வேண்டும். ஆசிரியர் தாமே இன்னமுங் கற்பவராயிருந்தாலன்றி ஒருபோதுமே உண்மையாகக் கற்பிக்க வல்லவராகார்: விளக்கானது இடையறாது எரிந்துகொண்டிருந்தாலன்றி, மற்றொன்றைக் கொளுத்தமாட்டாது. ஆகவே, முன்பு இலக்கணத்தை முறையாகக் கல்லாத ஆசிரியரும், முயன்று கற்றுல் மாணாக்கருக்கு அதனை நன்கு புகட்டலாம். மாணாக்கருக்குச் சொல்லிக் கொடுக்கும் இலக்கணம் ஒரு மடங்காக இருப்பின், ஆசிரியர் பதின்மடங்கு இலக்கணம் அறிந்திருத்தல் வேண்டும். பெரும்பாலும் இலக்கணங் கற்பிக்கும் ஆசிரியர் தாமே விடயத்தைத் தெளிவாக விளங்கிக் கொள்ளாமல், புத்தகத்தில் இருப்பதை அப்படியே சொல்லிக்கொடுக்க முற்படுவதாலே மாணாக்கருக்கு இலக்கணப்பாடம் வெறுப்பாக இருக்கிறது. எத்தகைய கடினமான பாடத்தையும் நல்லாசிரியர் பசுமரத்தாணி அறைந்தாற்போல மாணாக்கரின் மனத்திற் பதியச் செய்துவிடுவர்.

இலக்கணப்பாடம் மாணாக்கருக்குச் சுவையாக இருத்தல் வேண்டுமேயன்றிச் சுமையாக இருத்தலாகாது; இதற்கு இலக்கியத்தின் வாயிலாக இலக்கணம் கற்பிப்பதே சிறந்த முறையாகும்; 'இலக்கணம்',

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இலக்கியம்' என்ற சொற்களின் பொருளை உணர்ந்துகொண்டால், இலக்கணத்தையுஞ் சுவைபடக் கற்பிக்கலாம் என்ற உண்மை எளிதிற் புலனுகும். 'இலக்கணம்' என்ற சொல் 'லக்ஷண' என்ற ஆரியச் சொல்லின் திரிபாகும்: இதற்கு 'அமைப்பு', 'இயல்பு', 'அழகு' என்ற பொருள்கள் உண்டு. ஏனைய பொருள்களுக்குப்போலவே மொழிக்கும் ஓர் அமைப்பு உண்டு: அந்த அமைப்பே அதன் இயல்பாகும்: இயல்பான அமைப்பே ஒவ்வொரு பொருளுக்கும் அழகாவது: ஆகவே தமிழ் இலக்கணம் என்றுல், அது தமிழ்மொழியின் அமைப்பை—இயல்பை—அழகை விளக்குவது என்றே பொருள் படும்: தமிழ்மொழி எமது தாய் மொழியாகையால், அதன் அமைப்பையும், இயல்பையும் அழகையும் அறிந்து நயப்பது நம் கடனுகும். நம்முடைய உள்ளக்கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் மற்றவர்களுக்குத் தெள்ளத் தெளிய உணர்த்துவதற்கும்; அவ்வாறே மற்றவர்களுடைய கருத்துக்களையும், உணர்ச்சிகளையும் நாம் உள்ளவாறே உணர்ந்துகொள்வதற்கும் வாய்த்த கருவியே மொழி: நாம் அன்ருட வாழ்விற் பயன்படுத்தும் கத்தி முதலிய கருவிகளை எவ்வாறு பளபளப்பாகக் கூர்மையாக்கி வைத்திருக்கின்ருமோ அவ்வாறே மொழியையும் கூரிய சீரிய நிலையில் வைத்திருத்தல்வேண்டும்: அப்போதே அக்கருவியின் பயனை நன்கு பெறலாம். தமிழ்மொழியின் இயல்பை அறிந்து அதனை அழகாக, ஆற்றலுண்டாக ஆளவேண்டுமாயின் அதன் இலக்கணத்தை அறிந்திருத்தல் ஒரு தலையாய் வேண்டற்பாலதேயாம்:

இனி, இலக்கண முடையது எதுவோ, அதுவே இலக்கியமாம்: ஆகவே, இலக்கியத்தில் உள்ளதே இலக்கணம்; இலக்கியத்தினின்றும் எடுப்பதே இலக்கணம்: இலக்கியத்திற்கும் இலக்கணத்துக்குமுள்ள இந்த நெருங்கிய உறவை உணர்ந்தால், இலக்கணத்தை இலக்கியத்தின் வாயிலாக இனிதே கற்பித்து விடலாம்: மாணுக்கரின் வயதுக்கும் வகுப்புக்கும் ஏற்றவகையில் இதனைத் திட்டமிட்டுக் கற்பிப்பதிலே நல்லாசிரியரின் திறமை வெளிப்படும்:

இலக்கணம் வேண்டா என்போர் கூற்று, முதனிலைப் பாடசாலை (Primary School) மாணுக்கரைப் பொறுத்தவரையில் ஓரளவு பொருந்துவதேயாகும். இந்த வயதுப் பிள்ளைகளுக்கு முறையாக இலக்கணங் கற்பித்தல் வேண்டியதில்லை; வாக்கியத்தைக் கூறுகூருக வகுத்து, அஃது எவ்வாறு அமைந்துள்ளது என்பதை விளக்கி, மீண்டும் அக்கூறுகளைத் தொகுத்துக் காட்டுவதை இப்பிள்ளைகள் விளங்கிக்கொள்ள மாட்டார்கள். அவர்களது உளவயதுக்கு இந்தப் பகுப்பு முறையும் தொகுப்பு முறையும் அப்பாற்பட்டவை. முதனிலைப் பாடசாலைப் பிள்ளைகள் கருத்தேற்றத்தினுலும் (Suggestion), ஒப்பச் செய்தலினுலுமே (Imitation) மொழியைக் கற்கின்றனர். அவர்கள் தமது சூழலிற் பேசப்படும் மொழியைக் கேட்பதன் மூலமும் புத்தகங்களை வாசிப்பதன் மூலமும் மொழியை வழங்கப் பயின்று கொள்கின்றனர்: ஆகவே, இப்பருவத்துப் பிள்ளைகள் மொழியைத் திருத்தமாகவும் தெளிவாகவும் பேசப் பயிலுவதற்கு, அவர்களின் சூழலிலுள்ள வளர்ந்தோர் அதனைத் திருத்தமாகப் பேசுதல் வேண்டும். ஆதலால், ஆசிரியரும் பெற்ருேரும் பிள்ளைகள் செவியினுற் கேட்டுப் பயில்வதற்குச் சிறுச்சிறு வாக்கியங்களைத் தெளிவாகப் பலகாலுஞ் சொல்லுதல் வேண்டும். இனி, குழந்தைகள் வாசிப்பதற்கும் பல்வகைப் புத்தகங்கள் இருத்தல் வேண்டும்.

எல்லாப் பிள்ளைகளுக்கும் நல்ல வீட்டுச் சூழல் வாய்ப்பதில்லை என்பதை நாம் இங்கே நினைவிற் கொள்ளல் வேண்டும்: பெற்ருேர் கல்வியறிவில்லாதவராயேனும், தாய்மொழியை வீட்டிலே வழங்காதவராயேனும் இருக்குமிடத்துப் பிள்ளைகள் தம் வீட்டுச் சூழலில் கேட்கும் பேச்சு, அவர்களின் மொழியறிவிற்கு உகந்ததாகாது. இந்த நிலை கவலைக்குரியதாயினும், இதற்காகப் பச்சிளங் குழந்தைகளுக்கு இலக்கணத்தைக் கற்பித்தல் தகுந்த பரிகாரமாகாது: எல்லாப் பெற்ருேரும் வீட்டிலே திருத்தமாக மொழியைப் பேசிவருவாராஞல், அதைக் கேட்டுப் பயிலும் குழந்தைகளுக்குச் செம்மையான மொழியறிவு இயல்பாகவே வளர்ந்துவரும். இஃதோர் இலட்சிய நிலையே யன்றிப் பட்டாங்கில் உள்ள நிலையாகாது: இதற்குப் பரிகாரம் செய்வதாயின், கல்வியறிவில்லாத பெற்ருருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதிர்ந்தோர் கல்வி மூலம் எழுத்தறிவு புகட்டல்வேண்டும். அது வாய்க்காதவிடத்துப் பாடசாலைச் சூழலே இப்பிள்ளைகளின் செம்மையான மொழி வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைதல் வேண்டும். வீட்டுச் சூழலிற் பிழையாக மொழிகற்ற பிள்ளைகளீன் பிழையைத் திருத்தி, அவர்கள் இலக்கணமுடைய செம்மொழியைப் பேசவும் எழுதவும் பழகுவதற்கு வகுப்பறையும் பாடசாலையுமே நல்ல பயிலிடமாகும். ஆசிரியர் தாமே திருத்தமாகப் பிள்ளைகளோடு பேசுவது முக்கியமானது; அன்றியும் போதிய வாய்மொழிப் பயிற்சியும் வாசிப்புப் பயிற்சியும் அளித்துப் பிள்ளைகள் சொற்களைத் திருத்தமாக உச்சரிக்கவும் வாக்கியங்களைப் பிழையின்றி ஆக்கவும் தூண்டுதல் வேண்டும்.

பாடசாலைச் சூழலில் இவ்வாறு திருந்திய பேச்சு வழக்கைப் படிப்படியாகக் கற்றுக் கொள்ளும் பிள்ளைகள், இலக்கணத்தை முறையாகக் கல்லாமலே, திணை, பால், எண், இடம், காலம் என்னும் வரம்புகளுக்கு அமைய வாக்கியங்களை ஆக்கி வழங்குவார்கள். இந்த முறையிலேயே முதிர்ந்தோர் பொதுவாக அயன் மொழியொன்றைப் பேசப் பழகிக்கொள்ளுகின்றனர். அந்த மொழிக்குரியவர்கள் பொதுவாகப் பேசுவதைக் கேட்டு, அதுபோலப் பேசமுயல்வதனாலே இந்தப் பயிற்சி உண்டாகிறது. முதனிலைப் பாடசாலைப் பிள்ளைகளைப் பொறுத்தவரையில், அவர்கள் தம் தாய் மொழியை இவ்வாறு முதிர்ந்தோர் வழக்கைப் பின்பற்றிப் பேசப்பயின்று கொள்வது போதியதாகும். முறையாக இலக்கணங் கற்பிக்காது விடுவதால், ஆசிரியர் பணி எளிதில் முடிந்து விடுமென எண்ணுதலாகாது. பிள்ளைகள் திருத்தமாய்ப் பேசுவதற்கும் அதன் பயனாகத் திருத்தமாய் எழுதுவதற்கும் ஆசிரியர் போதிய பயிற்சி அளித்தல் வேண்டும். பிள்ளைகளின் வயதுக்கும் அனுபவ அறிவிற்கும் தகப் பொருத்தமான புத்தகங்களை வாசிப்பதற்குப் போதிய வாய்ப்பினை உண்டாக்கித் தருதல் வேண்டும்: போதிய வாய்மொழிப் பயிற்சியளித்து, வாக்கியங்களைத் திருத்தமாக ஆக்குவதற்கு வழிசெய்தல் வேண்டும்; இவ்வாறு பயிற்சியளிக்கும்போது பிள்ளைகள் விடும் பிழைகளை, வாழைப்பழத்தில் ஊசியேற்றுவதுபோல், மெல்லெனத் திருத்தவேண்டியது ஆசிரியர் கடமையாகும்: சொல்லாட்சி, சொற்றொடர் ஆட்சி, மொழிமரபு ஆகியவற்றைப் பிள்ளைகள் அறிந்து கொள்வதற்கும் இத்தகைய வாய் மொழிப் பயிற்சியே பயன்தரவல்லது. விளையாட்டுமுறையைக் கையாண்டு, பயனுள்ள பல்வகை மொழிப்பயிற்சிகளை ஆசிரியர் பிள்ளைகளுக்கு அளிக்கலாம். இதனால் இவ்வகுப்புப் பிள்ளைகள் ஆர்வத்தோடு தம் மொழி அறிவை வளர்த்துக் கொள்வர்: உதாரணமாக ஆசிரியர் ஒருவர் அறுவகைப் பெயர்களையும் தமது வகுப்புக்குக் கற்பிக்க விரும்புகின்றார் என்று வைத்துக்கொள்வோம்: இவ்விடயத்தை விளையாட்டு மூலங் கற்பிக்கும் முறையொன்றை இங்கே பார்ப்போம். ஆசிரியர் அறுவகைப் பெயரையும் குறிப்பிடுதற்கு ஆறுமாணவர்களை நியமித்து, அவர்கள் ஒவ்வொருவருக்கும் முறையே 'பொருள்', 'இடம்' 'காலம்', 'சினை', 'குணம்', 'தொழில்' என்று பெயரிடலாம். துலக்கமாகப் பெரிய எழுத்தில் எழுதிய பெயர் அட்டைகளைத் தாங்கிக்கொண்டு அவர்கள் வகுப்புக்கு முன்னால் தனித்தனியாக நிற்கவேண்டும். பின்பு பல்வேறு பெயர்களைச் சிறு துண்டுகளில் எழுதி எஞ்சிய மாணவர் ஒவ்வொருவருக்கும் முன்னால் கவிழ்த்து வைக்கவேண்டும்: ஆசிரியர் சொன்னவுடனே அப்பிள்ளைகள் தமக்குமுன்னால் வைக்கப்பட்ட துண்டுகளை எடுத்துப்பார்த்துத் தத்தமக்குரிய குழுத் தலைவரிடம் போய் நிற்கவேண்டும். சரியாக விரைவில் ஒன்று சேருங் கூட்டத்தினரே முதலிடத்தைப் பெறுவர். இது போலவே வேறு பல விளையாட்டுக்களையும் ஆசிரியர் தமது அறிவுக்கும் ஆற்றலுக்கும் அனுபவத்துக்கும் தக ஆக்கிப் பிள்ளைகளிடம் மொழிகற்பதில் ஆர்வத்தை உண்டாக்கி விடலாம். சிறு பிள்ளைகளைப் பொறுத்தவரையில் இந்த விளையாட்டு முறை சிறந்து பயனளிக்குமெனலாம். பல்வேறு வேற்றுமை வடிவங்களையும் வினை வடிவங்களையும் பழகிக்கொள்வதற்கு மாதிரி வாக்கியங்களை (Patterns of Sentences) அமைப்பதில் அழுத்தப்பயிற்சி (Driss) அளிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாம் ஆண்டு (வகுப்பு) இறுதியில், ஓரளவு இலகுவான இலக்கணத்தை முறையாகக் கற்பிக்கத் தொடங்கலாம்: எழுவாய், பயனிலை, செய்யப்படுபொருள், அடைமொழி என்பன போன்ற வாக்கிய உறுப்புக்களையும், பெயர், வினை, இடை, (உரி) என்பன போன்ற சொல்வகைகளையும் உணர்த்தி, வாக்கியங்களிலே அவற்றைக் கண்டு பிடிக்கும் பயிற்சிகளை அளிப்பது போதுமானது. சிக்கலான வாக்கிய அமைப்புக்களையோ சொல்வகைகளையோ காட்டிச் சிறுவரைக் கலக்கிவிடுதலாகாது.

இடைநிலை வகுப்புகளுக்கு (6 ஆம் ஆண்டுமுதல் 8 ஆம் ஆண்டு வரையான வகுப்புக்கள்) வந்ததும் இலக்கணம் என்பது ஒன்று உண்டு என்பதை அதாவது மொழியைப் பேசுவதற்கும் எழுதுவதற்கும் சில விதிகள் உண்டு என்பதை — மாணவர் உணர்ந்து கொள்ளக்கூடிய மனப்பக்குவத்தை அடைந்துவிடுவர். வெவ்வேறு சொற்கள் வெவ்வேறு வகையில் தொழிற்படுகின்றன என்பதையும், அவை வெவ்வேறு வழிகளில் ஒன்றோடொன்று தொடர்புபட்டு வருகின்றன என்பதையும் அவர்கள் படிப்படியாக விளங்கிக்கொள்வர். இந்த நிலையிலே முறையாக அடிப்படை இலக்கணத்தைக் கற்பிக்கத் தொடங்குதல் பயனுடையதாகும்.

எம்முடைய எண்ணக்கருத்துக்களைப் பிறருக்கு எடுத்துச் சொல்லுவதற்கு நாம் மொழியைக் கையாளுகின்றோம்; சொற்களும் வாக்கியங்களுமே எமக்குக் கருவிகளாக அமைகின்றன. இக்கருவிகளை எவ்வாறு கையாண்டால் தம் எண்ணக் கருத்துக்களை அழகாக ஆற்றலோடு எடுத்துரைக்கலாம் என்பதை மாணவர் அறிதல் வேண்டும். இதற்கே இலக்கண அறிவு உதவுகின்றது. இந்த இலக்கண அறிவினால், மாணவர் தம் கருத்தைத் தெளிவாக வெளிப்படுத்தும் ஆற்றலைப் பெறுகின்றனர்; தமக்கென ஒரு மொழி நடையையும் (Style) வளர்த்துக் கொள்கின்றனர். உதாரணமாக முன்னே சிறிய சிறிய தனி வாக்கியங்களை ஆக்கிப் பழகிய மாணவர், இப்போது தொடர்பாகத் தமது கருத்துக்களை வெளியிடுவதற்குக் கூட்டு வாக்கியங்களையும் கலப்பு வாக்கியங்களையும் கையாள முற்படுகின்றனர்; வினைமுற்றுக்களை எச்சமாக்கி ஒன்றுக்கு மேற்பட்ட தனி வாக்கியங்களை ஒரு வாக்கியமாக இணைப்பதால் கருத்துச் செறிவும், தெளிவும், அழகும், ஆற்றலும் உண்டாவதை உணர்வர். இவ்வாறே பல வகையான வினை வடிவங்களும் வாக்கிய வடிவங்களும் கருத்துக்களைத் திட்ப நுட்பமாக வெளியிடுவதற்கு உதவியாவதை உணரும்போது மாணவருக்கு இலக்கணத்தில் இயல்பாக ஆர்வம் உண்டாகும்.

வாக்கியமே கருத்தலகாக அமைவதால், வாக்கியத்திலிருந்தே இலக்கணத்தை ஆரம்பிக்க வேண்டுமென இக்காலத்து மொழியியல் அறிஞரும் உளவியல் அறிஞரும் கூறுகின்றனர். வாக்கியத்திலிருந்து சொல் வகைகளை ஆராய்ந்து அதன்பின் எழுத்துக்களை ஆராய்வதே இக்காலத்து முறை: இது நன்னூல் போன்ற எமது பழைய இலக்கண நூல்களிற் கூறப்படும் முறைக்கு (அதாவது எழுத்தியல், சொல்லியல், தொடரியல் என்ற முறைக்கு) நேர்மாறானது. இலக்கணங் கற்பித்தலிலும் விதிகளைக் கூறி உதாரணங்களைக்காட்டுவதே பழையமுறை. ஆனால் உதாரணங்களைக் காட்டி, அவற்றிலிருந்து மாணவரே விதிகளை உய்த்துணரச் செய்யும் தொகுத்தறிமுறையே (Inductive method) இக்காலத்துக் கல்வி வல்லார் போற்றும் முறையாகும். அதாவது, இலக்கணப்பாடம் மாணவருக்கு வெறும் சுமையாக இராமல், மொழியின் அமைப்புமுறையைக் கண்டுபிடிக்கும் ஒரு முயற்சியாக இருத்தல் வேண்டுமெனக் கூறுவர். இவ்வாறு இலக்கண விதிகளை மாணவர் தாமாகவே கண்டு பிடிக்கும்போது அவர்களுக்கு இப்பாடத்தில் ஆர்வமும் சுவையும் பிறக்கும்.

மாணவர் தாமாகக் கண்டுபிடித்த விதிகளை மனத்தில் இருத்துவதற்கு வாய்ப்பாக, நன்னூல்போன்ற இலக்கண நூற் சூத்திரங்களைப் பின்னர் ஆசிரியர் கொடுக்கலாம். இதையடுத்து அவ்விதிகளின் பிரயோகத்தை விளங்கிக்கொள்ளும் வகையிற் பயிற்சிகளைச் செய்தல் நன்று.

இடைநிலை வகுப்புக்களில் மாணவர் கற்றுவருங்காலத்தில், படிப்படியாக இலக்கணக் கலைச்சொற்கள் பலவற்றையுங் கற்றுக்கொள்வர். இவை கருத்துக்களுக்குரிய குறியீடுகளாக இருப்பதால், சிந்தனைக்குச் சுருக்க வழியாகப் பயன்படும்: ஆயினும் உண்மையிலே தேவைக்குவேண்டிய அளவிலே இக்கலைச்சொற்களைக் கற்றுக்கொள்ளல் வேண்டும்; நடைமுறைக்கு வேண்டாத இலக்கணக் கலைச்சொற்களால் மாண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரின் மூலைக்குச் சுமையேற்றுதல் விரும்பத் தக்கதன்று: ஒவ்வொரு வகுப்பிலும் எவ் வளவு கலைச்சொற்களை மாணவருக்குக் கற் பித்தல் வேண்டுமென்பதை ஆசிரியரே தீர் மானித்தல்வேண்டும். ஆயினும் தெரிநிலை வினை, குறிப்புவினை, செய்வினை, செயப் பாட்டுவினை, செயப்படுபொருள் குன்றிய வினை, குன்றுதவினை, தன்வினை, பிறவினை, பெயரெச்சம் வினையெச்சம், இறப்பு நிகழ்வு, எதிர்வு என்றும் காலங்கள், எழு வாய், பயனிலை, செயப்படுபொருள், இடைச்சொற்கள் என்னும் இவை முத லான சில கலைச்சொற்கள் இன்றியமையா தவை; இவற்றைத்தவிர்த்தால் தமிழ் இலக் கணத்தைக் கற்றல் இயலாது. ஆகவே இன்றியமையாத இத்தகைய இலக்கணக் கலைச்சொற்களை மாணவர் விளங்கிக் கை யாளல்வேண்டும்.

இலக்கணம் கற்பித்தலில் ஆசிரியர் என் றுமே கருத்திற் கொள்ளவேண்டிய தொன் றுண்டு. அதாவது செய்வன திருந்தச் செய்தலாகும். பிள்ளைகள் இலக்கணத்தை வெறுக்கின்றனர் என்றால் அதற்கு விளங் காமையே காரணம், பிள்ளைகள் விளங்க வில்லையென்றால் ஆசிரியர் அதனைத் தெளி வாகக் கற்பிக்கவில்லையென்றே பொருள் படும். பிள்ளைகள் விளங்கிலென்ன, விளங்காவிட்டாலென்ன, பாடத்திட்டத் தை எப்படியாயினும் முடித்து விடவேண் டும் என்ற மனப்பான்மையோடு ஆசிரியர் கற்பிப்பாராயின் அத்தகைய இலக்கணப் பாடத்தால் பயன்கிடையாது. கற்பிப்பது சிறிய அளவானாலும், அதை ஐயந்திரிபற முற்றுங்கக் கற்பிப்பதே பயன்தரவல்லதா கும். மாணவருக்கு ஆர்வமூட்டக்கூடிய வகையிலே, தொகுத்தறிமுறை மூலம் (Inductive method) இலக்கணத்தை நன்கு விளங்கத்தக்கதாகக் கற்பித்தால், மாண வர் அதிலே ஆர்வங்காட்டுவர். அதனால் மேல்வகுப்புக்களிலே உயர்ந்த இலக்கணத் தைக் கற்பதற்குவேண்டிய வருமான அடிப் படைஅறிவையும் பெற்றுக்கொள்வர்.

உயர்நிலை வகுப்புக்களிலும் (9 ஆம், 10 ஆம் வகுப்புக்கள், இந்த முறையைக் கையாண்டே இலக்கணங் கற்பிக்கலாம். சிக்கலான வாக்கிய அமைப்புக்களையும் இலக்கண முடிபுகளையும் விளங்கிக்கொள்வ தோடு கட்டுரை எழுதுதல். செய்யுள் நயத் தல் ஆகியவற்றிற்கு வேண்டிய இலக்கண அறிவையும் மொழித்திறனையும் மாணவர் பெற்றுக்கொள்ளல் இங்கே வேண்டப் படும். க. பொ. த. ப. சாதாரணநிலை பரீட்சைக்குரிய புதிய தமிழ்மொழிப் பாடத் திட்டத்தில் இதுபற்றிய பயனுள்ள குறிப் புக்கள் தரப்பட்டுள்ளன, உயர்நிலை வகுப் புக்களிலே தமிழ் இலக்கணங் கற்கும் மாண வர் ஓரளவு வடமொழி அறிவு பெற்றிருப் பது விரும்பத்தக்கது. தமிழ்மொழியிலும் இலக்கணத்திலும் வடமொழி தொன்று தொட்டே விரவி வந்துள்ளமையால், அதனை இலக்கண முறையைச் செம்மையாக விளங்கிக்கொள்வதற்கு இவ்வறிவு பெரிதும் துணையாகும். வடமொழி எழுத்துக்கள் தமிழில் வந்து வழங்குமாற்றையும், தற்ப வச் சொற்களும் தற்சமச் சொற்களும் தமி ழில் அமையுமாற்றையும் தீர்க்க சந்தி, குண சந்தி, விருத்திசந்தி போன்ற புணர்ச்சிகள் தமிழ்மொழியில் பயிலுமாற்றையும் இவை போன்ற பிறவற்றையும் ஆறுமுகநாவலர் தமது நன்னூல் காண்டிகை உரையிலும், குமாரசாமிப்புலவர் இலக்கணச் சந்திரிகை யிலும் விளக்கியுள்ளனர். இவற்றை விளங் கிக்கொள்ளுமளவிற்கேனும் வடமொழி அறிவு இருத்தல் விரும்பத்தக்கது.

இவ்வாறு இந்த நிலைகளிலே இலக் கணத்தைக் கற்கும் மாணவர் பல்கலைக் கழகப் புகுமுக வகுப்பிலும் பல்கலைக்கழக வகுப்பிலும், வரலாற்று இலக்கணம், ஒப் பியல் இலக்கணம் ஆகியவற்றை மொழி நூல் மரபையொட்டி ஆராய்ந்து கற்பதில் இன்பம் காண்பர். அத்தகைய இலக்கணக் கல்வி அன்றுட மொழியாட்சிக்குப் பயன் படாதுபோனாலும், பண்பாட்டு நோக்கிலே மிக்க பயனுடையதாகும். தமிழ்மொழி யின் இயல்பையும் அழகையும் உணர்ந்து அதனை நயம்பட வழங்கும்போதும் இலக்கி யங்களிலே அம்மொழியின் ஆற்றலையும் நயங்களையும் காணும்போதும் உண்டாகும் சுவையைத் தமிழ் மாணவர் அனைவரும் நுகர்ந்து இன்பமடைவதற்கு இலக்கணங் கற்பிக்கும் ஆசிரியரே வழிகாட்டிகளாவர். ஆகவே இலக்கணங் கற்பிக்கும் ஆசிரியர் தம் கடமையை நன்குணர்ந்து செய்வன திருந்தச் செய்வாராக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றங்கரை

1. கரும்பினை ஓடிப்போமென்றும் கள்ளினை உண்போமென்றும்
அரும்பினை எடுப்போமென்றும் அள்ளிநீ ரிறைப்போமென்றும்
வரும்பணை மீனை நாங்கள் வலைப்படுத்திடுவோ மென்றும்
கரும்பணை கட்டி நீரைப் பாய்ச்சுவார் மள்ளரானேர்.

2. நறிய நீர் நிறைத்துக் கொண்டு நாள்மலர் அள்ளிச் சென்று
வறியநன் பயிர்க்கு நீரை வளனுடன் ஊட்டச்சாலி
மறிகையிலேந்து மீசன் அடியவ ரன்பரானேர்
செறி பொருள் பண்களோத திகழ்ந்திடும் வதனம்போன்ற

3. ஆன்ற பயன் பிறர்நுகர அகத்தினிமை யுடையாராய்
தோன்றியநல் லறிவினரை யொத்தனவாம் கன்னல்கள்
ஈன்றகுல மாமுத்தம் எம்மருங்கும் மிளிர்வதனால்
வான்றந்த மீனென்று மயங்கிடுவார் வயன்மாதர்.

4. பறவைகள் கீதம்பாடக் கவிக்குலம் ஆடல் செய்ய
தவளைகள் மேளம்போட ஞிமிறுகள் இசைமிழற்ற
குவளைகள் விழித்து நோக்க குவலயம் என்னும் மங்கை
கைவளை ஒளிதந் தென்னக் கான்றன மணிகள் யாவும்.

5. மருங்கருகே மலர்ச்சோலை மரங்களிலே மந்தியினம்
வருங்கதியால் தேனருவி சொரிந்துபாய் நீர்க்கரையை
கருங்குழலார் மைந்தருடன் கடிதடையக் கயன்மீன்கள்
அருங்கரையை அகன்றனவாய் அலமந்து சுழன்றனவே.

திருமதி. சி. சின்னத்தம்பி,
1-ம் வருடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாட்டாக் கல்யாணம்

நாடகங்களிலும், திரைப்படங்களிலும் அவற்றின் சிறப்பினைக் கூட்ட — பார்ப்போரை மகிழ்விக்க விதூஷகர்கள் வில்லன்-வில்லியரை அமைப்பது வழக்கம். அவர்கள் தோன்றித் தங்களது உடலழகாலும், பேச்சாலும், நடிப்பாலும் சபையோரை மகிழ்விப்பர். அவர்கள் ஆணாகவும் பெண்ணாகவும் முதலிற்றோன்றி, ஈற்றிலே தம்பதிகளாவதுமுண்டு. எவ்வாறு இருப்பினும் சபையோரை மகிழ்விப்பதே அவர்தம் நோக்கமாகும். இவ்வாறு நடித்துப் பேரும் புகழும் பெற்ற நடிகர்கள் பலர் உளர்.

கற்போர்க்கு உவகையூட்டும் பொருட்டு இம்முறைகள் பழைய இலக்கியங்களிலும் ஆங்காங்கு அமைந்துள்ளன. இவைகளின் சிகரமாய் மருதக்கலியில் ஒன்று அமைந்துள்ளது. இதனைப் பாடிய புலவர் மருதத் திணையைச் சிறப்புடன் பாடியமையால், மருதனிளநாகனார் எனச் சிறப்புப் பெயர் பெற்றார் என்க. இவர் தாம் பாடிய முப்பத்தைந்து பாக்களிலே ஒன்றை மிக வேடிக்கையாக அமைத்துள்ளார். அதனைத் திரைப்படம்போல் எம்முன்னே ஓடவிட்டு —பேசவிட்டுக் காட்டுந்திறன் வியக்கற் பாலது.

இதிற் பாத்திரங்கள் இருவர். ஒருவர் ஆண். மற்றவர் பெண். இவர்கள் தனித்தவர்களாய்த் தோன்றி, கலாட்டாபண்ணிக் காதலர்களாக நடித்து இறுதியில் தம்பதிகளாக இணைகின்றனர். இனி இக் காட்சியினைப் பார்ப்போம்.

களம்: ஓர் அரசனது மாளிகையின் பின்புறம். பாத்திரங்களில் கதாநாயகனின் பெயர் குறளன். கதாநாயகி கூனி. இவை அவர்களது இயற்பெயர்கள் அல்ல. கண்டோர் உவந்தளித்த சிறப்புப் பெயர்களாம். காலப்போக்கில் அவர்கள் தமது இயற்பெயரையே மறந்துவிட்டனர் எனலாம். குறளனைப் படைத்த நான்முகன், அவர்க்கு ஏற்ற ஒரு பெண்ணைப் படைக்க வேண்டுமென்று பலநாள் முயன்று படைத்த வடிவம் பெற்றவளே கூனி. சாடிக்கேற்ற மூடிபோலப் பொருத்தமான சோடி. இருவரும் இக்காலம்போல் எவரும் வேலைக்கு விரும்பி ஏற்காது, தாமாகவே வேலையைத் தேடிப்பிடித்த அபூர்வப் பிறவிகள். இருவர்க்கும் அரச மாளிகையிலே வேலை. உலகம் எள்ளி நகையாடும் இவர்களை மன்மதன் மாத்திரம் புறக்கணிக்கவில்லை. இருவர் உள்ளத்தும் காதல் வளருகிறது. இருவரும் மாறிப் புக்கிதய மெய்திஞரென்ற கூற்றுக்கு உதாரணமாயினர். ஆனால், எவர் முந்தி அதை வெளியிடுவதென்பதே பிரச்சனை. அதற்கும் முடிவு கிடைத்துவிடுகின்றது.

வடிவாக மீசை வெட்டி, வாகாக மயிர் சுருட்டி, வெளுக்காத சட்டையணிந்து, வலக்கையில் கடிகாரங்கட்டி, சந்திகளில் நடமாடும் இக்கால வாலிபர் போன்று தன்னை அழகுபடுத்திக்கொண்டு, கூனி வரும் வழிமேல் விழி வைத்திருக்கிறான் குறளன். கூனி வருகின்றாள். அவளைக் கண்டதும் மெய்ம்மறந்து அவளை நோக்கி, கரையில் நின்றவொரு உருவின் நிழல் நீரிலே தெரிவதுபோல வளைந்து அசைந்து கூன் வெளிப்பட நடக்கின்றவளே! உன்னிடத்தில் ஒரு விடயத்தை வினவுவேன்; நிற்பாயாக. "நான் உன்னை அழைக்கவோ, பேசவோ நீ முற்பிறப்பில் என்ன நல்வினையைச் செய்தாயோ என்கிறான். கண்ணுக்கு மையும், உதட்டுச் சாயமும், நகத்துக்குப் பூச்சும் பூசிப் பலவடிவிற் கொண்டைகட்டி, அரைக்கோலத்திற்றிரியும் அலங்கோலங்கள் தம்மை அலங்காரிகள் என எண்ணுவது போன்று அலங்கரித்துக் காதல் மொழி கேட்கக் கனவு கண்ட கூனிக்கு இவ்வுரைகள் நாராசம்போலானது.

அம்மவோ! கண்ணுற் பார்க்கமுடியாத குறள் வடிவாய்ப் பிறக்க வேண்டிய நேரத்தில் ஆண்டவனைப் புள்ளுக்கு அதன் பெடை என்ற பறளானவனே, என்னை விரும்பிச் செல்லவிடாது ஏன் தடுத்தாய்? உன்னைப் போற் குறளர் என்னைத் தீண்டவும் முடியுமோ? என்கிறாள் கூனி. இதைக் கேட்டதும் குறளனுக்குத் தன்மான உணர்ச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலிடுகின்றது; இதைப் பாராட்டினுற் கைக்கெட்டியது வாய்க்கெட்டாமற் போய் விடுமேயென்ற அச்சமும் கூட வளர்கின் றது; அதனுல் இன்ப உணர்ச்சி மேலுங் கூட,

கலப்பையில் தைக்கும் கொழுவைப் போல் ஓரிடம் கூனுய்ப் புறப்பட்டு, முன்னே வளைந்து வலிய முரித்துவிட்டது போன்று நிறைந்த உனது அழகாலே காதல் நோயை உண்டாக்கினுய். நீ இரங்கினுற்றுன் என் னுயிர் நிற்கும். என்னை ஆதரித்து என துயிரை உனதாக்குதல் உன்கடமை. சம்ம தத்தைத் தெரிவித்து என்னை ஆட்கொள் வாயாக என்னும் குறளனின் கெஞ்சுங் குரல் கூனிக்குக் கேட்கின்றது. இக்கூற்று அவளுக்குப் பெரும்ஆறுதலைத் தருகின்றது; பழம் நழுவிப் பாலில் விழுந்ததைப்போல் பெருமகிழ்ச்சி கொள்கின்ருள். நினைத்தது கைகூடி விட்டதாகவே கருதி வல்லுப் பல கையை நிறுத்திவைத்தாற் போன்ற கட்டையனே! பெண்களை அணையும் முறை யை நீயறியாயோ? மக்கள் இயங்காத உச்சிக்காலத்தே வந்து எனது கையைப் பிடித்து எனது வீட்டுக்கு வாவென என்னை நீ அழைத்துச்சென்ருல் அதைத் தடுப்ப தற்கு அங்கு உனது மனைவியர் உண்டா? என்கிருள்.

இதனைக் கேட்டு மகிழ்ச்சிப் பெருமிதத் தால் உடல் பூரித்த குறளன், தலைக்குமேல் நடுவில்லாத வாள்போன்ற வாயையுடைய கொக்கை உரித்தாற்போன்றவளே! உன்னை முன்புறமாகத் தழுவலாமெனில் எனது நெஞ்சில் உனது கூன் ஊன்றும். முதுகுப்புறமாகத் தழுவினுல் கிச்சுக்கிச்ச மூட்டும். ஆதலால், உன்னை நான் முன் புறமாகவும், பின்புறமாகவும் தழுவ முடி யாது. ஆ! என் செய்வது? பக்கத்தாற் றழுவுவதே முடிந்த காரியம். ஆகவே, என் உயிரே! பக்கத்தில் வருவாயாக என்று கூறி, அன்பு மீதூர அவளை அணையச் செல் கின்ருன். கூனிக்கு ஊடல் பிறக்கின்றது; ''கெட்ட தன்மைகளின் வடிவம் உடைய வனே! என்னை விட்டுச் செல்'' என்கிருள். அதனைப் பொருட்படுத்தாது குறளன் அவளை அணையத் தொடுகின்ருன்; உடனே அவள் கோபித்து எட்டிநின்று, ''மக்களில் பாதியானவனே! இனி இந்நிலையைக் கை விடு'' எனக் கூறி, அவனுக்குக் கேட்கும் படி தன்னிற்ருனே திரண்ட மரத்தின் வளை வான இடத்தை விட்டு நீங்காமற் பற்றி வளர்ந்த பூங்கொடிபோல எனது கூனுல் அழகில்லாதது என இவன் இகழும் இவ் வுடம்பையும் தழுவிப் பாதுகாப்போமென என்னை விரும்புவோர் பலர் உளர்; இவ் வாறு பிறர் கரமுறும் என்னை இவன் பக் கத்தே புல்லுவேன் என்பது என்ன? எனக் கூறி அவனைப் பார்த்து, ''உழுத்தம் பணி காரத்தை நிறுத்தி வைத்தாலும் கட்டை யானவனே! எனது பிறப்பு நின்னிலும் தாழ்ந்ததோ? என ஆவேசத்துடன் கூறு கிருள் கூனி.

காமவசத்தனுய்த் தன்னுள் அவன் கேட்கும்படியாக இதனைக் கேட்ட குறளன் நான் உன்னை விரும்புகிறேன் எனக் கூறிப் பின்செல்ல, அதற்கு மனம்பொருந்தாது என்னை விட்டுச் சென்று அசையும் அசை வைப் பார் என்று அவள் கேட்கும்படி தன் னைக் கூறுகிருன்.

இதனைக் கேட்ட கூனியா வாளா இருப் பாள்? ''ஊருகின்ற ஆமையை நிறுத்தி வைத்தாற்போல, நெடியனுய் தோள் இரண்டையும் விலாவுக்குள் வீசி விரிக்கவும் விரும்பிவரும் மன்மதனைப் பார்'' என இகழ் கின்ருள்; இதைக் கேட்ட குறளன், ''நாம் ஒருவரை யொருவர் விரும்பி முயங்கக் காரணமான சாமனுர் தமையன் காமனு ருடைய நடையைப் பார் என ஓய்யார நடை நடந்து அவளை அணுகி, என் அரசன் மேல் ஆணையாக இனி உன்னை நான் இகழ மாட்டேன் என்கின்ருன்.

''அப்படியே ஆகட்டும்! மென்மை யான மார்பை உடையவனே! நானும் இனி உன்னை இகழமாட்டேன்; பேய்கள் துள்ளு கின்றன எனப் பிறர் நம்மைப் பார்த்து இகழ்வதும் இன்றுடன் ஒழியவேண்டும்; பொன்தகடு போன்ற வருண உருவத்தை உடையவனே! குடவோலையின் தலையைக் கூட்டி இலச்சினையிட்டாற்போன்று நாம் கூடி மகிழும் பொருட்டுச் சோலையின்கண் வருவாயாக'' எனக் கூறி, அழைத்துச் செல்கின்ருள் கூனி.

கலாட்டாவிற்றொடங்கிய இருவரும் தம்மில் அன்பொத்துக் கல்யாணம் செய்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டனர். இனி இதைக் காட்டும் புலவரது படைப்பினை நோக்குவோம்.

என்னேற் றனை கொல்லோ
நீருள் நிழற்போல் நுடங்கிய மென்சாயல்
சங் குருச் சுருங்கி
இயலுவாய் நின்னே டுசாவுவேன் நின்றீத்தை.

அன்னையோ காண்டகை யில்லாக்
குறள்நாழிப் போழ்தினுன்
ஆண்டலைக்கின்ற பறழ்மகனே நீயெம்மை
வேண்டுவ லென்று விலக்கினை நின்போல்வார்
நீண்டப் பெறுபவோ மற்று.

மாண்ட எறித்த படைபோன் முடங்கி மடங்கி
நெறித்துவிட் டன்ன நிறையோரா லென்னைப்
பொறுக்கல்லா நோய்செய்தாய் பொறீஇ
நிறுக்கல்லேன்
நீநல்கி லுண்டென் னுயிர்.

குறிப்புக்காண் வல்லுப்பலகை யெடுத்து
நிறுத்தன்ன
கல்லாக் குறள கடும்பகல் வந்தெம்மை
இல்லத்து வாவென மெய்கொளீஇ யெல்லாநின்
பெண்டி ருளர்மன்னே கூறு.

நல்லாய்கேள், உக்கத்து மேலு நடுவுயர்ந்து
வாள்வாய
கொக்குரித் தன்ன கொடுமடாய் நின்னையான்
புக்ககலம் புல்லினெஞ் சூன்றும் புறம்புல்லின்
அக்குளத்துப் புல்லலு மாற்றேன் அருளீமோ
பக்கத்துப் புல்லச் சிறிது.

போசித்தை மக்கள் முரியேநீ மாறினித் தொக்க
மரக்கோட்டஞ் சேர்ந்தெழுந்த பூங்கொடிபோல
நிரப்பமில் யாக்கை தழீ(இ)யின ரெம்மைப்
புரப்பேமென் பாரும் பலராற் பரத்தையென்
பக்கத்துப் புல்லீயா யென்னுமால் தொக்க
உழுந்தினுந் துவ்வாக் குறுவட்டா நின்னின்
இழிந்ததோ கூனின் பிறப்புக் கழிந்தாங்கே
யாம்வீழ்து மென்றுதன் பின்செலவு மூற்றியாக்
கூனிகுழை யுங்குழைவு காண்.

யாமையெடுத்து நிறுத்தற்ருல் தோளிரண்டும் வீசி
யாம்வேண்டே மென்று விலக்கவும் எம்வீழுங்
காமர் நடக்கு நடைகாண் கவர்கணைச்
சாமனூர் தம்மூன் செலவு காண்க.

ஒஒகாண். நம்மூள் நகுதல்தொடி(இ)யர் நம்முணும்
உசாவுவங் கோனடி தொட்டேன்.

ஆங்காக சாயலின் மார்ப அடங்கினேன் ஏஏ
பேயும்பேயுந் துள்ள லுறுமெனக்
கோயிலுட் கண்டார் நகாமை வேண்டுவல்
தண்டாத் தகடுருவ வேருகக் காவின்கீழ்ப்
போத ரகடாரப் புல்லி முயங்குவேம்
துகள்தபு காட்சி அவையத்தார் ஓஓ
முகடுகாப் பியாத்துவிட் டாங்கு.

திருமதி இ. சிங்காரவேலு
(விடுகைவருட மாணவி)

சட்டம் மக்களுக்குத் தென்றலாக இருக்கவேண்டுமே ஒழியத் தீயாக மாறிவிடக்கூடாது. அப்படித் தீயாகமாறி னுல் மக்களின் கண்ணீர் கடலாக மாறிவிடும். காட்டுத்தீ கடலுடன் போட்டியிட்டு வென்றதாகச் சரித்திரச் சான்றுக ளில்லை.

ம. வில்லி ராஜாமணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமணந் தந்த தமிழ்

நந் தமிழகத்தில் பண்டைக்காலம் முதல் இக்காலம்வரை பல்வகைச் சமயங்கள் பல்கி வளர்ந்துள்ளன: அப்பழங்காலச் சமயங்களுள் சமண சமயமும் ஒன்றாகும்: ''ஐம்பொறிகளை அடக்கி வென்றவர்'' ''ஊழினைக் கடந்து வென்றவர்'' என்ற பொருளில் இம்மதத்தைக் கண்டவர்க்கு 'ஜினர்' என்பது பெயராகும். அவர்கண்ட உண்மை சைனமென்றும், அவரைப் பின் பற்றுவோரை சைனர் என்றும் வழங்குவர்:

துறவிகளை 'ஸ்ரமணர்' என்பர்: 'ஸ்ர மணர்' என்பது சமணர் எனவும், அம மணர் எனவும் மாறிவழங்கும்: இச்சொல் தமிழ்நாட்டில் சைனத் துறவிகளைக் குறிப்ப தாகிப் பின்னர் துறவினை வற்புறுத்துஞ் சைனர்க்கே பொதுப்பெயராகி வழங்கி வரு கின்றது: கடவுள் நிலையடைந்த ஜினரை அருகர் என வழங்குவது தமிழில் சிறப்பு வழக்கம். அதனாற் சைனர்களை ஆருகதர் என்று வழங்குவதுண்டு. துறவு மேற் கொண்டோரே வீடு பெறுவர் என்று இம் மதம்கூறுகின்றது. போதி என்பது அரச மரம். இந்த அரசமரத்தின் கீழ் இருந்து புத்தபகவான் போதிசத்துவரானார். அத னால் அரசமரம் பௌத்தர்களால் போற்றப் படுகின்றது. பிண்டி என்பது அசோகமரம். இந்த அசோகமரத்தின் கீழிருந்தே அருகக் கடவுள் முத் தொழில்களையும் ஆற்றினர் என்பதனால் அசோகமரம் அவர்களாற் போற்றப்படுகின்றது:

''பூமலி அசோகின் புனைநிழல் அமர்ந்து
நான் முகன் தொழுது நன்கியம்புவன்
எழுத்தே''

என்பது நன்னூல் முதலாவது எழுத்து அதி காரமுதற் சூத்திரம். இதில் அசோகு வர்ணிக்கப்படுகிறது. இன்னும் சொல்லதி காரம் முதற் சூத்திரத்தில், பதினெட்டு வகையான நூல்கள் உள்ளன.

''நாலடி நான்மணி நானூற்பது ஐந்திணைமுப்
பால்கடுகம் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைய காஞ்சியுடன் ஏலாதி என்பதே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு''

என்னுஞ் செய்யுளால் முதலாவதாகப் பாராட்டப்படுவது நாலடியார் என்பதே: இந்நூல் சமண முனிவர்களால் ஆக்கப் பட்டது.

ஒரு காலத்தில் சமண முனிவர்கள் கொடிய பஞ்சத்தினாற் தமது சொந்த நாட்டை விட்டுப் பாண்டி நாட்டிற்கு வந் தனர். சிலகாலஞ் சென்றதும் பஞ்சம் நீங் கித் தேசம் செழிப்படைந்ததை அறிந்து தங்கள் நாட்டிற்குப் போக விடைதரல் வேண்டும் எனப் பாண்டியனைக் கேட்க, அவன் பல சாத்திரங்களும் வல்ல புலவர் கள் இருப்பது தனது இராஜ சபைக்கு ஓர் அணியெனக்கருதி அவர்களைப் போகவிடாது தடுக்க, அம்முனிவர்கள் ஒருநாளிரவு அரச னுக்கு ஒவ்வொரு பாவை ஏட்டில் எழுதித் தம் ஆசனத்தின்கீழ் வைத்துவிட்டுப் போக, அரசன் பெருங்கவலை கொண்டவனாய் அம் முனிவர்கள் இருந்த இடங்களைப் பார்க்கும் படி கூற, அவர்கள் எழுதிவைத்து விட்டுச் சென்ற ஏடுகள் இதோ இருக்கின்றன என்று ஏவலாளர் கொண்டுவந்துகாட்ட, அரசன் கோபங்கொண்டவனாய், '' இவற் றை வைகை ஆற்றிலே போடுங்கள்'' என்ன, அவர்கள் அங்ஙனமே போட்ட போது நானூறு ஏடுகள் ஆற்றிற்கு எதி ராக ஏறிக் கரைசேர்ந்தன. அதன்பின் அரசன் அவற்றை ஒன்றுசேர்ப்பித்தான். இதுவே நாலடியாரின் வரலாறாகும். இதனை,

''மன்னன் வழுதியர்கோன் வைகைப்
பேராற்றின்
எண்ணி இருநான் கோடாயிரவர்—உன்னி
எழுதியிடும் ஏட்டில் எதிரே நடந்த
பழுதிலா நாலடியைப் பார்''

என்னும் பழைய பாவால் இதனை அறியலாகும்: இந் நாலடியார் அறத்துப் பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்றாக வகுக்கப்படும்.

''முச்சக நிழற்று முழுமதி முக்குடை
அச்சுதன் அடிதொழுது அறைகுவன்
சொல்லே''

என்றும் கூறப்படுகிறது: நான் முகனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சுதனும் அருகக்கடவுளுடைய திருநா மங்களாகும்.

'நன்னூல்' என்னும் இலக்கண நூலை பவணந்தி முனிவர் ஆக்கினர்.

''தெய்வ வணக்கமும் செயப்படுபொருளும்
எய்த உரைப்பது தற்சிறப்பாகும்''

இச்சூத்திரங்கள் கடவுள் வணக்கத்தையும் எழுத்து, சொல் ஆகிய செயப்படு பொருள் களையும் உரைக்கின்றன. எனவே இவை தற்சிறப்புப் பாயிரமாயின. பவணந்தி முனிவர் சமண சமயத்தைச் சார்ந்தவர். எனவே சமணந்தந்த தமிழ் நூல்களில் நன் னூல் என்னும் இலக்கணமும் ஒன்றேயா கும். இந்நூலை ''யாவரும் உணரத் தரு கென கேட்டதனல், பன்னருஞ் சிறப்பிற் பவணந்தி என்னும்நாமத் திருந்தவத்தோன் வகுத்தனன்'' என்பர். இந்நூல் போல் மற்றொன்று 'நேமி நாதம்'. இச் சூத்தி ரங்கள் யாவும் வெண்பாவால் ஆனது. எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என இரு அதிகாரங்களை உடையது. இந்நூலைக் குட் டித் தொல்காப்பியம் என்பர். இதுவும் சமணந்தந்த இலக்கணமாகும். இந்த இரு நூல்களும் யாவரும் பாராட்டும் நூல்க ளேயாம்.

இனிச் சமணந்தந்த இலக்கிய நூல் களைப்பற்றி ஈண்டு ஆராய்வோம்.

''அடிநிமிர் பில்லாச் செய்யுட் தொகுதி
அறம் பொருள் இன்பம் அடுக்கி அவ் வகைத்
திறம்பட வருவது கீழ்க்கணக்காகும்''

என்னும் பன்னிரு பாட்டியற் சூத்தி ரத்திற் கீழ்க்கணக்கு நூல்களின் இலக்கணங் கூறப்படுகிறது. அஃதாவது அடிகள் பல ஆகாமல் அமைந்துள்ள செய்யுட்டொகுதி அறம், பொருள், இன்பம் கருதித் திறம் பட வருவது கீழ்க்கணக்காகும். இவற்றுட்,

''கூர்த்து நாய் கௌவிக் கொளக்கண்டும் தவ்வாயால்
பேர்த்து நாய் கௌவினூர் ஈங்கில்லை —நீர்த்தன்றிக்
கீழ்மக்கள் கீழாய சொல்லியக்கால் சொல்பவோ
மேன் மக்கள் தம்வாயால் மீட்டு''

இதனல் மேன்மக்கள் இயல்பு கூறப் பட்டது. இன்னும் காமத்தீயின் கொடுமை யைப் பின்வரும் செய்யுளால் அறியலாம்.

''ஊருள் எழுந்த உருகெழு செந்தீக்கு
நீருட் குளித்து முயலாகும் — நீருள்
குளிப்பினும் காமம் சுடுமே குன்றேறி
ஒளிப்பினும் காமம் சுடும்.''

இந் நாலடியார் நானூறும் சமணந் தந்த நானூறு இரத்தினங்களே. இதனது உயர்ச்சி கருதியே ஆர் என்னும் விகுதி புணர்க்கப் பட்டது.

இன்னும் சமணந் தந்த இலக்கிய நூலாக அமைந்துள்ளது சீவக சிந்தாமணி யாகும். இந்நூலைச் செய்தவர் திருத்தக்க தேவர் ஆவர். இவரும் சமணசமயத்தவரே.

ஏமாங்கத நாட்டிலே இராசமா புரத் திலே அரசாட்சி நடாத்திய சச்சந்தன் என் பான் விஜயை என்னும் பெண்ணை மணஞ் செய்து அவளோடு கூடி இன்பம் அனுபவித் தற்காக ஒரு சில காலம் தனது ஆட்சிப் பீடத்தை நடாத்த வேண்டுமென்று வற் புறுத்திக்கேட்க, மந்திரிமார் எவரும் அதற் குச் சம்மதிக்காமல் இருக்கக் கட்டியங்கா ரன் என்பவனே ஏற்றுக்கொண்டான். அர சன் அந்தப்புரத்தில் இன்பம் அனுபவித்துக் கொண்டிருந்தான். இதே தருணத்தில் கட் டியங்காரன் நயவஞ்சகம் உடையவனுய் அரசனேடு போருக்கு எழுந்தான். அரசன் தனது கர்ப்பவதியான மனையாளை மயிற் பொறி ஒன்றில் ஏற்றி ஆகாய மார்க்கமாக அனுப்பிவைத்து, அந்தக் கட்டியங்காரனேடு போரிட்டு உயிர்துறந்தான். இந்த ஆர வார ஒலி வானளாவ, அதனைக் கேட்ட விஜயை மயிற்பொறி செலுத்திய கரத்தை விட்டுவிட அப்பொறி மெல்ல மெல்ல ஒரு சுடுகாட்டை வந்தடைந்தது. அதே நேரத் தில் விஜயை சீவகனைப் பெற்றெடுத்தாள். இவன் காலகதியில் தனது ஆட்சியைக் கைப்பற்றிப் பல மனைவியரைத் தன் தேவி மாராக்கி இறுதியிற் துறவு பூண்டு சுவர்க் கம் பெற்றான் என்னும் கதையை ஈரா யிரத்து எழுநூறு செய்யுட்களால் ஆக்கி அருளினர். இதில் ஒவ்வொரு பகுதியும் இலம்பகம் எனப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சாமெனிற் சாதலைதை றன்னவன்றணந்த காலைப்
பூமனும் புணைதலின்றிப் பொற்புடன்
புலம்ப வைகிக்
காமனை யென்றுஞ் சொல்வார் கண
வற்கை தொழுது வாழ்வார்.
தேமலத் திருவோ டொப்பார் சேர்ந்தவன்
செல்ல தீர்ப்பார்.

என்பதனுல் பெண்ணலம் கூறப்படுகின்றது. இன்னும் இவைபோன்ற எத்தனையோ தமிழ் நூல்கள் உள்ளன. உரை ஆசிரியர் எனப்படும் இளம் பூரணரும் மயிலை நாதர் எனப்படும் நன்னூல் உரையாசிரியரும், பிறரும் சமணந் தந்த தமிழர் ஆவர்.

சமணம்தந்த தமிழ் என்னும் தலைப்பில் இலக்கண இலக்கிய நூல்கள் இவ்விரண்டினை ஒருவாறு சுருக்கி விளக்கியுள்ளோம். இன்னும் பௌத்தம் தந்த தமிழ், கிறீஸ்துவம் தந்த தமிழ், சைவம்தந்த தமிழ், வைணவம் தந்த தமிழ் என்றிவ்வாறு பல ஆராய்ச்சிகளையும் எடுத்து ஆராய்ந்தால் தமிழ் நன்கு வளரும். அகில உலகத் தமிழன்பர்கள் யாவரும் ஒன்றுசேர்வர்.

"யாதும் ஊரே யாவரும் கேளீர்"

என்னும் பெருநோக்குடையவராக வாழ்வர் என்பதில் சந்தேகமே இல்லை. தமிழுக்கோ சாதி, சமய, கால வேறுபாடு கிடையவே கிடையாது.

திருமதி. இ. சண்முகநாதன்,
விடுகைவருட மாணவி.

திறமையாளன் தனது திறமைகளைத் தனக்காகப் பயன்படுத்திக் கொள்வது கொஞ்சம். அவனது திறமைகளைத் தங்களுக்காக மற்றவர்கள் பயன்படுத்திக்கொள்ள ஏற்படுகிற வாய்ப்புத்தான் அதிகம்.

சுவாமி ஞானப்பிரகாசர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓய்வு பெற்ற பேராசிரியை
திருமதி. ஜெயதேவி டொறத்தி பெரேரா
அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறப்பதும் எளிதாமோ ?

"பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ பாரிலுள்ள நூலெல்லாம் வள்ளுவன் செய் நூலாமோ" என்று கூறிப் போந்தார் அறிஞர் ஒருவர். இதேபோல் ஆசிரியர்கள் எல்லோரும் நல்லாசிரியராவரோ! ஒரு சிலரே நல்லாசிரியர் என்ற சொல்லுக்குப் பொருத்தமுடையவர்களாவர்;

கோவை ஆசிரியர் கலாசாலையில் இருபான்மூன்று வருடங்கள் பேராசிரியராகக் கடமையாற்றி இவ்வாண்டு ஆனித்திங்கள் பதினேந்தாம் நாள் ஓய்வுபெற்ற எம் பேராசிரியர் திருமதி. ஜே: டி. பெரரா அவர்கள் நன்னூல் ஆசிரியர் பவணந்தியாரின் நல்லாசிரியருக்குரிய பண்புகளை எடுத்துக்கூறும் கூற்றுக்களுக்கமைய நல்லாசிரியர் வரிசையில் முதற்கண்வைத்து எண்ணப்படத்தக்கவர்.

கம்பீரமான தோற்றம், ஞான ஒளி படைத்த கண்கள், அருள் ஒழுகு பார்வை, குழந்தை போன்ற தூய உள்ளம், யாவரையும் மகிழ்வித்து உற்சாகப்படுத்தும் கலகலத்த சிரிப்பு, அன்பு கனிந்த பேச்சு, உயர்ந்த நோக்கம் இவையாவும் ஒருங்கேயமையப்பெற்ற எங்கள் பேராசிரியர் அவர்களை நாம் மறப்பதும் எளிதாமோ ?

பேராசிரியர் அவர்கள் எமது ஆசிரிய கலாசாலையின் வளர்ச்சியில் முக்கிய பங்கு கொண்டுள்ளார். இவர்கள் பேராசிரியராக மட்டுமன்றி, உப அதிபராகவும் கடமை ஆற்றி உள்ளார். கடமையையே கண்ணாகக்கொண்டு கலாசாலையின் வளர்ச்சிக்கு அயராது உழைத்தார். பொது வேலைகளிலும் முக்கிய பங்குகொள்ள இவர் தவறுவதில்லை. எங்கழக இல்லங்களுள் ஒன்றுகிய 'இராதா இல்லத்து' க்குத் தாயாக விளங்கி ஆசிரிய மாணவிகளுக்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்தார்.

பேராசிரியரது சிறந்த சேவை, செயற்றிறன், சீரிய பண்பு ஆகிய நல் இயல்புகள் போற்றுதற்குரியன. இவர்கள் கலாசாலை அதிபருடனும் உடனுசிரியருடனும் நடந்து கொண்டமுறை கலாசாலையின் முன்னேற்றத்திற்குப் பெரிதும் உதவியது.

இவர் எங்கள் அதிபருக்கு நன்மந்திரியாய், உடன் பேராசிரியர்களுக்கு அரிய நண்பியாய், ஆசிரிய மாணவிகளுக்கு நல்லாசிரியராய், பண்பிலே தெய்வமாகத் தோன்றினர். பேராசிரியர் அவர்களுடன் நான் நெருங்கிப் பழகநேர்ந்தபோது இப் பண்புகளை அவதானிக்க முடிந்தது.

பேராசிரியர் திருமதி. பெரரா அவர்களிடம் நாம் ஆங்கிலமுறை, பாலர் வகுப்பு முறை ஆகிய பாடங்களைப் பயிலப் பேறு கிடைத்தது. பாலர் வகுப்புமுறை கற்பிக்கும் முறையே தனிச்சிறப்பு வாய்ந்தது. நாம் அவர்களிடம் பாலர் வகுப்பு முறை பயிலும்போது நாமும் பாலர்களாகவே மாறிவிடுவோம் என்பது குறிப்பிடத்தக்கது. எம் பேராசிரியர் அவர்கள் வகுப்பறையில் நுழையும் காட்சியும் தனித்தன்மை வாய்ந்தது. அவர் வகுப்பறை வாயிலை வந்தடையும்போதே மாணவிகளது வதனங்களெல்லாம் அன்றலர்ந்த செந்தாமரையினை நிகர்த்ததாகக் காணப்படும் என்று கூறின் அது மிகையாகாது. பேராசிரியர் அவர்கள் வகுப்பறைக்கு வரச்சற்றுத்தாமதமாகி விட்டாலோ மாணவிகள் எல்லோரும் நுழைவாயிலை நோக்கிய வண்ணமாகவே இருப்பர். அவர் மாணவர்களுக்கு உரைக்கும்பொருள் உள்ளத்தே அமைத்து விரையாது, வெகுளாது, விரும்பி முகன் மலர்ந்து கற்பிக்க ஆரம்பிப்பார்; அத்துடன் கொள்வோர் கொள்வகையறிந்தே கல்வியையூட்டுவார். மாணவர்களும் சோர்பின்றிக் கேட்டவற்றை விடாதுரைத்து அமைத்துக்கொள்வர்.

"பெருமைக்கு மேனச்சிறுமைக்குத் தத்தங்
கருமமே கட்டளைக் கல்"

என்று கூறினர் தெய்வப்புலவர் வள்ளுவனர். மக்கள் எய்தும் பெருமைக்கும், எய்தும் சிறுமைக்கும் தாந்தாஞ் செய்யும் கருமமே காரணமாகும். திருமதி. பெரரா அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் பெருமைக்கு அவர் ஆற்றிய கருமங்களே காரணமாய் நின்றன என்று கூறின் அது சாலவும் பொருந்தும். தாமின்புறுவது உலகின்புறக்கண்டு கற்றறிந்தார் காமுறுவரன்றே! பேராசிரியர் அவர்களும் தாம்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்னும் பெருநோக்குடன் மனமுவந்து செயலாற்றுந்தன்மையர்.

பேராசிரியர் அவர்கள் ஓய்வுபெற்ற காலையும் மீண்டும் எங்கலாசாலைக்கு வருசைதந்து வேண்டியபோது வேண்டிய உதவிகள் புரிந்து வருவதொன்றே அவர் எங்கள் நலனில் எத்துணை ஆர்வம் உடையவர் என்பது புலனுகின்றது. இவர் ஓய்வுபெற்றாலும் சமூகம் இவரது அனுபவத்தையும் சேவையையும் பயன் படுத்திக்கொள்ளவே விரும்பும்.

மக்களாகிய நாம் பெற்ற பல கொடைகளுள் "நினைவாற்றல்" மிகப்பெரியதொன்றுகும். நடந்ததை நினைத்து மகிழ்வதும் துன்புறுவதும், நடக்கப்போவதை நினைத்து ஏங்குவதும் மனித வாழ்க்கையோடு பின்னிப் பிணைத்துவிட்ட அம்சமாகும். நாம் எம்பேராசிரியர் அவர்களுடன் பழகிய காலம் மிகக்குறுகியதே. நாம் பழகிய ஈராண்டுக்காலம் எமக்கு ஈர் ஆண்டுகளாகத் தோன்றவில்லை. இருநூறு யுகங்களாகவல்லவா நினைக்கத் தோன்றுகின்றது:

"உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரிதலினைத்தே புலவர் தொழில்"

என்றூர் வள்ளுவப் பெருந்தகை. பேராசிரியர் அவர்கள் நாம் யாவரும் உவக்குமாறு எம்முடன் வாழ்ந்தார். அவர் சேவையில் இருந்து ஓய்வுபெறுங்காலம் வந்தது. ஓய்வு பெற்றூர். அவர்கள் ஓய்வு பெற்றூலும் ஆசிரிய மாணவிகள் அனைவரின் மனக்கோயிலிலும் நீங்காத இடம் பெற்றுவிட்டார். பேராசிரியர் அவர்களும் அவர் தம் குழந்தைகளும் நற்பணிகள் பல புரிந்து பேரும், புகழும், சீரும், சிறப்புமெய்தி நீடு வாழ எல்லாம் வல்ல இறைவனது தாள் வணங்கி நிற்கின்றேம்.

செல்வி: புனிதம் பொன்னம்பலம்,
விடுகை வருடம்.

செல்வம் இழப்பது ஒன்றும் இழத்ததாகாது; உடல் நலம் இழப்பது ஏதோ சிறிது இழந்தவர்கள் ஆகின்றேம்; ஆனுல், நற்குணம் இழந்தால் எல்லாம் இழந்தவர்களாகின்றேம்.

ஜேர்மன் மாட்டோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பேராசிரியர் திருமதி. ஜெ. டி. பெரேரா அவர்களின்
சேவைநலம் பாராட்டு விழாவின் போது
திருமதி. ஆசீர்வாதம் அவர்களின் சுவையான உரையைக் கேட்டு
அனைவரும் மகிழ்கின்றனர்.



பேராசிரியை திருமதி. ஜெ. டி. பெரேரா அவர்களின்
சேவை நலம் பாராட்டுதலின் போது
ஆசிரிய மாணவி அன்புடன் பூச்செண்டு அளிக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்ணிலாவே !

மீன்கள் கோடிகோடி சூழ வெண்ணிலாவே — ஒரு
வெள்ளிஓடம் போல்வருவாய் வெண்ணிலாவே

என வானமண்டலத்தைப் பரந்த கடலாகவும், அக்கடலிலே காணும் உடுக்களை ஒளிவீசும் கணக்கற்ற மீன்கள் எனவும், உன்னை வெள்ளியாலான ஓர் ஓடம்எனவும் வர்ணித்து அழைக்கின்றார் கவிஞர் தேசிக விஞயகம்பிள்ளை அவர்கள்.

எல்லையில் லாததோர் வானக்கடலிடை
வெண்ணிலாவே — விழிக்
கின்பமளிப்பதோர் நீவென்றிலகுவை
வெண்ணிலாவே

என்று எல்லையற்ற வானவெளியைப் பெருங்கடலாகவும், உன்னை அக்கடலிலே கண்ணுக்கினிய காட்சி நல்கும் தீவாகவும் உருவகித்துப் பாராட்டுகின்றான் பாட்டுக் கொரு புலவன் பாரதி. விருத்தமென்னும் ஒண்பாவில் உயர்ந்து விளங்கும் கம்பனும் உன்னைச் சும்மா விடவில்லை; உப்பரிகைகளில் உள்ள சாளரங்கள் தோறும் தோன்றும் மகளிரின் முகத்தை நீ தோன்றுவதாகவன்றோ கூறிக் களிகொண்டான்! அன்றியும், அவன் பாடிய இராமன் திருக்கதையில் நீ பற்பல இடங்களிலே தோன்றிக் கவிநயத்தை மிகுவிப்பதைக் கவிதைச் சுவையில் ஈடுபடுவோர் காணுமிருப்பரோ!

நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்து
நிலாவென்று காட்டுகின்றாய் ஒளிமுகத்தைக்
கோலமுழுவதும் நீகாட்டி விட்டால் — காதல்
கொள்ளையிலே இவ்வுலகம் சாமோ வானச்
சோலையிலே பூத்த தனிப்பூவோ நீதான்
சொர்க்க வெள்ளிப் பாற்குடமோ அமுதஊற்றே!

என்று உன்னைப் பலவாறு அழைத்தும் கவிஞன் உள்ளம் சாந்தியடையவில்லையே.

உலகில் தோன்றிய எல்லா நாட்டுக் கவிஞர்கட்கும் அவர்தம் கவிதைத் திறமையினை வெளிப்படுத்துவதற்கு நீயும் ஒரு வகையில் உதவியிருக்கின்றாய் என்பதை நாம் மறுக்கவில்லை. அன்னார் உன்னைப் போற்றியும், புகழ்ந்தும், வர்ணித்தும், உவமித்தும், உருவகித்தும் தமது இலக்கியப் படைப்புகளிற் கூறியிருப்பதை நாமும் ஆம் என்று தலையாட்டி ஏற்றுக்கொண்ட காலம் ஒன்று இருந்ததென்பதும் உண்மையே.

கவிஞர் மட்டுமன்றிச் சிறுவர், சித்தர், முத்தர், முனிவர், மன்னர், ஓவியர், சோதிடர், காதலர் என்போர்க்கெல்லாம் காட்சிப் பொருளாகவும், கருத்துப் பொருளாகவும், தத்துவப் பொருளாகவும், இன்பப் பொருளாகவும், விந்தைப் பொருளாகவும், விளங்கினையன்றே!

சிறுவர்களின் அழுகையை ஆற்றவும், அவர்களுக்கு உணவூட்டவும், அவர்களது பிடிவாதத்தைத் தளர்த்தி அவர்களை இன்பக்கடலில் ஆழ்த்தவும் அவர்தம் பெற்றோருக்கும் உற்றோருக்கும் நீ உற்ற துணையாய் உதவுகின்றனையன்றே! உன்னைப்பற்றிப் பாட்டிகள் கூறும் கற்பனைக் கதைகள்தான் எத்தனை! அவற்றைச் செவிமடுத்து வாய் திறந்தவண்ணம் கேட்கும் குழந்தைகள் அடையும் இன்பத்திற்கு ஈடுதான் உண்டோ! பால்மணம் மாறாச் சிறுவர்கள் உன்னைத் தம்முடன் விளையாட வரும்படி,

வட்டவடிவமாய் இருக்கும் வெண்ணிலாவே — நீ
வாய்திறந்து பேசுவாயோ வெண்ணிலாவே!
ஆகாயத்தில் தோன்றுகின்ற வெண்ணிலாவே — நீ
அசைந்து அசைந்து போவதென்ன
வெண்ணிலாவே!
மேகத்தில் மறைந்துவரும் வெண்ணிலாவே — நீ
விளையாட வருவாயோ வெண்ணிலாவே!

என்று அழைக்கும் அருமையில் நீ உருகிடுவாயன்றே!

தம்மையறிந்து இன்பமுற வேணவாக் கொண்ட சித்தர்கள், முனிவர்களெல்லாம் ஒரு தந்திரங் கூறுமாறு கேட்டதையும் நீ மறந்துவிடுவதற்கில்லை. புவிபுகழும் புத்த பிரான் பிறந்ததும், ஞானம் பெற்றதும் நீ நிறைவாய்த் திகழ்ந்த காலத்தன்றே! "பித்தா, பிறைசூடி! பெருமானே அருளாளா" என்று பரமனோடு பிறையுருவாய்ச் சேர்ந்திருக்கும் பேறுபெற்றமையும் நீயன்றே! "சந்திரனைப்போல் சுபவதியாய் ..." எனக் கத்தோலிக்கு சமயிகள் தாம் வழிபடும் தெய்வமாகிய கிறீஸ்துவின் அன்னையாம் கன்னிமரியாளை அழைப்பதும் அறிவாயன்றே!

கருத்துக்கினிய காட்சிகளைத் தமது கைவண்ணத்தால் காட்டும் ஓவியர்எல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலாக்காட்சியில் உன்னை முழு உருவாகவும் பிறையுருவாகவும் வரைந்து, வர்ணமூட்டி, மக்கள் மனதைப் பரவசத்தில் ஆழ்த்தி இன்பஅனுபவங்களைப் பெறவைப்பதற்கும், பொருளீட்டுவதற்கும் நீ உதவுகின்றாய் என்பதையும் யாவரும் ஒப்புக்கொள்வர். அன்னுரைக் கற்பனைக் கடலில் மூழ்கடிக்க என்ன உபாயங் கண்டாயோ!

பண்டைய மன்னனை தசரதனும், அவன் முன்னோரும் தமது குலத்துக்கு உன் நாமத்தைச் சூட்டிச் சந்திரகுல வமிசத்தவர் என்று பெருமை பேசிப் புகழுடன் வாழ்ந்தனர் என்பதை நாம் இலக்கியவாயிலாக அறிகின்றோம் என்பதும் உண்மையே.

சோதிடரும் உன் பெயரைச் சொல்லி மானிட வாழ்க்கையில் நீ பெரும் பங்கெடுப்பதாகக் கூறிவருவதையும் கேட்டுக் கொண்டுதானிருக்கின்றோம். அன்னரின் வருவாய்க்கு நீயும் துணைசெய்வது தெரிந்ததுதான்.

காதலர் நெஞ்சை வெதுப்பி அவர்கள் மனத்தைச் சோதித்தறிய என்ன தந்திரந்தான் நீ கற்றுக்கொண்டாயோ? அன்னுர் உள்ளங்களுக்குப் புதுப்புது அனுபவங்களை உனது மயக்கும் குளிர்நிலவால் அளித்து எள்ளிநகையாடி மகிழ்கின்றாய். எத்தனை இரவுகளை அன்னுர் இவ்விதம் கழிக்கின்றனர்.

காதலர்கள் மட்டுமன்றிச் சாதாரண நிலையில் உள்ள மனிதருங்கூட நிலாக் காலத்தை மிகவும் விரும்புகின்றனர். இயற்கையன்னையை நீ உன் தண்ணொளியால் குளிப்பாட்டி அழகூட்டி வருவதால் அவள் மனோகரமான காட்சியாய் எங்கள் முன் தோன்றுகின்றாள். அவளின் குளுமை நிறைந்த கரங்களால் அணைக்கப்பட்டு, அவளின் அழகை அள்ளிப் பருகுவதில் தெவிட்டாத இன்பம் பெறுகின்றோம். கடற்கரையிலோ, வயல்வெளியிலோ, பூஞ்சோலையிலோ, வீட்டு முற்றத்திலோ, எங்கெங்கோ இருந்தாலென்ன! அங்கங்கெல்லாம் புதுப் புதுவிதமான அழகைக்காட்டிப் பரவசத்தில் ஆழ்த்துவாய். கடலானது உன்னைக் கண்டதும் மகிழ்ச்சியால் ஆரவாரிக்கின்றதோ, அன்றேல் உன்னைப் பிடிக்க முயலுகின்றதோ என்று பிரித்தறிய முடியாத நிலையில் தனது அலைகளாகிய கரங்களை அடித்து ஒலிப்பதைக் காண்கின்றோம்.

வெள்ளைநிற மலர்களான மல்லிகை, முல்லை போன்றவை உன்வரவைக்கண்டு முகம் மலர்வன போன்று தமது இதழ்களை விரித்துத் தோன்றுங் காட்சிதான் என்னே! கதிரவனைக்கண்டு கமலம் சிரிப்பதுபோல் உன்வரவைக்கண்டு குமுதம் சிரிக்கின்றதுவே! இவ்வாறு நீ தோன்றிய காலமுதல், இந்நிலமக்களையும், இயற்கையையும் உன்வயப்படுத்தி, இரண்டு இலட்சத்து இருபத்தாறுயிரத்துத் தொளாயிரத்து எழுபது தசம் ஒன்பது மைல்களுக்கப்பால் எட்டாப் பொருளாக யாவரும் வியப்புறு வண்ணம் இருந்துகொண்டு, சிலகால் வளர்ந்தும், சிலகாற் குறைந்தும் பல்வடிவங்களில் காட்சிகாட்டி வந்தனை. ஆனால் உன்னை மனிதசக்தி எப்படியோ வென்றுவிட்டது. இவ்வாண்டு ஆடித்திங்கள் இருபத்தொராம் நாள் அமெரிக்க விண்வெளி வீரர்களாகிய திரு. நீல் ஆம்ஸ்ட்ராங், திரு. எட்வின் ஆல்ட்ரின் என்போர் உனது திருமேனியில் காலடி எடுத்து வைத்து, வெற்றிக்கொடி நாட்டி உலகு என்றுமே கண்டிராத சாதனையைச் செய்து உலகோரை வியப்பும் அதிர்ச்சியும் கொள்ளவைத்தனர். உன்னில் மறைந்து கிடந்த சில உண்மைகளையும் உலகுக்கு உணர்த்தினர்.

மனிதன் உன்னைப் பார்த்துப் பார்த்துப் பலகாலம் ஏங்கினன். எப்படியும் உன்னிடத்தில் வந்து வசிக்கவேண்டும் என்று எண்ணங் கொண்டான். இவ்வெண்ணத்தைப் பூர்த்தி செய்யும் நோக்கமாக அவன் எடுத்த முயற்சிகளோ அநந்தம், அநந்தம். அவன் செலவுசெய்த பணமோ கோடானுகோடி. உபயோகித்த பொருள்களோ கணக்கிலடங்காதவை. வல்லரசுகளாகிய அமெரிக்கரும், உருசியரும் நீயோ நானே வென்று போட்டி போட்டுக்கொண்டு தமது விஞ்ஞானத் திறமைகளெல்லாவற்றையும் உபயோகித்து, தம்மில் யார் முதன்முதல் வெற்றிக்கொடி நாட்டுவதென்று முனைந்து நின்ற நிலையை எண்ணும்பொழுது அவர்கள் உன்மேல் கொண்ட காதல் புலனாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தனைச் சிறப்புக்கும் உரிய என்னைக் கேவலம் மனிதன் வந்தடைவது சாத்தியமா என மனித சக்தியை நீ ஏளனம் செய்திருப்பாய்; ஆனல் அன்று அவர்கள் கோழிக் குஞ்சைப் பருந்து வட்டமிடுவதுபோல் உன்னைப் பலமுறை வட்டமிட்டதைக் கண்டு அச்சமும், வியப்பும் அடையாமல் எங்ஙனம் நீ இருந்திருப்பாய். பாவம்! இப்பொழுது உனது ஆணவம் அடங்கிவிட்டதா: அன்று வெகு சேய்மையிலிருந்து கண்ணைக் காட்டி எம்மைப் பரிகசித்த நீ இன்று உன் நிலையை எண்ணிப்பார்;

உன்னைப்பற்றி நாம் அறியவந்த உண்மைகளில் மிகவும் ஆச்சரியப்படத்தக்கதும், மறுக்கமுடியாததுமாகிய உண்மை என்னவெனில் எந்தவிதமான புல்பூண்டோ, பயிர்பச்சையோ, பூச்சிபுழுக்களோ, மரஞ்செடிகளோ, பறவை இனங்களோ, மிருகங்களோ, மனிதசஞ்சாரமோ ஏதுமற்ற புளுதியும், பாரும், எரிமலைகளும் நிறைந்த ஒரு கோளமென்பதே. இனி கவிஞரும், சிறுவரும், சித்தரும், முத்தரும், முனிவரும், மன்னரும், ஓவியரும், சோதிடரும், காதலரும் உன்னைப்பற்றி என்ன நினைப்பார்களோ. உன்னில் ஓர் ஆய்வுக் கூடம் ஏற்படுத்தத் தகுதியான சூழ்நிலை உண்டென்று விண்வெளிவீரர் கூறியதை நாம் மறுப்பதற்கில்லை. ஆய்வுக் கூடம் அமைக்கும் வாய்ப்புக் கிட்டுமானல் நம்மவர் தொடர்ந்து எவ்வெவற்றை உன்னிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்று ஆய்வு நடாத்த மேலும் முற்படுவார்கள்; அவர்கள் தமது விஞ்ஞான அறிவைப் பிரயோகித்து உன்னிடத்தில் மக்கள் வசிக்கத் தகுந்த சூழ்நிலையை உருவாக்க முயற்சிப்பார்கள். இம்முயற்சிபில் அவர்கள் எண்ணங் கைகூடுமாயின், வேலவாய்ப்புத் தேடி கானல், எத்தியோப்பியா, மாலதீவு, நைசீரியா, புறுனே, இங்கிலாந்து, அமெரிக்கா எனும் இடங்களுக்கு இடம்பெயர்ந்து அலையாமல் உன்னகத்தே வந்து குடிபுகுந்து விடுவார்கள் அன்றே. அங்ஙனமாயின் உனக்கும் எமக்கும் நெருங்கிய தொடர்புண்டாகும்: குடும்பக்கட்டுப்பாட்டுப் பிரசாரமும் வேண்டியிராது. தனிமையிலே நின்று தவம்புரிந்த உனக்கும் பொழுது போவதற்கு நம்மவர் துணைசெய்வார்கள்: நீயும் நம் பூமித்தாய் போல் கோடானு கோடி பிள்ளைகளுக்குத் தாயாவாய்: மேலும் உன் மக்கள் விஞ்ஞானப் பித்தராகிப் புதுப்புது முறைகளைக் கண்டுபிடித்து ஏனைய கோளங்களுக்குஞ் சென்று வசிக்கும் வாய்ப்புக்களைப் பெறுவர்: சூரிய குடும்பத்தைச் சேர்ந்த எல்லாக் கோளங்களையும் மக்களால் நிரப்பி வாழ வழியுண்டாகும்; அந்நாள் எந்நாளோ!

செல்வி. மனோன்மணி தோமஸ்,
முதலாம் வருடம்;

பெண்கள் இல்லையேல் இத்த உலகில் எந்தவேலையும் நிகழாது; துன்பத்தில் இன்பம்; பசிக்கு உணவு; சண்டையிற் சமாதானம்; வீரத்தில் புயலுக்கு அமைதி இவை போன்ற எத்தனையோ காரியங்கள் பெண்களால் ஆகின்றன.

மாபாளான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உள்ளம் கவர் கள்வன்"

பொழுது புலரவேண்டியதுதான், புதினத்தாள்களின் பக்கம் பக்கமாக எத்தனையோ ஓலங்கள்: "நாங்கள் காதல் மணம் புரிந்தோம் பிரபு; இப்போது என்னை யிவர் கைவிட்டுவிட்டார்:" "இவர் என்னைப் பிரியேன் என்றும் பிரிந்தால் உயிர் தரியேன் என்றும் வாக்களித்தார் ஐயா, இப்போது என்னைத் துரத்திவிட்டார் பிரபு; இவரிடம் ஜீவனும்சம் பெற்றுத்தாருங்கள்" என்றித்தகைய பலவகை வழக்குகள், காதல்கணவர்களிடம்:

இவையும் காதல் மணங்கள் என்று பேசப்படுகின்றன. இத்தகைய தலைவன் தலைவியர்கள் அல்லோல கல்லோலமாய் அருவருப்புக்குத் தக்கமுறையில் வீடு, காடு, சோலை, புகையிரத நிலையம், பஸ் நிலையம் முதலிய இடங்களில் தனிமையில் சந்திக்கிறார்கள்:

அன்று ஒரு சோலை, பளிங்கன்ன நீர்த் தண் சுனைகள் படர்ந்து தூங்கும் செழும் கொடிகள், பூத்துப்பொலியும் பூங்கொத்துக்கள், பாய்ந்தாடவல்ல செய்குன்றுகள். இவற்றையுடைய பூம்பொழில், அஃது தூங்கிருள் வெய்யோற் கொதுங்கிப் புக்கிருந்தாற் போன்றது:

ஆயர் கூட்டம் ஆங்காங்கு விளையாட்டயர்கின்றன. உயிர்த்தோழியும் பிரிந்தனள், தலைவியைத் தனிமை இடம் கொள்கிறது. இவ்வாறே தோழர் கூட்டமும், உயிர்த் தோழனும் பிரிந்த நிலையில் தலைவனையும் தனிமை இடம் கொள்கிறது.

விதிவசத்தால், அன்புமீதூர, தம்வசமின்றித் தலைவன் தலைவியர்க்கிடையில் கூட்டம் நிகழ்கின்றது. மணம் அரும்பியது: "நின்னிற் பிரியேன் பிரியின் உயிர் தரியேன்" என்பது அக்கினிசாட்சியாக, வளிசாட்சியாக, சோலைசாட்சியாக, தலைவன் தலைவிக்குக் கூறிய சத்தியவாக்கு. பிரிந்த தலைவன் குறித்த காலத்தில் சந்திக்கத் தவறினால் இச்சத்தியவாக்கில் தவறி விட்டானே கள்வன் என்ற ஏக்கம் தலைவிக்கு:

இந்நிலையில் இடர்ப்படும் ஒரு தலைவியின் ஒரு காட்சியைப் பாருங்கள்; "நாங்கள் ஒருவரையொருவர் மணந்த ஞான்று ஆண்டு (அச்சோலையில்) எவரும் இல்லைத்தானே, கள்வன் தானது பொய்ப்பின் யான் எவன்செய்கோ" என்று வருந்துகிறாள் தலைவி: இவ்விடரினுள் ஒரு நினைவு வருகிறது அவளுக்கு: "ஆம், அப்போது அங்கு ஒரு குருகு இருந்ததல்லவா, அது எனக்குச் சான்று பகராதா .... இல்லை: அது சான்று பகராது: அது எங்கள் மணவினையைப் பார்க்கவில்லையே. தனது இரையில் அல்லவா அது கருத்துக்கொண்டிருந்தது: ஓடு மீன் ஓட உறு மீனையல்லவா பார்த்துக் கொண்டிருந்தது. எனவே அதுவும் சான்று பகர்வதற்கில்லையே: என் செய்வேன்" என இவ்வாறுக வருந்துமொரு தலைவியின் காட்சியைச் சித்திரிக்கிறது ஓர் இனிய குறுந்தொகைச் செய்யுள். அஃது,

"யாரு மில்லைத் தானே கள்வன்
தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ"

எனத் தொடங்குகிறது: விதிவசத்தால் அன்பின் இணைந்த ஆருயிர்த் தலைவனை இவன்கூறிய "கள்வன்" என்ற வார்த்தைக்கும் இக்காலத்தில், நீதிமன்றத் தீர்ப்புக்காகச் செல்லும் தலைவியர் தம் தலைவனைக் கூறும் "கள்வன்" என்ற வார்த்தைக்கு மிடையில் அதிக பேதம்: முன்னையது, சந்திப்புக்காலம் தாழ்ந்தமையால், தலைவிதன் தனிமையால் ஆற்றுமை மீதூர மொழிந்த கடுமொழியெனினும் பின்பு அவர்கூடிய போது அளவிலா அன்பைப் பொதிந்த கள்வக்கனி மொழியாகின்றது. பின்னையது ஆத்திரம், இழப்பு, தண்டனை என்பவற்றை அடக்கிய கள்வக் கனல்மொழியாகிறது, இஃது எக்காலத்துமாம்: இருவகையாருக்கு மிடையில் ஏற்பட்ட இந்த இறக்க ஏற்ற வித்தியாசம் சொல்லக்கூடாதது: உய்த்துணர்தற்பாலது. நிற்க, பிரிவாற்றுத் தலைவி தலைமகனைக் கள்வனெனக் கடிவது இன்னும் பல இடங்களிலுமுண்டு.

"இவன் என் நலங் கவர்ந்த கள்வன்
நெஞ்சம் நிறை யழித்த கள்வன்"

என அவைவரும்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகம் பொருள் நூல்கள் கூறும் அக் காலத் தலைவி அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு ஆகிய நற்குணங்கள் நிறைந்த நிறை வரம்புக்குட்பட்ட ஒழுக்கம் சான்ற தலைவி: தன்னில் மிக்காரும், ஒப்பாரும் இல்லாதவள். தலைவனும் வீரம், நிறை, ஓர்ப்பு கடைப்பிடிமுதலாம் குணங்கள் நிறைந்து அவ்வாருனவன் இவர்களின் சந் திப்பு விதிவசத்தால் நிகழ்கிறது. இருவரும் தம்வசமின்றிச் சேர்கின்றனர்; இவர் தம் மணம் தெய்வமணம்: இவற்றுட் கொள்ள வேண்டியனவற்றைக் கூடக் கொண்டிலா தது இக்காலக் காதல்மணம். இது நினைத் துப் பார்க்கத்தகாதது. சோலிகளுக்குட் பட்டது: எனவே இதை நினையாது விடு வோம்:

தலைவன், சந்திப்பதாகக் குறித்த பொழுது தவறியதும், தலைவன் மேற் கொண்ட அன்பின்பெருக்கு அவள்நெஞ்சை அலைமோத, அலைமோத ஆற்றுமை மிகு கின்றது. எனவே தலைவனை அவள், ''கள் வன்'' என்றும் ''பொய்வலான்'' என்றும் அவன் சொல், ''பொய்பொதி கொடுஞ் சொல்'' என்றும் இன்னேரன்னவற்றால் கண்டிக்கின்றாள்.

'' நும்மோர் அன்னோர் மாட்டும் இன்ன
பொய்யொடு மிடைந்தவை தோன்றின்
மெய்யாண் டுளதோ இவ்வுலகந்தானே''

என்று கூறவும் முற்படுகின்றாள்:

தலைவனும் வேண்டுமென்று தாழ்த்தி னனல்லன்: அவனும் அவள்மாட்டு அவள் போன்றதோர் அன்பின் பெருக்கினன்; அவ னுறையும் உள்ளத்தான்.

ஈண்டு தூய அன்பின் பெருக்கை, ஒரு வர் ஒருவரை விழுங்கும் பற்றை, ஒன்றை யொன்று மாறி மாறி விழுங்கும் இரு உள் ளங்கள் ஒன்றாகும் கலப்பைக் காண்கின் றோம்: இது இருவர் அன்பால் ஒன்றாகிய காட்சி: அதாவது இரு ஆன்மாக்கள் அன் பால் ஒன்றாகியது போன்ற உண்மை.

இதே வகையில், ஆன்மாக்கள் அன்பு மிகுதியால் இறைவனைக் கலக்கமுடியும்: அவனோடு இரண்டறக் கலக்கமுடியும்: அது தான் உலக நிறைவு. அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் முதலியோர் அன்பு இறைவனைத் தலைவனாகக்கொண்டு இரண்டறக் கலந்த அன்பு: இவர்களின் காதல், இறைவன் பாலது. இறைவனைக் கள்வன், பொய்வலான் என்பது: திருமூலர் ''தின்பன், கடிப்பன், திருத்துவன் தானே'' என்கிறார் இறைவனாகிய தலைவனை.

இப்பெரியோர் போன்ற தலைவியர் இறைவனாகிய தலைவனை விழுங்க இறைவன் அத்தலைவியராகிய ஆன்மாக்களை அன்பு கனிய விழுங்க இரண்டறக் கலத்தல் நிகழ் கிறது: இது பேரின்பம்.

'' தோடுடைய செவியன் விடையேறியோர்
தூவெண்மதி சூடி
காடுடைய சுடலைப் பொடிபூசி என்
உள்ளங்கவர் கள்வன்''

என்றார் சம்பந்தர். ஆகையால் சம்பந்தர் வழியில் நிற்கவேண்டும் ஆன்மாக்கள் தலை வியர். இதுவே ஆன்மாக்கள் செய்யவேண் டிய வினைநிறைவு, அன்பு நிறைவு, உலக நிறைவு. ''யாருமில்லாத்தானே கள்வன் தானது பொய்ப்பின் யானெவன் செய் கோ'' என்ற யானும், கள்வரும் உள்ளங் கவர் கள்வனுதல் வேண்டும்: அதுவே பேரின்பம். மற்றையோரும் இவ்வாறுதல் வேண்டும்:

திருமதி. வாதலட்சுமி குலசேகரம்பிள்ளை,
விடுகைவருட மாணவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாதஸ்வர ஓசையிலே

ஆனந்தமான ஆடித்திங்கள் 5ஆம் நாள். கோவைக் கிராமத்தில் காலைப் பொழுது குதூகலமாக உதயமாகின்றது. பறவையினங்கள் பாடிப் பறக்கின்றன. பசுவினங்கள் பாலைச் சொரிகின்றன, மக்களனைவரும் மகிழ்வுடன் எழுந்து தம் நித்திய கருமங்களை நிறைவேற்றும் வேளை. அனைவரதும் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகின்றது காற்றினிலே மிதந்து வரும் நாதவெள்ளம். அனைவரும் ஆவலுடன் எட்டுத்திக்கிலும் தம் செவிப்புலனைத் திருப்புகின்றனர்! எத்திசையும் தேடுகின்றனர்! எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்த இந்நாட்டிலே, ஆயகலைபயிலும் அரிவையர் கழகமதிற் செந்தமிழ்த் தாயினுக்கெடுக்கும் ஐந்தாவது தமிழ்விழா, என அறிந்து ஆங்கு விரைகின்றனர்.

தமிழர் நரம்பெல்லாம் ஆயிரம் ஆண்டுகள் ஊறி ஊறி ஊன்றிவிட்ட உயிரோடு ஒன்றுகக் கலந்துவிட்ட தமிழுக்கு விழா வென்றுற் களிப்பிற்குக் கேட்க வேண்டுமா? கலாசாலையிற் காத்திருக்கின்றது கண் கொள்ளாக் காட்சி! சாலச்சிறந்த வாழை மரங்கள் கனிந்த பழக்குலைகளுடன் வருவோரை வணங்கி வரவேற்கின்றன. பச்சைக் கம்பளம் போன்ற பசிய இலைகளுடன் புத்தம் புதுமலர்கள் நிறைந்த சிகரம் வாயிலின்கண் வானுற நின்று வனிதையரின் கைவண்ணத்தைக் காட்டிக் களிப்பூட்டுகின்றது. சிகரத்தின் முன் மாக்கோலம் தோர்க்கோலமாகி அனைவரையும் ஆவலுடன் வரவேற்கின்றது. உவகையுடன் உள்ளே செல்லுகின்றனர். அன்னவரைக் கவர்ந்தன அழகுறு மங்கலப் பொருட்கள்: சந்தனப்பேழையும் மங்கலக்குடமும், மஞ்சள் குங்குமமும், பழம் பாக்கு வெற்றிலையும் பார்த்துக் கண்சிமிட்டுகின்றன. பாவையர் பலர் பரிவுடன் வரவேற்று அழைத்துச் செல்லுகின்றனர். நாகமுங் கேட்டு மயங்கும் நாதஸ்வர ஓசை அலையலையாக ஆட்கொள்ளுகின்றது.

என்ன விந்தை! கன்னித் தமிழுக்காய்க் கோலாகலம் கொண்ட கோலாலம்பூரோ, அன்றித் தேமதுரத் தமிழின் திறனுவுய் காணத் தேர்க்கோலம் பூண்ட தென்மதுரை நன்னாடோ, என ஐயுறும் வண்ணம் மலர்ச் சரங்களும் மின்விளக்குகளும், மகர தோரணங்களும் மாண்புற விளங்குகின்றன. நாற்புறமும் மிதிலைமாடத்து மதில்போல் விளங்கும் நங்கையர் குழாம், ஆங்கு அழகுற விளங்கும் அரிசிமாக்கோலம், அதன் மத்தியில் ஓங்கி வளர்ந்த ஒளிமிகு கம்பம், அதன் உச்சியில் உத்தமத்தாயின் முத்தமிழ்க் கொடி, மொட்டவிழத் துடிக்கும் முகைபோல் விளங்குகின்றது. தொடர்ந்து நாதஸ்வர ஓசை. ஏறுநடை போட்டு இளநகையுடன் வருகின்றூர் எமது வடமாநில வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலம் அவர்கள். அவர்களின் அண்மையில் பங்கயச் செல்விபோல் விளங்கும் மங்கையரை ஆளும் அன்புடைத்தலைவி. அவர்கள் அருகினில் சந்தனநங்கையெனச் சுந்தரப்பெயர் கொண்ட எங்கள் செந்தமிழ்ப் பேராசிரியை அவர்கள்: அவர்களைத் தொடர்ந்து பேரறிவாளராய் விளங்கும் பேராசிரியர் குழாம்: "அகரமுதல எழுத்தெல்லாம் .." என ஆண்டவனைத் தொழுகின்றனர் ஆரணங்குகள்: அன்புடன் மங்கலதீபத்தை ஏற்றி அகமகிழ்கின்றூர் எங்கல்வி அதிபதியவர்கள். தொடர்ந்து நாதஸ்வர ஓசை...:

கம்பத்தின்மீது, போதவிழ் மலர்கள் கொண்ட செந்தமிழ் மணம் வீசும் சிறப்புறு கொடியை, இன்முகம் மலர்ந்து நன்னகை புரிந்து ஏற்றி விண்ணகத்தில் வீசியாட விடுகின்றூர் கல்வி அதிபதி அவர்கள். மலர்மாரி பொழிகின்றது. அக்கணமே,


"தொன்று நிகழ்ந்த தனைத்துமுணர்ந்திடும்
சூழ்கலை வாணர்களும் — இவள்
என்று பிறந்தவ னென்றுணராத
இயல்பினளாம் எங்கள் தாய்

எனத் தலைவணங்கி வாழ்த்துப் பாடுகின்றனர் தண்டமிழ்ச் செல்வியர். அடுத்து மகர தோரணங்களும், மலர் மாலைகளும் மின்னும் மண்டபத்திற்கு மணிகோர்த்தது போன்று, அணியணியாக எம் மதிப்பு மிக்க வடமாநில வித்தியாதிபதியவர்களை அழைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வடமாநில வித்தியாதிபதி திரு. எஸ் தணிகாசலம்
அவர்கள் முத்தமிழ்க் கொடியை முகமலர்வுடன்
ஏற்றி வைக்கின்றூர்.



மாக்கோலத்தை வென்ற பூக்கோலம்
மண்டபமாமயிற் காட்சியளிக்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பதில்முதன்மைக் கல்வியதிபதி
திரு. டி. எய். றெட்டியாராச்சி அவர்கள்
ஆசிரிய மாணவிகளின் அணிவகுப்பை பார்வையிடுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரதம கல்வி வித்தியாதிபதி
திருமதி. R. S. பாமர் அவர்கள்
இல்ல நாடகப் போட்டியை இனிது ஆரம்பித்து
வைக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துச் செல்கின்றனர் ஆரணங்கினர். மண்டப வாயிலின்முன் மாக்கோலங்களே வென்ற மலர்க்கோலம் மணியொளிபோல் இலங்காநிற்கின்றது. எல்லவரும் உற்சாகத்துடன் உள்ளே செல்கின்றனர். அங்கே; கனிஷ்ட பல்கலைக் கழகத்தின் உதவி அதிபர் அவர்கள், கண்ணியமிக்க கலையரசு அவர்கள், பண்டிதர்கள், வித்துவான்கள், பண்டிதைகள், சொற்போர் புரியும் நற்றகையாளர்கள், இன்னும் சீரிய சான்றோர்கள் பலர் திரண்டு தமிழ்த் தென்றலும், இனிமையும் புதுமையுங் கலந்து திகழ்கின்றனர். அன்பர்களனைவரையும் ஆர்வமுடன் வரவேற்று அன்புமொழி பகர்கின்றார் எங்கழக அதிபர் அவர்கள். அதனை அடுத்து எந்தமிழ் விழாவின் தகவுடைத் தலைவராகிய திரு. எஸ். தணிகாசலம் அவர்கள், தமிழ்த்தாய் என்று தனித்துத் தன்னலம் பாராட்டாமல் ஈழத்திரு நாட்டில் உள்ள மக்கள் அனைவரும் அன்புச் சகோதரராய் அமைந்துவாழச் செய்வதே ஆசிரியப் பணியின் அரிய இலட்சியமாகக் கொள்ள வேண்டுமென ஆர்வமுடன் பகர்கின்றார். அனைவரும் கைதட்டி ஆரவாரஞ் செய்கின்றனர். தொடர்ந்து நாதஸ்வர ஓசை..

உரையரங்கு உற்சாகத்துடன் ஆரம்பிக்கின்றது. கனிஷ்ட பல்கலைக் கழகத்தினரின் கருத்துநிறை உப அதிபராய்விளங்கும் உத்தமப் பெரியார் திரு. கே. சிவபாலன் அவர்கள் சிறப்புடன் தலைமைதாங்க, பண்டிதர் திரு. ஏ. ரி. பொன்னுத்துரை அவர்கள், 'நாடக உலகில் நாம்' என்ற தலைப்பில், முன்னைய நாடகச் சிறப்புகளையும், தற்கால நாடக உயர்வுகளையும், சொற்சுவை, கவிச்சுவை, பொருட்சுவை, தோன்ற இனிய நடையில் எடுத்தியம்புகின்றார். நாடக்துறையில் நல்வளர்ச்சியை நாடும் நம்மதிபர், பேராசிரியர்கள் அகமகிழ நகைமுகங் காட்டுகின்றனர். அன்னரை அடுத்துப் பைந்தமிழ்ப் பண்டிதர் திரு. மு. ஆறுமுகம் அவர்கள் 'பாரதிக்குப் பின் கவிதை வளர்ச்சி' பற்றிப் பாரதியின் பல்சுவைப் பாடல்களுடன். பாரதிதாசன் முதலிய இன்னோரன்ன கவிஞர்களின் பாடல்களைப் பண்ணுடன் பாடியும், உரை நிகழ்த்தியும் எம்மைப் பரவசத்தில் ஆழ்த்துகின்றார். அடுத்துக் 'கல்கியவர்களின் இலக்கியத் தொண்டு' பற்றித் துடிப்புடன் வர்ணிக்கின்றார் தீந்தமிழ்ப் பெரியார் திரு. க. நா. சண்முகநாதபிள்ளை அவர்கள். பின்னர், உத்தமப் பெண்கள் சமைத்த ஒப்பில்லாச் சிற்றுண்டிகளை அனைவரும் அன்புடன் சுவைத்து அகமகிழ்கின்றனர். உரையரங்கு ஓய்வு பெறுகின்றது. தொடர்ந்து நாதஸ்வர ஓசை.....

கருத்தரங்கு களிப்புடன் ஆரம்பிக்கின்றது. ஆண்பாலார் கூடி அளவளாவிய அரங்கத்தில் அரிவையர் தோன்றி,

''மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல
மாதவம் செய்திட வேண்டுமம்மா''

என்ற பாடலை மெய்ப்பிக்க விளைகின்றனர். தலைவராகத் திருமதி. ஞானேஸ்வரி சோமசுந்தரம், பி. ஏ. அவர்கள் தண்ணளியுடன் நின்று தமிழ்த்தாயின் தெய்வத் தன்மை பற்றி உயர்வு நிறை உரை நிகழ்த்துகின்றார். அதுகேட்டு ஆர்ப்பரிக்கின்றனர் அவையினர். அரிவையர் அறுவர் சங்ககாலச், சோழர்காலப், பல்லவர்கால மகளிர்என், மாநிலம் போற்றும் மங்கை நல்லாரின் செயல்களை மாண்புடன் விளக்குகின்றனர்; மனோகரமாக மங்கையரின் கருத்தரங்கு நிறைவெய்துகின்றது. தொடர்ந்து நாதஸ்வர ஓசை .. உணவுச்சாலை ஒளி பெறுகின்றது. அறுசுவையுடன் நறுநெய்கலந்துண்டு அகமகிழ்கின்றனர் அன்னையின் அன்பர்களனைவரும். நேரம் பிற்பகல் 2-30. கலைமகள் களிபேருவகை கொள்ளக் கவியரங்கு ஆரம்பிக்கின்றது. ஐம்பெருங்காப்பியங்கள் போன்று அறிவுறு கவிஞர்கள் அரங்கிற் தோன்றுகின்றனர். கவியரங்கின் முதல்வர் வித்துவான் கா. கி. நடராஜன் அவர்கள் கொத்துக் கொத்தாகக் கொடுக்கின்றார் பாட்டுருவில். அவர்களைத்தொடர்ந்து இன்சுவைக் கவிஞர்களான திரு. இ. நாகராஜன் அவர்களும், திரு. செ. சுந்தரம்பிள்ளை அவர்களும், திரு. வே. குமாரசுவாமி அவர்களும், திரு. என் வீரமணி ஐயர் அவர்களும், எதுவாழ்வு? எது புகழ்? எது இறைமை? எது அன்பு? என்பன பற்றி இனிய இசையுடன் பாட, எல்லவருந் தம்மை மறந்தின்புறுகின்றனர்; காலங்கடந்து போகிறது, தொடர்ந்து நாதஸ்வர ஓசை.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"செவிக்குணவில்லாத போழ்து சிறிது வயிற்றுக்கு மீயப்படும்"

எனும் வள்ளுவனுர் வாக்கினுக்கிணங்கச் சகலரும் தேநீர் விருந்தருந்தித் திளைக்கின்றனர். தொடர்ந்து தாளவாத்தியங்களும் இன்னிசைகளும் முழங்க, ஒளிமிகு தாரகை போன்று கலைக்கதிர் வீசக் காட்சி தருகின்ருர் கலையரசு திரு. சொர்ணலிங்கம் அவர்கள். செந்தமிழ்த்தாயின் சிறப்பினைச் சீராக எடுத்துரைக்கின்ருர். பாவையர் பலர் பூபாள இராகத்தில் உதய கீதம் இசைக்க அவையோர் உள்ளமெல்லாம் உருகிப் பேரானந்தக் கடலில் மூழ்கி எழுகின்றனர்; நீலத்திரை நகர்கின்றது. வள்ளன்மை மிக்க கன்னன் தேரோட்டியின் மகனுக வளர்கின்ருன். துரியோதனுடைய ஆருயிர் நண்பனுகி, அங்கநாட்டிற்கும் அதிபதியாகின்ருன். அத்தனையும் இருந்தென்ன? அவனுடைய அருமை மனைவியின் அன்பு அவனுக்குக் கிடைக்கவில்லை. அவள் கடைக்குலத்தவள் என்று கர்ணனை எள்ளி நகையாடுகின்ருள். மணப்பந்தலிற்றீயை வலம் வருவதற்கு கர்ணன் பற்றிய இந்தக் கையினுல் உணவும் அருந்தமாட்டேன், எனக் குலத்திமிர் பிடித்துக் கொடுமொழி கூறுகின்ருள். அதுகேட்ட கர்ணன் அளவிலாத் துன்பத்தினுல், "நல்லது காஞ்சனு. உன் உள்ளம் அனல்பட்டமெழுகாக உருகி என்காலடியில் பாயும்நாள் வந்தேதீரும். இன்று நான் உன் அன்பிற்குக் கையேந்தி நிற்கிறேன். அன்று நீ என் மன்னிப்பிற்குக் கையேந்தி வருவாய். என்னிடம் தானம் கேட்டு வருபவர்களைப்போல உள்ளம் குழைந்து உடல் குன்றிக் குறுகி வருவாய்; இத்தக்கர்ணன் வாயிலிருந்து இல்லையென்ற சொல்லே வராது" என, எதிரொலி செய்து போர்க்களம் செல்லுகிருன். பாண்டவருக்கும் நூற்றுவருக்கும் போர் தொடங்குகின்றது. பலநாட் போரின்பின், கர்ணன் அர்ச்சுனனின் அம்புபட்டுச் சாகிருன். அவ்வேளை நடந்ததென்ன? கர்ணன் பஞ்சவரின் அண்ணன், குந்தியின் மைந்தன் என்று அறிந்த காஞ்சனு பதறித் துடித்துப் போர்க்களம் விரைகின்ருள். தன்பதியாகிய தெய்வத்தின் தாட்பணிந்து மன்னிப்பு வேண்டுகிருன்.

இவ்வாருக வள்ளல் கர்ணன் தேரோட்டியின் மகனுக வேடம்புனைந்து நின்றனள் ஒருநங்கை. ஊர்வசி, மேனகை, ரம்பையான பல கன்னியரைப் போன்று பாவையர் இருவர் பசுங்கரம் வீசிப் பரதம் ஆடுகின்றனர்; துடுக்குத் தனமிக்க துரியோதனனுக ஒரு துடியிடையாள், கல்மனம் கொண்ட காஞ்சனுவாக ஒரு கயல்விழியாள்; பாண்டவரின் தூதுவனுக நூற்றுவரிடம் நாடுவேண்டிப் போகின்ருன் மாயவன், அம்மம்ம. மாயவனுகவே மாறிவிட்டாள், மகிழ்ச்சிநிறை மங்கை நல்லாள்; அர்ச்சுனனுகத்தோன்றி ஆர்ப்பரிக்கின்ருள் அடுத்தொரு நங்கை. சூழ்ச்சிக்கென்றே உருவெடுத்த சகுனியின் தோற்றத்தில் ஒருத்தி; துகிலுரியத் துடித்த துச்சாதனனுக இன்னெருத்தி, சாந்தமே அணியாகக் கொண்ட சகா தேவனுக மற்றெருநங்கை; மைந்தனை இழந்து மறுகும் குந்திதேவியாக இன்னெரு நங்கை. இவ்வாறு பஞ்சவராகவும் கௌரவராகவும் பலர். இவ் வண்ணம் கண்டோர் களிப்பப் பார்த்தோர் பரிமளிக்க அருமருந்தன்ன நாடகம் புரிந்து அனைவரையும் ஆனந்தக் கடலில் ஆழ்த்துகின்றனர். தொடர்ந்து தமிழ்த்தாய் வாழ்த்துடன் தமிழ்விழா நிறைவெய்துகிறது; நாதஸ்வர ஓசையும் முடிவெய்துகின்றது.

வளர்க நற்றமிழ் மொழி!
வாழ்க நற்றமிழர்!!
வழ்க நற்கலைகள்!
வழி வழி சிறந்தே!!

திருமதி. இராசேஸ்வரி மயில்வாகனம்.
விடுகைவருட மாணவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உத்தமன் கர்ணனின் உயர்நிலை அறிந்து உள்ளம் மகிழ்ந்த காஞ்சனை மார்பில் வேல்பாய்ந்து மரணத்தறுவாயிலிருக்கும் கர்ணனைக் கண்டு கலங்குகிறாள்.



பாண்டவருக்காகத் தூது சென்ற பரந்தாமனுக்கு படுகுழி அமைத்து பரிகசிக்கின்றனர் துரியோதனாதியோர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் விழாவில் கவியரங்கம்

தலைவர் வரவேற்பும், நிறைவுரையும்

வித்துவான் : திரு. கா. கி. நடராஜன் அவர்கள்.

எது இறைமை?

பண்டிதர் : திரு. சி. குமாரசுவாமி அவர்கள்.

எது வாழ்வு?

கவிஞர் : திரு. இ. நாகராஜன் அவர்கள்.

எது அன்பு?

கவிஞர் : திரு. என். வீரமணி ஐயர் அவர்கள்.

எது புகழ்?

கவிஞர் : திரு. காரை செ. சுந்தரம்பிள்ளை அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவியரங்கு

கோப்பாய் அரசினர் மகளிர் ஆசிரியர் கழகத்தில் இவ்வாண்டு ஆடித்திங்கள் 20 ஆம் நாள் நிகழ்ந்த ஐந்தாவது தமிழ்விழாவின்போது, வித்துவான் கா. கி. நடராஜன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கவியரங்கில் கவிஞர்கள் உதிர்த்த கவினுறு கவிதைகள்.

வெண்பா

1. செந்தமிழும் வாழ்க திசைமுகனும் ஈடாகாப்
பைந்தமிழின் பாவலரும் பார்மீது—சந்ததமும்
வாழ்க ஒளியுடனே மங்கையர்தம் நல்லறிவு
வாழ்கதமிழ் நற்கலையின் மாண்பு.

2. அன்பார் மகளிரின் ஆசிரிய நற்கழகம்
இன்போ டெடுக்கும் இனியவிழா—நன்றேங்கக்
கண்ணுதலோன் காக்க கவியரங்கும் வெல்கவவன்
தண்ணருள்போ லின்பம் தழைத்து.

3. பண்டிதைகள் பல்லார் துறைபோய பண்பாளர்
நுண்மா ணுழைபுலமை தானுகரும்—ஒண்ணுதலார்
சொல்லுங் கவிவாணர் தொக்குறையும் இவ்வனைவசேர்
எல்லவர்க்கும் என்வணக்கம் ஈண்டு.

ஆசிரியப்பா

அமிழ்தென ஒன்றை அமரர் விரும்பினர்
தமிழென ஒன்றைத் தமிழன் விரும்பினன்
அமரரும் இறப்பர் தமிழரோ இறவார்
தமதுடல் துறப்பினுந் தம்புகழ் நிறுவுவர்
உயிரினும் பெரிதா ஓம்புவர் தமிழைத்
தமிழுக்கு நிகராச் சாற்றவும் உளதோ?
உயிரே அஃதவன் உயிர்ப்பே யஃது
தமிழை வளர்த்தனர் தமிழணங் கினர்பலர்
தமிழை வளர்த்தனர் தகைசால் புலவர்கள்
தமிழை வளர்த்தனர் தம்முயிர் வளர்த்தனர்
தமிழை வளர்த்தனர் தமிழ்ச்சுவை யறிந்தவர்
கறிச்சுவை யறிவர் காரிகை யாரென
மறித்துப் பேச வழியில் லாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ச்சுவை கலைச்சுவை தனிச்சுவை யறிந்தோர்
மகளிரென் றுரைக்க மண்ணவர் துணியத்
தமிழ்விழா எடுத்தனர் தகைசால் மகளிரே
மகளிர்கல் லூரி வளர்க்கும் அதிபரும்
மகளிர்கல் லூரி ஆசிரிய மணிகளும்
மகளிர்கல் லூரி மாணவர் பலரும்
மகிழ்ந்தினி தெடுத்த மாண்புசால் தமிழ்விழா
வாழுக வாழுக வாழுக பெரிதே
மகளென வேயுயர் தமிழையும் வழுத்துவோம்
மகளே தாயாய் மாண்புடன் காப்பவள்
குறையா வாழ்வு குறிப்பவள் அவளே
நிறைதரும் புகழும் நேர்பவள் அவளே
இறைமை எதுவென இயம்புவள் அவளே
அறையும் அன்பும் அவட்கே யுரியது
எதனால்?
தமிழென் பதுவே இனிமை யன்பு
என்றுகூ றிற்று நன்கனம் நிகண்டு
ஒன்றுந் தகவெலாம் உதவுவள் அவளே
காலிற் சிலம்பு கலீரென அரைபின்
மேவின் மணிமே கலையும் விளங்கச்
சிந்தா மணியுஞ் சிரமிசை ஒளிர
நந்தாச் சிறப்பின் நம்மூயர் வள்ளுவன்
தந்தநற் குறள்மணி தழைக்குந் திருநுதல்
சங்கத் தமிழெனும் மங்காச் சிறப்பின்
வித்தக அணிகளும் வியத்தகு சேக்கிழார்
பத்திப் பெருக்கும் பகர்கம்ப நாடரின்
சித்திரக் கவியும் திருத்தகு மூவர்செய்
தமிழெனும் மார்பகத் தனிமணி யாரமும்
நாவுக் கினிய கோவையும் நலங்கனி
திருவா சகமெனும் ஒருவா சகமும்
மருவார் மலரினும் வாடா மலராம்
பாப்பயில் காப்பணி பழுத்தபே ரழகும்
கொண்டெஞ் சிந்தையைக் கொண்டவள் தமிழே
மண்டனில் விண்டனில் மற்றெவருளரே?
அதா அன்று
எதுதான் வாழ்வென இசைக்குமெம் மொழியினும்
இதுதான் வாழ்வென எடுத்துக் காட்டிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதுருடன் மொழிபவள் தமிழ்மொழி நங்கையே
தோன்றிற் புகழொடு தோன்றுக வென்று
வள்ளுவன் புகழின் மாண்பினை வழுத்தினன்
உள்ளுதற் குண்டுகொல் அதனினும் உயர்ந்ததா?
இறைமை யிதுவெனக் கறையில் பொருட்பால்
முறைமையின் மொழிந்தனன் அன்னவன் மீளவும்
இன்னும் அன்பே இதுவென எடுத்துச்
சொன்னவள் தமிழ்ப்பே ரணங்கே துணிவுடன்
காட்டுதல் வல்லவள் கன்னித்தண் டமிழே
ஈட்டுமோர் புகழில் இணையார் அவட்கு?
இத்தகைப் பெருமைசால் முத்தமிழ் அன்னையின்
வித்தகச் சித்திர விரைப்பூ வடிபணிந்து
அறிவுடைப் பாவலர் அணிபுகழ் தானெது?
இறைமை எது? வாழ் வெதுநல் லன்பெது?
என்பன தெரிக்கும் இன்கவி பாடுவர்
அன்புடன் வரவேற் றவர்கவி கேட்குதும்
முதற்கண்,
வாழ்வெது வென்னும் வளமார் பொருளைத்
தாழ்வின்றிச் சொல்லும் தகைசால் நாக
ராசன் மொழிவன் இன்னிதிற் கவியே
உலகத் தமிழ்மா நாட்டின் உயரிய
கலபா ராட்டைப் பெற்றவன் நம்யாழ்
இலக்கிய வட்டத் துறுப்பினன் சிலம்பு
சிரித்தது நிறைநிலாச் சிறுவர் பாடங்கள்
ஆதிய வியற்றிய வவன்கவி கேட்பாம்.

விருத்தம்

கவையறு கவிஞன் நாக ராசனும் நவின்ற பாடல்
சுவையுடன் கேட்டுவந்தோம், சொற்சுவை யின்ப மோங்க
கவைமிகும் புகழீதென்று கழறுவன் காரை வந்த
சவைமகிழ் சுந்த ரப்பேர்த் தகைமைசால் கவஞ னின்றே.

வெண்பா

இங்கிதத் தேனு றிழிந்தோடத் தந்தவன்
சங்கிலியாம் மன்னன் சரிதையினை—மங்காமற்
பாடிப் பரிசுபெற்றோன் பண்பார் குணமுடையோன்
பாடலிதோ கேண்மின் பயன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருத்தம்

புத்துரு வதனிற் பற்பல பாக்களை யாப்போனை
சுத்தனுங் காரை வாழுஞ் சுந்தரம் பிள்ளை சொற்றூன்
சித்திர மாகச் செய்யுட் செய்யுநற் திறமை வாய்ந்த
வித்தகன் குமார சாமிப் பண்டிதன் வியன்பா கேட்போம்.

கலித்துறை

தொண்டர் இறைமையைத் தூயநற் பண்டிதன் சொன்னகவி
மண்டுஞ் சிறப்பினிற் கேட்டு மகிழ்ந்தனம்; மற்றினிமேல்
கண்ட.பே ரன்பதைக் காட்டுங் கவிஞன் கழறுவனே
விண்ட நடன கலாமணி வீர மணிஐயரே.

ஆசிரியப்பா

வீரமணி ஐயரின் ஆர்வப் பாடலில்
வருமுறை அன்பின் வளஞ்செவி மடுத்தோம்;

நிறைவுரை

இன்று
கவியரங் கேறிய கவிஞர் நால்வரும்
தத்தமக் கியைந்த தகைமையில் இனிமைசேர்
சால்புடன் கவிகள் சாற்றினர் கேட்டோம்;
அவர்க்கெலாம் என்றன் ஆசி கலந்த
அன்பும், நன்றியும், இன்புந் தெரிக்கிறேன்
இன்பக் கவியரங் கெடுத்த மகளிர்
கழகந் தழைக்க கலைமிக வோங்க
மழைமுகில் தருந்துளி பலவினும் மாண்புற்று
வாழிய! வாழிய!! வாழிய!!! பெரிதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எது இறைமை ?

காப்பு

சொல்லும் பொருளுமென் உயிர்தோறும் துலங்கி நின்று
அல்லும் பகலும் எமையளித் தாளும் அரன் குமரன்
தொல்லை வினைக ளகற்றி யெம்பாசத் தொடக்கறுக்கும்
செல்வன் கழலினை சிந்தைவைப்பாமிடர் சிந்திடவே

1. கற்பனைக் குதிரை தன்னின் கடிவாளம் கையிற் பற்றிச்
சொற்கடல் நடுவே கொண்டு செலுத்தினேன் பயனுமில்லை
பற்பல எண்ணி நெஞ்சு பதைத்தது இறைமை என்றால்
எற்கது புரியவில்லை எழுதுவ தென்ன வென்றே

2. அற்புதன் இறைவனிந்த அண்டங்கள் கடந்து நிற்கும்
தற்பரன் அணுவினுள்ளும் தான் சத கூறதாகி
நிற்பவன் என்பதொன்றை நினைப்பதுஞ் சிரமமாமால்
சொற்படு மளவிற்றேயோ இறையியல் செப்புதற்கே

3. குற்றம் நீ குணங்களும் நீ கூறிடில் என்று பக்தர்
சொற்ற தேவாரங்கண்டோம் சொல்வதெக் குணத்தைவிண்டு
பெற்றவள் உள்ளப்பித்துப் பூண்டதோர் பரிவா லெம்மை
நற்றவன் காத்தளித்தல் நாமறியாமை விந்தை

4. நன்மையும் தீமைதானும் நாடிடில் நியதியாக
எம்மையாள் இறைவன் நல்குமென்பது தெளிவதாகும்
புன்மைகள் நீக்கி எம்மைப் புனிதராய் மாற்றவேண்டித்
தின்மையும் அளிப்பதந்தச் சித்தனின் விளையாட்டாகும்

5. தேர்ந்திடில் நிகழ்வதெல்லாம் தெய்வத்தின் செயலேயென்று
காய்ந்திட மாட்டான் தன்மேற் கடும்பகை கொண்டு நின்று
பாய்ந்திடு பகைவன் செய்கை பரமனின் விளையாட்டென்பான்
ஆய்ந்திடிற் பகைமை, கோபம்அணுவள வணுகா தோடும்

வேறு

6. அவனின்றியோ ரணுவுமசை யாதென்பது இறைமை
அவனேயுயிர் அவனேயுடல் அவனேயுல கதனுள்
எவனிங்கிது வெலாமாயுள னவனேயிறை யாகும்
ஏத்தும் நெறி யனைத்துமவற் கேற்றநெறி யாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. எரிசூரியன் குளிர்மாமழை எழில்சேர்மதி முதலாய்
விரிபாரினில் எழில்வாழ்வுறு விதமானவை பலவும்
சுழலாயொரு நிலையாய்வரத் துணையாகுவ னிறைவன்
அழகாயவன் குணம்யாவையு மவைகாட்டிடு விறைமை.

8. உணர்விலொரு உணர்வாயொரு உண்மைப்பொருள் உணர்த்தும்
மனதிலொரு மதியாய்ப்பெரு மார்க்கமெனக் கருளும்
கனவிலொரு நினைவாயுயர் காட்சிதனை யுதவும்
உனதுசெய லிவையாலெனக் குணர்த்துமுன திறைமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எது வாழ்வு ?

தோரணம் காற்றிலாடத்
தூமலர்க் கந்தம் வீச
பூரண கும்பத்தோடு
பொற்சுடர் விளக்கம் காட்டச்
சீரணியாகச் சேர்ந்து
செந்தமிழ் விழாவெடுக்கும்
பேரமை மகளிர்க்கெல்லாம்
பேரருள் வாணி சுவாழ்.

விநாயகர்

பாரோர் பயன்கொள்ளப் பண்டொருநாள் பாரதத்தைச்
சீரார் வியாசமுனி செப்பிடவே — கூரார்ந்த
கொம்பை முறித்திமையக் கோட்டிலெ ழுதிவைத்த
தும்பிமுகா செய்வாய் துணை.

வாணி

உம்பர் ஓங்க உயர் தவத்தோர்
உள்ளம் உவக்க உலகுதித்த
நம்பி ராமன் நற்றிறனை
நயந்து கவியாம் நமக்கீந்த
கம்பன் என்னும் மாகவிக்குக்
கருணை செய்த வாணியுனை
நம்பி அரங்கில் நான் வந்தேன்
நாவில் நண்ணி நலந்தருவாய்.

அவை

ஆடுகின்ற நடராஜன் நாமத் தோடு
அரங்கினிலே இலங்குகின்ற தலைவ! இங்கே
பாடுகின்ற பணிகொண்ட புலவீர்! காதால்
பாடல் தரும் சுவையினையே கொள்வதற்குக்
கூடிவந்த மாசபையீர் வணக்கம் நானும்
கொடுக்கின்ற பாடல்களின் குணத்தை நீவிர்
நாடியுளம் கொண்டுகுறை தள்ளி அன்பால்
நல்லாசி நல்குமென வேண்டு கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்

சந்தையின் இரைச்சல் சாலைச்
சந்தியில் ஒன்றை ஒன்று
முந்தியே விரையும் வண்டி
மூசிய ஒலியென் காதில்
வந்திடும் மனித ரெல்லாம்
வயிற்றினைக் கழுவுதற்கு
நொந்திடும் உள்ளத்தோ டெங்கும்
நுழைவதைக் கண்கள் நோக்கும்

* *

ஆதியில் அறிவும் அன்பும்
அகத்திலே ஆளுநர் செய்த
வீதியில் விழுது கொண்டு
விளங்குமால், அரசு மாக்கள்
சீதளம் கொடுத்த துண்டு
சிறுவனாய் இருந்த போது
காதலாய் அவற்றின் கீழ் நான்
களித்துமே ஆடி வந்தேன்.

* *

இன்றவை இல்லை அங்கே
இருந்த எச் சுவடுமில்லை
நின்றன நிமிர்ந்த வீடு
நெடும் பெரும் ஆலை, ஓங்கின்
குன்றென உள்ள மாடி
கோபுரம் பலவே ஆனால்;
நன்றமை உளத்தோர் தாழ
நஞ்சுளோர் வாழுகின்றார்.

* *

மெய்யது செத்த தாக
மேலவர் அற்றுப் போக
பொய்யது பொங்கி ஆட்சி
புரிந்தது நல்ல உள்ளம்
உய்ய எவ் வழியுமில்லை
ஒதுங்கினின் ஓட என்றன்
கையினைப் பிடித்தா ளோடு
காதலார் மக்கள் உள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றினை அறுத்துப் போகும்
பக்குவம் பெற்றே னல்லன்
உற்றவர் சுற்றம் மக்கள்
உடையவன் இங்கே வாழ
கற்றவிஞ் ஞானக் கல்வி
காசினைத் தந்த தானுல்
வற்றிய மனத்தில் ஈர
வளம் பிறக்காதாம் ஏனே?

* *

நூறு நூருக மக்கள்
நோக்கிய திசையி லுள்ளார்
ஆறுத லாகப் பேச
அவர்க்கவ காச மேது
தேறுதல் சொல்லி உண்மைத்
தெளிவினை ஊட்டி உள்ளம்
மாறுதல் பெறுவ தற்கே
வழியினை ஆய லானேன்.

* *

சந்திர உலகைத் தோண்டி
தரணியில் மண்ணைக் கொட்ட
எந்திரம் செய்தே இன்னுள்
ஏகினர், எனதுள் ளத்தை
உந்திடும் உளைச்சல் நீக்கி
உண்மையை உணர்த்தி ஊட்டம்
தந்திடும் சக்தி மண்ணில்
தாழ்ந்ததோ? அறியேன் நானே,

* *

அப்பர்முன் அமைதிக் காக
அடிக்கடி படிக்கும் ஏட்டை
வைப்பரோர் பெட்டிக் குள்ளே
வருத்தமாய்ப் படுத்துப் பின்னர்
இப்புவி ஒருவி வானம்
எய்தினர் அந்தப் பெட்டி
எப்புறம் உள்ள தென்றே
எண்ணுவோர் வீட்டிலில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெட்டியை ஒருநாட் தேடிப்
பெட்புற அப்பர் முன்னள்
கட்டியே வைத்த ஏட்டை
கண்டுநான் பிரித்தேன் ஏடு
குட்டியே சொன்ன வற்றைக்
கூறுவேன் உண்மை வாழ்வு
இட்டுமாம் நீவிர் எல்லாம்
கேட்குக பொறுமை யாக.

கண்டையாப் பாலித் தேனை கனியுறு சாற்றைப்பாகை
கொண்டதாய்க் குவலயத்தில் கோதிலார் கூடி ஆய்ந்த
பண்டுள தமிழில் பாங்காய்ப் பக்குவம் பெற்றென் முன்னோர்
மண்டலம் தனிலே வாழ்ந்த வண்மையை அதிலே கண்டேன்.

வேறு

பாதி உமையாக பால்போன்ற நீரோடு
பாதி மதிகங்கை பாம்பு எனுமிவற்றை
கற்றைக் குழல்சூடிக் கழல்கள் இசை பாட
குற்றம் குலவாத குணமாய் எழிலாக
ஆடி அரன்வருவான் அவனை உயர்அன்பால்
நாடி வணங்கி நின்றூர் நல்லவர்கள் யாவருமே.
நாட்டில் நடுநீதி நாசமது கொள்ளாது
கேட்டை அழித்தொதுக்கிக் கீர்த்தி யுடன்முன்னல்
மன்னர் பலரிருந்தார் மக்கள் வளங்காண.
என்னளவும் நற்பண்பே ஏற்ற முடையதென
உன்னியுயர் உண்மையுடன் ஊக்கிச் செயலாக்கி
முன்னோர் விதிமுறைக்கு முட்டின்றி வாழ்ந்திருந்தார்.
மன்னன் உயிராக மன்னன் சரியென்று
சொன்ன குணம்பற்றிச் சோம்பல் உணர்வின்றி
ஆக்கம் பலகண்டார் அதனல் அவர்களுளம்
ஊக்க ஒழுக்கத்தால் ஓங்கிச் சிறந்ததுவாம்.
காட்டையன்று ஆண்டமன்னன் நன்மைதரும்நீதி
முட்டை உடைக்கவில்லை புன்மைச் செயல்களையே
காட்டிக் கவருடிக் காலத்தைக் கொல்லவில்லை
கேட்டை ஒழித்ததனல் கீர்த்திக் கதிரானன்.
கோசலத்தை ஆண்டமன்னன் குணமேநற் கொள்கையென்று
நேசித்துப் பூசித்தான் நினைவில் உயர்ந்தவற்றை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தான் வளத்துடனே மக்கள் மனமுவக்க
சத்தியத்தைக் காத்ததனால் தர்மம் தழைத்ததங்கே
மன்னன் முதல்மைந்தன் மாவீரன் இராமனன்று.
தன்னே ரிலதான தானைத் தலைவன்
சின்ன வயதினிலே செம்மை அறத்தோடு
சீரார் கலைகளிலே தேர்ச்சி பெறுகின்ற
ஆர்வம் அகத்துந்த ஆன்ற தம்பி மார்களுடன்
நாட்டின் நடுவிலுள்ள நகரந் தனைவிடுத்து
காட்டில் வசிட்டமுனி கவினுகக் கட்டிவைத்த
சின்னக் குடிசையிலே சின்னவரின் கூட்டமுடன்
பன்னள் பணிந்திருந்து பயின்றான் பலகலைகள்
முன்னள் அரசர்களோ முனிவரர்கள் அன்போடு
சொன்ன விதிகொண்டு தொண்டாற்ற முன்வருவார்
காட்டில் வதிமுனியைக் கண்டே அழைத்துவந்து
நாட்டிற் கலைக்கூடம் நலமே பெறஆக்கி
மைந்தர்களைக் கற்பிக்க மனங்கொள்ளல் ஆகாதா ?
சிந்தை அறத்தோடு சீலம்உயர் பண்பாடு
உள்ளம் தனிலுறைய ஊக்க உணர்வுந்த
பள்ளம் உயர்மேடு பார்க்காது கற்றறியத்
தூர இடத்திலுள்ள தூய குருவினையே
சேரல் கடமையெனத் தெளிந்தே செயல்செய்தார்
உச்சி மலைமுகடு ஊரில் உயர்ந்துநிற்கும்
பக்கைப் பசியவயல் பாரின் பசிதீர்க்கும்
காக்களிலே பூத்துள்ள கவினுர் மலர்மதுவை
பாக்கள் படித்தளிகள் பருகப் பறந்துவரும்
திக்கெல்லாம் தென்றல்மணம் தெளிக்கும் குளங்களிலே
கொக்கோ உறுமீனைக் கொத்தும் குறியுடனே
காத்தே இருக்குமிசை காட்டி இறைவனையே
ஏத்தி வழியெங்கும் ஏகும் பெருநதியோ
வாடும் நிலத்துக்கு வண்மை மிகவூட்டும்
கோடும் மரக்கொம்பில் குயிலிசைக்கும் கோகிலங்கள்
ஆடும் அழகெல்லாம் அமைந்த திருநாட்டில்
உண்மை உயர்வினையே ஊட்டும் தகவுடனே
ஒண்மை உடனெளிரும் ஒருகோவில் உத்தமர்கள்
தேவாரம் பாடிநிற்பர் சீலந் திருந்துணர்ச்சி
பாவம் படராத பண்புப் பயன்யாவும்
கூடி மிளிருமங்கே கோனும் மனுமுன்னள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடி உலகீந்த நடுநீதி தப்பாது
ஆதிக் குறள்படித்து அன்புக்குரிய உயர்
சாதித் தமிழரெல்லாம் சான்றோ ரெனவாகி
வாட்டம் மருவாது வாழ்கின்ற தன்மையினை
ஏட்டால் உணர்ந்துளதில் இன்பமது பொங்கநின்றேன்
கண்ணை இடந்துபரன் கண்ணைக்க எண்ணியநல்
திண்ணன் பெருமைகளை சிறந்தசிவ சீலத்தை
பண்ணிற் குழைத்தீந்த பக்திமையில் மூற்றியவர்
எண்ணச் சிறப்போங்கி இலங்கும் நிலைகண்டேன்
மூல்லைக் கொடிகாற்று மூசியங்கே வீசியதால்
அல்லற் படுவதனைக் கண்டே அகத்தன்பால்
தேரை உவந்தீந்த சீரமைந்த பாரியுடன்
காரதனைக் கண்டுமயில் கால்தூக்கி ஆடுவதை
கண்டு துகிலீந்த கனிந்த உளப்பேகன்
மண்டலத்தின் மக்களுய்ய வண்ணத் தமிழ்ப்பாக்கள்
பாடும் புலவனுற்ற பட்டினியைப் போக்கிடவே
நாடித் தலைகொடுத்த நற்குமணன் அங்கிருந்தான்
கற்புக் கனலான கண்ணகியை நாட்டியமாம்
பொற்புக் கலைதெரிந்த பூவைதிரு மாதவியை
சிற்பத் திறன்மிகுந்த சிற்பியரைக் கண்டேன்நான்
கற்புடைய பெண்வீட்டுக் கதவைக்கை யாற்தட்டி
குற்றம் புரிந்துவிட்டேன் என்றே மனங்குழம்பி
தன்கையை வெட்டியுயர் தருமம் தழைப்பதற்காய்
பொன்கையைக் கொண்டுயர்ந்த பொற்கைப் பாண்டியனோடு
மூக்கண்ணன் நெற்றிவிழி மூண்டளரி தாக்கிடவும்
பக்கத்தே நின்றுகுற்றம் குற்றமெனப் பகர்ந்த
நக்கீர னோரோடு நல்ல குணங்கொண்ட
தக்க தமிழர்களை சால்புமிகு மவ்வேட்டில்
கண்டேன் களிப்புற்றேன் காலக்கடல் நடுவில்
பண்டைத் தமிழ்வாழ்வின் பக்குவத்தை உற்றுணர்ந்தேன்
பஞ்சம் பிடித்துந்தப் பட்டினியாய் இன்றைக்கு
அஞ்சி அயலவரை அண்டிப் புகழ்பாடிக்
கெஞ்சிப் பதவிக்காய்க் கீழ்மை நிலையுற்றும்
தஞ்சம் எனஅவரின் தாளின்கீழ் நின்றுடலால்
வாழும் கொடுமையது மாண்டொழிய நற்சீர்கள்
ஆளும் உயர்நாட்டை அடைவோம் எனத்தொடர்ந்து
வாருங்கள் எல்லோரும் வழிகாட்டி முன்செல்வேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேருங்கள் எம்மினத்தார் செம்மைமிகு வாழ்வதனை
துன்பக் கெடுபிடிகள் தோன்றுத மெய்ம்மையுள்ள
இன்பந் தனைத்துய்த்து ஏற்றமுற வாழ்திடலாம்
வாழ்வென்றுல் மானமதாம் என்றுயர்ந்த வண்டமிழர்
வாழ்வை நமக்காக்கி வையத்தில் நின்றுய்வோம்

பாடப் பாடக் கருத்துகளோ
பல்கிப் பெருகும் மணியிங்கே
ஓடும் உங்கள் பொறுமையெனும்
உணர்ச்சி மீறும் ஆகையினால்
ஊறும் உணர்ச்சி உளமுந்த
உதித்த கவிதைக் கரும்பீந்த
சாறைக் கொள்வீர் சக்கையினை
தள்ளித் தயவு செய்தருள்வீர்.

இந்தக் கவிதை அரங்கினிலே
என்னை அழைத்து அரங்கேற்றி
சந்தக் கவிதை சாற்றவைத்த
சபையீர் வணக்கம் சந்ததமும்
முந்தைத் தமிழர் எமக்கீந்த
முருகார் நெறிகள் வாழ்வொன்ற
சிந்தை வதியும் வாணியருள்
செய்வாள் நீவீர் வாழியவே !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எது அன்பு?

செந்தமிழ்த் தாயைப் போற்றிச்
செந்திரு வாழும் கோவைப்
பைந்தமிழ் மகளிர் கூடிப்
பாங்குடன் விழா எடுப்ப
அந்தநற் கவி யரங்கில்
அன்பெது எனுங் கவிதை
சுந்தரத் தமிழில் யாத்துச்
செப்புவேன் பிழை பொறுப்பீர்.

செந்தமிழ்க் கவி யரங்கில்
செறிந்திடும் தலைவ கேண்மின்!
பைந்தமிழ் பாடி வாழ்த்தும்
பாவலர் குழாமே கேண்மின்!
அந்தமில் அன்பாற் தந்த
அழகுறு அவையே கேண்மின்!
இந்தநற் கவி யரங்கில்
வந்தனன் வணக்கம் செய்தேன்.

இன்பமே சூழுகின்ற இந்நிலை தன்னில்என்னை
அன்புடன் பொறுத்தருள்க அன்பன் என்கவிமலரில்
சிந்திய தேன்துளிகள் சிதறுமே அதுகசந்தால்
புந்தியில் வைத்துநீவிர் பொறுத்திட வேண்டுகின்றேன்

வாழ்வெது என்று கேட்டீர்
வந்திடு புகழ் கேட்டீரே!
தாளிறை பதத்தின் தன்மை
தண்டமிழ்க் கவி சுவைத்தீர்.
நானினி என்னுரைப் பேன்?
நற்றமிழ்க் கவிதை பாடி
ஆழியாம் எது அன்பென்றே
அழகுறு கவி மலர்வேன்.

வாழ்வதனில் வளம் நல்கும்
வளமார் அன்பு
சூழ்உலகில் புகழ் நல்கிச்
சொரியும் அன்பு
ஏழ்மையினும் செல்வ மிகும்
இறைமை அன்பு
ஆழியினும் ஆழ மிகும்
அகங்காண் அன்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புதான் சிவன் என்பர்
அந்த அன்பே
இன்புற வாழ் இவ்வுலகில்
இனிய சீவன்
தன்புகழை இறைமையுடன்
வாழ வைத்து
மன் புகழை நாட்டியது
அன்பு ஒன்றே.

அன்புதான் காதலாகும் அதனினும் மிகஉயர்ந்த
அன்புதான் பாசமாகும் அந்நிலை உயர்வடைந்த
அன்புதான் நட்பதாகும் அன்நெறி மிகுந்துவிட்டால்
இன்புறு இறைமையோடு இணைந்திடு பக்தியாகும்.

காதலாய் மலர்ந்தஅன்பு கவின்நிறை பாசமாகி
பூதலந் தன்னில்நட்டாய்ப் பொலிந்திட உலகைஆண்டு
நாதனும் இறைவனேடு நல்லடி இணையப்பூத்த
சாதனை பக்திமார்க்கம் சார்ந்திடும் பேரன்பாகும்.

சின்னவோர் குருவி யாங்கு
சேர்ந்திடும் பெடையினேடு
வன்ன மால்ச் சிறகடித்து
வானிலே திரியும்காதல்
அன்னவப் பெடையும் ஆணும்
ஆங்கொரு மரத்திற்கூடு
பின்னியே முட்டை யிட்டுப்
பெடையொடு அடையுங் காக்கும்

முட்டையும் பொரித்துக் குஞ்சு
முனகியே ஆர்ப்பரிக்கப்
பட்டிடும் துயர் மறந்து
பட்சிகள் மகிழ்வுமெய்தும்
பட்சமாய்க் குஞ்சு வாயிற்
பற்றியே இரைகொணர்ந்து
இட்டமாய் ஊட்டி அன்பில்
இனித்திடக் குருவிவாழும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலாய்க் கண்டஅன்பு கவின்நிறை பாசமாகி
தீதறு குருவிக்குஞ்சைத் தீண்டியே மெய்சிலிர்க்கும்
வேதனை குஞ்சுகொண்டால் விம்மியே குருவிவாடும்
சாதனையன்றே அன்பின் சக்திக்கும் ஈடேதுண்டோ?

தாய்மையின் தூயஅன்பு தரணியில் அறியார்எது?
தூய்மையில் துலங்கும்அன்பு தூண்டிடும் தூபமன்றே
வாய்மையிற் குருவாய்வந்த வள்ளுவன் சொன்னன்அன்று
ஆய்ந்தெடுத் துரைக்கின் இல்லை அன்பிற்கும் அடைக்குந்தாளை.

பாரி யெனும் வள்ளலவன்
பைந்தமிழ் ஔவையார்க்கு
வாரிக் கொடுத்த பின்னர்
வழிப்பறி செய்தான் அன்பால்
மாரிமழை போல ஈந்து
மன்னவன் சேரமானும்
பாரியவன் போல வழி
பறித்ததும் பேரன்பாலே

சேரமான் ஔவை யாரைச்
செந்தமிழில் வாராய் என
ஆர்வமுடன் அழைத்ததுவும்
அன்பின் நிலை மிகுந்து
காரிகையாள் நீல நிறக்
கந்தலுடை தந்ததுவே
பாருலகில் அன்பு நெறிப்
பண்பதனின் உச்சநிலை

முன்ஒருகாள் கண்ண னிடம்
முதிர்ந்த அன்பால்
தன் நிலையைச் சொல்லிடவே
குசேலர் தாமும்
இன்னமுத நல் லவலும்
இனிது நல்க
கன்னலினும் இனிமை யெனக்
களித்தான் கண்ணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்ணை யினும் இனித்ததுவே
குசேலனன்பு
மண் ணிதிலே மாசற்ற
மனத்தில் பூத்த
வண்ண மலர் அன்பழகால்
கண்ணன் தன்னை
நண்ணவரும் நண்ப னுக்கே
நயந்து விட்டான்

எல்லையற்ற அன்பின்மாட்சி ஏழையாம் குசேலன்கொண்ட
நல்லநட்பாய் மலர்ந்ததுவே நந்தகோ பாலன்மீது
இல்லிலிகர் இவ்வுலகில் இணையற்ற அன்பினுக்கு
கல்லையும் உருக்கியதைக் கனியவைக்கும் தன்மையுண்டு

தென்னிலங்கை வேந்தனவன் இராவணேசன்
தினவெடுத்த தோள்களினல் மலையைத்தூக்கச்
சென்னியிற் கால்விரல் ஊன்றிச் சிவனும் அன்பால்
சிரமீது வைத்தருளச் செய்யும்போது
மன்னனவன் இராவணனும் மகேசன் உள்ளம்
மகிழ்ந்து கனிந்து உருகிடவே அன்பால்செய்த
கன்னலிசை யாழ் தடவிக் கருணைபெற்ற
கதைஒன்றே அன்பினுக் கரிய தாகும்.

வேடனவன் கண்ணப்பன் விரும்பி உண்டு
வெந்த பதமான நல்ல மாமிசத்தை
காடதனில் மகிழ்ந்துறைமுக் கண்ணன் தன்னைக்
களிக்கஅழுதாட்டி வாய்நீர் குளிப்பு மாட்டி
கூடுமிரு கண்கொடுத்துக் குவல யத்தில்
கொண்டான் பேரின்பத்தின் இன்பமெல்லாம்
நாடுமிதயம் தன்னில் பூத்த அந்த
நல்லன்பின் கனிந்தநறும் கனியாமன்றே!

உயிரனைத்தும் ஒன்றேடொன் றிணைய வைத்து
உள்ளமதைப் பிணைக்கின்ற அதுவேஅன்பு
கயிறதுவாய் காசினியை ஒருங்கே சேர்த்துக்
கருத்தாகக் கட்டுகிற அதுவேஅன்பு
பயிலவொணைப் பாசமுடன் நட்புக் காதல்
பக்தியென உணர்கின்ற அதுவே அன்பு
வெயிலதனும் வெம்மைமிகும் விடங்கொள் நெஞ்சம்
வெண்ணைபோ லுருக்கிவிடும் அதுவே அன்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்புலியில் அடியெடுத்து வைத்தால் என்ன ?
அணுவதனை ஆயிரமாய்ப் பிளந்தால் என்ன ?
தம்புகழை நாட்டுதற்கு விண்ணிற் பாய்ந்து
தண்மதியில் கொடியதனை நட்டால் என்ன ?
நம்புவியில் விஞ்ஞான விந்தை எல்லாம்
நவநவமாய்ப் புலர்ந்தாலும் அன்பு இன்றேல்
வெம்புகரி தின்ற விளாங்கனிபோ லாகும்
வியனுலகில் மாந்தரது வியன்கொள் வாழ்வு

உலகத்து நாடுகளும் ஒன்றுபட்க் கூடி
உள்ளன்போ டிணைந்துகளி உவகை பொங்க
அகிலத்து விஞ்ஞான விந்தை யெல்லாம்
அன்பொழுகு நெறிகாத்து ஒழுகல் வேண்டும்
கலகத்திற்காக அல்ல கவின் நிறைந்த
ககனத்தின் மனிதரது சக்தியோடு
உலகத்து நாயகனின் அன்பும் பெற்று
உலவிடுவோம் கோடிபல அண்ட மீது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எது புகழ்?

அந்த நாளிலெம் ஆதித் தமிழர்கள்
அகிலம் போற்றிட வாழ்க்கை நடத்தினர்
நொந்த மாந்தரைத் தாவிய ணைத்தனர்
நோவ கற்றினர் நன்மை புரிந்தனர்
நைந்து நொந்துரு கும்நிலை யற்றனர்
ஞானம் முற்றிச் சிறந்து விளங்கினர்
செந்தமிழ்க் கவிபாடி மகிழ்ந்தனர்
தெய்வ வாழ்வினை எய்தி நிறைந்தனர்

* * *

சாதலே வரும் என்ற பொழுதினும்
சத்தி யம்தனைக் காத்தல் புகழ்தரும்
சோத னைபல நேர்ந்த பொழுதினும்
தொண்டு செய்பவர்க் குண்டு பெரும்புகழ்
தீது ஆயிரம் செய்பவர்க் காயினும்
தீங் கிழைத் திடார் நற்புக ழாளரே
ஈத லேபுகழ் என்பவர் வள்ளுவர்
ஈட்ட லேபுகழ் என்பவர் லோபிகள்

* * *

பாரி என்றொரு மன்னன் இருந்தனன்
படர முல்லைக்குத் தேரைக் கொடுத்தனன்
வாரி நற்புகழ் ஈந்த குமணனே
வாளி னல்தலை கொள்ளெனக் கூறினன்
தேரினல் சொந்தப் பிள்ளையைக் கொன்றனன்
செந்தமிழ்ச் சோழ மன்னர் பெருந்தகை
மாரி கால மயிலுக்குப் போர்வையை
மாசி லாத ஆய் மன்னனும் போர்த்தனன்.

* * *

குற்ற மற்றவன் கோவலன் என்பதைக்
கூறு முன்புயிர் நீத்தவன் பாண்டியன்
கொற்ற வன்மறைந் தானெனக் கண்டதும்
கோப் பெருந்தேவி வையம் துறந்தனள்
பற்ப லபுகழ் கொண்ட தமிழர்கள்
பாரில் இன்றைக்கு என்ன புரிகிறார்
கற்ப னைக்கடல் மூழ்கித் தவிக்கிறார்
கடந்த காலப் பெருமையில் வாழ்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேற்று தித்த அமெரிக்க நாட்டினர்
நிலவி லேகொடி நாட்டித் திரும்புரூர்
ஆற்றல் மிக்க மேல் நாட்டினர் யாவரும்
அம்புலிக்குப் பயணம் தொடங்குரூர்
சாற்றுகின்ற விஞ்ஞான வளத்திலல்
தம் புகழ் காட்ட மற்ரூர் துடிக்கிரூர்
சோற்றுக்காகவே வாழும் தமிழர்கள்
சுரண்ட மட்டும் பயிற்சி பெறுகிரூர்.

* * *

தங்கம் வெள்ளி மணிபெறு தர்க்கும்
சார்ந்த பச்சைப் பயிர் வளர்த் தற்கும்
எங்குமே மண்ணை வெட்டி முயல்பவர்
இங்கி லாந்து போல் மேலை நாட்டினர்
இங்கே என்னடா செய்கிரே மென்ரூல்
இன்னும் மண்ணைத்தான் தோண்டுகின் ரோம்யாம்
தெங்கு வாழை நடுவதற் கல்ல
செய்வி னைகள் எடுப்பதற்கேயாம்.

* * *

எங்கள் ஊரில் ஓர் பாட்டி யிருந்தனள்
இவளுக் கோபல பிள்ளைகள் உள்ளனர்
இங்கி லீசைப் படித்தத னல் அவர்
இனிய செந்தமிழ் நாமம் மறந்தனர்
தங்கள் பேரையும் மாற்றத் துணிந்தனர்
தமிழர் தாமெனச் சொல்லவும் நாணினர்
அங்கே செல்லுமோர் சந்தர்ப்பம் நேர்ந்ததால்
அடியனேன் கண்ட கோலத்தைக் கூறுவேன்.

* * *

நல்ல தோர்புக ழோடு கொழும்பிலே
நாங்கள் வாழ்கிரோம் என்னும் அவர்களின்
உள்ள மோவெறும் போலிப் புகழிலே
ஊறி நின்றதைக் காண மூடிந்தது
வெள்ளைக் காரரைப் போலவே வாழ்கிரோம்
வீடு வாசலைப் பாருமென் ரோதினர்
நல்ல தென்றுயான் சுற்றியே பார்க்கையில்
நங்கைமார் இரு பேர்கள் தென்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வப் பெண்களைப் போலவே செய்திடும்
செந்தமிழ் உடை இல்லை யவரிடம்
பைகளுக் குள்ளே காட்சி யளித்தனர்
பாரிலே புகழ் ஈதென்று எண்ணியே
கை களற்ற தோர்சட்டை யணிந்தனர்
கரிய கூந்தலை வெட்டிக் குறைத்தனர்
ஐயகோ இது யாழ்ப்பாண நாட்டிலும்
அடியெ டுத்தெம் புகழை அழிக்குது.

வேறு

வீட்டுக்கு உரிய பாட்டி
வெளிக்கிட்டுப் பிறகு வந்தார்
பாட்டியின் கோலம் கூடப்
பாதியே மாறிப் போச்சு
பாட்டி கற்சுகமா என்றேன்
பாட்டியா ? என்னைப்பார்த்தால்
பாட்டியைப் போலி ருக்கா
பதிலுரை என்றே அன்னர்.

* * *

கட்டிய பற்கள் தோன்றக்
கலகல வெனநகைத்தார்
பட்டணம் சென்று வாழும்
பைந்தமிழ் மக்கள் பல்லோர்
ஒட்டிய குப்பை வாழ்வை
உயர் வென எண்ணு கின்றார்
எட்டுத்திக் கெல்லாம் போற்றும்
எம்புகழ் அறிய மாட்டார்.

வேறு

சுழ நாட்டிலே யாழ்ப்பாண மண்ணிலே
இருக்கும் எம்மவர் தம்மை அடைந்துமே
வாழும் நற்புகழ் ஏதென்று கேட்டிடில்
வாய்கூ சாதவர் சொல்லும் பதிலிது
நாலு திக்கும் புகழ்ந்திடத் தக்கதாய்
நல்ல தோர்பணக் காரனாய் வாழ்வதே
ஞாலம் போற்றும் பெரும்புகழ் என்பரே
நம்ம வர்க்குப் பணமே பெரும் புகழ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டி லேசில மக்கள் இருக்கிறார்
நாலு காசும் தருமம் புரிந்திடார்
வீட்டி லேஒரு வேளை உணவினை
விருந்து வந்தாற் கொடுத்து மகிழ்ந்திடார்
போட்டி போட்டுத் திருவிழாச் செய்வதும்
புத்தி யற்றெங்கள் ஆலயம் தோறுமே
நாட்டி யங்கள் நடத்தி வருவதும்
நற்பு கழ்தரும் என்று நினைக்கிறார்.

* * *

பத்து மாதம் சுமந்தவள் வீட்டிலே
பசிக்கொ டுமையால் நொந்து மெலிகையில்
பத்துக் காசோ உணவோ கொடுத்திடாப்
பாவி மாந்தர்கள்; பச்சைத் துரோகிகள்
செத்த பின் ஒரு தண்டிகை மேளங்கள்
செவிது ளைக்க வெடிகள் நடைசீலை
கத்திக் கத்தியே கண்ணீர் விடுவது
கட்டாயம் புகழ் ஈயுமென் றெண்ணுறார்.

* * *

மற்ற வர்க்கொரு தீமையி லாததாய்
மானி லம்புகழ் கின்ற நெறிப்படி
குற்றம் நீக்கிக் குணத்தினை ஏற்றுமே
குவல யத்தினில் வாழ்க்கை கடத்திடில்
அற்ப தீமையும் சேரா தகிலத்தை
ஆயிரம் புகழ் வந்து குவியுமே
நற்ப யன்தரும் செய்கை புரிந்துமே
ஞாலம் போற்றிட வாழ்வாங்கு வாழ்வமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறித்தவ தினவிழா

அன்று ஆனித்திங்கள் ஒன்பதாம் நாள்: எங் கலாசாலே இனந் தெரியாத இன்பப்பூரிப்பில் பொங்கிப் பூரிக்கின்றது: அணைகடந்த அன்பின் பெருக்கால் அகிலத்து மாந்தர்க்குத் தன்னே அர்ப்பணம் செய்த இறைமகன் கிறிஸ்துவுக்காக விழா வெடுக்கின்றனர் அரிவையர் குழாம். பார்க்கும் இடமெங்கும் கண்கவர் தோரணங்கள், மண்டபம் எங்கும் மகிழ்வுடன் நிற்கும் மங்கையர்கள், தளங்களெல்லாம் வர்ணக் கோலங்கள் இடப்பட்டு அழகுற மிளிர்கிறது. ஆசிரிய மாணவிகள் அனைவரும் அன்புடன் அமலன் பதம்போற்றி நன்னளுக்கான முயற்சிகளில் ஈடுபடுகின்றனர்.

பிற்பகல் நாலுமணி. விழாவுக்கெனக் குறிக்கப்பட்ட நேரம் அது. பொலிவுடன் காணப்படும் மண்டப வாயிலிலே வனிதையர் பலர் சந்தன குங்கும சகிதம் நிகழ்ச்சி நிரல்களைக் கையில் ஏந்தி வந்தவரை வரவேற்கின்றனர். மறைபரப்பும் மறையோர் ஒருபுறம், சங். கன்னியர்கள் மறுபுறம், தம் மழலைமொழிகளால் உள்ளங்களைக் கவரும் குழந்தைகள் குழாம் ஒருபுறம், இப்படியாக மண்டபம் வந்தோரால் நிரம்புகிறது.

விழா வண. ஆர். எச். ஆர். ஹூல் அவர்களின் தலைமையுரையுடன் ஆரம்பமாகின்றது. "ஈசன் பாதம் தொழுவோம்" என்ற பாடல் பாடகர் குழாமினுல் இசைக்கப்படுகிறது. பரிசுத்த வேதாகமத்திலிருந்து அரியபகுதிகள் எடுத்து வாசிக்கப்படுகிறது: வண: ஏ. சி. துரைராஜா அவர்களால் "கிறிஸ்தவ அன்பு" பற்றிச் சிறப்பான சொற்பொழிவாற்றப்படுகிறது. இவ்வுரை எம்மவரைச் சிந்திக்கச் செய்கின்றது. அதைத் தொடர்ந்து சங். சகோதரிகளால் எழிலுற அமைக்கப்பெற்ற பலிபீடத்தின்கண், அன்று கல்வாரியிலே, மனுக்குலத்திற்காகத் தம் உயிரைத் தியாகஞ் செய்த யேசுபெருமானின் சிலுவைப்பலியை நினைவூட்டும் உன்னதபலி, திவ்விய பூசைப்பலியாக அருட்திரு. ஜீ. ரி. பாலசுந்தரம் அவர்களால் நிறைவேற்றப்படுகிறது: இப்பலியின் இடையிடையே இன்னிசைக் கீதங்கள் முழங்குகின்றன. அந்த அமைதியான நேரம் எம்மவரை இறைவனுடன் ஒன்றிக்கச் செய்கின்றது.

திவ்விய பூசைப்பலியைத் தொடர்ந்து தேநீர் இடைவேளை இடம் பெறுகின்றது: பாவையர்களாற் பண்புடன் பரிமாறப்பட்ட பலவகையான சிற்றுண்டிகளை அருந்தி மகிழ்வுடன் தென்படுகின்றனர் மண்டபத்திலுள்ளோர்.

மேடையிற் திரை நீக்கப்படுகிறது: அதன் ஓரத்திலே நாற்றமெடுத்த உடல், மேனி எங்கும் இரணங்கள், கூனிக்குறுகிக் கையிலே கோல் ஒன்றின் ஆதாரத்துடன் படுத்திருக்கிறது ஓர் உருவம். அவன்தான் பிச்சைக்காரன் லாசர். மது, மாது என்னும் இன்னோரன்ன உலக இச்சைகளுக்கு ஆளாகி, இறுமாப்பும் ஆணவமும் மேலெழத் தன் நண்பர்களுடன் சல்லாபித்துக் கொண்டிருக்கிறுன் ஐசுவரியவான். அவன் காலடியில் ஏழை லாசர், மேசையிலிருந்துவிழும் ரொட்டித் துண்டுகளுக்காகக் காத்திருக்கிறுன். அந்தச் செல்வந்தனின் நாய்க்குக் கிடைக்கும் மதிப்புக்கூட, பாவம் ஏழை லாசருக்குக் கிடைக்கவில்லை. கையேந்தி நிற்கிறுன். கலைக்கப்படுகிறுன். சாவு என்ற ஒன்று இருவரையும் அழைத்துச் செல்ல வருகிறது. ஏழைக்குச் சாவு இன்பத்தைக் கொடுக்கிறது. பணக்காரனுக்கோ பயத்தைகொடுக்கிறது. இருந்தும் மரணம் இருவரையும் அழைத்துச் செல்கிறது. லாசர் மோட்ச இன்பத்தையும், ஐசுவரியவான் நரகவேதனையையும் அனுபவிக்கிறுர்கள். நரகத்தில் இருக்கும்பொழுது அக்கினியின் அகோரவேதனையில் பாவியின் கண்கள் திறக்கின்றன. மோட்சத்தில் ஆபிரகாமின் மடியில் இருக்கும் லாசரிடம் ஒருதுளிநீர் தருமாறு கேட்கிறுன். இருந்தும் என்ன, அவன் செய்த அக்கிரமங்கள் இறைவனின் அன்பிற்கு அணைபோடுகின்றன. இவ்வரிய நாடக ஒழுங்கும், அதில் பங்குபற்றியோரின் தத்ரூபமான நடிப்பும் பார்ப்போரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேவபாலனைத் தரிசிக்கத் தேவதூதர்களும் முடியுடை மூவேந்தர்களும் சூழ்ந்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராட்டுதல்களைப் பெறுகின்றது: ஆசிரிய மாணவிகளின் இந்த நடிப்பு அனைவரின் உள்ளத்திலும் தனி இடத்தைப் பெறுகின்றது. அதை அடுத்து யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர்மடச் சிறுமியர்களால் நடனவிருந்து அளிக்கப்படுகிறது. அன்னவர் நடனம் எம்மை இன்பத்தில் ஆழ்த்துகின்றது.

இவ்விழாவினைச் சிறப்புடன் நடத்துவதற்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து எம்மை ஊக்குவித்த அதிபர் அவர்கட்கும், எம் மன்றப் போஷகர்களுக்கும், மற்றும் பேராசிரியர்களுக்கும், எம்முடன் கலந்து சகல வேலைகளிலும் ஈடுபட்டு உழைத்த சக ஆசிரிய மாணவிகளுக்கும் உரை நிகழ்த்திய உரையாளர்களுக்கும், வருகை தந்த ஆண், பெண் பாலார்க்கும் கிறிஸ்தவ மன்றக் காரியதரிசி அவர்களால் நன்றியுரை வழங்கப்படுகிறது.

மங்களகரமான விழாவினைச் சிறப்புடன் நிறைவேற்றிய களிப்புடன் யாவரும் தம் இல்லங்கட்குச் செல்கின்றனர். கிறிஸ்துவின் நிறையன்பும் அவர்களுடன் இணைந்து செல்கின்றது.

செல்வி. மே. பி. ஸ்ரனிஸ்லாஸ்,
விடுகை வருடம்.

நட்பு என்பது கண்ணுக்குப் புலப்படாத ஓர் அன்பு ஊற்று. அது எங்கே தோன்றுகிறது—எப்போது உண்டாகிறது என்று யாராலும் சொல்லமுடியாது.

காந்தியடிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலருக்குக் கதைகூறும் ஆசிரியர்

பாலரைப் பயிற்றும் ஆசிரியருக்கு இருக்க வேண்டிய சில சிறப்பாற்றல்களில் கதை கூறுவதும் ஒன்று. ஒழுங்கை நிலை நாட்ட, மனதைத் தூய்மைப்படுத்த, அழகை உணர, உண்மையை அறிய, கற்பனை சக்தியைத் தூண்டிச் சிந்தனையை வளர்க்க, இரச ஞான ஆற்றலை விருத்தி செய்ய, புத்துணர்ச்சிகளையும், புது எண்ணங்களையும் தோற்றவைக்கக் கதையானது சிறந்த இடத்தை வகிக்கின்றது.

கதறியழுது அடம்பிடிக்கும் குழந்தையின் உணர்ச்சியைத் தடுத்து அழுகையை மாற்றுவது கதை, தேசத்துக்கு வேண்டிய தொண்டர்கள், தியாகிகள், வீரபுருடர்களை ஆக்க அடிகோலுவதும் கதைகளே. ஆகவே இத்தகைய நன்மைகளைப் பயக்கும் கதையைக் கூறும் ஆற்றல் ஆசிரியர்களுக்கு ஒரு கலையாக அமைய வேண்டும்.

ஆசிரியன் கதை கூறும் ஒரு கதை விற்பன்னனாக இருக்க வேண்டியதில்லை. ஆனால் அவர் நாளாவட்டத்தில் சுயமுயற்சியால் தன்னை ஒரு கதாப்பாத்திரமாக்கிக் கொள்ள வேண்டும். சிறந்த ஓர் ஆசிரியன் கதை கூறும்பொழுது அக்கதை நாடகமாக நடிக்கப்படுவதைப் பாலர் மனக்கண்ணுற் காணக் கூடியதாக இருப்பின் அன்னவனே கதை கூறும் ஆசிரியன் என்று கூறிவிடலாம். இத்தகைய அருங்கலையான கதையை நன்கு பயிற்றுவதற்கு ஆசிரியரிடம் சில இன்றியமையாத பண்புகள் இருக்கத்தான் வேண்டும்.

ஆசிரியன் பேச்சு வன்மையுடையவனாக இருத்தலோடு எளிய இனிய நடையும், தெளிவான குரலும், சந்தர்ப்பத்துக்கேற்ப குரலை மாற்றும் தன்மையும் உடையவனாய் இருத்தல் அவசியமானது. இன்னும் கதை கூறும் ஆசிரியன் பாலரைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். அவர்களின் தகுதி, விருப்பம், இவற்றை ஆராய்ந்து அறிதல் வேண்டும். இன்னும் கதையில் கூறப்படும் விடயம் பிள்ளையின் விருப்பத்திற்கு ஏற்றதா? அது சன்மார்க்கத்தைப் போதிக்கிறதா? பிள்ளையின் உள்ளத்தைக் கவரும் முறையில் அமைந்திருக்கிறதா? இதைக் கேட்பதால் பிள்ளைகள் பயன் அடைவார்களா? என ஆலோசனை செய்தல் வேண்டும். பின்னர் ஆசிரியன் தானும் ஒரு பாலகனாக மாறிக் கலந்துரையாடல் மூலம் கதையை ஆரம்பிக்க வேண்டும்.

கதை கூறும் ஆசிரியனைக் கண்டதும் பாலர் மனம் மகிழ வேண்டும். ஆசிரியன் கதை கூறும்போது சலியாது அற்புதம், அலங்காரம், கருணை, பாசம், சாந்தம், வீரம், சோகம், கோபம், நகைப்பு முதலிய நவரசங்களோடும் மெய்ப்பாடு தோன்றவும் தன்னையே கதாபாத்திரமாகப் பாவனை செய்து தரத்துக்கு ஏற்ப, பாஷை நடையை மாற்றிக் கதையுடன் சம்பந்தப்பட்ட உபகரணங்களைக் கையாண்டு குறித்த கதையை விளக்கும் ஆற்றல் உடையவராக இருக்க வேண்டும்.

இன்னும் கதை கூறும் ஆசிரியர் நடிப்புத் திறன் பொருந்தியவராக இருத்தல் வேண்டும். கதையின் பல அம்சங்களையும் முகக் குறிகளாலும், சைகைகளாலும் விளக்கிக் காட்டவேண்டும். இன்னும் கதையின் மத்தியில் செய்யுள் இடம் பெறுமாயின் அதை ஆசிரியன் உணர்ச்சியுடன் பாட வேண்டும். இன்னும் கதை கூறும்போது ஆசிரியன் எல்லாப் பிள்ளைகளையும் தன் வயப்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்விதமான ஆசிரியர்கள் பாலருக்கு மகிழ்ஊட்டக்கூடிய பரம்பரையான அதிசயக் கதைகளையும், கட்டுக்கதைகளையும், வீரக் கதைகளையும், பிள்ளைகளின் சொந்த அனுபவத்தை யொட்டிய கதைகளையும் தேர்ந்தெடுப்பதில் ஊக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.

கதையையே கலையாகக்கொண்ட ஆசிரியன் பாலருக்குரிய சிறிய கதைகளைத் தானே ஆக்கிக் கொள்வான். இப்படியான கதைகள் பாலருக்கு விருப்பத்தையும், உற்சாகத்தையும் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, மேற்கூறிய பண்புகள் ஆசிரியனிடம் அமையாவிட்டாலும் நாளடைவில் அத்தகைய பண்புகளை வளர்த்து வருவானாயின் பாலர் முன்னிலையில் இவ்வாசிரியன் "கதைவரம் பெற்ற ஆசிரியன்" என்று கூறுவது பொருத்தமுறும்.

ஸிஸ்டர், மேரி அமிலி,
முதலாம் வருடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த நாள் வாராதோ?

1. காலை மணிகேட்டுக் கனவு கலைந்துகடன்
சால முடித்துப்பின் சாமி யறைநண்ணி
வேலை வழிபட்டு வேண்டும் வரம்பெற்று
நூலைப் பயின்றநாள் நோக்கியினி வாராதோ?

2. பால்கலந்த தேநீர் பழங்கள் பலகாரம்
போலிருந்த யாவும் பொருந்தி வயிறடையச்
சேல்விழியர் வாயிற் சிரிப்புக் குமிழிடைக்
கால்மணியிற் பசிக்குதென்ற காலமினி வாராதோ?

3. ஏசகஏ பிரண்டேயென் றிரவுபக லாய்ப்படித்தும்
போய்மறுநாள் ஏவர்க்க மெனப்போட்டுப் பிழைவாங்கி
மாய்வதனல் ஏதுபயன்? மக்கள்குழாம் நாமென்று
வாய்பிளந்து நிற்கும்நாள் வாழ்வினினி வாராதோ?

4. நடுநிசியில் மெத்தையிலே நல்லுறக்கங் கொள்ளுங்கால்
கடமையினில் வல்லதமிழ்ச் செல்வி கனவினிலே
திடுமெனவே வந்தாகு பெயரென்றூல் என்னவெனக்
கடுகியெழுந் தேகற்ற காலமினி வாராதோ?

5. மலையதுதான் பிரசவவே தனைப்பட்டுச் சுண்டெலியைத்
தலமீது ஈன்றதெனத் தான்மொழிவார் தம்பேச்சிற்
கலகலென வேசிரித்துக் கவலைகளெல் லாம்மறக்கும்
சிலமணிகள் வாழ்வினினிச் சேர்ந்தொருகால் வாராதோ?

6. சங்கீத வகுப்பினிலே சரிகமப பாடுங்கால்
எங்கேயோ குரலிழுக்க என்னவிது கூக்குரல்தான்
இங்கேதான் கேட்டதென எல்லோரும் ஓடிவர
மங்கையர்நாம் தலைகவிழும் மற்றொருநாள் வாராதோ?

7. ஆட்டின் படம்வரைந்தா லதுவணிலாய் மாறிவிடப்
பாட்டு எழுதவென்றூற் பழங்கதைபோ லாகிவிட
வீட்டி லிருந்துணவு வேகவைக்கா தேனெடுத்தோம்
ஏட்டை எனவழுது ஏங்கியநாள் வாராதோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. ஆல மரத்தடியில் அமர்ந்துதிரு வாசகத்தை
மாலைப் பொழுதினிலே மனப்பாடஞ் செய்யுங்கால்
நூலை விழிநோக்க நுண்ணியகற் பனைவீட்டின்
மூலை முடுக்கோடும் மூந்தியநாள் வாராதோ ?

9. வீட்டு நினைவுவர விரைந்தலுவ லகத்துள்ளே
நாட்ட முடன்நுழைந்து நமமதிபர் முகநோக்கிக்
கேட்டு விடைபெற்றுக் கிளுகிளுக்கும் நெஞ்சுடனே
ஓட்டமாய் ஓடும்நாள் ஒருமுறைதான் வாராதோ ?

10. விளையாட்டுப் போட்டியென்றும் வெல்லுதமிழ் விழாவென்றும்
சளையாமல் ஆண்களுக்குச் சரிசமனாய் நாம்நின்று
சுளையாகப் பரிசுகளைச் சுலபமுட னேபெற்றுக்
களையாத மனத்துடனே களிக்கும்நாள் வாராதோ ?

11. கோவைக் கழகமதன் கோதையர்கள் நாமென்றுஞ்
சேவை புரிவதற்குச் சென்றிடுவோம் திக்கெங்கும்
நாவை யடக்கிடுவோம் நாயகர்முன் னவென்றும்
கூவிக் குதூகலித்துக் கூறியநாள் வாராதோ ?

12. வாராதோ வாராதோ வந்தொருகாற் சேராதோ
நேரான முறைகற்ற நெடியநாள் வாராதோ
போரா சிரியரது பேரன்பை நாம் பெற்ற
ஆராத இன்பமுள்ள அந்தநாள் வாராதோ ?

திருமதி. மனோன்மணி நடராசா
பழைய மாணவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினை மாணவர்கள்

ஒருநாட்டின் கல்வி சீரிய வகையில் அமைந் தாற்றுன் அந்நாட்டில் பயன்தரும் பண்புகளைக் கொண்ட மனிதர்கள் உருவாக்கப் படுவார்கள். இல்லையேல் கல்வியுலகில் பல பிரச்சினைகள் தோன்றி, மாணவரின் வளர்ச்சியைத் தடைப்படுத்துமே யொழிய அவர்களை நெறிப்படுத்துவதற்குச் சிறிதும் பயன்படமாட்டாது.

ஒருவன் தான் வாழும் சமூகத்தில் பொருத்தப்பாடுடையவனுக, அச் சமூகத்துக்கு உடன்பாடான முறையாய் வாழக் கற்றுச் செயலாற்றுதவிடத்து அவன் பிரச்சினைக்குரியவனுகிறுன். எங்கள் சமூகத்தில் இப்படிப்பட்ட பலரை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. மாணவ உலகில் மாத்திரமன்று, ஆசிரிய உலகிலும் சிலர் தமது ஆசிரியப் பணியைச் செவ்வனே புரியாது, வகுப்பறையில் ஓய்வெடுத்துச் செல்வதும், வகுப்பறையில் செலவிடவேண்டிய நேரத்தை வகுப்புக்குப் புறத்தே செலவு செய்வதும், மாணவர்களைப் பிழையான வழிக்கு இட்டுச்செல்வதும் போன்றன எமக்கு எதைக் காட்டுகின்றன? பிரச்சினை = ஆசிரியர் பலர் எம்மத்தியில் உள்ளனர் என்பதையே காட்டுகின்றன. இன்னும் அரசாங்கக் கடமைகளைத் தட்டிக்கழித்து, பாரபட்சம் காட்டிக் கடமையைச் செய்யாமலே சம்பளத்தைப் பெற்றுக்கொள்ளும் அரசாங்க உத்தியோகத்தர்கள் எத்தனை? பிரச்சினை = ஆசிரியர்கள், பிரச்சினை = உத்தியோகத்தர்கள் இருப்பதுபோல, "பிரச்சினை மாணவர்களும்" இருக்கின்றுர்கள்.

"பிரச்சினை = மாணவர்கள்" என்று சொல்லும்போது, அஃது எப்படிப்பட்டோரைக் குறிக்கிறது? பாடசாலை எனும் சிறிய சமூகத்திலே பொருத்தப்பாடற்றவனுகவும், பாடசாலையின் நிர்வாகத்துக்கு ஒவ்வாத முறையில் நடந்து கொள்பவனுகவும் ஒருவன் இருந்தால், அவன் பிரச்சினைக்குரியவனுவான். இன்னும் கற்றலில் சிறிதும் நாட்டமின்றி ஒழுங்கற்ற வழிகளில் செல்வதில் நாட்டமுடையவனுகவும் காணப்படுவான். கற்றலில் நாட்டம் இல்லாதவன் விவேகத்தில் குறைந்தவன் என்று எண்ணிவிட முடியாது. பிரச்சினை மாணவர்களுள் பலர் விவேகிகளாயுமிருப்பர். தகுந்த வழிகாட்டலும், சாதகமான சூழலும், ஆற்றலுக்கேற்ற கல்வியும், குணப் பண்புகளுக்கேற்ற முயற்சியும், சிறந்த மெய்ப்பாட்டுக் கல்வியும் கொடுக்கப்பட்டால் "பிரச்சினை மாணவர்கள்" என்ற வகையினரின் தொகை மிகமிகக் குறைவாக இருக்கும்.

ஒருபிள்ளை பூரணவளர்ச்சியடைந்து தனக்கும், தன் நாட்டிற்கும் பயன் கொடுக்கும் கனிதரும் விருட்சமாகப் பழுத்து வாழ வேண்டின், அவனதுவீடு, பாடசாலை, அவன் நடமாடும் சமூகம் ஆதியன அவனது பல தேவைகளைப் பூர்த்திசெய்யக் கூடியனவாய் அமைந்துவிடல் வேண்டும். ஒருபிள்ளை தனது உடல், உளத் தேவைகளைப் பூர்த்தி செய்யும்போது மகிழ்ச்சியடைகின்றது "A happy child is always a good child" என்று சொல்லப்பட்டுள்ளது. எனவே பிள்ளைகள் மகிழ்ச்சியடையக்கூடிய வகையில் அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவுவுல் பிரச்சினை மாணவர்கள் தொகை அரிதாகும். சந்தோஷமான சூழலை உருவாக்க உதவுவது அவர்களின் பாதுகாவலரின் கடமையாகும்.

குழந்தையின் உடற் தேவையைப் பூர்த்திசெய்வதற்கு நல்ல உணவு, உடை வசதிகள் இருக்கவேண்டும். அன்றிச் சுதந்திரமாக அசைந்து திரிவதற்குரிய பௌதிக சுதந்திரம் அளிக்கப்படல் வேண்டும். நோய்களிலிருந்தும் பாதுகாக்கப்படல் வேண்டும். இவைகள் எல்லாம் கவனிக்கப்பட்டால் பிள்ளைகளின் உடல் வளர்ச்சி பாதிக்கப்படாமல் திடகாத்திரமான உளம் உறுதி யுடையவர்களாக வளர்ந்து வருவார்கள். உறுதியான உடல், உறுதியான உள்ளத்தையும் அளிக்க வல்லது "A sound mind in a sound body" என்பது கவனிக்கத்தக்கது. மேற்கூறிய தேவைகள் பூர்த்தியாக்கப்படாத நிலையில், மாணவர்கள் களவெடுத்தல், பொய் சொல்லுதல், வசதிகளை அனுபவிக்கும் பிள்ளைகளைக் கண்டு பொருமை கொள்ளுதல் போன்ற உள்ளத் தூய்மையைப் பாதிக்கும் பழக்கங்களைத் தமதாக்கிக் கொள்வர். உள்ளத்தூய்மை பாதிக்கப்படும் போது, மாணவர்கள் பிரச்சினைக்குரியவர்களாகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து மாணவர்களின் உளத் தேவைகள் பூர்த்தியாக்கப்படல் வேண்டும். அன்பு, காப்புணர்ச்சி, கணிக்கப்படுதல், சமூக அந்தஸ்துப் போன்றவை மாணவனுக்குக் கிடைக்கக்கூடிய நிலை இருப்பின் மாணவன் மகிழ்ச்சியாக இருப்பான். இவை பூர்த்தியாக்கப்படாத நிலையில் மாணவனின் உளம் பாதிக்கப்படுகிறது. தாழ்வுச் சிக்கல் ஏற்பட்டுத் தன்னம்பிக்கையை இழந்து இறுதியாய்க் கற்றலில் நாட்டமற்றுப் பிரச்சினைக்குரியவனாகின்றான். தன்னைக் கவனிக்கத்தவறும் சமூகத்தை வெறுக்கின்றான். எனவே, பாடசாலை ஒழுங்குகளை மீறுவதில் இன்பங் காண்கின்றான்.

வீட்டிலும், பாடசாலையிலும் பிள்ளைகள் காப்புணர்ச்சி பாதிக்கப்படாத வகையில் வாழவேண்டும். பெற்றோரின் மெய்ப்பாட்டு நிலையில் அடிக்கடி ஏற்படும் சலனம், பெற்றோருக்கிடையில் ஏற்படும் பிணக்குகள், மாற்றான் தாயின் கொடுமை, அன்பு செலுத்துவதற்கு ஒருவருமே இல்லாத நிலை, ஆகிய இவை பிள்ளையின் காப்புணர்ச்சியைச் சிதைத்து, உளத்தைப் பாதிக்கின்றன. பாடசாலையிலும் மாணவர்களின் தேர்ச்சிநிலை குறைவாக இருப்பதினால் அவன் கணிக்கப்படுவதில்லை. அவனுக்கு வகுப்பில் மிகமிகக் குறைந்த அந்தஸ்துத்தான் உண்டு. இந் நிலையில் சக மாணவரின் இயைபு நிலையும் திருப்தியாக இருக்க மாட்டாது. எனவே, மாணவன் மேலும் பாதிக்கப்படுகின்றான். பிரச்சினைக்குரியவனாகின்றான்: ஓரளவுக்கு விவேகம் இருந்தாலும்கூட அவன் அதனால் பயன்பெற முடியாத நிலையை அடைந்துவிடுகின்றான்: ஆசிரியர்கள் மாணவர்களை நன்கு அறிந்து கற்பிக்கும் தன்மையுடையவர்களாக இருப்பின் மாணவர்களிற் பலர் பிரச்சினை மாணவர்களாக இருக்கவேண்டிய நிலை ஏற்படமாட்டாது:

பிரச்சினை மாணவனைக் கருதப்பட்ட ஒரு மாணவன் வகுப்பில் இருக்கின்றான் என வைத்துக்கொள்வோம். அந்த வகுப்பை ஒரு புது ஆசிரியர் பொறுப்பேற்றுக்கொண்டார் எனவும் வைத்துக் கொள்வோம்: குறிப்பிட்ட மாணவன் முற்றாக அழிந்துவிடவில்லை. அவன்மீது ஆசிரியரின் அருட்பார்வை செல்லுகிறது. ஏன்? அம்மாணவன் அந்நிலையில் இருக்கிறான் என்பதை ஆராய முற்படுகின்றார் ஆசிரியர்: தனது மாணவர்களின் விவேகத்தை விவேகப் பரீட்சைகள்கொண்டு அளவிட்டுக் கொண்டார்: அத்துடன் அவர்களது தேர்ச்சி நிலையையும் அளவிட்டுக்கொண்டார் என வைத்துக்கொள்வோம். குறிப்பிட்ட மாணவன் விவேக ஈவு 100 ஆக இருக்கக் கண்டார். இதேயளவு விவேக ஈவினையுடைய ஏனைய சில மாணவர்கள் நல்ல பொருத்தப்பாடுடையவர்களாகவும், விவேக ஈவுக்கேற்ற தேர்ச்சி ஈவு உடையவர்களாகவும் காணப்பட்டனர். குறிப்பிட்ட பிரச்சினை மாணவனை 'A' என்றும், அவனது விவேக ஈவைப்போன்று 100 விவேக ஈவு உடைய, ஆனால் பொருத்தப்பாடுடைய வேறோர் மாணவனை 'B' எனவும் வைத்துக்கொள்வோம். 'A' என்பவனுடைய விவேக ஈவு 100 ஆகவும், அவனது தேர்ச்சி ஈவு 70 ஆகவும் காணப்பட்டன. 'B' என்பவனின் விவேக ஈவு 100 ஆகவும்' அவனது தேர்ச்சி ஈவும் 100 ஆகவும் காணப்பட்டன. ஒரேயளவு விவேக ஈவினையுடைய இரண்டு மாணவர்களினதும் தேர்ச்சி ஈவில் ஏன் இத்தனை வித்தியாசம் இருக்கவேண்டும்? இப் பிரச்சினை ஆசிரியரிடம் எழுந்தது. பிரச்சினையைத் தீர்க்க ஆசிரியர் முற்பட்டார்:

வகுப்பின் இயைபு நிலை அளவிடப்பட்டது. 30 மாணவர்களைக் கொண்ட வகுப்பின் இயைபு நிலை பின்வருமாறு அமைந்துள்ளது.




வகுப்பில் 5 குழுக்கள் இருப்பதாகத் தெரிய வந்தது: அதில் கூடிய செல்வாக்குடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழு 9 பேரையும், அடுத்தது 7 பேரையும், அடுத்தது 6 பேரையும், அடுத்தது 4 பேரையும், 5-வது குழு 3 பேரையும் கொண்டுள்ளது என்பது தெரியவந்தது. 'A' என்பவன் இந்த ஒரு குழுவிலும் இல்லாமல் குழுக்களுக்கு வெளியே ஒதுங்கியோ, ஒதுக்கப்பட்டோ நிற்பது தெரியவந்தது: இதிலிருந்து வகுப்பின் இயைபுநிலை 'A' யின் கற்றலைப் பாதித்துள்ளது என்பதை ஆசிரியர் அறிந்துகொண்டார்.

டுள்ள நிலைக்கும் அவர்களின் சூழல் காரணமாக அமைந்துள்ளது என்பதைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை காட்டுகின்றது:

ஆசிரியர் தனது ஆராய்ச்சியினால் பெற்றுக்கொண்டவிபரங்களை வைத்துக்கொண்டு A என்பவனுடைய சூழலைக் கற்றல் நிலைக்குச் சாதகமானதாக மாற்றியமைக்க முற்பட்டார். A என்பவனை 4வது குழுவுக்குள் சேர்ந்து இயங்கும்படி செய்தார். அவனின் இருக்கை மாற்றப்பட்டது. வகுப்புக் குழுக்



A பாதகமானது


B சாதகமானது

இன்னும் A யின் வீட்டுச் சூழல் பற்றிய விபரங்களையும் அறிந்து, அவை அத்தனையையும் அவனது கற்றல் நிலையைப் பாதிக்கும் வகையில் அமைந்துள்ளன என்பதையும் அறிந்துகொண்டார்.

A என்பவனின் பொருத்தப்பாடற்ற நிலைக்கும், B என்பவனின் பொருத்தப்பாகளாக இயங்குவதற்குத் தருணம் அளிக்கப்பட்டது. இப்படியான மாற்றங்கள் சில ஏற்பட்ட பின்னர் திரும்பவும் வகுப்பின் இயைபுநிலை அளவிடப்பட்டது: அப்போது வகுப்பின் இயைபுநிலை பின்வருமாறு அமைந்துள்ளதாகத் தெரியவந்தது:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்பில் 4 குழுக்கள் இருப்பது தெரிய வந்தது. A என்பவன் குழுவில் ஒருவனைக்



காணப்பட்டான். அவனது கற்றல் நிலையை அதிகம் பாதிக்கக்கூடியதாக இயைபு நிலை இருக்கவில்லை. அதில் எவ்வளவோ மாற்றம் ஏற்பட்டிருந்தது. இன்னும் ஏற்படுத்தலாம்; என்னும் நம்பிக்கை ஆசிரியருக்கு ஏற்பட்டது. எனவே ஆசிரியர் A யின் நலத்தில் மேலும் ஆர்வங் கொண்டனர்; அவன் ஓரளவு சந்தோஷமான சூழலில் வசிக்கக்கூடிய ஒரு நிலையை உருவாக்கிக் கொடுத்தார். இந்த மாற்றங்கள் ஏற்பட்ட பின்னர் 'A' என்பவனின் தேர்ச்சி ஈவு முன்னர் இருந்ததுபோல் இல்லாமல் கூடிக் கொண்டே சென்றது. 70 ஆக இருந்த தேர்ச்சி ஈவு ஒருமுறை அளவிடப்பட்ட போது 80 ஆகவும், பின்னர் 90 ஆகவும் கூடிக் காணப்பட்டது. A யின் தேர்ச்சி ஈவு அவனது விவேக ஈவைப்போன்று 100 ஆகும் வரை ஆசிரியர் பரிகாரமுறைகளைக் கையாண்டு அவனுக்குப் பயிற்சி அளித்தார். அவனை ஒரு சராசரி மாணவன் என்று அழைக்கக்கூடிய அளவுக்கு அவன் வளர்ச்சியடைந்து பாடசாலையிலும், சமூகத்திலும் பொருத்தப்பாடுடையவனாகக் காணப்பட்டான்.

ஆசிரியர், பெற்றோர், இன்னும் மாணவர்கள் உறவாடும் பரந்த சமூகம் ஆகிய இவை எல்லாம் மாணவர்களின் வளர்ச்சிக்கும், ஆக்கத்துக்கும் காரணமானவைகள். எனவே, மேலே கூறப்பட்ட இவை எல்லாம் மாணவர்கள் சந்தோஷமாகவும், திருப்தியாகவும் வாழ்ந்து வரக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்குவதற்கு வழி வகுக்க வேண்டும். அப்போதுதான் மாணவ உலகில் பொருத்தப்பாடு அற்ற அல்லது பிரச்சினைக்குரியவர்களின் தொகை குறைந்து காணப்படும்.

சிஸ். மேரி யூவேமியா,
முதலாம் வருடம்.

முதலில் உண்மையைத்தான் தேடிக் காணவேண்டும். அப்புறம் அழகும் நலனும் உங்களுக்குத்தானே கிட்டும். கிறீஸ்துநாதர் தம் மலைப்பிரசங்கத்தில் இதைத்தான் போதித்தார். இந்த உண்மையையும் இந்த அழகையும் தான் நான் விரும்புகிறேன். இவற்றிற்காகவே வாழ்கிறேன். இவற்றிற்காகவே சாவேன்.

மகாத்மாகாந்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனப் பிரயோகம்

மக்கள் வாழ்க்கை சீரும் சிறப்பும்பெற வேண்டின் அறிவு, ஆற்றல், முயற்சி என்பன முக்கியமானதாகும். பலதரப்பட்ட முற்போக்குகளை நாம் விரும்புகின்றோம். ஆனால் அம் முற்போக்குகள் கற்றலின்றிச் சாத்தியமாகா. கற்றல் பற்றிய பிரச்சினை பல்வேறு உளவியல் அறிஞர்களால் ஆராயப்பட்டு அவர்களால் கற்றலில் முக்கியமானவையென எடுத்துக் கூறப்பட்ட மூலக் கூறுகளில் கவனமும் ஒன்றாகும்.

கவனம் என்பது மனதை ஒரு பொருளில் செலுத்துதலாகும். நம்மை எண்ணற்ற தூண்டல்கள் தாக்கியவண்ணம் இருக்கின்றன. சூழ்நிலையின் கண்ணுள்ள தூண்டல்களில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து அவற்றிற்கேற்ப துலங்குவதையே நாம் கவனம் என்று கூறுகின்றோம். மனம் ஓர் ஒளிப் படப்பெட்டி போன்றது. ஓரத்தில் இருக்கும் பொருட்கள் பதியாமல் குவியத்திலுள்ள பொருட்கள் மாத்திரமே ஒளிப்படத்தில் பதிவது போல மனதின் குவியத்திலும் ஏற்படும் பொருளைக் கவனம் என்கிறோம்.

நமது உள்ளச் செயல்கள் தவளைப் பாய்ச்சல் போல் அங்கும் இங்கும் எல்லாவற்றிலும் புகுவதால் மனம் செயற்படும் போது எதுவோ ஒன்றைக் கவனிப்பதே நியதி. அப்பொழுது நாம் கவனிப்பதில் ஒன்றைமட்டும் தேர்ந்தெடுத்து நினைப்பின் மையத்தில் வைக்கின்றோம். அவ்வாறு நாம் ஒன்றைக் கவனிக்கும்போது அதற்கு வேண்டிய உணர்வு நினைவுப் பிரதேசத்தில் அவசியமாதற்கு வேண்டிய மனப் பொருத்தங்களை அமைத்துக் கொள்கிறோம். நாம் சுற்றுடலில் பல பொருட்களைக் கவனித்தாலும் அவற்றுள் கவனிக்கப்படும்பொருள் மாத்திரமே நமக்குத் தெளிவுறுகின்றது; மற்றப் பொருள்கள் மங்குகின்றன; கவனம் மனதின் தெளிவுச் சக்தியை அல்லது பொறுக்கி எடுக்கும் வல்லபத்தைக் குறிக்கின்றது; இத்தேர்ச்சியே ஒருவனின் அறிவு, மனத்திண்மை, ஒழுக்கம் போன்றவற்றில் அவனடையும் முன்னேற்றத்தைத் தீர்மானிக்கின்றது.

நாம் ஒரு விடயத்தைச் சில வினாடிகள் வரையில் தான் சேர்ந்தாற்போல் கவனிக்க முடியும். ஆனால் நாம் அனுபவத்தில் ஒரு பாடத்தையோ ஒரு மணி அல்லது இரு மணி நேரம்வரை தொடர்ந்து கவனித்ததாக எண்ணுகின்றோம். இது தவறானதே; நாம் அவ்விதம் கவனிக்கையில் பலமுறை நம் கவனம் சிதறுண்டிருக்கும். ஆயினும் நாம் வலிந்து பிடித்து நிறுத்தியிருப்போம். அல்லது நாம் கவனிக்கும் விடயத்தில் வேறு வேறு அம்சங்கள் தொடர்ந்து வந்திருக்கும். நாம் அவற்றைக் கவனித்திருப்போம்; நாம் சாதாரணமாக ஒரு விடயத்தை மட்டுமே நினைவின் மையத்தில் இருத்திக் கவனிக்க முடியும். ஒன்றுக்கதிகமானவற்றைக் கவனிப்பதென்பது முடியாத காரியம்; சிலர் ஒன்றுக்கதிகமானவற்றைக் கவனிக்கிறார்களென்றால் அதற்கிருகாரணங்கள் கூறலாம். ஒன்று அவர் செய்பவற்றில் கவனமே அவசியமில்லாதபடி சுபாவமாயிருக்கும். ஆயின் உண்மையில் அவர் மற்றொன்றை மாத்திரமே கவனிப்பார். உதாரணம் நடந்து கொண்டே பேசுவது. இன்னொன்று ஒருவர் பலவற்றைக் கவனிக்கும் போது அவர் கவனம் ஒன்றிலிருந்து மற்றொன்றிற்குத் தாவிக்கொண்டே இருக்கின்றது. மணிக்கடை வியாபாரி இதற்கோர் உதாரணமாகும்;

கவனமின்மை என்பது எவருக்குமே பொருந்தாதது; ஒன்றையுமே கவனியாது ஒருவர் இருக்கமுடியாது. கவனத்தை ஈர்த்தல் எல்லாத்துறைகட்குமே வேண்டற்பாலது; கற்கும் மாணவன் கற்பிக்கும் ஆசிரியர் விடயத்தில் கவனம் செலுத்தவில்லை எனின் கற்பித்தல் வெற்றிபெற முடியாது. இன்னும் கற்பிக்கும் ஆசிரியரின் நோக்கமும் கற்கும் மாணாக்கர்களின் கவனத்தை ஈர்ப்பதாக அமையவேண்டும்.

"காலை வேளை கமலம் வீட்டுக்
கோழி எட்டுக் குஞ்சுடன்
சோலை ஓரம் இரைகள் தேடிச்
சுற்றிச் சுற்றி வந்தன"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனத் தொடங்கும் இப்பாடல் பாலர் வகுப்பில் அபிநயத்துடன் ஆசிரியரால் கற் பிக்கப்படுகின்றது. இசையோடு கலந்த இவ் வெளிய பாடலின் கருத்துக்களை ஆசிரி யர் அபிநயித்துக்காட்டி இசையால் மெரு கூட்டி நயப்படுத்துகின்றார். சிறு மாணவ உள்ளங்கள் ஒரு மனப்பட்டு இசைக்கும், செயலுக்கும், தாளத்திறனுக்கும் வசப் பட்டுக் கவனப்பிரவாகத்தால் கொண்டுள்ள கவர்ச்சியும், பாடமுடிவும், கவனத்தின் முதன்மைக்கும் சிறந்த கற்பித்தலுக்கும் ஓர் எடுத்துக்காட்டாய் நிற்கின்றது. எந்த வகைப் பாடத்திலும் ஆசிரியரின் வழி நடத் துதல் நல்ல பலனளிக்க வேண்டும். அப் பாடத்தில் மாணவர் கற்றலின்போது கொள்ளும் கவனத் தகைமை அதற்குத் துணையாய் மிளிரவும் வேண்டும். மாண வர்களின் கவனம் சிதறுண்ட நேரங்களில் ஆசிரியர் அவர்கள் கவனத்தைப் பலவழி களாலும் தம்பக்கம் திருப்புதல் வேண்டும்.

ஆசிரியர்களாகிய நாம் பல யுக்தி முறை களையும் கையாண்டு மாணவர்கள் கவனத் தைக் கவரலாம்.

1. **வேலை மாற்றம்:** பாடங்களை மாற்றி யமைத்தல். இடையிடை ஓய்வு கொ டுத்தல். ஒரேபாடத்திற் பலதர வேலை இணைத்தல்.

2. **வலிமை:** மாணவர் கவனிக்க வேண் டும் விடயங்களைப் பெரிதாக எழுதல். அதன்கீழ்க் கோடிடல். அழுத்தம் திருத்தமாக உரக்கச் சொல்லல்.

3. **பருமன்:** பிரத்தியட்ச பொருட்கள் கொண்டு பாடங்களைப் போதித்தல்.

4. **விசேடத் தன்மை:** திட்டமுள்ள உரு வம் அமைத்தல்.

5. **ஓர் இன அமைப்பு:** ஒன்றையே பல இடங்களில் அமைத்து வைத்தல்; முக் கியமான ஒன்றைப் பலமுறை சொல் லல்.

இவைபோன்ற முறைகளை ஆசிரியர் கையாளலாம். குழந்தைகட்குக் கவர்ச்சி யில்லாதவற்றில் கவர்ச்சி ஏற்படும்வகை யில் அவற்றை இயல்பூக்கங்களுடன் இணைக்க வேண்டும். குழந்தைகட்கு அலுப் பும் களைப்பும் ஏற்படாதவாறு பள்ளி வேலைகளை அவர்கள் விரும்பியபடி தாமே செய்ய வாய்ப்பளிக்க வேண்டும். சில மாணவர்களுடைய கவனம், நோய், வெளிச் சத்தம் காற்றின்மை, அதிகவெளிச்சம், அசௌகரியமான இருக்கைகள் என்பன வாலும் தடைப்படுகின்றது. இவற்றை ஆசிரியர் ஆராய்ந்து அவற்றிற்கேற்ப மாண வரை வழிநடத்தல் வேண்டும்.

கவனம் வாழ்க்கையின் வெற்றிக்கும், பண்பாட்டிற்கும், முன்னேற்றத்திற்கும் அவசியமான தொன்றென்பது மறுப்பில் லாததே. சிறுர் கவனத்தைப் பெற்று ஆசி ரியரான நாம் கல்வித் துறையில் அவர்க ளுக்குப் பெருந்துணை புரிதல் தலையாய கட னன்றே.

திருமதி. ந. கெங்காதரம்,
விடுகை வருடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயன்பு

1. இயல் இசை நாடகம்
இணைந்த செந் தமிழினில்
கயல் விழித் தாய்க்குலக்
கருணையைக் கழறிட
செயல் மிகு ஈசனும்
செயிர் கனைந் துதவிட
மயல் நிறை வேடவர்
மல ரடி பணிந்தேன்.

2. புது நில வெனவே
பூவை யள் ஒருத்தியும்
மது நிறை மலராய்
மாத வள் ஒருத்தியும்
இது முறை யெனவே
ஈரு டல் உயிரோ
பொது வென நினைந்தே
பூமி யில் இருந்தார்

3. இனித் திடுஞ் சிரிப்பில்
இரு வரும் சேர்ந்தார்
பனித் திடுந் துயரை
பகிர்ந் தனு பவித்தார்
தனித் தவர் எதையுந்
தர ணியிற் செய்பார்
கனிந் தவர் வாழ்வில்
கருத் தொரு மித்தார்.

4. இவ் வித மினிதாய்
இருக் குமவ் வேளையில்
செவ் விதழ் மயிலார்
செகம் வியந் தேற்றிட
கவ் வைக ளகலக்
கடி மண மேவினர்
நவ் விய இளையோர்
நனி யுற வாழ்ந்தார்.

5, இல் லற மேற்ற
இரு திறத் தாருமே
நல் லற மோங்கும்
நவை யறு வாழ்வினில்
குல் லகம் நீங்கிக்
குது கல மோங்கிட
கல் லெழில் போன்று
கருத் தரித் திட்டார்.

6 கரு வளர்ந் திடவே
களித் தனர் மாதரும்
பரு வமும் நிலையும்
பத முறப் பாரினில்
இரு வரு மொன்றாய்
எழில் மக வீன்றனர்
ஒரு மக வீயவே
ஒரு மையும் குலைந்தார்.

7. பொங் கிய மகிழ்வினில்
பொலி ந்தன ளொருத்தி
மங் கிய துயரினில்
வதங் கின ளொருத்தி
நங் கைய ருறவினில்
நிகழ்ந் தது பிரிவு
வங் கணந் திரிந்து
வளர்ந் தது பகைமை.

8. அஞ் சுக மென்ன
அவ னியில் வந்தமென்
பிஞ் சுமு கத்தைப்
பிரிந் தவ வஞ்சியும்
மிஞ் சிய மற்ற
மத லையைக் கண்டனள்
வஞ் சனை செய்து
வரித் தன ளந்தோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. தன் னெழில் மகவைத்
தர மறுத் திடவே
மன் னிடம் மொழிந்து
வருந் திய பொழுதே
நன்மனத் தரசன்
ஞயம் பட வினவிட
துன் மனத் தவளும்
துடித்த் தழு தனளே.

10. உண் மையை உணர
உய ரறி வரசனும்
கண் கலங் கிடுமக்
கனி யென வினிமைப்
பெண் ணிரு வரையும்
பரி வுட னழைத்துமே
கண் மணி மகவைக்
கொணர் கென மொழிந்தான்.

11. பூங் குயில் போன்ற
புதல் வனை நீவிரும்
பாங் குட னீங்கு
பகர்ந் திட வேண்டுமின்
மாங் கனி போன்று
மதலை யைக் கீறிட
ஓங் கினன் வானை
ஒருத் திந தடுத்தாள்.

12. வேண் டாமி வனென்
மத லையு மில்லை
மாண் டால ழகு
மணி யெனக் கில்லை
தீண் டாத வனை
துய ருறு மங்கைக்
கீண் டே யருளும்
எனதுயி ரன்பை.

13. என் றவ ளழுது
இயம் பின ளங்கு
கன் றினைப் பிரியும்
கற வையை நிகர்த்தாள்
நின் றிருந் தவளோ
நிரு பனை விழித்து
நன் றது பகிர்தல்
நிய தியென் றனளே.

14. பரித் தவள் உதரம்
பத றிய துணர்ந்து
சிரித்த நல் லரசன்
சிசு வினை யெடுத்து
விரித் தவள் கரத்துள்
வியந் திடத் திணித்து
உரித் திது உனக்கு
உறு தியு மிதுவே.

15. என் றுரைத் திடவே
எழில் மயி லாளும்
பொன் னிகர் மகனைப்
புயத் திட ஏந்தி
தன் மனை புகுந்தாள்
தனை யனை யடைந்தாள்
தேவ தேவ னும்
இராச னைப் பணிந்தாள்.

திருமதி. ஆகத்தம்மா தேவசகாயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ළමා කාලය

හැම් ජීවිතයක්ම හොඳ ජීවිතයක් කර හැනීම අත්‍යයවශ්‍යය දෙයකි. සැම කෙනෙකුම නැත් කරනු ලබන්නේද සමාජයේ හොඳ මිනිසෙකු වී සැපවත් ජීවිතයක් ගත කිරීමටය. නමුත් මෙම නගමනය ඇතැමෙක් ගනු ලබන්නේ ළමා කාලය ඉක්මවුවාටත් පසුවය. එහෙත් ළමා කාලයේදීම තම ජීවිතය හැඩ ගසා ගත්තේ නම් මෙය මේසේ සිදු නොවේ. සැම මිනී සෙකුගේම ජීවිතය ළමා කලයේ ක්‍රියා කාරිත්වය උඩ නිබෙන හෙයින් ළමා කාලයේ ඇති වවිනාකම කිව හැකිද එය වැට හෙන්නේ ළමා කාලය ගත කරන අවධියේදි නොවේ. ළමා කාලය ඉක්මවා බාහිර ලෝකය හා ජීවත් වන්නට පටන් ගත් විටය.

කුඩා අවධියේදි ළමයාට ජීවිතය ගැන එතරම් අවබෝධයක් නැත. ඔහු හොඳ හෝ නරක නොදනි කුස ගනිවූ විට ආහාර ගැනීමටත් එය නො ලැබූ විට හැඬීමටත් පමණක් දනී. එහෙත් කෙමෙන් කෙමෙන් ඔහුට හොඳ නරක වැටහෙනිනට පටන් ගත් විට ළමයාගේ හැසිරීම ගැන දෙමා පියන් වඩාත් සැලකිලිමත් විය යුතුය. දරුවාට හොඳ නරක කියා දිය යුතුය. අවසථාවට සුදුසුවන පරිද්දෙන් ආදරයෙන් අවවාද අනුශාසනා කළ යුතුය. අන්නිමේදි ඔහුට සුදුසු අධ්‍යාපනයක් ලබා දිය යුතුය. ළමයාගේ අනාගතය රදා පවතින්නේ දෙමව්පියන් අතේය. තම දරුවා සුවගට යැවීමට ඔහු බාරය. කුඩා අවධියේදි ළමයාගේ මුලික අධ්‍යාපනය සතුටුදායක හොඳ එකක් විය යුතුය, නො එසේම ළමයා බස භදුරන්නට පටන් ගත් දා සිටම අයිඤ්ඤි නො හොඬිනා ගති තුණ සිරිත් විරිත් විරිත් දකින්නට ලැබේ නම් ඔහු වැඩිවියට පත්වුවද ඒ සිරිත් විරිත් ගති තුණ අත් නො හරියි.

කෙනෙකුගේ හැඩ ගැස්ම කෙරෙහි පරිසර යද බෙහෙවින් බලපානු ඇත. විශෙෂයෙන්ම කුඩා අවධියේදි පරිසරය බලපායි. ළමා වියේදි නම ඇසට පෙනෙන විවිධ පුද්ගලයන්ගේ හැසිරීම කථාව ක්‍රියාව ආදි හැම අනුකරණය කරයි. ළමයාගේ සිරිත වන්නේ අනුකරණය කිරීමය. එම පුද්ගලයන් ශීලාචාර යහපත් ගති තුණ වලින් හෙබි පුද්ගලයන් නම් එම ගති තුණද දරුවා කෙරෙහි බලපානු නො අනුමානය. හොඳ වැඩිහිටි ඇසුර. කල්‍යාණ මිතුර, ඇසුර. ආදි හොඳ පිරිසයකේ ලබා දිය යුතුය. පරිසරය නිසා කෙනෙකු හොඳ වන්නටත් නරක වන්නරත් පුළුවන. මං පහරන හොර මැරකම් කරන, දෙමව්පියන්ගේ, දරුවෝද ඔවුන් අනුගමනය කරයි. එවැනි දෙමව්පියන්ද තම පුතාට අධ්‍යාපනයක් දෙන්නේ නුසුදුසු අංශයෙනි. අන්නිමේදි පුතාද තරුණයෙකු වූ විටෙක තම පියාටත් වඩා දරුණ, සොරෙකු මං පහරන් නෙකුවේ. කවදා හෝ නීතියේ රුහැනට අසුවී දඩුවම් මිදින්නට සිදුවූ විටකය. ඔහුට සිහියට නැගෙන්නේ තවත් ගමන් කර ඇත්තේ නුසුදුසු මානියක බව අන්නිමේදි තමාගේ ළමා කාලය මතක් කරමන් මම ඉගෙන ගන්න අවසථාවක් නිබියදිත් ඉගෙන ගත්තේ නැහැනේ, නැවතත් ඒ ළමා කාලය ලබන්න ඇත්නම් යනාදි වශයෙන් සිත සිතා දුක්වෙයි. එහෙත් අවස්ථාව පසුවී හමාරය. අද සමාජයේ මෙසේ දුක් වෙන අය කී දෙනෙක් සිටිනවාද?

සමාජයේ හොදින් අනුන්ට කරදර යක් නොවන අයුරින් ජීවත්වීමට පුහුණුවක් නිබිය යුතුය. එම පුහුණුව ලබා දෙන්නේ අධ්‍යාපනයෙනි. භික්ෂු,ඉවසීම ආදි ගුණ ධර්මයන්ද ඒ අතරම ලබා දෙයි. ඉගෙන ගත් මිනිසා කිසි විටෙක අන්‍යන්ට කරදර සිදුවන අයුරින් ජීවත් නොවෙයි. සොරකමේ, සුරාපානයේ,දූ කෙළියෙ ආදිනව ඔහු හොඳින් දනී. වැරදි මාගියේ නොයයි. තම ජීවිතය සාර් එක කර ගනියි. මේ අධ්‍යාපනය කළ යුත්තේ ළමා කාලයෙනි. ළමා කාලය නිකරුනේ පසුකර සමාජයට ගොස් සමාජයේ ජීවත්වන්නට හැකියාවක් නොමැතිවූ විට නැවතත් ළමාකාලය ලබා ඉගෙනීම කළ නොහැක. ඒ සියල්ල අතින්ම පුහුණුවක් ලැබූ කෙනෙකුට සැපවත්ව සමාජයේ ජීවත් වීමට ලැබෙනවා ඇත. ඔහුට ළමා කාලය සිහියට නගමින් අනන කාලය පැහැර හැරියයි, සිතා දුක්වන්නට උවමනා නැත. ඒ වෙනුවට ඔහුට කාලයේ නිදහල ගත්තේ යයි කියා සතුටු විය හැක.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

රටක අනාගතය රඳා පවතින්නේ බාල පර පුර අතේය. රටේ අගනා වස්තුව වජිනාලිය ළමා පර පුරයි. උගත් ජනතාවක් සිටියොත් පමණී. රටක් දියුණුව කරා ගමන් කර විය හැක්කේ. රටේ ඇතිවන දරුණු මහීමැරුම්, සොරකම්, දූෂණ ආදියට හේතුව හොඳ ළමා පරපුරකින් සැදුන සමාජයක් නොවන හෙයිනි.මේ අපරාධ දිනෙන් දිනම වාඩිවන්නේ මන්ද? මෙවැනි රටත් කිසි දිනක දියුණුව කරා යයිද? කලකදී කුඩා දරුවා තරුණයෙක් වේ. ඒ කුඩා දරුවා දරු පව්ලක පාලකයාවේ. පාලකයා නොයෙකුත් අමානුෂික ක්‍රියා කරන, නිරිසත් ගති ඇති කෙනෙක් නම් ඔහුගේ පරපුරද ඔහු අනුගමනය කරයි. මෙවැනි සිය දහස් ගණන බිහිවීමෙන් සිදුවන්නේ කිමෙක්ද? රටටත් සමාජයටත් තමන්ටත් අනර්ථයකි. ළමා කාලයනි නිසිඵල නොලා නොගත් ළමා කාලයේ වැටදී මග ගමන් ගත් ඇතැම් දනෝ කොපමණ සංඛ්‍යාවක් නිගාකමින් ඇවිදිද්ද? එනි වරද කාගෙද තමාගේමය. මුළු ජීවිත කාලයම එසේ ගත කොට අන්තිමේදී මරු වැළඳ ගනී. ඔහුට වත් එයින් වැඩක් උනේද? මෙවැන්නෝ සමාජයට ද බරක් වන්නේය.

හොඳ ළමා පරපුරක් සිටීමෙන් එසේ සිදු නොවේ. ඔව්හු තමන්ටත් රටටත් ජාතියටත් ආගමටත් සේවයත් කරයි. මෙයින් පෙනෙන්නේ ළමා කාලය තරම් අගනා කාලයක් තවත් නොමැති බවයි. කෙනෙකුගේ ජීවිතය වාසනාවත් හෝ කාලකන්නී කර ගන්නේ ළමා කාලයේ හැසිරීම උඩය. ජීවිතේ හොඳ නරක ළමා කාලයෙහි රඳා පවතින බව් ඔබට වැටහෙනවා ඇති. මව්පියා දින්ගේ, ගුරුවරුන්ගේ අවවාදා අනුශාසනා පිළිගැනීමෙන් නරක පිරිසරය දෙසට නැඹුරු නොවෙමින් ළමා කාලයේ ඇති නියම වලය ලැබ ගන්නට ළමා ඔබ උත්සාහ ගන්න එව්ට ඔබ කලකදී තරුණයෙකු බවට පත්වූ විට රටේ ඉදිරි ගමන අනාගතය ඔබ පිටම පැවරේ. එය විශාල වගකීමකි. ළමා කාලයේ හරි මගහැසේනාම් ඒ වගකීම පැහැර නොහැර තමාටත් රටටත් සේවයත් ක්‍රමෙන් යහපත් පුර වැසියෙකු මෙන් ජීවත්වීමට ඔබට ලැබෙනවා ඇත. ඔබේ ජීවිතය ඔබ සතුවින් ගෙවන්නට බලා පොරොත්තු වන්නේ නම් විනීතව ශීලාචාරව ඉගෙනීම කරන්න. එව්ට ළමා වියේ ගත් මහ තරුණ වියේදී බලා සතුටු විය හැකිසි.

යෝ. ආරුමුගම් මෙතෙවිය
පළමුවැනි අවුරුද්ද

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னி வளநாடு

1. மாண்புறு சீர்வன்னி வளமுடைய நாடு
மனமுடனே யாவருக்கும் உணவளிக்கும் நாடு
காண்டரிய உயர்மரங்கள் கவின்கொடுக்கும் நாடு
கனியுதிர்க்கும் சோலைகளும் மிகவுடைய நாடு
ஆனிரைகள் புல்மேந்து பால்சுரக்கும் நாடு
அனைவரையும் அன்போடு அழைத்திருந்து
கான்யாறும் சிறுவரையும் கலந்திலங்கு நாடு
கடவுளர்க்கும் இருப்பிடமா யமைந்ததிரு நாடு.

2. பாலைமரம் பழஞ்சொரியப் பன்றிகனி மேய்ந்து
மூலைகளிற் றுயில்கொள்ளும் முடுகிவரும் வேட்டை
யாளரதிர் வேட்டுக்கு அலமந்து ஓடும்
அருகிருந்து குழுவன்கள் அவர்மீது பாயும்
காலைவரு கதிரவனின் கண்ணெதிரில் நிற்க
கரவுடைய புலியினங்கள் புதர்களிற்கண் துஞ்சும்
வேளையென நினைத்தெங்கும் வேழங்கள் சென்று
வெம்புதினை தின்றவைதம் வெம்பசியை ஆற்றும்.

3. மானினங்கள் புல்மேய வயல்களிலே பாயும்
மயங்கிவந்து மலைகளிலே தங்கியுற வாடும்
தேனிகர்க்கும் மொருயாரும் சென்றங்கயல் அழைப்பார்
தெம்மாங்கின் இசைபாடிச் செம்மாந்து இருப்பார்
அன்றவர்தம் மொழிகேட்டு அருகணையும் மயில்கள்
ஆவலொடு வேலவனை நினைந்தவைகள் ஆடும்
ஓங்கிவளர் காடுகளை முறித்துண்ணும் களிறும்
உள்ளோடுங்கி ஓங்கார ரூபனைக்கொண் டாடும்.

4. ஆங்கொன்று மீங்கொன்று மாயெங்கும் குளங்கள்
அனைவர்க்கும் வாழ்வுதரும் அரணுறுநீர்த் தேக்கம்
பாங்கினிலே பயன்மரங்கள் பழுத்துக்கனி தூங்கும்
பக்கம்வரு மந்தியினம் பழங்களைப்பந் தாடும்
வீங்குநீர் மீன்துள்ளி மேதிகளிற் சாயும்
மேதிபொழி பால்விஞ்சி மடையெடுத்துப் பாயும்
தூம்பினிலே காத்திருந்து மீன்பிடிப்பர் பெண்கள்
துயர்தீர நீர்பாய்ச்சித் தொழில்புரிவர் ஆண்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. வண்டலொடு வருநீரை வயல்களிலே பாய்ச்சி
வருவிருந்தை யெதிர்நோக்கி விளவுகளா யாக்கி
கொண்டல்நிகர் குடிமக்கள் களியாடும் நாடு
கொற்றவரும் மற்றவரும் கொண்டாடும் நாடு
திண்டாடும் நிலைதீர்ந்து தேசமெங்கும் செழிக்க
திறமான நிலமிருக்க செய்துவளங் கொழிக்க
பண்டிருந்த உணவுவளம் நமக்கிருக்க வேண்டின்
பாரீரே வாரீரென் றழைத்திடுதல் நாடு.

செல்வி. சரஸ்வதி பாமலிங்கம்,
விடுகை வருடம்.

நம்முடைய குற்றங்கள் இவைகள் என்று தெரிவித்து அவைகளை நீக்கி, நன்னெறியை நமக்குப் போதிக்கின்றவர்களே நமக்கு உத்தம நண்பர்கள்.

ஔவையார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவியியற் கல்வியும் பாட ஆய்வும்

சோ. செல்வநாயகம்
புவியியல் விரிவுரையாளர், இலங்கைப் பல்கலைக் கழகம்.

புவியியற் கல்விக்குப் பட ஆய்வு இன்றி யமையாத ஓர் அம்சமாகக் கொள்ளப்படுகின்றது. வெவ்வேறு துறைகளில், ஈடுபட்டுள்ளோருக்கு வெவ்வேறு வகையான கருவிகள் பயன்படுவன போன்று புவியியற் றுறையில் ஈடுபட்டுள்ளோருக்குப் படம் முக்கியமானதொன்றாய் அமைகின்றது.

பட ஆய்வு என்பது மிகவும் எளிதான பயிற்சி என்று கொள்ளமுடியாது. நீள அகல உயர இயல்புகளை உள்ளடக்கிய முப்பரிமாணத் தன்மையினைக் கொண்ட நிலப்பகுதி படத்தில் தட்டையாகக் காட்டப்படுகின்றது. இந்நிலப் பகுதியிலுள்ள விபரங்கள் யாவும் குறியீடுகள் மூலம் காட்டப்படுகின்றன. ஆகவே, படஆய்வினை மேற்கொள்ளுவதற்குமுன் குறியீடுகளைச் செவ்வனே பகுத்துணர்ந்து அவை குறிக்கும் விபரங்களைத் தெளிவாக விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். இவ் விபரங்கள் யாவும் ஒன்றோடொன்று எவ்வாறு தொடர்புடையனவாக உள்ளன என்பதனையும் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். பட ஆய்வினைத் தொடங்குவதற்கு இத்தகைய ஆரம்ப அறிவு அவசியமாகும்.

புவியியற் கல்வி போதிக்கும் ஆசிரியர் படஆய்வுப் பயிற்சி உடையவராகவிருப்பது அவசியமாகும். படஆய்வில் திடீரெனப் புலமை பெற்று விடமுடியாது. தொடர்ச்சியான பயிற்சி மூலமே படஆய்வில் தேர்ச்சி பெறலாம். தேர்ச்சிபெற்ற ஆசிரியரே படங்களில் காட்டப்பட்டுள்ள விபரங்களையும், குறியீடுகளையும் பின்பற்றி நுட்பமாக அறிந்து மாணவர்க்கு விளக்கமுடியும். படஆய்வில் பூரண தேர்ச்சி பெறுத ஆசிரியரின் படஆய்வுப் போதனையில் திட்பமோ தெளிவோ இருக்கமாட்டாது.

பட விளக்கமும் வெளி ஆய்வும்:

படங்கள் குறிக்கும் பகுதிகள் பற்றித் தெளிவாக அறிந்து கொள்ளுவதற்கு அப்பகுதிகளை நேரடியாக அவதானித்திருப்பது அவசியமாகும், வெளியாய்வுப் பயிற்சி இல்லாதோர் படங்களைத் திருத்தமாக ஆராய்ந்து அறிவுறுத்தும் ஆற்றல் குறைந்தவராவர். மேலும், குறிப்பிட்ட ஒரு நிலப் பகுதியிலுள்ள எல்லா விபரங்களும் படத்தில் குறிக்கப்பட்டிருக்கும் என்று எண்ணுவது தவறாகும். படம் அமைக்கப்பட்ட தேவையை அனுசரித்துச் சில முக்கியமான தன்மைகளே அப்படத்திற் காட்டப்பட்டிருக்கும். எனவே, எவ்வெக் காரணங்களுக்காகப் படங்கள் அமைக்கப்படுகின்றனவோ அவ்வக் காரணங்களைச் சார்ந்த விபரங்களே படங்களிற் குறிக்கப்படும். படங்களை ஆராய்ந்து விளக்கும் பொழுது இந்த உண்மையை உணர்ந்து கொள்ளுதல் அவசியமாகும். ஆகவே, குறித்த ஒரு நிலப் பகுதி பற்றிய பூரணமான அறிவினைப் படங்களின் மூலம் பெற்றுவிடலாம் என்று எண்ணுவது தவறாகும். வெளியாய்வு மூலம் நேரடியாகச் சென்று அவதானித்துத் தெரிந்து கொள்ளும் அறிவே பூரணமான அறிவு என்று கூறலாம். வெளியாய்வின் மூலம் குறித்த நிலப்பகுதியின் தரைத்தோற்ற வேறுபாடுகள், காலநிலைத்தன்மை, மண்வகை, தாவரவகை, நீர்வளம், நிலப் பயன்பாடு, குடியிருப்புக்கள், போக்குவரத்துமுறைகள், பட்டினவாக்கம் முதலான பலவகையான புவியியற் தன்மைகள் பற்றியும் தெளிவாக அறிந்து கொள்ளலாம். பிரித்தானிய புவியியற் கருத்து வளர்ச்சிக்குப்பெரிதும் துணை புரிந்தவரும், தலையாய புவியியலறிஞருமான 'மக்கிண்டர்' என்பார் புவியியலை வகுப்பறையிற் கற்பது என்பது முடியாத ஒன்று என்றும், வெளியாய்வின்மூலம் நேரடியாக அறிந்து கொள்ளுவதே உண்மையான புவியியலறிவு என்றும் குறிப்பிட்டுள்ளார். இவரது கூற்று எக்காலத்துக்கும் பொருத்தமான தொன்றாகும். வெளியாய்வுப் பயிற்சி உடையவர்கள் படங்களை எளிதாகவும், நுணுக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகவும் ஆராய்ந்து விளக்கும் ஆற்றல் பெற்றிருப்பர்.

இலங்கையின் இடவிளக்க வியல்புகள் ஓரங்குல அளவினைக் கொண்ட (ஓர் அங்குலம் = ஒரு மைல்) படங்களிற் குறித்துக் காட்டப்பட்டுள்ளன. இலங்கை 74 பிரிவுகளாக வகுக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவுக்கும் ஒவ்வொரு தனிப்படம் அமைக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. இவை இடவிளக்கப்படங்களாதலால், இடவிளக்கவியல்புகளுள் முக்கியமான தன்மைகள் இப்படங்களில் குறித்துக் காட்டப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்றான கண்டிப்பகுதி பற்றிய படத்தினை மாணவர்க்கு எடுத்து விளக்கும் பொழுது குறியீடுகளைப் பின்பற்றி விபரங்களை விளக்க வேண்டியிருக்கும். இப்பகுதியினை நேரடியாகப் பார்த்து அறிந்திருந்தால் படத்திற் குறியீடுகள் காட்டும் விபரங்களை நேரடியாக அவதானித்த விபரங்களோடு தொடர்பு படுத்திப் பார்க்க முடியும். நேரடியாக அவதானித்துப் பெற்ற அறிவு காரணமாகப் படஆய்விலும் தெளிவு ஏற்படும்.

படஆய்வு என்பது ஒரு புதிய மொழியைக் கற்பது போன்றது. சமஸ்கிருதம், பாளி முதலான மொழிகளைக் கற்கும் பொழுது, முதலில் தமிழ் மொழியிலுள்ள உயிர் மெய் உட்பட்ட எழுத்துக்களைக் கற்று அறிவது போன்று எழுத்துக்களைப் பயிற்சிசெய்கின்றோம், பின் சொற்களையும், சொற்றொடர்களையும் அறிந்து வாக்கியங்களை வாசித்துப் பொருளுணர்ந்து கொள்ளுகின்றோம். மேலும் இம் மொழிகளில் தேர்ச்சி எய்துவதற்குத் தொடர்ச்சியான பயிற்சியும் அவசியமாக உள்ளது: படஆய்வும் அத்தகையது எனலாம். படஆய்வில் முதன் முதலிற் படங்களில் உபயோகிக்கப்படும் குறியீடுகளைத் திருத்தமாக அறிந்து கொள்ளுதல் வேண்டும். படங்களில் வழக்கக் குறியீடுகள், எழுத்துக்கள், நிறச்சாயைகள், அளவுத்திட்டம், திசைகோட்சேர்க்கை முதலான பல அம்சங்கள் குறிப்பிடப்படுகின்றன. இடவிளக்கப் படங்களிற் காட்டப்பட்டுள்ள விபரங்களை அறிந்து கொள்ளுவதற்கு மேற்குறித்த அம்சங்களை முதலிற் தெளிவாக அறிந்து கொள்ளுதல் வேண்டும். புவிச்சரிதவியற் படம், காலநிலைப்படம், நிலப்பயன் பாட்டுப்படம் முதலிய பிற படங்களில் அவ்வப் படங்களுக்குப் பொருத்தமான குறியீடுகள் எடுத்தாளப்படுகின்றன. ஒரு மொழியைக் கற்கும் பொழுது எவ்வாறு அம்மொழியிலுள்ள எழுத்துக்களை முதலிற் கற்றறிந்து கொள்ளுகிறோமோ அவ்வாறே படங்களின் குறியீடுகள், எழுத்துக்கள், அளவுத்திட்டம் முதலான அம்சங்களையும் அறிந்து கொள்ளுதல் வேண்டும். இவற்றைப் பின்பற்றியே படங்களில் காட்டப்பட்டுள்ள விபரங்களை அறிந்து கொள்ள முடியும். மொழித் தேர்ச்சி தொடர்ச்சியான பயிற்சிமூலம் ஏற்படுவது போன்று படஆய்விலும் தொடர்ச்சியான பயிற்சி மூலமே திறமை எய்தமுடியும்.

விரிவான பின்னணி அறிவு:

படஆய்விற் திறமை பெறுவதற்குத் தொடர்ச்சியான பயிற்சியோடு படம்குறிக்கும் பகுதி பற்றிய பின்னணி அறிவும் அவசியமாக அமைகிறது. உதாரணமாக, இலங்கையின் ஓரங்குல இடவிளக்கப்படங்களைப் பகுத்தாய்ந்து விளக்குவதற்கு, இலங்கைபற்றிய பொதுவானபுவியியலறிவு இன்றியமையாதது. இலங்கையின் புவிச்சரிதவியலையும், பௌதிகவியல்புகளையும், பண்பாட்டியல்புகள் சம்பந்தமான விபரங்களையும் ஏற்கனவே அறிந்திருந்தால் இடவிளக்கப் படங்களிற் குறியீடுகள் மூலம் காட்டப்பட்டுள்ள விபரங்களைத் தெளிவாக உணர்ந்து கொள்ள முடியும். இலங்கை பற்றி வெளியாகியுள்ள பொதுவான புவியியல் நூல்களைக் கற்பதன்மூலம் இத்தகைய பின்னணி அறிவினைப் பெற்றுக் கொள்ளலாம். அல்லாமலும், வசதியான பொழுது, பொருத்தமான இடங்களிற் சிறிதளவுக்கேனும் வெளியாய்வுப் பயிற்சியினைப் பெற்றிருப்பதும் நன்று. புவியியல் சம்பந்தமான பின்னணி அறிவும், வெளியாய்வுப் பயிற்சியும் படங்களைத் தெளிவாகவும் திருத்தமாகவும், பகுத்தாய்ந்துவிளக்கத் துணைசெய்யும்.

இடவிளக்கப்பட ஆய்வு:

மேலே குறிப்பிட்டது போன்று படஆய்விற் தேர்ச்சி, பயிற்சியால் அமைவதாகும். படத்திற் பயன்படுத்தப்பட்டுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வேளை நீ இல்லாமல் போனால் என்ன ஆகும் என்று நினைத்துப் பார்த்திருக்கிறாயா? நீ இல்லாமல் போனால் உன் குடும்பம் என்ன ஆகும் என்று நினைத்துப் பார்த்திருக்கிறாயா? நீ இல்லாமல் போனால் உன் குடும்பத்தின் நிலை

டப்படலாம். சிறிய அளவுத்திட்டத்தில் அமைக்கப்பட்ட படங்களில் இவ்வாறான விபரங்களைக் காட்ட முடியாது. படங்களின் அளவுத்திட்டத்தைப் பொறுத்துக் குறிக்கப்படும் விபரங்கள் வேறுபட்டு அமைகின்றன.

இலங்கையின் ஓரங்குல இடவிளக்கப் படங்களிற் பௌதிகப் புவியியல், பண்பாட்டுப் புவியியல் என்பன சம்பந்தமான விபரங்களுள் முக்கியமானவை தெளிவாகக் காட்டப்பட்டுள்ளன. இலங்கையைப் பொறுத்தவரையில் இப்படங்கள் பொருத்தமான படங்கள் என்று குறிப்பிடப்படலாம். மிகத்தானியா போன்ற மக்கள் மிகவும் நெருக்கமாக வாழும் பகுதிகளைப் பேரளவுத்திட்டங்களில் (1 : 25.000 அளவுத்திட்டம்) அமைத்துக் காட்டுவதே பொருத்தமாகும். குடியிருப்புக்கள், போக்குவரத்து, நிலப்பயன்பாடு முதலான விபரங்களை மேற்குறித்த அளவுத்திட்டங்களைக் கொண்ட படங்களிலேயே தெளிவாகக் காட்ட முடியும். இலங்கை போன்றநாடுகளிற் காணப்படும் பௌதிக-பண்பாட்டுப் புவியியல் விபரங்களை ஓரங்குல இடவிளக்கப்படங்களிலேயே தெளிவாகக் காட்டிவிடலாம்.

அளவுத்திட்டந் தவிர படங்களின் புறவோரத்தையடுத்து வேறு சில விபரங்களும் கொடுக்கப்பட்டிருக்கும். அயலாகவுள்ள படங்களை இணைக்கும் முறையில் இவ்விபரங்கள் கொடுக்கப்பட்டிருக்கும். தெருக்கள், புகையிரத வீதிகள், அகலக்கோடு — நெடுங்கோடு விபரங்கள் முதலானவை ஈண்டுக் குறிப்பிடத்தக்கவை. இவற்றோடு படத்தலைப்பு, படத்தொடர், படத்திசை கோட்சேர்க்கை, படம் வெளியிடப்பட்ட ஆண்டு, படவிளக்கம் முதலான விபரங்களும் கொடுக்கப்பட்டிருக்கும். இடவிளக்கப்படங்களைப் பகுத்தாய்வதற்கு முன் இவ் விபரங்களைப்பற்றி அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

பௌதிகப் புவியியல் விளக்கம் :

இடவிளக்கப் படத்திற் தரைத்தோற்றம் பலவித முறைகளினூல் காட்டப்பட்டிருக்கும். குறிக்கோடு, சமவுயரக்கோடு, நிறச்சாயை என்பன குறிப்பிடத்தக்கன.

இப்பொழுது தரைத்தோற்றம் பெரும்பாலும் சமவுயரக் கோட்டு முறையாற் காட்டப்படுவதுண்டு. மற்றைய முறைகளிலும் பார்க்க இம்முறை சிறந்ததாகும். சமவுயரக் கோட்டு இடைவெளி வெவ்வேறு நாடுகளில் வெளியிடப்பட்ட படங்களில் வேறுபட்டிருக்கும். 50, 100, 200, 1,000, 1,250, 1,500 அடி உயரங்களில் சமவுயரக் கோட்டு இடைவெளிகள் குறிப்பிடப்படுவதுண்டு. இலங்கையின் இடவிளக்கப் படங்களில் 100அடி உயர வேறுபாட்டிற் சமவுயரக் கோடுகள் காட்டப்பட்டுள்ளன. சமவுயரக் கோடுகள் குறைந்த இடைவெளியைக் கொண்டிருந்தால் தரைத்தோற்ற வேறுபாடுகளை நுட்பமாகக்காட்ட முடியும். இடைவெளி கூடக்கூடத் தரைத்தோற்ற உறுப்புக்களின் தெளிவு குறையும். சமவுயரக் கோட்டோடு இடவுயரங்கள், திரிகோணகணிதநிலையங்கள், பீடக்குறிகள் என்பனவும் குறித்துக் காட்டப்படலாம். தரையின் உயரவேறுபாடுகளை உணர்ந்து கொள்ள இவை துணை செய்கின்றன. இடவிளக்கப்படங்களிற் தரைத்தோற்ற வேறுபாடுகளோடு வடிகால்கள், நீர்நிலைகள் முதலான விபரங்களும் காட்டப்படுகின்றன. சமவுயரக் கோடுகள், குறியீடுகள் முதலானவற்றைப் பின்பற்றிப் பௌதிகப் புவியியல் சம்பந்தமான விபரங்களை விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். குவிவுச்சாய்வு, மலைப்புடை முனைப்பு (சுவடு), பள்ளத்தாக்கு, மேட்டுநிலம் குன்றுத்தொடர், மலையிடுக்கு முதலான பல உறுப்புக்களையும் தெளிவாக உணர்ந்து மாணவர்க்குக் கற்பித்தல் வேண்டும். சமவுயரக் கோடுகளின் அமைவை நிலவுறுப்போடு தொடர்புபடுத்தி விளங்கிக்கொள்ளுவதன் மூலமே மாணவர் தெளிவான அறிவைப் பெறமுடியும். மலையைப்பார்த்தறியாத மாணவன் சமவுயரக்கோடுகளின் போக்கைக் கொண்டு மலையை நிதானித்துக் கொள்வது யாவனையின் உறுப்புக்களை அவதானித்த குருடர்களின் கதையாகவே அமையும். எனவே, மாணவர்களைக் காலத்துக்குக்காலம் பிற பகுதிகளுக்குக் கூட்டிச் சென்று காட்டுவதன் மூலமே அப்பகுதிகள் பற்றி அவர்கள் நேரடியாக அறியமுடியும். இத்தகைய பிரயாண அனுபவம் மாண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்மாலை பூத்துயர்ந்த வரலாற்றுக்கதை :

இக்கதை நடைபெற்ற இடம் பாண்டிய நாட்டிலுள்ள மதுரை மாநகரம். அந்நகரத்தில் வாழ்ந்த ஒரு பெண்ணின் பெயர் மலர்மாலை. அவள் பூக்களைக் கொண்டு மாலை தொடுத்து விற்பனை செய்து வந்தாள். அவளுடைய தாயும் தந்தையும் அவளுக்கு மிகச் சிறு வயதிலேயே இறந்து விட்டனர். அவளுக்கு உறவினர் என்று யாரும் இல்லை. அவள் தனியாக வாழ்ந்து வந்தாள். அவள் தொடுக்கும் மாலைகளின் அழகும் மணமும் அவளுக்கு நல்ல வருவாயைத் தேடித் தந்தன. அவள் தன் வருவாயில் ஒரு பகுதியை ஏழை எளியவர்களுக்கு வழங்கி வந்தாள்.

மலர்மாலை தன் வீட்டின் அருகில் ஒரு சிறிய தோட்டம் அமைத்திருந்தாள். அதில் பல்வேறு வகையான பூச்செடிகளை வளர்த்து வந்தாள். அவள் தினமும் காலையில் எழுந்து தோட்டத்திற்குச் சென்று பூக்களைப் பறித்து வருவாள். பின்னர் அவற்றைக் கொண்டு மாலைகள் தொடுப்பாள். அவள் தொடுக்கும் மாலைகளில் மல்லிகை, முல்லை, பிச்சி, செண்பகம், தாமரை, அல்லி போன்ற பூக்கள் இடம் பெறும். அவள் மாலைகளின் அழகும் மணமும் மக்களைக் கவர்ந்தன. அதனால் அவளுடைய மாலைகளுக்கு நல்ல விலை கிடைத்தது.

மலர்மாலை தினமும் காலையில் மதுரை மாநகரின் முக்கிய வீதிகளில் மாலைகளை விற்பனை செய்வாள். அவள் குரல் இனிமையாக இருக்கும். அவள் "மாலை வாங்கலையோ மாலை!" என்று கூவி அழைத்தபடி வீதிகளில் நடந்து செல்வாள். அவளுடைய குரலைக் கேட்டதும் மக்கள் அவளை நோக்கி ஓடி வருவார்கள். அவள் விற்பனை செய்யும் மாலைகள் விரைவில் விற்றுத் தீர்ந்து விடும்.

மலர்மாலை தன் வருவாயில் ஒரு பகுதியை ஏழை எளியவர்களுக்கு வழங்கி வந்தாள். அவள் ஒவ்வொரு நாளும்

புவியியல் சமூகப் பாடந்தானே ?

விஞ்ஞான உலகில் விரைந்து ஓடத் துடிக்கின்றான் மனிதன். மானவ உலகில் தற்போது விஞ்ஞானத்தைச் சார்ந்த பாடங்களைக் கற்பதற்கு மாத்திரமே ஆர்வம் காணப்படுகின்றது. இந்நிலையில் தம்மால் முடியுமோ இல்லையோ என்ற தன்னம்பிக்கை ஆராயாமலே தவிக்கின்ற மாணவர், விரும்பிக் கற்கக்கூடிய பாடம் புவியியல். இது சமூகக் கலைகளில் ஒன்றாகும். இப்பாடத்தின் உட்பொருளை நோக்கின் அது, பௌதிக சமுதாய சூழ்நிலைக்கமைய மனிதன் எவ்வாறு நடந்து கொள்கிறான் என்பதை மானவன் விளங்கிக் கொள்வதற்கான முறைகள், சாதனங்கள் முதலியவற்றை விருத்தி செய்தல் என்பன அடங்கியுள்ளது என்றறியலாம்:

உதவும் சாதனங்கள் :

1: நேரடித் தொடர்பு
2: புகைப்படம்
3: தேசப்படம், வரைபடம்
4: வாசிப்பு வாழ்வு
5: பொருட்காட்சி

நவீனப் புவியியலின் அம்சம் விஞ்ஞான ஒழுங்கில் தெளிவாக விளக்கப்படுகின்றது. உலகிலுள்ள பல்கலைக்கழகங்கள் யாவும் புவியியலை ஒரு பாடமாகத் தமது பாடத்திட்டத்தில் அமைத்துள்ளன. 19-ம் நூற்றாண்டின் பின்னரைப்பகுதிலே பிரின்சர், ஒக்ஸ்வோட், கேம்பிறிச் பல்கலைக்கழகங்கள் புவியியலுக்குத் தனியிடமளித்தன:

போர்க்காலங்களில் புவியியல் பயிற்சி பெற்றோர் பல்வகைக் கடமைகளைப் புரிந்தனர். இவர்கள் தமது கடமைகளைப் பொறுத்தவரையில் சிறப்பான தொண்டு புரிந்தனர் எனலாம். புவியியலாளருக்கு விசேடவேலை வசதிகளும் கிடைக்கின்றன: தேசிய திட்டசபைகள், இடவிளக்க நிலையவைத்திட்டங்கள், பலநோக்குநதி வடிநிலத்திட்டங்கள், வளி மண்டல ஆராய்ச்சி, நகரமைப்புத் திட்டங்கள், நிலப்பயன் பாட்டு அளவைகள் மற்றும் பொறுப்பு வாய்ந்த திட்டங்களில் பணியாற்றக் கூடியவர்களாயிருக்கின்றனர்:

புவியியல் முற்றுகச் சமூக சீவியத்துடனே அல்லது பௌதிகவியலுடனே சேர்ந்ததன்று: புவியியல் பௌதிகச் சூழலுடன் மட்டுமல்ல தாவரம், விலங்கு போன்ற உயிர்வாழ்வனவுடனும் தொடர்புடையது: பௌதிகச் சூழலையும் மனித சமூகத்தின் செயல்களையும், தனித்தனியே கருதியமையால் மனிதவியல், பௌதிகவியல் எனப் பிரிவுபட்டது. அவற்றிலுள்ள வேற்றுமைகள் இறுதியில் ஒற்றுமையைக் கொண்டு வரும். பூமியில் மனிதன் தோன்றிய போதே இயற்கையாக அவன் பௌதிகச் சூழலை உணர்ந்துகொண்டான். அவன் தனக்கு அத்தியாவசியமான உணவு, உடை, உறையுள் என்பவற்றைத் தேட முயன்றான்: ஆரம்பத்தில் அவன் இயற்கையின் ஆதிக்கத்திற் பாதிக்கப்பட்டானெனினும் காலப்போக்கில் சூழலை உணர்ந்துகொண்டான்: எனவே சூழலிலுள்ள இயற்கைச் சக்தியுடன் ஒத்துழைக்க முயன்று அச்சக்தியின் போக்கிற்கமையத் தன்னை மாற்றியமைக்கக் கற்றுக்கொண்டான்: பின் படிப்படியாகத் தனது தேவைக்கேற்பச் சூழலை மாற்றியமைக்கத் தலைப்பட்டான். இதனைப் பொறுத்தளவில் ஆதிமனிதனும் ஒரு புவியியலாளன் என்றே கூறலாம்:

கிரேக்க அறிஞர்களே புவியியலுக்கு ஆதியில் தொண்டு புரிந்தார்கள்: தொலமி, பிளினி, பொம்பானியஸ்மேலா ஆதியோர் நூல்களை வெளியிட்டனர்: பிற்பட்ட காலங்களில் மதசம்பந்தமான அறிவைக் கொடுப்பதற்காக "இடவிளக்க இயல்" என்னும் நூல் எழுதப்பட்டது. ஐரோப்பியரின் சிந்தனைகள் காலத்தால் அடக்கப்பட்டிருந்த காலத்தில் அராபியரும், நோர்வேயினரும் புவியியல் அறிவுக்கு வழி திறந்தார்கள். 15-ம் நூற்றாண்டில் மறுமலர்ச்சிக் காலத்தில் திடீர் எழுச்சி ஏற்பட்டது: கடலை அடுத்துக் கண்டுபிடிப்புக்கள் ஏற்பட்ட காலத்தில் கடலோடிக்கென்றி ஊக்கமளித்தான்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ಪ್ರಾಮಿಸರಿ ನೋಟ್ ಕೊಟ್ಟಾಗ ಅದರ ಮೇಲೆ ಸಾಕ್ಷಿಗಳ ಸಹಿ ಇರಬೇಕೆ ?

ಇಲ್ಲ. ಪ್ರಾಮಿಸರಿ ನೋಟಿನ ಮೇಲೆ ಸಾಕ್ಷಿಗಳ ಸಹಿ ಇರಬೇಕೆಂಬ ನಿಯಮವಿಲ್ಲ. ಆದರೆ ಸಾಕ್ಷಿಗಳ ಸಹಿ ಇದ್ದರೆ ಸಾಕ್ಷ್ಯಕ್ಕೆ ಅನುಕೂಲವಾಗುತ್ತದೆ.

17-ನೆ ಪ್ರಶ್ನೆಯ ಪ್ರಕಾರ ಸಹಿಯಾದವನು ತಪ್ಪಿಸಿಕೊಂಡಿದ್ದಾನೆ. ಪ್ರತಿವಾದಿಯ ಸಹಿಯೆಂದು ಸಾಬೀತು ಮಾಡಲು ಸಾಧ್ಯವಿಲ್ಲವೆ ?

ಸಾಧ್ಯವಿದೆ. ಪ್ರತಿವಾದಿಯ ಸಹಿಯೆಂದು ಸಾಬೀತು ಮಾಡಲು ಸಾಧ್ಯವಿದೆ. ಪ್ರತಿವಾದಿಯ ಸಹಿಯೆಂದು ಸಾಬೀತು ಮಾಡಲು ಸಾಕ್ಷಿಗಳ ಅವಶ್ಯಕತೆಯಿಲ್ಲ

இலங்கையின் உணவு அபிவிருத்திக்கு வரண்டபிரதேசம் வாய்ப்பாக இருக்கிறது

ஒரு நாட்டின் செல்வ நிலையை நிர்ணயிக்கும் காரணிகளுள் உணவு அபிவிருத்தியும் ஒன்றாகும். நமது நாட்டின் உணவு அபிவிருத்திக்கு வரண்ட பிரதேசம் வாய்ப்பாக அமைந்திருக்கிறது எவ்வாறு என்பதை ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

"குளந்தொட்டு வளம் பெருக்கினான்" என்று போற்றப்பட்ட மன்னர்கள் வாழ்ந்த நம் இலங்காபுரியில் சிலகால் உணவு அபிவிருத்தி குன்றப்பெற்று, பிற நாடுகளை நோக்கிக் கைநீட்டிய நிலையும் ஏற்படத்தான் செய்தது. ஆனால் இன்று தேசிய அரசாங்கம் இந்த விடயத்தில் ஊக்கம் கொடுத்து வருவதன்விளைவாக நிலைமை சீரடைந்து வருகின்றது. இவர்களது அயராத உழைப்பிற்குக் கைகொடுத்து உதவி அளிப்பதுபோன்று அமைந்த சாதனங்களுள் மேற் குறிப்பிட்ட வரண்ட பிரதேசம் சிறப்பான புவியியற் தன்மைகளைக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். அத்தோடு வரலாற்றிலே நாம் காணக்கூடிய அனுராதபுரி, பொல்லநறுவைக் காலச் சம்பவங்களும் இதற்குச் சாட்சிபகருகின்றன. மேலும் கடந்த மூப்பது வருடங்களாக அரசினர் குடியேற்றத் திட்டங்கள் மூலமும், நீர்ப்பாசனத் திட்டங்கள் மூலமும் இப் பிரதேசத்தை விவசாயப் பிரதேசமாக மாற்றி வருவது யாவரும் அறிந்த விடயமே.

இப் பிரதேசம் வட சமவெளி, கிழக்குச் சமவெளி, மத்திய மலைப்பகுதியின் கிழக்கு மலைச்சாரல் என்பவற்றை அடக்கி உள்ளது. சம நிலத்தின் பெரும் பகுதி சராசரி 500 அடிக்குக் கீழ்ப்பட்டது. பல ஆறுகள் இப் பிரதேசத்திற்கூடாகப் பாய்ந்து, வட மேற்காகவும், கிழக்காகவும், தென் கிழக்காகவும் ஓடிக் கடலிற் கலக்கின்றன. இத்தன்மையை ஒரு நல்ல திர்ஷ்டம் எனலாம்.

காலநிலையைப் பொறுத்தமட்டில் சராசரி வெப்பநிலை 80°—82° வரை காணப்படும். வட கீழ்ப் பருவக்காற்றால் 75"க்குக் குறைந்த மழையே பெய்கிறது. அதுவும் நிதானமற்றது. அதி வரண்ட பகுதிகளில் மழையினளவு வேறுபடுகிறது: நாலு ஐந்து மாத வரட்சி ஏற்படுவது முண்டு. இத்தன்மைக்கேற்பத் தாவரமும் அடர்த்தியற்ற பற்றைக் காடுகளாகக் காணப்படுகின்றது. அவை தென்மேற் காற்றின் உக்கிரத்தைத் தாங்குவதற்காக பின்னிப் பிணைந்து காணப்படுவது நிலத்தின் ஈரலிப்பைப் பாதுகாக்க வசதியாகும். அத்துடன் இக் காடுகளை அழிப்பதற்கு நீண்ட வரண்ட பருவம் வாய்ப்பானது. இத் தன்மைகளால் இப் பகுதியின் மண் வளமும் இடத்துக்கிடம் மாறுபடுகிறது: சிவப்பு, மஞ்சள், கபிலநிறமான களிமண் தரையை ஆங்காங்கு கொண்டுள்ளது: இத் தரையில் உலோகச்சத்துண்டு. கியூமஸ் எனப்படும் தாவரப் பசளை மண்ணால், மேற்றரை மூடப்பட்டுள்ளது. கிளிநொச்சி, கல்லோயாப்பகுதிகளில் உள்ள மேற்றரை பசளை இடப்படாமலே பல வருடங்கள் பயிரிடுவதற்குகந்ததென மண்வள நிபுணர்கள் சிபார்சு செய்துள்ளனர். ஆகவே இத்தகைய புவியியற்றன்மைகள் நெற் செய்கைக்கு மிகவும் வாய்ப்பாக இருக்கிறது. இதனாலேயே ஆதியில் இலங்கையில் குடியேறிய ஆரியரும் இப் பகுதிகளிற் தங்கி, ஆற்றோரங்களை அடுத்துக் குடியிருப்புக்களை அமைத்து விவசாயத்தை மேற் கொண்டனர். தீக்கவாபி, மாகமம், மாந்தை, அனுராதபுரி, பொலநறுவை என்பன சிறந்த விவசாய நகரங்கள் என்பதற்குச் சரித்திரமே சான்றுபகர்கின்றது: அன்று இலங்கையிலிருந்து தமிழ் நாட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ಮೈಸೂರು ಅರಮನೆಯ ಆಸ್ಥಾನ ವಿದ್ವಾಂಸರಾಗಿದ್ದ ಇವರು ಅಲ್ಲಿಯ ಆಸ್ಥಾನ ಕವಿಗಳಾಗಿದ್ದ ಕೃಷ್ಣರಾಜ ಒಡೆಯರ ಮೇಲೆ ಸಂಸ್ಕೃತದಲ್ಲಿ ಒಂದು ಕಾವ್ಯವನ್ನು ರಚಿಸಿದ್ದಾರೆ. ಅದರ ಹೆಸರು ಕೃಷ್ಣರಾಜ ವಿಜಯ. ಇದರಲ್ಲಿ ಹದಿನಾರು ಸರ್ಗಗಳಿವೆ. ಇದಲ್ಲದೆ ಇವರು ಸಂಸ್ಕೃತದಲ್ಲಿ ಅನೇಕ ಸ್ತೋತ್ರಗಳನ್ನು ರಚಿಸಿದ್ದಾರೆ. ಇವರ ಸಂಸ್ಕೃತ ಕಾವ್ಯಗಳಲ್ಲಿ ಕೆಲವು ಮುದ್ರಿತವಾಗಿವೆ. ಇವರ ಕೆಲವು ಸಂಸ್ಕೃತ ಕೃತಿಗಳು ಹಸ್ತಪ್ರತಿಗಳಲ್ಲಿ ಇನ್ನೂ ಅಚ್ಚಾಗದೆ ಉಳಿದಿವೆ.

ಇವರು ಬಹುಭಾಷಾ ಪಂಡಿತರಾಗಿದ್ದರು. ಸಂಸ್ಕೃತ, ಕನ್ನಡ, ತೆಲುಗು, ತಮಿಳು, ಮರಾಠಿ, ಹಿಂದಿ, ಉರ್ದು ಮತ್ತು ಇಂಗ್ಲಿಷ್ ಭಾಷೆಗಳಲ್ಲಿ ಇವರಿಗೆ ಪ್ರಾವೀಣ್ಯವಿತ್ತು. ಇವರು ಸಂಸ್ಕೃತ ಮತ್ತು ಕನ್ನಡ ಭಾಷೆಗಳಲ್ಲಿ ಕವಿತೆಗಳನ್ನು ರಚಿಸಿದ್ದಾರೆ. ಇವರ ಕನ್ನಡ ಕವಿತೆಗಳು ಸಂಸ್ಕೃತ ಕವಿತೆಗಳಷ್ಟು ಪ್ರಸಿದ್ಧವಾಗಿಲ್ಲ. ಇವರ ಕನ್ನಡ ಕವಿತೆಗಳಲ್ಲಿ ಕೆಲವು ಮುದ್ರಿತವಾಗಿವೆ. ಇವರ ಕೆಲವು ಕನ್ನಡ ಕವಿತೆಗಳು ಹಸ್ತಪ್ರತಿಗಳಲ್ಲಿ ಇನ್ನೂ ಅಚ್ಚಾಗದೆ ಉಳಿದಿವೆ. ಇವರು ಕನ್ನಡದಲ್ಲಿ ಬರೆದಿರುವ ಕೆಲವು ಗದ್ಯ ಕೃತಿ

விலைத்திட்டம், பயிர் இன்சூரன்ஸ், ஏனைய சமூக வாழ்க்கை வசதிகள் செய்துகொடுப் பதன்மூலமும்மக்கள் விரும்பிக் குடியேறுகின் றனர். 1910இல் சதுரமைலுக்குப் 10 பேரிருந்த வடமத்திய மாகாணத்தில் 1946இல் 75ஆக அதிகரித்து, இன்று அதி கரிப்பு 43.1ஆக உயர்ந்துள்ளது.

இதுவரை கூறியவற்றைத் தொகுத்து நோக்கின் வரண்ட பிரதேசம், அதன் தரை அமைப்பு, காலநிலை, மண்வளம் என்பவற் றைப் பொறுத்தமட்டில் சிறந்த நெற்செய் கைப் பிரதேசமாகவும் ஏனைய, உப உண வுப் பொருட்களை உற்பத்தி செய்யக்கூடிய பிரதேசமாகவும் விளங்குகிறது. ஆகவே அழிந்த குளங்களையும், கால்வாய்களையும் திருத்துவதுடன், குடியடர்த்தி கூடிய பகு திகளிலிருந்து மக்களைக் குடியேற்றி நவீன முறைகளைக் கையாண்டு செறிவானதும், சூழ்முறைச் செய்கையில் அமைந்ததுமான விவசாய முறைகளைக் கையாளுவராயின் உணவுத் தேவையில் ¾ பகுதியையாவது பூர்த்தி செய்யலாம். 67ஆம் 68ஆம் ஆண்டுகளில் இலங்கை 70 கோடி புசல் நெல்லை உற்பத்தி செய்துள்ளதையும் 1960இல் உலக உற்பத்தியில் 8.81மாக அதிகரித்துள்ளதையும் இங்கு குறிப்பிட லாம். மகாவலிகங்கை திருப்புத் திட்டம் முற்றுப்பெறுமாயின் உணவு உற்பத்தியில் ஒரு பூரண வெற்றி அடைந்ததற்குச் சம மாகும். எனவே உணவு உற்பத்திக்கு வரண்ட பிரதேசம் வாய்ப்பாக இருக்கிற தென்று கூறலாம்.

உன் தொழிலை முயற்சியுடன் செய்துவா. அதுவே வீண் எண்ணங்களை மனத்திருந்து அகற்றி அதைத் தூய் மையாக்கும்.

சாரதாமணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இலக்கியச்சாலைப் பெருமாள்"

"உங்களுடைய அபிமானத்தை அபிமானி — பூமிநாதன்."

இந்த அட்டையைப் பார்த்ததும் பெருமாளுக்கு ஒரே ஆச்சரியம். "இது என்ன? இவர் யார்? இவருக்கு நான் எப்போது உதவி செய்தேன்?" என்று அவர் தமக்குள் எண்ணிக் கொண்டார். அவர் அந்த அட்டையை மறுபடியும் திருப்பிப் பார்த்தார். அதில் அச்சிட்டிருந்த விலாசத்தைக் கவனித்தார். அது சென்னை நகரத்தில் ஒரு பிரபலமான தெருவின் பெயர். அந்தத் தெருவில் பல பெரிய பெரிய வியாபாரஸ்தர்கள் இருந்தார்கள். அவர்களில் ஒருவர் தான் இந்தப் பூமிநாதன் என்று பெருமாள் நினைத்துக் கொண்டார்.

அவர் அந்த அட்டையை மேஜை மீது வைத்துவிட்டு, தமது வேலையைக் கவனிக்கத் தொடங்கினார். அவர் ஒரு பெரிய புத்தகசாலை வைத்திருந்தார். அதில் பல பல புஸ்தகங்கள் இருந்தன. அவர் அந்தப் புஸ்தகங்களை விற்பனை செய்து வந்தார். அவர் அந்தப் புஸ்தகசாலைக்கு "இலக்கியச்சாலை" என்று பெயர் வைத்திருந்தார். அதனால் அவரை எல்லோரும் "இலக்கியச்சாலைப் பெருமாள்" என்று அழைத்து வந்தார்கள்.

பெருமாள் புஸ்தகசாலையில் உட்கார்ந்து வியாபாரம் செய்து கொண்டிருந்தார். அப்போது ஒரு வாலிபர் அங்கே வந்தார். அவர் பெருமாளை நோக்கி, "ஐயா! தாங்கள் தான் பெருமாளா?" என்று கேட்டார்.

பெருமாள் அவரை ஏறிட்டுப் பார்த்து, "ஆம்; நான் தான் பெருமாள்" என்றார்.

அந்த வாலிபர் தமது சட்டைப் பையிலிருந்து ஒரு அட்டையை எடுத்துப் பெருமாளிடம் கொடுத்தார். அதைப் பார்த்ததும் பெருமாள் திடுக்கிட்டார். அதில் "பூமிநாதன்" என்று அச்சிட்டிருந்தது. அவர் அந்த வாலிபரை ஏறிட்டுப் பார்த்தார். அவர் பெருமாளைப் பார்த்துப் புன்னகை செய்தார்.

பெருமாள் அவரை நோக்கி, "தாங்கள் தான் பூமிநாதனா?" என்று கேட்டார்.

அவர் "ஆம்" என்று தலையை அசைத்தார்.

பெருமாள் அவரை நோக்கி, "தாங்கள் எனக்கு ஏன் இந்த அட்டையை அனுப்பினீர்கள்?" என்று கேட்டார்.

அவர் பெருமாளை நோக்கி, "ஐயா! தாங்கள் என்னை மறந்து விட்டீர்கள். நான் தங்களை மறக்கவில்லை. தாங்கள் எனக்கு ஒரு பெரிய உதவி செய்திருக்கிறீர்கள். அதை நான் என்றைக்கும் மறக்க மாட்டேன்" என்றார்.

பெருமாள் அவரை நோக்கி, "நான் தங்களுக்கு என்ன உதவி செய்தேன

தேவைக்கு அந்நிய நாட்டைக் கெஞ்சும் நிலை ஏற்பட்டது. உலகழியும் யுத்தமும் ஏற்பட இலங்கை அரசாங்கம் கண்விழித்தது: நாட்டின் நாலா மூலைகளிலும், புல்லை அழி, நெல்லை விதை, பயிர் செய், உணவு பயிரிடுக என்ற விளம்பரங்கள் பறந்தன. உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கான கூட்டங்களும், போட்டிகளும் சங்கங்களும் எழுந்தன. இத்துடன் அரசாங்கம் கல்லோயா, மின்னேரித் திட்டங்களை ஏற்படுத்தி உணவு உற்பத்தியை விருத்தியாக்கியது. இன்னும் பொலநறுவா விவசாயத் திட்டம், குடியேற்றத் திட்டம் மூலம் இலவசக் காணிகளையும் வேண்டிய உபகரணங்களையும் மூலதனத்தையும் கொடுத்துதவியது; இன்று இலங்கை ஓரளவில் விருத்தியடைந்ததாயினும் தேவையைப் பூர்த்தியாக்கவில்லை;

படித்துப் பட்டம் பதவிகள் பெற்ற பெற்றோரின் பேராசை நாட்டின் நலன், வேளாண்மையில் தங்கியுள்ளது என்பதை உணரவிடுவதாயில்லை. படித்து வேலையற்றிருக்கும் வாலிபர்க்கு இலவச நிலம் வழங்கி ஐக்கிய முறைகள் மூலம் கமத்தொழிலைப் பண்டைய நிலைக்கு உயர்த்துவது அரசாங்கத்தின் கடமையாகும். மக்களும் அரசாங்கத்துடன் ஒத்துழைத்து ஏட்டுக் கல்வியுடன் நில்லாது நாட்டின் உயிர்நாடியாகிய வேளாண்மைத் தொழிலை விருத்தியாக்குவராயின் அந்நிய நாடுசென்று கெஞ்சும் அவலநிலையகன்று, வேலையில்லாத் திண்டாட்டமும் தீர்ந்துவிடும். பசிக்கொடுமையும் பொருளாதார நெருக்கடியும் மடிந்து இலங்கை சீரும் சிறப்பும்கொண்ட ஒரு நாடாகும் நாள் வெகு தூரத்திலில்லை என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

திருமதி. மாணிக்கசோதி இம்மானுவல்,
விடுகை வருடம்;

நீ எப்பொழுதும் கடமைசெய்ய ஆயத்தமாயிரு. அப்பொழுதுதான் உனக்கு நல்வாழ்வு பிறக்கும்.

செல்வி. க. செள. ச. நங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியியற் பாடத்தில் புள்ளிவிபரங்களினதும் வரைப்படங்களினதும் உபயோகம்

கல்வி உலகிலே கருத்துக்கிசைந்த கல்விப் பயன் கிட்டவேண்டுமாயின் கடமை யுணர்ச்சி கொண்ட ஆசிரியனுக்கும், கண்ணியமிக்க மாணவனுக்குமிடையில் கல்வியின் போக்கிலே, பாடத்தின் விடயத்திலே ஒற்றுமை நிலவவேண்டும்: அதாவது, மாணவன் விளங்கிக்கொள்ளத் தக்கவகையில் ஆசிரியர் பாடத்தை முன்வைக்க வேண்டும்: பல தரங்களையுடைய விவேகம், ஆர்வம், ஆற்றல்களைக்கொண்ட மாணவர்களைப் பயிற்றுவதென்றால், அது பலவித மான கல்விச் சாதனங்களையும், முயற்சிகளையும் வேண்டிநிற்கும் ஒரு விடயமாகும். சில மாணவர்கள் கேள்வியினால் அதிகம் கற்றுக்கொள்வர்: சிலர் ஒரு செயலையோ அல்லது உருவங்களையோ பார்த்து அவதானிப்பதனால் கற்றுக்கொள்வர்: சிலர் எழுதி, வரைந்து, செய்து பார்ப்பதனாற் கற்றுக்கொள்வர். இவ்விதமாக இன்னும் பலதரப்பட்ட மாணவரைத் தன் வகுப்பில் வைத்துக் கற்பிக்கும் ஆசிரியர், அனைவருக்கும் தகுந்த கல்வியறிவைக் கொடுக்க வேண்டுமாயின் பல்வேறு கற்பித்தல் முறைகளையும், உபாயங்களையும், உபகரணங்களையும் கையாள வேண்டியது அவசிவம்:

குடியியற் பாடத்தைப் பொறுத்த வரையில் ஆசிரியர் நீண்ட போதனாமுறையையே கைக்கொள்வாராயின், மாணவர்கள் எளிதிற் சலிப்படைந்து விடுவர். ஒழுங்கான சமுதாயத்தையும், தனி ஒருவரையும் உருவாக்கவேண்டிய இப்பாடமானது மாணவருக்குக் கசக்கத்தொடங்கி விடுகிறது. சில வேளைகளில் ஆசிரியர் வாய்மொழியாகக் கூறும் விடயம் கிரகிக்க முடியாதனவாக இருக்கக்கூடும். எனவே, கவர்ச்சியை உண்டாக்கக்கூடிய வகையில் உபகரணங்களையும் சேர்த்துக் கொள்ளும் போது, விடயம் சிறந்த முறையில் மாணவர் மனதில் பதிந்து விடுகின்றது:

குடியியற் பாடத்தில் விசேடமாக சமூகத்தின் வளர்ச்சி, சில குறிப்பிட்ட தாபனங்களின் வளர்ச்சி, பொருளாதாரப் பெருக்கம் என்பன போன்ற பலவற்றின் வளர்ச்சிகளையும், அத்துடன் தேய்வுகளையும் மாணவர் கற்கின்றனர். விடயங்களை ஒப்பிட்டு நோக்குவதும், வரவுசெலவுத் திட்டம் போன்றவற்றைக் கணிப்பதும் அவர்கள் பாடத்தில் இடம் பெறுகின்றன: இவைகளைக் கற்பிக்க ஆசிரியர் புள்ளிவிபரங்களைப் பயன்படுத்துகிறார்: இதனால், கற்பிக்கப்படும் விடயம் எவ்வித சந்தேகமுமின்றி உண்மைப்படுத்தப்படுகிறது: ஆசிரியரும் தாம் போதிக்கும் விடயத்தில் தன்னம்பிக்கையுடையவராக, உறுதியாக இருக்கின்றார். மாணவரும் திட்டவட்டமாக ஒரு விடயத்தை அறிந்தவர்களாவார்கள்: வெறும் போதனையிலும்பார்க்கத் திட்டமான புள்ளிவிபரங்கள் மாணவருக்கு ஆர்வத்தையும், கவர்ச்சியையும் கொடுக்கின்றன. உதாரணமாக, இலங்கையின் அரசியல் வளர்ச்சியில் ஒருசிறு அம்சத்தை எடுத்துக்கொள்வோம். அரசாங்க சபைக் காலத்துக்கு முன்னர் இருந்த உத்தியோகப்பற்றுடைய அங்கத்தினர் தொகையையும், உத்தியோகப் பற்றற்ற அங்கத்தினர் தொகையையும் காட்டிக் காலத்திற்குக் காலம், படிப்படியாக ஏற்பட்ட மாற்றங்களையும், அவர்களின் தொகையையும் புள்ளி விபரங்களைக் கையாண்டு கற்பிக்கும் பொழுது மாணவர் போதிய விளக்கத்தையும், கிரகிக்கும் சக்தியையும் பெறுகின்றனர்:

இந்த உபாயத்தின்மூலம் நன்கு துலங்காத மாணவர்களும், விரைவிற் கிரகிக்க முடியாத மாணவர்களும் ஓரளவு கற்றலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபடுத்தப்படுகின்றனர். ஆசிரியர் சற்றுக் கூடியமுயற்சியெடுப்பின் பாடத்தை இன்னும் கவர்ச்சியுடையதாக்கலாம். அதாவது, புள்ளி விபரங்களை வரைபடங்கள் ரூபத்திலும் அமைக்கலாம். இவ்வரைபடங்கள் புள்ளி விபரங்களிலும் பார்க்க இலகுவில் மாணவர் மனதில் பதியக்கூடியனவாயும், அர்த்தமுடையனவாயும், கவர்ச்சியானவையாயும் அமைகின்றன. புள்ளி விபரங்களை அடிப்படையாக வைத்துக்கொண்டு, அதன் எண்ணிக்கைக்கு ஏற்கவே, வரைபடங்களும் தயாரிக்கப்பட வேண்டும்.

குடியியல் கற்பித்தலுக்குரிய வரைபடங்கள் பின்வரும் வகைகளில் ஒன்றைச் சார்ந்ததாக அமைக்கப்படலாம்:

1. கோள வரைபடம்;
2. குத்துநிலைத் தூண் வரைபடம்.
3. கிடைநிலைத் தூண் வரைபடம்.
4. புள்ளி, கோட்டு வரைபடம்.
5. உருவ வரைபடம்.


இவைகளை அமைக்கும் முறைகளை உதாரணங்கள் மூலம் காண்போம்.

கோப்பாய்க் கிராம சபையானது பலவழிகளிலிருந்து தன் வருமானத்தைப் பெறுகிறது; அதாவது,

அரசாங்க நன்கொடை	10090-66
இறைவரி, காணிவரி	17000-00
வண்டி, துவிச்சக்கரவண்டிவரி, நாலுவிதம்	1250-00
பெற்ரோல், வெடிமருந்து, துவக்குத்தீர்வை	287-50
முத்திரைத் தீர்வைகள்	2168-00
மலகூட, வியாபார வரிகள்	5840-00
குறிக்கப்படும் சேவைகட்கான நன்கொடை	15400-00
மின் பகுதிப் பணம்	49000-00

மேலே கொடுக்கப்பட்ட புள்ளிவிபரங்களை வைத்துக்கொண்டு கீழ்க்காணும்

கோள வரைபடம்



கோள வரைபடம் ஒன்றைத் தயாரிக்கலாம். வரைபடம் புள்ளிவிபரங்களைப் பார்க்கிலும் கூடிய தெளிவை அளிக்கக்கூடியது; மாணவர்க்குக் கவர்ச்சியையும் ஊட்டக்கூடியது. இந்த வரைபடத்தின் உதவிகொண்டு மிகவும் இலகுவில் வெவ்வேறு வழிகளில் இருந்து கிடைக்கும் வருவாய்களை ஒப்பிட்டு நோக்கலாம்;


இலங்கைப் பாராளுமன்றத்தில் சுதந்திரமடைந்த காலந்தொட்டுப் பல்வேறு கட்சிகள் தோன்றி வளர்ந்துகொண்டு வந்திருக்கின்றன. தற்பொழுது பாராளுமன்றத்திலிருக்கும் கட்சிப்பலத்தை நோக்குவோம்;

ஐக்கிய தேசியக் கட்சி	67 பேர்
ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி	43 ,,
தமிழ் அரசுக் கட்சி	13 ,,
லங்கா சமசமாஜக் கட்சி	10 ,,
சுயேட்சை	5 ,,
ஸ்ரீ லங்கா சுதந்திர சமூகக் கட்சி	4 ,,
இலங்கைப் பொது உடைமைக க.	4 ,,
அகில இலங்கைத் தமிழ்க்கா. க;	3 ,,
மக்கள் ஐக்கிய முன்னணி	1 ,,
ஜாதிக விமுத்தி பெரமுன	1 ,,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு தரப்பட்ட புள்ளி விபரங்களை வைத்துக் கொண்டும் விடயத்தை விளங்க வைக்கலாம். ஆனால் இவற்றை ஒரு வரை படமாக அமைத்துக் காண்பிக்கும்போது பாடம் மிகவும் கவர்ச்சியாகவும், கவனத்தை ஈர்ப்பதாகவும் இருக்கும். பின் வரும் வரைபடத்தை முன் கொடுக்கப்பட்ட புள்ளி விபரங்களைக் கொண்டு தயாரிக்கலாம்,

குத்து நிலைத்தூண் வரைபடம்




இலங்கையில் பல இன மக்கள் வாழ்கின்றனர். அவர்களின் தொகை புள்ளி விபரப்படி,

சிங்களவர்	10493000
தமிழர்	7467000
சோனகர்	2292000
பறங்கியர்	688000

இங்கு தரப்பட்ட புள்ளிவிபரத்தை ஒரு வரைபடமாக அமைத்தால் பின்வருமாறு அமையும்,

கிடைநிலைத்தூண் வரைபடம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் அது தோன்றிய காலந்தொட்டு இதுவரை அங்கத்தவர் தொகை மாறுதலடைந்துகொண்டு வந்திருக்கிறது. சமாதானத்தை நிலைநாட்ட முயலும் தாபனம் என்ற முறையில், புதிய அங்கத்துவநாடுகளும் அதில் சேர்ந்துள்ளன. அதன் வளர்ச்சி பின்வருமாறு :

1945 இல்	51	அங்கத்தவர்
1950 ,,	59	,,
1955 ,,	75	,,
1960 ,,	99	,,
1965 ,,	113	,,

இந்தப்புள்ளி விபரங்களையும் வரைபடமாக அமைத்துக் காண்பிக்கலாம். பின்வரும் வரைபடம் ஓர் உதாரணமாகும்.

புள்ளி கோட்டு வரைபடம்



இலங்கை சுதந்திரமடைந்த காலந் தொட்டு இதுவரை மத்திரி சபையில் அங்கத்தவர் எண்ணிக்கையிற் சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அவற்றைக் கீழ்க்காணும் புள்ளி விபரங்கள் குறிக்கின்றன.

1948	14 பேர்
1962	11 ,,
1964	12 ,,
1965	16 பேர்
1966	17 ,,
1969	18 ,,

இந்தப் புள்ளிவிபரங்களை இன்னும் கவர்ச்சியுடையதாக மாற்ற அதற்கு ஒரு திட்டமான வடிவத்தை அல்லது உருவத்தை அளித்தால், அது கீழ்க்காணும் ஒரு வரைபடமாக மாறிவிடும்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவ வரைபடம்



மேலே காட்டியபடி புள்ளி விபரங்களையும், வரைபடங்களையும் உபயோகிக்கும் போது கற்றலும், கற்பித்தலும் இலகுவாக்கப்படுகின்றன. குடியியற் பாடமானது கவர்ச்சியையும், ஆர்வத்தையும் தூண்டக் கூடியதான ஒரு பாடமாக அமைகிறது. நாட்டின் நற்பிரசையாக—எதிர்காலத்தின் எழில்மிக்க ஒளிவிளக்காகச் சமூகத்தில் திகழப்போகும் ஒரு மாணவனை நன்முறையில் உருவாக்கி, நல்வாழ்வுக்கு வழி நடத்தும் ஒரு நற்பாடமாகவும் இது அமைகிறது. இவ்வாறே மாணவர்கள் குடியியற் கல்வியின் பயனைக் கருத்திலும், செயலிலும் கைக்கொள்ள வைப்பது ஆசிரிய உலகின் கடமையாகும்.

சிஸ். மேரி பொணவெஞ்சர்,
இறுதி ஆண்டு.

கடவுளின் பலமும், கடவுளின் அருளுமின்றி அஹிம்ஸா வாதியால் எதையும் செய்யமுடியாது. கடவுளின் பலமும், அருளுமின்றி கோபமோ, பயமோ, பழிக்குப்பழிவாங்கும் உணர்ச்சியோ கொள்ளாமல் சாகின்ற தைரியமும் அவனுக்கு ஏற்படாது.

மகாத்மாகாந்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்வெளிப் பயணம்

அம்புலி! அம்புலி!! அழகான அம்புலி!!! ஒளவையும், முயலும் என எம் கற் பனையில் எழில் காட்டிய அம்புலி!!! இன்று அகில உலகமும் அகமகிழ 'அமெரிக்கன் நின்ற அப்புலி' என்று இசைபாட வழி வைத்துவிட்டது. மனித இனத்தின் பசி பலதரப்பட்டது. அதில் ஒன்று அறிவுப் பசி. அதுவே அண்டவெளியை ஆட்சி கொள்வதில் அமெரிக்கன் கண்ட வெற்றி யாகும். சரித்திரப் பெருமைவாய்ந்த இச் சம்பவத்தை 'ரெலிவிஷன்', 'ரேடியோ', பத்திரிகை ஆதியாம் செய்தி பரப்பும் வழி களில் மக்கள் பார்த்தும் கேட்டும் ரசித் தார்கள். இருந்தாலும் இதைப்பற்றி மீண் டும், மீண்டும் கதைப்பதிலும், கேட்பதி லும் ஆனந்தம் ஏற்படத்தான் செய்கிறது. எனவே, இக் கட்டுரையும் இச் சம்பவத் தைப்பற்றிய சில தகவல்களைக் கூறி வாசிப் போரை மகிழ்விக்க விரும்புகிறது.

அநேக ஆண்டுகளாக விஞ்ஞானத்து றையில் விண்வெளிபற்றிய ஆராய்ச்சிகளும் பரீட்சித்துப் பார்த்தல்களும் நடைபெற் றுக்கொண்டிருந்ததென நாம் அறிவோம். சிறப்பாக ரூஷியா, அமெரிக்கா முதலாம் நாடுகள் தீவிரமாகச் செயல்களில் ஈடுபட்டு உழைத்தமையும் குறிப்பிடத்தக்கது. இருந் தாலும் 1961இல் ஜனதிபதி கென்னடி "1970க்குள் மனிதன் சந்திரமண்டலத் துக்குச் சென்று அதில் இறங்குவதை நமது இலட்சியமாகக்கொண்டு உழைப்போம்" என்று அறைகூவக் கேட்டதிலிருந்து, அம் புலிப் பயணத்திட்டம் அமெரிக்காவில் சூடு பிடித்ததென்றே கூறவேண்டும். விடா முயற்சியும், திட சங்கற்பமும் இன்று அமெ ரிக்கா நிலைநாட்டிய சாதனையின் அத்திவா ரம். இச் சாதனையானது அற்புதமானது, பெருமைக்குரியது, போற்றத்தக்கது—அதி லும் புரட்சிகரமானது.

இப் பயணம் பல அறிஞர்களின் கூட்டு முயற்சியாக இருத்தபோதிலும் விண்வெளி லீரர் என்ற சிறப்புப் பெயருக்கு மூவர் விசேஷ உரித்தாளர். அவர்களது பெயர் கள் முறையே:- நீல். ஏ, ஆம்ஸ்ரோங், எட்வின் ஈ. ஆல்டிரின், மைக்கல் கொலின்ஸ் என்பதாம். இவர்கள் மூவரி டத்தும் சில ஒற்றுமைகள் இருப்பதை நாம் அவதானிக்கலாம். அதாவது மூவரும் 1980இல் பிறந்தவர்கள். மூவரும் 165 இருத்தல் எடை உள்ளவர்கள். இருவரது உயரம் 5' 11", மற்றவர் 5' 10". மூவரும் விவாகம்செய்தவர்களும், பிள் ளைப்பேறு பெற்றவர்களும் ஆவர். விமா னம் ஓட்டுவதில் மூவரும் நல்ல அனுபவம் வாய்ந்தவர்கள். முன்பு நடைபெற்றுள்ள விண்வெளிப் பயணங்களின் போது ஒவ் வொருமுறை பங்குபற்றியுள்ளனர். இவற்றைவிடத் தனிப்பட்ட முறையிற் கூறின், ஆம்ஸ்ரோங் விமானத்துறையில் பொறியியல் நிபுணராக விளங்கிப் பட்டம் பெற்றவரும், சமயோசித புத்தியுடையவ ரும், துணிவும், தைரியமும் கொண்டவரும் இவ்வெற்றிக்குத் தலைமை தாங்கியவரும் என்று இரத்தினச் சுருக்கமாகக் கூறிவிட லாம்.

அடுத்து ஆல்டிரின் என்பவர் விமானத் துறையில் பட்டம்பெற்றவர். இவர் முன் னெருமுறை விண்வெளிப் பயணத்தின் போது விண்கலத்தைவிட்டு வெளியே வந்து விண்வெளியில் 129 நிமிடங்கள் நடந்திருக் கின்றார். இதைவிட வேறெவரும் இத்தனை நேரத்துக்கதிகமாக விண்வெளியில் நடந் தது கிடையாது. இவரே சூரிய கிரணத் தை விண்வெளியில் இருந்தபடி புகைப்படம் எடுத்தார். இதுவரை வேறெவரும் இதை நிகழ்த்தவில்லை. சரித்திர நாயகர்களில் மூன்றுவதானவர் மைக்கல் கொலின்ஸ். கைக்கெட்டியது வாய்க்கெட்டாதவகையில் சந்திரமண்டலப்பயணத்தில் பங்குகொண்ட வர். ஆனல் மூலாதாரமான வெற்றி இவ ரைச் சார்ந்தது எனின் அது எவராலும் மறுக்க முடியாது. விண்வெளியில் இரு கலன்களை அமைப்பதில் இவருக்கு அனுப வம் நிறைய உண்டு. இவ்விடயத்தில் சில அபார சாதனைகளைப் புரிந்துள்ளார். இத் தோடு இவ்வீரரை வாழ்த்தி விடயத்தை வேறுதிசைக்கு இட்டுச் செல்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரித்திரப் புகழ்வாய்ந்த பொருள்களுள் முதலிடம் வகிப்பது, சக்திவாய்ந்த கிரேக்க கடவுளின் நாமம்கொண்ட "அப்பல்லோ 11" எனின் சாலப் பொருத்தமுடையதே. இதை விண்வெளிக்கு எடுத்துச் செல்ல, 'ஸாடர்ன் 5' என்ற பிரமாண்டமான (ஏவுகணை) ரொக்கெட் உபயோகப் படுத்தப்பட்டது. இதுவே பூமியின் ஆகர்ஷண சக்தியை எதிர்த்து மூன்று விண்வெளிப் பிரயாணிகளைத் தாங்கிய 59' உயரமுள்ள விண்கலத்தை உயர உந்தித் தள்ளிச் சந்திரனை நோக்கிய பாதையில் அனுப்பியது. இம்மாபெரும் சக்திவாய்ந்த ரொக்கெட்டைப் பூர்த்திசெய்யும் பணியில் வெற்றி கண்டவர் "டாக்டர் வெர்னர் வான்ப்ரோன்" என்ற அமெரிக்க விஞ்ஞானி யாவார். இதன் உயரம் 282', 62 இலட்சம் பவுண்ட் எடை. அது உருவாக்கும் சக்தி மொத்தம் 543 ஜெட் ஆகாய விமானங்களின் சக்திக்குச் சமன். இதில் திரவரூபத்திலான பிராணவாயு, ஐலவாயு, மண்ணெய் முதலிய எரிபொருட்கள் உபயோகிக்கப்பட்டன. இந்த ரொக்கெட் ஒன்றின்மேல் ஒன்றுகப் பொருத்தப்பட்ட மூன்று பகுதிகளைக்கொண்டது. மூன்றுவது கட்டத்தின் உச்சியில் 59' உயரமுள்ள மூன்று பகுதிகளைக்கொண்ட' அப்பல்லோ' விண்கலம் பொருத்தப்பட்டுள்ளது.

இந்த மாபெரும் ரொக்கெட்டைச் செலுத்துவதற்கென்று பிரத்தியேகமான ரொக்கெட் தளம் ப்ளோரிடா மாநிலத்தில் கேப் கென்னடி என்ற இடத்தில் உள்ளது. அங்கு கட்டப்பட்டிருக்கும் 'சந்திர நிலையம்' என்ற 5 5' உயரமுள்ள கட்டிடம் ஸாடர்ன் ரொக்கெட்டை இணைத்துத் தயாரிக்கும் இடமாக இருந்து உதவியது. இந்த ரொக்கெட்டை உருவாக்கிய இடத்திலிருந்து, ஏவுகணைத் தளத்திற்கு எடுத்துச்செல்லப் பிரமாண்டமான வண்டி ஒன்று உபயோகிக்கப்பட்டது. இவ்வண்டி செல்வதற்கென 7' கனமுள்ள உறுதியான வீதிகள் 3½ மைல் தூரத்துக்குப் போடப்பட்டுள்ளன. ரொக்கெட்டின் மூன்று பகுதிகளும் ஒன்றையடுத்து ஒன்று இயங்குகின்றன. மூன்றுவதன் இயக்கத்தின் வேகம் அதிகரித்து அப்பல்லோ விண்கலம் பூமியின் ஆகர்ஷண சக்தியிலிருந்து விடுபட்டுச் சந்திரனை நோக்கித் தன் பயணத்தைச் செய்ய வழிவகுத்தது. இது செயற்படுவதைக் கண்காணித்து மேற்பார்வையிடப் பல இஞ்ஞினியர்கள் கொண்ட குழு பணி புரிந்தது.

'ஈகிள்' எனப்பட்ட வாகனம் பற்றிக் கூறியபின் பயணப் புதினத்தைப் ஆரம்பிப்போம். இதற்கு 'நிலாவாகனம்', 'சிலந்தி' 'சேய்க்கப்பல்' எனப் பலபெயர்களுமுண்டு. இதுவே சந்திரனில் இறங்கும், பேறுபெற்ற வாகனம். இவ்வாகனம் ஸாடர்ன் 5 ரொக்கெட்டின் 3-வதுகட்டத்தில் பாதுகாப்பான முறையில் பொருத்தி வைக்கப்பட்டது.

ஆடித்திங்கள் 16-ந் திகதி உலகம் பூராவும் உணர்ச்சி வசப்பட்டு மக்கள் உள்ளத்தையும் உடலையும் வான்நோக்கிப் பறக்கவிட்டுக் கொண்டிருந்தனர். இறைவழிபாடும் நடைபெறத் தவறவில்லை. இத்தகைய சூழ்நிலையில் இம்மூன்று வீரர்களும் தம் உயிரையே பணயம் வைத்து உலகையே மறந்தோராய் வான்நோக்கிப் புறப்பட்டனர். எல்லாம் நன்முய்ப் போய்க்கொண்டிருக்கிறது என்ற செய்தி மக்களுக்கு ஆர்வத்தை மேலும் அதிகரித்தது. ஆடித்திங்கள் 21-ந் திகதி இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் மைல்களுக்கப்பால் வீரர்களைப் பிரிந்திருந்த உலகமக்களின் இதயத் துடிப்பு அதிகரித்தது.

அண்டவெளியிலிருந்து சந்திரனின் ஈர்ப்பு வட்டத்துள் நுழைந்த 'அப்பல்லோ 11-ல்' இருந்த விண்வெளி வீரர்கள் கப்பல் சந்திரனை வலம்வந்து கொண்டிருக்க சந்திரனில் இறங்குவதற்கான ஆயத்தங்களைச் செய்தனர். அடுத்து நீல் ஆம்ஸ்ரோங், எட்வின் ஆல்டிரின் ஆகிய இரு வீரரும் அப்பல்லோ கப்பலுக்குள் இருந்து நிலாவாகனத்துக்கு 32" விட்டத்தையுடைய ஒரு குகைபோன்ற குழாயினூடாகத் தவழ்ந்து சென்றனர். அதற்குள் அவர்கள் 1½ மணிநேரம் தங்கியிருந்து எல்லாம் ஒழுங்காக இருக்கின்றனவா என்பதைப் பரீட்சித்துப் பார்த்தனர். அதன்பின் "எல்லாம் துப்புரவாக இருக்கிறது, எதுவித அழுக்கோ, தவறோ கிடையாது" எனப் பூமிக்கு அறிவித்தனர். அதன்பின்பு நிலாவாகனத்தின் உட்பகுதியைக் காட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ரெலிவிஷன்' படங்களைப் பூமிக்கு அனுப்பினர். கப்பல் சந்திரனின் ஈர்ப்பு வட்டத்தினுள் நுழைந்தபோது அது பூமியில் இருப்போரின் கண்ணுக்குத் தென்படாத சந்திரனின் பின்புறத்தில் இருந்தது. இதனால் ¾ மணி நேரம் வரை பூமியுடன் வானொலி தொடர்பற்றிருந்தது. மீண்டும் தொடர்பு ஏற்பட்டபோது, ''இரவு முடிந்து பகல் உதயமாகும் போது வெளியின் தோற்றம் சாம்பல்நிறம் கலந்த ஒளிபோல் காட்சியளிக்கிறது'' என ஆம்ஸ்ரோங் கூறினர். 21-ந் திகதி 1-45 (நள்ளிரவு) சந்திர மேற்பரப்பில் நிலாவாகனம் இறங்கியது.

இவர்கள் நிலாவாகனத்தில் பறந்து சந்திரனில் போய்ச் சேர்ந்தவுடன் தரையில் இறங்கவில்லை. அவ்வாகனத்திலிருந்து அமைதியாகச் சாப்பிட்டுவிட்டு எட்டுமணி நேரம் நிம்மதியாகத் தூங்கி, அதன்பின் விண்வெளி உடையை அணிந்து, ''இறங்கலாம்'' என்ற கட்டளையைப் புவியில் இருந்து எதிர்பார்த்துக் கொண்டு நின்றனர். இதேசமயத்தில் 3-வது நபரான கொலின்ஸ் தாய்க்கலத்தில் இருந்தபடி சந்திரனை வலம்வந்து கொண்டிருந்தார். மீண்டும் நிலாவாகனம் தாய்க்கலத்துடன் சேர்க்கப்படும் வரை தனிமையில் தான் இருந்தார்.

கடைசியாக 21-ந் திகதி 8-27 மணிக்கு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முதலாவது காலடியை ஆம்ஸ்ரோங் என்ற அமெரிக்க வீரன் அம்புலியில் எடுத்து வைத்தார். இதை 'ரெலிவிஷனில்' பார்த்து மகிழ்ந்தனர் சிலர். 'ரேடியோ''ச் செய்தி வழியாக அறிந்தனர் பலர். பத்திரிகைகளும் பிரசுரித்தன. இந்நிகழ்ச்சியைக் கேட்ட மாந்தர் அனைவரும் தம் மகிழ்ச்சியை ஏதோ ஒருவகையில் புலப்படுத்தாமல் இருக்க முடியவில்லை. நமது நாட்டில் நள்ளிரவில் நிலாவாகனம் இறங்கிய சமயத்திலும், அடுத்துக் காலடிவைத்த செய்தி கேட்டபோதும் வாணவெடிகளை வெடித்து மக்கள் மகிழ்வை வெளிக் காட்டினர்.

விண்வெளிவீரர் ஆம்ஸ்ரோங் நிலாத்தரையில் இறங்கிய ஒருமணி நேரத்தின் பின் ஆல்டிரின் இறங்கினர். இருவரும் இன்பப்பெருக்கால் தரையில் துள்ளிப் பாய்ந்தனர். உற்சாக மிகுதியால் குறிப்பிட்ட நேரத்திலும் பார்க்க 15 நிமிடம் அதிகமாக நிலாத்தரையில் தங்கி நின்றனர். அவ்விடத்தில் ஆராய்ச்சி வேலைகளை நடத்தியபின் மண், கல், போன்றவற்றைச் சேகரித்துக்கொண்டு, இறுதியாக அமெரிக்க தேசியக் கொடியை நாட்டியபின் மீண்டும் அமைதிக்கடலில் இருந்த தமது நிலாவாகனத்துள் ஏணிவழியாக ஏறிச்சென்றனர். ஏறியதும் நித்திரைகொள்ளத் தொடங்கினர். மதியில் மனிதன் நித்திரை செய்கிறான் என்ற செய்திகேட்டுப் புவியில் நின்ற மக்கள் மனம் பூரித்தனர். மற்றைய வீரனை தனிமையாகப் பொறுமையாகத் திறமையாக வீரத்துடன் சந்திரனை வலம்வந்து கொண்டேயிருந்தார்.

இரண்டுமணி நேரத்துக்குமேல் அம்புலித் தரையில் துள்ளிக்குதித்து அத்தரையின் அமைப்பை நன்குகப் புரிந்துகொண்டு ஆபத்து எதுவுமின்றி மீண்டும் புவியை நோக்கிப் புறப்பட ஆயத்தமாகினர். இந்நேரத்தில் மீண்டும் யாவரது உள்ளத்திலும் பரபரப்பு; காரணம் – அத்தரையில் நின்று 'ஈகிள்' கிளம்புவது இலகுவாக நடைபெறுமா? தொடர்ந்து தாய்க்கலத்துடன் சேதமின்றி இணைந்து கொள்ளுமா? என்பதேயாகும்.

வீரர் இருவரும் அமைதியாக வீரத்துடன் தமது கடமைகளைச் செய்து முடித்துவிட்டு ஒரு 'ரொக்கெட்'டைப் பற்றவைத்துச் சந்திர மண்ணிலிருந்து கலத்தை மேலே கிளப்பினர்கள். சுலபமாகக் கிளம்பிப் பறந்துவந்து, தாய்க்கலத்தைப் பின்தொடர இரண்டும் இணைவதற்கு ஏற்ற தருணம் வந்ததும் ''கொலம்பியா'' என்ற தாய்க்கலத்தைச் செலுத்தும் கொலின்ஸ் தாம் தயாராக இருப்பதாக அறிவித்தார். அதன்மேல் ஆம்ஸ்ரோங் சந்திரக்கப்பலான ஈகிளை அதன்மேல் வெகு சாமர்த்தியமாகக் கொண்டுவந்து இணைத்தார். இருகலன்களும் ஒன்றுக இணைந்தபோது எதிர்பாராத விதத்தில் ஆட்டம் ஏற்பட்டதாகக் கொலின்ஸ் அறிவித்தார். இரண்டும் இணைந்த பிறகு ஆம்ஸ்ரோங்கும், ஆல்டிரினும் சந்திரக் கலத்திலிருந்து குழாய்போன்ற வழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யால் கொலம்பியாவுக்குள் நுழைந்துகொண்டனர். அதன்பின் சந்திரனை வலம்வந்தபடியே சேய்க்கலமான 'ஈகிள்' கலத்தைத் தாய்க்கலத்திலிருந்து கழற்றிவிட்டனர். இரண்டும் மோதிக் கொள்ளாதவாறு சரி செய்து கொண்டனர். பின் "ஈகிள்" ஆளில்லாத நிலையில் வலம் வந்து கொண்டிருந்தது.

"இன்னும் சிலமணி நேரங்களில் நாங்கள் உங்களுடன் சேர்ந்துவிடுவோம்" என நீல் ஆம்ஸ்ரோங் கென்னடிமுனைக்கு அறிவித்தார். 'அப்பல்லோ 11' விண்வெளியின் மையிருளினூடாகப் பூமியை நோக்கி விரைந்து கொண்டிருந்தது. பசுபிக்கடலில் வந்திறங்கும் விண்வெளி வீரர்களைக் காப்பாற்றி அவர்களைச் சுகாதாரத் தடுப்பு முகாமிற்குக் கொண்டுசெல்ல ஒழுங்குகள் யாவும் செய்யப்பட்டன. விமானம் தாங்கிக் கப்பல் அப்பல்லோ 11 கப்பல் வந்து விழும் பிரதேசத்தில் யு. எஸ். எஸ். ஹோர்னட் என்ற விமானம் தாங்கிக் கப்பல் வட்டமிட்டபடி இருந்தது. தமது அமோகமான வீரதீரச் செயல்களைச்செய்து முடித்த விண்வெளி வீரர் பசுபிக் சமுத்திரத்தில் யாது தாக்குதலுமின்றி வந்திறங்கினர். வட்டமிட்டுக்கொண்டிருந்த விமானம் தாங்கிக் கப்பல் அவர்களைத் தாங்கிச் சென்று கரைசேர்த்தது.

இவ்வற்புதமான விண்வெளி ஆராய்ச்சியானது உலகமக்கள் யாவரையும் ஒருவகையில் ஐக்கியப்படுத்தியுள்ளது. இவ் ஐக்கிய மனப்பாங்கானது மனித குலத்திற்குக் கிடைத்த மகத்தான ஒரு பரிசென்றே கூற வேண்டும். அமெரிக்க விஞ்ஞானிகளின் நிதானக் கொள்கை பாராட்டக்கூடியது.

குறிப்பு: கல்கி, புதினப்பத்திரிகைகளை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டது.

சிஸ். மேரி யூவேமியா,
முதலாம் வருடம்.

நம்மை நாம் எப்படி எண்ணுகிறோம் என்னும் அபிப்பிராயத்துடன், பொதுமக்கள் நம்மை எப்படி எண்ணுகின்றனர் என்ற அபிப்பிராயத்தை ஒத்திட்டுப் பார்த்தால், நம்மைப் பற்றி நாம் கொள்ளும் அபிப்பிராயம் அவ்வளவு பெரிய கொடுமையாகத் தெரியாது.

தோரோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை யூற்று

திங்கள் எழுந்துவரும் மேகம் – வெள்ளி
சேர்ந்தே யொளியுமிழும் கோலம் - புவி
எங்கும் மலர்வளிக்கும் வெய்யோன் - இவை
என்றும் கவிதைதரும் ஊற்றும்.

காட்டில் உலவிவரும் போது - அங்கு
காணும் விலங்கினங்க ளெல்லாம் - உயிர்
ஊட்டம் உவந்தளிக்குஞ் செய்யுள் - என்றும்
ஊறிப் பெருகிவரச் செய்யும்.

நீண்டு வளர்ந்திருக்கும் வரைகள் - அங்கு
நீரில் நிறைந்துவரும் அருவி - நாம்
வேண்டும் உணவளிக்கும் பயிர்கள் - கவி
வெள்ளம் படர்ந்துவரச் செய்யும்.

தங்கம் கடைந்தெடுத்த மேனி - பல
சங்கம் நிரைத்தெனும்பற்கள் - நகை
நுங்கும் நுரையுமெனச் சிந்தும் - சிறு
மழலை கவிதைதரும் ஊற்று.

காவில் நகைபுரியும் பூக்கள் - தமிழ்க்
கானம் எனவிசைக்கும் குயில்கள் - புதுப்
பூவில் நறைகுடிக்கும் வண்டு - இவை
பொங்கிக் கவிதைவரத் தூண்டும்.

செல்வி. மே. பி. ஸ்ரனிஸ்லாஸ்,
விடுகை வருடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனையியலில் விஞ்ஞானம்

நீல வானம்: அதனில் நீந்திடும் சந்திரன்: காலடி வைத்துச் சந்திரனில் நடமாடுகின்றனர் விஞ்ஞானப் பெருந்தகைகள் ஆர்ம்ஸ்டிராங் ஆல்ட்ரின்: அவர்களின் ஆய்வுகளை அறியும் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கின்றார் காலின்ஸ் தாய்க்கப்பலில்: விந்தையா? வினோதமா? ஆமாம் இருபதாம் நூற்றாண்டின் விஞ்ஞான ஆராய்ச்சித்திறன் மனித இனத்தைச் சந்திரமண்டலத்திற் காலடி வைக்கவும் காட்டிவிட்டது: அப்படியாயின் ஒரு கேள்வி இத்தகைய விந்தை மனிதர்களை உருவாக்கியவர் யார்? அத்துடன் கலந்து வருகின்றது விடையும்: மனையியல் அறிவு நிரம்பப் பெற்ற மாண்புமிக்க அன்னையர் தாம் அவர்களை ஆக்கிவிட்டனர்.

"மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல்"

என வள்ளுவர் குறள் வளமுடனுரைக்கின்றது. மனையிலே வித்திட்ட விஞ்ஞான அறிவு வளர்மதிபோல் வளர்ந்து வானையும்நாடிச் சென்று அதன் கோள்களையும் ஆராய்ந்து வரச்செய்து விட்டது. எனவே முதன்மை மிக்க மனையியலிலே விஞ்ஞானத்தின் பங்கினை ஆராய்வாம். காட்டில் காய், கனிகள் வேட்டையின் இறைச்சிகளைப் பக்குவம் செய்யாது பதம் பார்க்காது புசித்தது அந்தக் காலம்: அறுசுவை உண்டி உருசி பல கண்டு உண்டு களிப்பது இந்தக் காலம்: உணவு விடயத்தில் விஞ்ஞானம் உன்னத சேவை புரிந்துள்ளது: பச்சை உணவுகளைப் பல நாட்களுக்குப் பாதுகாத்துப் போஷிப்புடன் உண்ண வழி திறந்துள்ளது குளிர் சாதனப் பெட்டி. தீ விபத்துக்களில் இருந்து பாதுகாத்துப் பல மணி வேலைகளைச் சிலமணி வேளைகளில் ஆக்கிவிட மின்சார அடுப்புக்கள் துணை புரிந்துள்ளன. புதுப்புது முறைகளிலே உணவைத் தயாரிக்கவும், பல நாட்களுக்குப் பாதுகாக்கவும் உதவுகின்றன 'அசிட்' போன்ற இரசாயன திரவங்கள்.

சமையற்றுறையில் எத்தனை, எத்தனை, புதுமைகளைப் புகுத்திவிட்டது விஞ்ஞானம். அப்பப்பா இவையெல்லாம் நமக்குக் கிட்டுமா? மாடமாளிகையில் வதியும் கோடீஸ்வரருக்கே இவையுரியன. நாமோ பாடுபட்டுழைக்கும் பாட்டாளிகள். நமக்கும் விஞ்ஞானத்துக்கும் என்ன தொடர்பென நம்மிற் சிலர் எடுத்துரைக்க முன்வரலாம். அப்படிக்கூற விஞ்ஞானம் இடம் வைத்து விடவில்லை. காலடியிலே வீட்டுத் தோட்டத்திலே பரந்துகிடக்கின்றன எத்தனையோ பச்சிலைச் செடிகள். மர அடியிலே பழுத்து வீழ்ந்து கிடக்கின்றன பல வகைப் பழங்கள். இவற்றைப் பற்றிக் கவனம் செலுத்தியவர் யார்? இன்று விஞ்ஞான அறிவு நமக்கு என்ன சொல்லித் தருகின்றது. தேடுவாரற்றுக் கிடக்கும் பச்சிலைகளும், பனம் பழங்களும் தேடற்கரிய கருவூலங்கள். உடலை ஊட்டி வளர்க்கும் எத்தனையோ ஊட்டச் சத்துக்களும் உயிர்களைக் கொல்லும் நோய்களைத் தீர்க்க வல்ல சஞ்சீவிகளும் இவற்றிலேயே நிறைய உண்டாம். பணம் கொடுக்காது விலை பேசாது ஏழை மக்கள் பக்குவம் பண்ணி இவற்றையுண்டால் நோயற்ற வாழ்வாம் குறைவற்ற செல்வத்தைப் பெற்று மகிழ்வார்கள் என்றெல்லாம் எடுத்தோதுகின்றது.

இன்று வீட்டுத் தோட்டத்திலே ஏராளமான எலுமிச்சம் பழங்கள், அடுத்த மாதம் ஒன்று வாங்கப் பதினைந்து சதம்: பணத்துக்கு எங்கே போவது பழம்வாங்க? இதற்கும் வழி சொல்லித் தருகிறது விஞ்ஞானம். செழிப்பான காலங்களிற் கிடைக்கும் பழங்களின் சாற்றைப் பிழிந்து குறிப்பிட்ட சில இரசாயனப் பொருட்களைக் கலந்து பாதுகாப்பின் அவை வருடம் முழுவதுமே தேவையைப் பூர்த்திசெய்துவிடவல்லன. இவ்வாறே சுதேச நாட்டுணவுகளான பழவகைகள் காய்கறிவகைகளைப் பழுதுபடாமல் பல மாதங்களுக்குப் பக்குவமாய்ப் பாதுகாக்க விஞ்ஞானம் வழிகாட்டியுள்ளது: உடலின் தேவைக் கேற்ற உண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வுகளையும் நோய் வந்த விடத்துக் குறிப் பிட்ட உணவுகளைக் குறைத்தும் தேவைப் படும் உணவுகளைத் தேவைக்குகந்த அளவி லும் உண்ணல் போன்ற சிறப்பான முடிபு களைத் தந்துதவிய விஞ்ஞானத்தை என்றும் வாயாரப் புகழ்ந்து மனமார ஏத்தல் வேண்டும்.

மனையியலில் முக்கிய அம்சங்களுள் ஒன்றுகிய உடைதெரிதல், தையற்கலை என்பவற்றிலும் விஞ்ஞானம் பெரிதும் கலந்துள்ளது. ''மின்னு வ தெல்லாம் பொன்னன்று'' என்றபடி உடைதெரி தலில் பளபளப்பான பகட்டான துணியில் மனதைப் பறி கொடுத்துவிடக் கூடாது. உடலின் நிலை சுவாத்தியத்தின் தன்மை உடையின் தரம் என்பவற்றை ஆராய்ந்தே உடைகளைத் தெரிய வேண்டுமென விஞ் ஞானம் கற்பிக்கின்றது. வெப்ப நாட்டில் வாழும் நமக்கு ஏற்ற ஆடை எது? கம் பளிஆடையா? பட்டாடையா? பருத்தி யாடையா? எளிதிற் கடத்தி அரிதிற் கடத்தி என்னும் விஞ்ஞானப் பேருண்மை களின்படி நமக்குப் பருத்தி உடையே சிறந்ததெனத் தெரிந்து கொள்கின்றோம். அவ்வாறே குளிர் நாடுகட்குச் செல்லும் போது கம்பளி ஆடைகளே நமக்கு அவசி யம் என்பதையும் தெரிந்து கொள்கின் றோம். கை கடுக்க நீண்ட நேரமாக ஆடைகளைத் தைக்கும் கடினத்தை நீக்க இன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ள தையல் இயந்திரங்கள் தையற்கலையில் தனியிடத் தை வகுத்துள்ளது: விஞ்ஞான மென்றால் மேற் குறிப்பிட்டவை அவற்றை உண்மை யென நிரூபிக்கும்:

குடும்பத்தின் குதூகலம் குழந்தைச் செல்வமே. தம் மக்களின் மழலைமொழி கேட்காதவர், யாழினிது, குழலினிது என்று இன்புறுவதாக வள்ளுவர் கூறுகின் றார். இத்தகைய அருஞ் செல்வங்களை உருவாக்க வேண்டிய தாய்மைக்கு எத்; னை யோ புதுமைகளையெல்லாம் புகட்டி நிற் கின்றது விஞ்ஞானம். குழந்தை தாயின் உதரத்தில் உருவாகிய அன்றே அதன் வளர்ச்சிப்படி ஆரம்பமாகி விட்டது: எனவே அன்று தொட்டு அதன் ஏனைய வளர்ச்சிப்படிகள் அத்தனையிலும் எவ்வாறு உடல், உள, இயல்புகளையறிந்து உருவாக்க வேண்டுமென விஞ்ஞான அறிவு எடுத்து ரைக்கின்றது: விஞ்ஞான ஆராய்ச்சிகள் அறியப்படுமுன் தாயானவள் தன் குழந்தை யின் உடலை வளர்த்துவிட்டாற் போது மென எண்ணினாள்: ஆனால் இன்றோ குழந் தையின் உடலை மட்டுமல்ல உளத்தையுமே வளர்க்க வேண்டுமாம்: சிசுவின் ஆரம்ப நிலையிலே இது அடியிடப்படவேண்டும்: பயமூட்டிக் குழந்தையை உணவூட்டும்வழக் கம் அதன் பயன் குழந்தையை வருங்கால உலகிலே பயங்கொள்ளியாக்கி விடுதலே என்று கூறுகின்றது விஞ்ஞான முடிவு: ''தொட்டிலிற் பழக்கம் சுடுகாடுமட்டும்'' என்ற பொன்மொழிக்கேற்பக் குழந்தைப் பருவத்திலே பிஞ்சு உள்ளங்களிலே சிறந்த பண்புகளைப் பழக்க வழக்கங்களைப் புகுத்தி விட்டால் அதன் வருங்காலப்பலன் சொல்லு தற்கரிதே.

அன்று ஒரே போர்முழக்கம். வீட்டிலே குழந்தையைக் காணோமே என்ற அங்க லாய்ப்பு. எங்கும் தேடுகின்றனர். எங்குமே காணவில்லை. இறுதியில் போர்க்களம் அடைந்தனர். அதோ! பாலியன் நெப் போலியன் நிமிர்ந்துநின்று விழுங்குதமாகப் பார்க்கின்றான் போர் வெற்றியை. குழந் தையைக்கண்ட ஆனந்தத்தாற் கையிற் பிடித்த வண்ணமே கேட்கின்றனர் கேள்வி. தம்பி உனக்குப் பயமில்லையா? பயமென் றால் என்ன? விடை வருகின்றது. இன்று கரகோஷ முழக்கம். சந்திரனில் கால் வைத்து விட்டனராம் விஞ்ஞான வீரர்: உலகம் முழுவதும் அதிசயித்து, சந்திரனில் இறங்க அச்சமில்லையா? என வினவுகிறது: அதற்கான விடை, அச்சமற்றதினாலேயே சந்திரனில் இறங்கி விட்டோம் எனச் சொல்லாமற் சொல்கின்றனர் விஞ்ஞான வீரர்:

இத்தகைய வீரர்களையெல்லாம் உரு வாக்கியமைக்கு வித்திட்ட விஞ்ஞானத் துடன் சேர்ந்த மனையியற் கலையே உன் பெருமை ஓங்குக: விஞ்ஞானமே! உன் திறன் மனையிற் கலந்து புகழடைவதாக.

சிஸ்டர் மேரி லிட்வின்,
முதலாம் வருடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சென்ற் ஜோன்ஸ் அம்புலன்ஸ் பிறிக்கேடில் பங்குபற்றி வெற்றிக்கேடயம் பெற்ற கழக மாணவிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் தொழில் பார்ப்பதுபற்றி எமது கருத்து

மலரினும் மென்மையான மங்கையான வள், மனையகத்தடங்கி மாண்புமிகு கற்பை மாசுபடாமற் காத்து மக்கள் முன் மாதிரியாகத் திகழ வேண்டியவளாகிறுள். இந்தக் கொள்கையின் அடிப்படையிலே தான் பெண்ணினவள் அன்றுதொட்டு இன்றுவரை வாழ்ந்து வருகிறுள். அவ்வாறு வாழவேண்டியவளாகிறுள். இதுவே தமிழன் மரபு: தமிழகத்தின் பண்பாடு.

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பெனுந்
திண்மை உண்டாகப் பெறின்"

என்னும் வள்ளுவன் வாக்கின்படியே வாழ்ந்து வரவேண்டியவள் பெண். அவ்வாறு பெண்ணிற் பெருந்தகையாக வாழ்ந்த குலமகளிரை வாழ்த்துகிறது வையகம். போற்றுகிறது இலக்கியம். தெய்வமெனத் தொழுகின்றது மக்கள் குலம். எதற்காக? என்று எண்ணச் சூழலில் எழும் வினவை உற்று நோக்குவோம்.

அகிலத்துக்கு அருளொளி வீசும் ஆனந்த ஜோதியாகக் குடும்பத்தில் விளங்குபவள் பெண். குடும்பமே கோயிலாகவும், கொழுநனே தெய்வமாகவும், குழந்தைகளே சொர்க்கமாகவும் எண்ணி வாழ்பவள்பெண். மாலையிட்டவன் மனம்கவர்ந்த மனைவியாக, புகுந்த வீட்டின் மருமகளாக, மக்களுக்குத் தாயாக, எல்லோருக்கும் சகோதரியாக விளங்கி, ஒவ்வொருவர் மனதுக்கியையத் தன்னையே மாற்றி வாழுபவள் பெண். பெண்ணுக்குரிய குணநலன்கள்தாம் இவை.

ஆனல் அரிவையர் உத்தியோகம் ஆற்றலாமா? என்ற வினவிற்கு விடைகாண்போம் இப்போது:

தன் உதரத்திலே உருவாக்கி, திருவாக்கி, காயாக்கி, கனியாக்கி பத்துத் திங்கள் சுமந்து புது மனிதனை உலகிற்கு அளிக்கும்போது பெண்ணினவள் தாய்மை என்னும் தலைவணங்கக்கூடிய நிலையை அடைகின்றுள். அத்துடன் அவள் பல பொறுப்புக்களையும் ஏற்கவேண்டியவளாகிறுள். பெற்ற துன்பத்தை எள்ளளவும் எண்ணுது முகங்கோணுமல் முனிவர் பெருமக்களைப் போன்று நகைமுகங் கொண்டு மக்களை வளர்ப்பவள் பெண். தாய் மொழியைத் தன் பாலுடன் குழைத்தூட்டி விடுபவள் அவள்.

கை வீசம்மா கை வீசு என்ற நடை பயிலப் பயிற்றுவிப்பவள் பெண்தான். ஆனல் அவள் உத்தியோகம்பார்க்க வெளிப்பட்டால், உலகிற் செய்யும் செயற்கரிய இச்செயலைச் செய்ய முடியுமா? முடியவே முடியாது. அவள் குழந்தைக்குப் பாலியப் பருவம் நன்கு அத்திவார மிடப்பட மாட்டாது:

தாயானவள் அலுவலகத்திற்குச் சென்றுல் குழந்தைகள் வளர்க்கப்படுவது பிறர் கையில். மக்கள் நிலையை மறந்து அலுவலக வேலையில் ஈடுபடுகின்றுள் தாய். தாய்ப் பாசத்தை உணராது அதைப் பூரணமாக அனுபவியாத குழந்தைகள், எண்ணம் போன போக்கிலெல்லாம் வளர்க்கப்படுகின்றனர்:

வருங்கால வாழ்வென்னும் கோட்டையைக் கட்ட அமைக்கப்படவேண்டிய அத்திவாரமாகிய பாலியவயது பக்குவமுடன் படைக்கப்படாது விடுவதால், வருங்கால சமுதாயமே வரண்ட பாலைவனமாக்கப்பட ஏதுவாகிறது:

"தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

என்ற வள்ளுவன் வாக்குக்கேற்பக் கைப்பிடித்தவன் காரியங்களைக் கவனிக்க முடியாது கஷ்டப்படுகிறுள் உத்தியோகம் பார்க்கும் மனைவி. களைத்துவரும் கணவனைக் களைப்பாற்றி அவன் மனம் மகிழ மகிழ்வான வார்த்தைகளை வழங்கமுடியாது அல்லற் படுகிறுள்: அவன் மனதுக்குகந்தபடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவுவகைகளைத் தயாரித்து அளிக்க மூடியாது அவதிப் படுகிறாள். தானும் அலுவலகத்தில் இருந்து வருவதால் மனையை மாட்சியுடன் வைத்திருக்க முடியாது; படிப்படியாகத் தோன்றும் இச்சில குறைபாடுகள் குடும்பத்தின் அழகைக் கெடுத்து, அமைதியை அழித்து, சச்சரவுகளை வருவிக்கின்றன. அலுவலகத்தில் பல்வகைப்பட்ட ஆண்களுடன் பழகுவதால் சிலசமயம் அவள் பலரின் சந்தேகப் பார்வைக்கு இலக்காக வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படலாம். வீட்டு வேலைகளைச் சிலசமயம் செய்யத் திண்டாடும் மனையாள் உத்தியோகம் பார்ப்பதால் மாட்சியுடன் மிளிர வேண்டிய மனையானது கவனிக்கப்படாமல் ஒளிர்வு குன்றி விடுகிறது.

அதுமட்டுமல்ல, பெண்ணானவள் புகுந்த வீட்டின் மருமகளாகவும், எல்லோருக்கும் சகோதரியாகவும் விளங்க வேண்டியவளாகின்றாள். மனையிலேயிருந்து மனையக வேலைகளைக் கவனிக்கும் மனையாளைவிட அலுவலகம் செல்லும் குடும்பப்பெண் குடும்ப வேலைகளைப் பூரணமாகச் செய்யமுடியாது. இதனால் மாமன் மாமியரின் முறுமுறுப்புக்கு இலக்காகி மனம் வெதும்பும் எத்தனையோ பெண்கள் இருக்கின்றனர். தம் மகனின் கடமைகளைப் பூரணமாக நிறைவேற்றுது தத்தளிக்கும் பெண் என்பதனால் அவர்களின் வெறுப்புக்கு ஆளாகி ஆறுதல் வார்த்தை கூற எவருமின்றி அல்லற் படுகிறாள். வீடு தேடி வரும் விருந்தினரைப் பேணி அகதிகளை அரவணைத்து விருந்தோம்பல் என்னும் கடமையைச் செய்ய முடியாது கஷ்டப்படுகிறாள்.

இத்தனை தொல்லைகளும் உத்தியோகம் பார்க்கும் குடும்பப் பெண்ணுக்குப் பரிசாகக் கிடைக்கின்றன. பெண்ணுக்குரிய பெருங் குணங்களுடன் இலட்சியப் பெண்ணாக வாழமுடியாது. உழைக்கப் பிறந்தவன் ஆண்மகன். உழைத்ததைக் கொண்டு தானும் வாழ்ந்து பிறரையும் வாழவைக்கப் பிறந்தவள் பெண். ஆகவே, பெண்கள் உத்தியோகம் பார்க்கக் கூடாதென்பது சிலரின் அபிப்பிராயம்.

ஆனால் பொருளாதார நெருக்கடியானது மிகுந்திருக்கும் இன்றைய உலகின் நிலையை உற்றுநோக்கினால் எத்தனை எத்தனையோ குடும்பங்கள் இன்றைய உணவு, உடை, உறையுளுக்காக எவ்வளவோ அல்லற் படுகின்றன. பெண் பிள்ளைகள் மட்டும் உள்ள குடும்பங்கள் இன்றைய உலகில் வாழ்வதெப்படி? அது மட்டுமன்று: சீதனம்! சீதனம்!! சீதனம் இன்றேல் கலியாணம் இல்லை என்ற கொள்கையில் வாழும் ஆண்மக்களால் கன்னியர் பலர் கலியாணம் செய்து காலாகாலத்தில் சீரும் சிறப்புமாக வாழமுடியாது கஷ்டப்படுகின்றனர். இந்த வழியில் வாழமுடியாது கஷ்டப்பட்டுவிட்டுச் சிறையில் கூட்டுப்பறவைகளாகப் புதுமைப் பித்துக் கொண்டலையும் இவ்வுலகில் வாழும் பெண்ணினத்தைக் கண்ட புதுமைக்கவி பாரதியார் அவர்களை நோக்கி, "புதுமைப் பெண்ணே! எழுந்திரு!! ஆணுக்குப் பெண் சளைத்தவளல்லள் என்று ஆடிப்பாடிக் கும்மியடி" என்று உணர்ச்சி வசப்படக் கூறினர். உரிமைக் குரலெடுத்துப் பாடினர். புதுமைக் கவிஞனின் உரிமைக்குரலை உற்று நோக்கினாள் பெண்:

"அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு" என்ற அக்கால மூட நம்பிக்கையின் வித்தைக் கிள்ளியெடுத்த பாரதியின் வழிப்படி தானும் வாழ தன்னைச் சார்ந்தோரும் வாழ பொருளாதார நெருக்கடியால் நெரிபட்டு நிற்கும் இச்சமுதாயத்திற் குதித்தாள். எந்தத் துறையிலும் ஆர்வமுடனும் அவதானத்துடனும் உழைக்கின்றாள் பெண்.

"கொஞ்சு மொழிப் பெண்களுக்கு அஞ்சா நெஞ்சம் வேணுமடி" என்ற பாரதியின் உரிமைக் குரல் வழிப்படி உலகின் எத்துறையிலும் அஞ்சா நெஞ்சுடன் உழைத்து வருகிறாள். குடும்பம் ஒன்றில் பெண்ணானவள் தன்குடும்ப விஷயத்தையும் கவனித்து உத்தியோகமும் பார்த்து வருவதால் குடும்பத்திலே பொருளாதார வசதிகள் அதிகரிக்க ஏதுவாகும். குடும்பத் தலைவனும் தலைவியும் ஒத்துழைப்பதன் மூலம் பொருளாதாரப் பிரச்சினையைக் குறைத்து வறுமை என்னும் வாவியில் வாடி அல்லற்படாது வாழ்க்கைப் படகை ஓட்டிச்செல்ல முடியும். இளம் வயதிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதிபர், குருளை ஆசிரியர், பேராசிரியர்களுடன் எங்கழகக் குருளையர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறுமையில் வாடிய இளம்பெண்கள் படித்து உத்தியோகம்பார்த்தால் அவர்கள் குடும்ப வாழ்வில் தம் பிள்ளைகளை, சகோதரரை நல்ல நிலையில் வைத்துப் படிப்பிக்க உதவக்கூடியதாக இருக்கும்.

ஆனல் பெண்கள் பொறுமை என்னும் நகை அணிந்து, கற்பென்னும் கவசம் அணிந்து, சாதுரிய மென்னும் கொடி பிடித்து, இல்வாழ்க்கையில் கணவனுடன் ஒத்துழைத்து வரவுக்கேற்ற செலவுடன் உத்தியோகம் பார்ப்பாளானல் குடும்பத்திற் பொருளாதாரப் பிரச்சினை ஒழியும். சமாதானம், அன்பு நிலைத்து நிற்கும். ஆகவே "புதுமைப் பெண்களடி பூமிக்குக் கண்களடி" என்பது போன்று பெண்களும் தமிழ்ப் பண்பாட்டைத் தவற விடாது எல்லோருக்கும் முன்மாதிரியாகத் திகழ்ந்து உத்தியோகம் பார்த்து தம் குடும்பத்தின் பொருளாதார வளத்தைப் பெருக்கி வந்தால் சமுதாயம் தன் பொருளாதாரத்தில் உயரும். நகர் உயரும் நாடு உயரும், உலகமே உயரும். ஆனல் எல்லாப் பெண்களும் தம் மக்களை நல்வழியில் நடத்துவதற்காக நன்கு கல்வி கற்கவேண்டும். எல்லாப் பெண்களும் உத்தியோகம் பார்க்கத் தேவையில்லை. கணவன் குணமறிந்து, நலமறிந்து, உத்தரவறிந்து, குடும்ப பொருளாதார வளத்தைப் பெருக்கும் நோக்குடன் இல்லத் தலைவனும் ஒத்துழைப்பானனல் பெண்கள் உத்தியோகம் பார்ப்பது நன்று.

பெண்களுக்கென ஓர் இலட்சிய வாழ்வு உண்டு. அந்த இலட்சிய வாழ்வில் தன் இலட்சியத்தை இழக்காது இல்லத்தை இன்பமணம் கமழச் செய்ய முடியுமானல் பெண்கள் உத்தியோகம் பார்ப்பதிற் தவறில்லை. ஆனல் குடும்பத்திற் பொருளாதார நிலை கவலைக்கிடமாகஇருப்பின் படித்த பெண்கள் உத்தியோகம்பார்த்து தம் குடும்பத்தின் நிலையை யுயர்த்தி அதை வாழவைப்பது அவசியம்.

ஆனல் பொருளாதார வளம் வழிந்தோடும் குடும்பங்களில்பெண்கள் பொழுதுபோக்கிற்காக உத்தியோகம் பார்ப்பதைத் தவிர்த்து இல்லத்தரசியின் இலட்சிய வாழ்வை வாழ்ந்து இல்லத்தை இன்ப மணங் கமழச் செய்வது பெண்களின் தலையாய கடன்.

ஆகவே பெண்கள்—முக்கியமாகக் குடும்பத் தலைவிகள் உத்தியோகம் பார்ப்பது அக்குடும்பத்தின் இல்லத் தலைவனையும் தலைவியையும் பொறுத்த தென்பது மிகையாகாது. தத்தம் வசதிக்கேற்ப அவர்கள் இன்றைய உலகில் தம் வாழ்க்கைத் திட்டத்தை அமைத்து, பெண்கள் உத்தியோகம் பார்ப்பதை அல்லது பார்க்காது விடுவதை அவர்களே நிர்ணயித்து வாழ்வதே சிறந்ததும், நீதியானதும் என நான் கருதுகிறேன்.

செல்வி. பாரசக்தி சுப்பிரமணியம்.
விடுகை வருடம்.

என் கனவுகள் வெறும் ஆகாயக் கோட்டைகள் அல்ல. கூடியவரையில் அவற்றை நனவாக்கவே நான் விரும்புகிறேன்.

மகாத்மா காந்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைக்கலை அன்றும் இன்றும்

செல்வி. க. செள. சந்தனநங்கை

(பேராசிரியை, மகளிர் அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, கோப்பாய்)

நாகரிக வளர்ச்சிப்படிகள் சிலவற்றைக் கடந்த மனிதன், தன்னைச் சூழவுள்ள இயற்கையை உற்று நோக்கினான். அதன் எழில் அவன் சிந்தையை ஈர்த்தது. உள்ளத்தை மலர்த்தியது. அதனிடத்திற் பலவற்றை அவன் அறிந்தான், உணர்ந்தான். அவன் தனது அறிவு, சுவை உணர்வு, அழகனுபவம் என்பவைகளாற் கண்டு பிடித்தவைகளிற் கலைகள் முதலிடம் வகிக்கின்றன. இசை, நடனம், சிற்பம், ஓவியம் என்பன அவைகளுட் சிலவாம். இவை நாட்டுக்கு நாடு, இனத்திற்கு இனம் பல்வேறுவகைகளில் வளர்ச்சியடைந்திருப்பது கண்கூடு. எல்லாக் கலைகளும் மக்கள் வாழ்வையும், உணர்வையும் உயர்த்தக்கூடியனவாகும். எனினும், எல்லா உயிரினத்தையும் ஒருங்கே தன்வயப்படுத்துந் தன்மை வாய்ந்ததாய் விளங்குவது இசைக் கலையே என்க.

"காட்டு விலங்கறியும்
கைக்குழந்தை தானறியும்
பாட்டின் சுவையதனைப்
பாம்பறியு மென்றுரைப்பார்"

என்ற ஆன்றோர் கூற்றும் இங்கு நோக்குதற்குரியது. அன்றியும், ஒருவன் தனது வாழ்க்கையிற் பாடாவிட்டால் அவனது வாழ்நாளிற் பாதி வீணாகி விடுகின்றது என்பதையும் நமது முன்னோர் உணர்ந்திருந்தனர்.

இசையின் பெருமை

மனித வாழ்க்கையின் பல்வேறு கட்டங்களிலும் இவ்விசையானது நன்கு பயன்படுத்தப்படுவதோடு, மனிதனது நல்லுணர்ச்சிகளைத் தூண்டி, அவனை இறைவனோடு ஒன்றவைக்குஞ் சாதனங்களுள் மிகச் சிறந்தனவாகவுங் கருதப்படுகிறது. "எவனொருவன் சுருதிகளையும், இராக மூர்ச்சனைகளையும் நன்கறிந்து அதனை நன்முக வீணையில் மீட்டத் தெரிந்து கொள்கின்றானே அவன் வீட்டின்பமெய்துவான்" என்கிறார் யாக்ஞ வல்கியர் என்னும் முதறிஞர்.

"ஏழிசையாய் இசைப்பயனாய்" விளங்குபவன் இறைவன் எனவும், "தமிழோடிசை பாடல் மறந்தறியேன்" எனவுங் கூறுகின்றது தேவாரம். நாதவழிபாடாற்றி இறைவனைப் பாடுவதையே பணியாகக் கொண்ட ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள், "சப்த சுரங்களே சங்கரனது சரீரம்" எனவும், சங்கீத மும்மூர்த்திகளுள் ஒருவராய்த் திகழும் ஸ்ரீ முத்துச்சாமி தீக்ஷிதர் "இருபத்திரண்டு சுருதிகளைச் சேர்ந்த சுரங்கள்தாம் பரதேவதையின் வடிவம்" எனவுங் கூறியுள்ளனர். பறவைகளின் இனிய ஒலிகளையும், கடலலையின் ஓசையினையும், காற்றின் ஒலியையும் பிரணவ இசையாகக் கண்டவரன்றே நம்முடைய ஞானிகள். இவ்வாறு அன்று தொட்டு இன்றுவரை பல்வேறு நாட்டவரும், மொழியினரும் இசையினைப்பற்றிப் புகழ்ந்து பேசுவதிலிருந்து இதன் சிறப்பும், பயனும் நன்கு புலனாகின்றது.

இத்தகைய மேன்மைவாய்ந்த நல்லிசையை நம் முன்னோரும் பின்னவரும் நன்கு பயின்றும், அனுபவித்தும், ஆராய்ந்தும் வந்துள்ளனர். நாமும் இக்கலையைப் பயின்று அதன் அழகை நுகர வேண்டுவது அவசியமென்க. அப்பேறு நமக்கு வாய்க்காவிடினும் இந்நற்கலை பற்றிய செய்திகள், வரலாறுகள் என்பன பற்றியேனும் ஓரளவு ஓர்ந்து, சமூகத்தில் அதனை வளர்க்க ஆவலும் ஊக்கமுங் கொள்ள வேண்டியது மிகவும் இன்றியமையாததொன்று. இந்த ஆவலினாலும், அதிபர் அவர்களது ஊக்குதலினாலும் உந்தப்பெற்று எழுந்ததே இச்சிறு கட்டுரை என்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கையின் ஆடலும் பாடலும்

ஆடல், பாடல்களாகிய இரண்டினையும் பழந்தமிழ்ப் புலவர்கள் தம்வாழ்க்கை யோடு இணைத்து வாழ்ந்து மகிழ்ந்ததுடன், ஆடலுக்குப் பாடல் இன்றியமையாத தென்பதையும் நன்கு அறிந்திருந்தனர். 'சிலப்பதிகாரம்' என்னும் பழந்தமிழ் நூலி லும், அதற்குரிய உரைகளிலும் ஆடலை யும், பாடலையும் பற்றி வருஞ் செய்தி களே அதற்கு எடுத்துக்காட்டாகும். காவிரிப்பூம் பட்டினத்தில் வாழ்ந்தவர்கள் ஆடலாலும், பாடலாலும், இன்புற்றனர் என்பதை, ''பாடலோர்த்தும், நாடகம் நயந்தும்'' எனவரும் 'பட்டினப் பாலை' அடிகள் தெரிவிக்கின்றன.

இவ்வாடலையும், பாடலையுங் கண்டுங், கேட்டும் அனுபவித்த பழம் புலவர்கள், அவற்றிலீடுபட்டதினுல் உண்டாய இன்ப உணர்வை இயற்கையிலுங் கண்டு இன் புற்றனர். சோலைகளையுங், காட்டினையும் வருணிக்குங்கால், இயற்கையிலே நிகழும் நிகழ்ச்சிகளை ஆடலுடனும், பாடலுடனும் பொருத்தி மகிழ்வது அவர்தம் வழக்கமாகும். இயற்கையில் ஆட லும், பாடலும் அமைந்த காட்சி ஒன்றைக் காண்போம்.

பாரி என்னும் பெருவள்ளலோடு உயிர் நேயம்பூண்டவர் கபிலர் என்னுங் கவிஞர். அவர் பறம்பு மலையில் நெடுநாள் வாழ்ந்து அம்மலையின் அழகைக் கண்டு மகிழ்ந்தவர். மலைகளையும், மலைப்பக்கத்தில் நிகழும் நிகழ்ச்சிகளையும் வருணிப்பதில் வல்லவர். ஒரு நாள் அம் மலைப்பக்கத்தில் நிகழும் நிகழ்ச்சியொன்றைக் காண்கின்றூர் அப் புலவர்பெருமான். மலைமேலுள்ள மூங்கில் களில் வண்டுகள் துளைத்திருக்கின்றன. அந்தத் துளையின் வழியாகச் செல்லுங் காற்றே புல்லாங்குழலின் இடத்தை வகிக் கின்றது. இனிய ஓசையுடைய அருவியின் அமைதியான ஒலி மிருதங்க ஓசையாக உள்ளது. கூட்டங் கூட்டமாகவுள்ள கலை மான்கள் தாழச்செய்கின்ற ஒலி, அவருக் குப் பெருவங்கியத்தின் இசையை ஒத்தி ருக்கின்றது. மலைப்பூஞ்சாரலில் உள்ள வண்டு, யாழைப்போல் 'ரீங்காரஞ்' செய்கின்றது. இவ்வாறு புல்லாங்குழல், மிருதங்கம், பெருவங்கியம், யாழ் என்னும் இத்தனை இசைக்கருவிகளும் ஒலிக்க ஓர் அழகிய மயில் மெல்ல நடந்து ஆடுகின்ற தாம். அந்த மயிலாகிய நாட்டிய மகளின் ஆடலையும், மற்றையனவற்றின் பாடலை யும் கண்டுங் கேட்டும் வியப்பதற்குக் குரங்குகள் சபைகூடி இருக்கின்றனவாம். இந்த அழகான செய்திகளைக் கூறும் கபில ரது செஞ்சொற் கவியினையுங் காண்போம்.

''ஆடமைக் குயின்ற அவிர்துளை மருங்கிற்
கோடை அவ்வளி குழலிசை யாகப்
பாடின் னருவிப் பனிநீ ரின்னிசை
தோடமை முழவின் குதைகுர லாகக்
கணக்கலை யிகுக்குங் கடுங்குரற் றூம
மலைப்பூஞ் சாரல் வண்டியாழ்ஆக பொடு
இன்பல் இமிழிசை கேட்டுக் கலிசிறந்து
மந்தி நல்லவை மருள்வன நோக்கக்
கழைவள ரடுக்கத் தியலி யாடுமயில்
நனவுப்புகு விறலியிற்
றோன்று நாடன்'' என்பது அப்பாட்டு.

மேற்போந்த நிகழ்ச்சியில், கபிலர் பாடகர் இல்லாமலே ஆட்டத்தைத் திற மையாக நடத்தி முடித்து விடுகின்றூர். இக் குறை நீக்குவான்போன்று சீத்தலைச் சாத் தனரும் ஒரு காட்சியைக் காண்கின்றூர். அங்கு வண்டினுள் உயர்ந்த சாதியாகிய தும்பி குழலும், வண்டு யாழுமாகிய பக்க வாத்தியங்களை இசைக்கின்றன. குயில் பாட, மயில் ஆடுகின்றது. இக்காட்சியிற் புலவர் குயிலைப் பாடவைத்து, ஆடலையும், பாடலையும் நன்முக அனுபவித்திருக்கின் றூர் என்பது புலனுகின்றது. இந்த அழகிய பாடலையுங் காண்பாம்.

''கொம்பர்த் தும்பி குழலிசை காட்டப்
பொங்கர் வண்டினம் நல்யாழ் செய்ய
வரிக்குயில் பாட மாமயி லாடும்
விரைப் பூம் பந்தர்.''

இவற்றுல் ஆடலும், பாடலுமாகிய இவ்விரண்டும் தமிழ் நாட்டிலே தலையாய இடத்தைப் பெற்று வந்திருக்கின்றன வென்பதையும், ஆடலுக்குப் பாடல் மிக இன்றியமையாததென்பதையும் நாம் நன்கு உணரலாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசையும் வாழ்க்கையும்

மக்கள் தமது வாழ்வில் இன்பத்திலும், துன்பத்திலும் இசையைப் பெரிதும் விரும்புகின்றனர்: தமிழன் வாழ்வு, பிறப்பு முதல் இறப்புவரை இசையாகவே கழிந்தது: வேலைகளையெல்லாம் பாட்டாகவே செய்தான்: தாலாட்டுப் பாடலை அறியாத தமிழனும் உளனே! தாயானவள் நாவசைத்துப் பாடுந் தாலாட்டைக் கேட்டு அழுத குழவி குரல் அடங்குகின்றது. சிறுவர், கும்மி, கோலாட்டம் முதலியன அடித்து விளையாடும்போது இசை கலந்த பாடல்களைப் பாடுகின்றனர். விழாக்களிலுங் கொண்டாட்டங்களிலும் இசைப் பாடல்கள் இடம் பெறுகின்றன. பல்லியங்களும் இயம்புகின்றன. வீரர்கள் போர்க்களஞ் செல்லும்போது, அவர்க்கு வீரமூட்டும் இசைகளை இசைக்கின்றனர். இறைவனை வழிபடுவோர் இசைப் பாடல்களால் அவனை ஏத்துகின்றனர். பிச்சை ஏற்போருங் கானமிசைத்துக் கையேந்தி நிற்பதைக் காண்கின்றோம். அன்றி, ஏற்றமிறைப்போர், ஏராளர், வண்டி ஓட்டுவோர், பாரம் இழுப்போர், கப்பல் செலுத்துவோர், காவடி எடுப்போர் பாடும் 'ஏற்றப்பாட்டு', 'அறுவடைப் பாட்டு', 'தெம்மாங்கு' (தென்பாகு) 'ஏலேலப் பாட்டு', 'கப்பற் பாட்டு'ச் சந்தஞ் செறிந்த 'சிந்துப்பாட்டு' என்பனவும் அவர்தம் அயர்ச்சியைப் போக்கி இன்பத்தை எழுப்பவல்ல இன்னிசைப் பாடல்களேயாகும்: இன்பத்தில் மட்டுமன்றி, துன்பத்திலும் இசை நமக்கு உதவுகின்றது: பிறப்பின்போது தாலாட்டுப் பாடி மகிழ்ந்த தமிழ் மகளிர், இறப்பின்போது இசைகலந்த ஒப்பாரிப்பாடலை மிழற்றி அமைதி காண்கின்றமையை, தமிழ்க்கலை மணங்கமழும் தமிழ்கூறும் நல்லுலகத்தன்றி வேறெங்குக் காணவியலும்!

இசையும் காலப்பாகுபாடும்

ஒரு நாட்டின் அல்லது சமுதாயத்தின் மொழி, அரசியல், சமயம், கலைவளர்ச்சி என்பவற்றை நோக்கும்போது, அவை வளர்ந்த காலத்தையுங் கருத்திற்கொண்டு நோக்குவது மிகப் பயனளிக்கும். அவ்வாறே தமிழகத்தில் அன்றும் இன்றும் இசை வளர்ந்தமைக்கு ஒரு காலப் பாகுபாடு அமைத்துக் கொள்வது அவசியமென்க:

மக்களின் உள உணர்ச்சியினின்றும் மொழி வடிவில் வருவதே இலக்கியம். இயற்றமிழின்கண் விளங்குஞ் சொற்களுஞ் சொற்றொடர்களுமின்றி இசைத்தமிழ் எங்ஙனம் இயங்கவியலும்! இயற்றமிழ்ச் செய்யுள்கள் இசையூட்டித் தாளமறுத்துப் பாடப்படின் அவை இசைத்தமிழின் பாற்படுமென்க. எனவே, இசைக்குயிரான இயற்றமிழ் அதாவது இலக்கியம் தமிழகத்தில் வளர்ந்த காலப்பிரிவோடு இதனையும் நோக்குதல் பொருத்தமுடைத்து:

அவற்றுள் முதலாவது சங்ககாலம். இது வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்டதாய் கி. பி. மூன்றும் நூற்றாண்டோடு முடிவுற்றதென்பர். கி. பி. 6 ஆம் நூற்றாண்டோடு முடிவது சங்கமருவிய காலம். கி. பி. 9ஆம் நூற்றாண்டுவரை தமிழகத்தை ஆண்டவர், பல்லவரென்னுமொரு வகுப்பினராவர். இவர்க்குப் பின் 14 ஆவது நூற்றாண்டு வரையுள்ள காலப்பகுதி பிற்காலச் சோழர் ஆளுகை செய்த காலமாகும். கி. பி. 14 ஆவது நூற்றாண்டிலிருந்து ஐரோப்பியர் வரும்வரை தமிழகத்தை ஆண்டவர் விஜயநகரமன்னரும், நாயக்க மகராட்டிர மன்னருமாவர். இக்காலப் பாகுபாட்டை வைத்துக்கொண்டு கீழ்க்கூறப்படும் விடயங்களை நோக்குவாம்:

தமிழில் இன்னிசை முழக்கம்

இன்று நாம் பாடுவதும் இசையரங்குகளிற் கேட்பதுவும் இசைப்பதுவுமெல்லாங் கருநாடக இசையேயென்க. கி. பி. 17ஆம், 18 ஆம் நூற்றாண்டுகளில் தமிழகம் விஜயநகர ஆட்சிக்குட்பட்டது. அக்கால முதல் கருநாடக இசையும் தமிழகத்திற் கால் கொண்டதென்க. இக்கருநாடக இசை தமிழகத்திற் பரவுவதற்குப் பல்லாண்டுகட்கு முன்பிருந்தே கடைச் சங்க காலந் தொடக்கம் செந்தமிழ் நாட்டிற் செவ்விய இசைமுழக்கங் கேட்பதை நாம் உணரலாகும். அக்காலத் தமிழர் இசைக் கலையிற் சிறந்திருந்தமையாலன்றே அக்கலையைத் தம் மொழிப் பகுதியாக்கியும், வாழ்க்கையோடு பொருத்தியும் அதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளம்பெறச் செய்தனர். அவ்வின்னிசை யின் முழக்கம் சங்ககாலப் பாணன் கைவழி யாழினும், கூத்தர், விறலியர் என்போரது ஆடல் கலந்த பாடலிலுங் கேட்கின்றது: குறிஞ்சி நிலப் பெண்களின் குரவையும், முல்லை நில மகளிரின் ஆய்ச்சியர் குரவை யும், மருத நில மங்கையரின் கொற்றவை வழிபாடற் பாடலுஞ் சிலப்பதிகாரத்திலே மாதவி இசைக்குங் கானல்வரிப் பாடல்க ளும் நம்முள்ளத்தில் இன்னிசையை நிறைப் பனவன்றே! ஆடலரசியாம் மாதவியின் நடன அரங்கேற்றத்தின்போது இசையாசி ரியன், குழலோன், யாழோன், தண்ணுமை யாசிரியன் என்போர் இசைக்குங் கூட்டி சையின் இன்பந்தானென்னே!

அன்று பெண்கள் பந்தாடுங்காலை பாடுங் 'கந்துகவரி'ப் பாடல், திருமணவேளையி லிசைக்கும் 'மங்கள வாழ்த்துப்' பாடல், 'நலுங்குப்' பாடல், ஆறு, கடற்கரை முத லிய இடங்களுக்குச் சென்று மகிழ்வுறுங் காலை பாடுங் 'கானல்வரிப்' பாடல் ஆகிய வற்றிலுந் தமிழிசை முழக்கமன்றே கேட் கின்றது! பல்லவராட்சிக் காலத்திலே பத் திச் சுவை நனிசொட்டப் பாடிய நாயன் மாரது தேவாரப் பண்களும், வைஷ்ணவப் பெரியாரான நம்மாழ்வார், நெஞ்சு நெகிழ்ந்து உதிர்த்த திருவாய் மொழியும், ஏனைய ஆழ்வார்கள் பாடியருளிய திவ்வி யப் பிரபந்தங்களும், அன்றும் இன்றும் இசை வளர்ச்சிக்கு ஈடிணையற்றனவாய் விளங்குகின்றன. மணிவாசகப் பெருமான் அணங்குகளை ஆடவைத்துப் பாடும் 'அம் மானை', 'பொற்சுண்ணம்', 'சாழல்', 'தெள்ளேணம்', 'உந்திபறத்தல்', 'தோள் நோக்கம்' என்பனவுந் தமிழன் வாழ்க் கையை இசையோடு ஒன்றவைத்த தீஞ் சுவைப் பாடல்களேயாம்.

பண்டைத் தமிழரின் இசையாராய்ச்சி

தமிழ்நாடு தான்தோன்றிய நாளாய் இன்பத்தை விளைவிக்கும் நயப்பாட்டுக் கலை களை (நுண்கலைகளை) ஆராய்ந்து வருகின் றது. இவற்றினருமைப்பாடு நுண்ணிதாக உணரப்படுதலின் நுண்கலைகள் எனப்பட் டனவென்பர். அந் நுண்கலைகளிலும் இசைக்கலை யாராய்ச்சியில் அவற்றைத் தமி ழர் வியத்தகு நிலையில் நின்றனர் எனலாம். இது சிறப்பாக நிகழ்ந்தது என்பதற்குப் 'பெருநாரை', 'பெருங் குருகு', முதலிய பல இசைத்தமிழ் இலக்கண நூல்களும், 'பரிபாடல்', 'சிலப்பதிகாரம்' போன்ற இசைத்தமிழ்ச் செய்யுள் நூல்களும், உரை யாசிரியர்கள் எழுதியுள்ளமையுஞ் சிறந்த சான்றாகும். அன்றி இசைபற்றி, ஆராய் தற்குத் தனியே மன்றங்களுமிருந்தன: 'அன்றி ஏழிசைச் சூழல் புக்கோ' எனுந் திருக்கோவைப் பகுதியும், 'ஏழிசைச் சூழல் இருந்தானும்' எனவரும் நளவெண்பாப் பகுதியும் இக்கருத்தை வலியுறுத்தும்.

பண்களும் திறங்களும்

இசையையும் இருவகையாகப் பிரித்து ஆராய்ந்தமை அவர்தம் இசையாற்றலை நன்கு வெளிப்படுத்துகின்றது. இசையைக் குரலாற் (வாயால்) பாடுவது ஒரு வகை. யாழ், குழல் முதலிய கருவிகளால் இசைப் பது மற்றொருவகை. குரல்வழிக் கருவி களை ஒன்றவைத்தும் இசைத்தனர். பழந் தமிழர் இசையினைப் பண்களென்றுந் திறங்க ளென்றும் வகுத்தனர். ஏழு நரம்புகளைக் கொண்டவை பண்களெனப் பெயர் பெற் றன. (நரம்பு—சுரம்) அவைகளே குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பனவாம். அவைகள் பழைய தமிழ்ச் சுரங்கள் என்க. தமிழ்ப் பாணன் தனது யாழில் ஒவ்வொரு சுரத்தையும் ஏனைய சுரங்களோடு கூட்டிக் கூட்டி இசைத்து இனிமை கண்டான். இவ்வேழு பண்களும் இன்று ச-ரி-க-ம-ப-த-நி எனப் பயிலப்படுவதுபோல, அன்று ஆ-ஈ-ஊ-ஏ-ஐ ஓ-ஔ எனும் ஏழு நெடில்களுஞ் சுரங் களுக்கு எழுத்துக்களாகக் கொண்டு பயிலப் பட்டன.

பண்களிலிருந்து பிறப்பவை திறங்க ளாம். இவை பண்களுக்கினமானவை. இவ் வாறு பிறக்கும் பண்களுந் திறங்களுங் கிளை களாக இயங்கும் வகைகளில் பழந் தமிழர் அறிந்தும், பயின்றும், ஆராய்ந்தும் இன் புற்ற இசைவகைகள் பதினோராயிரத்தித் தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்றாகு மென்பர். 'தக்கேசி', 'பழம்பஞ்சுரம்', 'புறநீர்மை', 'இந்தளம்' போன்ற பழம் பண்கள் தேவாரப் பாசுரங்களில் முழங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றிற்கு இணையான தற்கால இராகங் களும் உள. தக்கேசி-காம்போதி எனவும், பழம்பஞ்சுரம் – சங்கராபரணம் எனவும், புறநீர்மை–பூபாளம் எனவும், இந்தளம்– நாதநாமக்கிரியை எனவும் இன்று வழங்கப் படுகின்றன. நிலத்திற்குப் பறையும், யாழும், பொழுதும், பொருளும் வகுத்த பழந்தமிழர், நிலங்களுக்குரியதாகக் குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெஞ்தல், எனப் பெரும் பண்களை ஐந்தாக வகுத்தனர். இவற்றை ஐந்திணை அழகியர் பாடி மகிழ்ந் திருப்பர். குறமகளொருத்தி, குறிஞ்சிப் பண்ணிசைத்தபோது தினை உண்ண வந்த யானை அதனையுண்ணது அப்பண்ணில் மயங்கி உறங்கியதன்றே!

பண்டைய இசைவாணர்கள்

சங்கச் சான்றோரான செந்தமிழ்ப் புல வர் பலர் இசைவாணர்களாகவும், இசை நுணுக்கங்களை நன்கு நுணுகி ஆராய்ந்தோ ராகவும் தாமியற்றிய இலக்கியங்களிலே அதனைப் புகுத்தி இனிமை கான்போராக வும் விளங்குகின்றனர். அன்னருள் இசை வாணர்களாகவும், பல்லியமிசைப்போராக வும் நமக்கு முன்னை முதன் முதற்றோன்று வர் பாணரும், பாடினியருமாவர். இப் பாணன் யாழ் வாசிக்கப் பாடினி ஆடினள். அன்னர் முடியுடை மூவேந்தர்களையும், குறுநில மன்னர்களையும் மகிழ்வித்ததுடன் அரசவைகளை அலங்கரிக்கும் பெருமைக் குரியவராகவும் விளங்கினர். குறுநில மன் னர் போருக்குச் சென்று திரும்பியபோதும், வேட்டைக்குச் சென்று திரும்பியவேளையும் பாணன் தனது இன்னிசையால் அவர்க ளுக்கு உற்சாகமூட்டினன். பாணனுக்கும், பாடினிக்கும் அரசவையில் நன்மதிப்புஞ் சமத்துவமும் அளிக்கப்பட்டன. அவர் தம் இசையாற்றல் பெரிதும் போற்றப்பட்டது. பாணன் வள்ளல்களிடஞ் சென்று தேர், குதிரை, யானை என்பவற்றைப் பரிசிலாகப் பெற்றான். 'இயம்' என்பது பல்வித இசைக் கருவிகளையுங் குறிக்கும் ஒரு பொதுச் சொல். சங்ககாலப் புலவர் ஒருவர் இன் னிசைக் கருவிகள் பலவற்றில் (பல்லியங்க ளில்) ஆன்ற பயிற்சியும், தேர்ச்சியுமுடை யராய் விளங்கியமையாற்போலும், நெடும் பல்லியத்தனர் எனும் பெயர் பெறுவாரா யினர். இவர்களைவிட கூத்தர், பொருநர், விறலியர் என்பாருஞ் சங்ககாலத்தில் இசை வளர்த்த அறிஞர்களேயாவர். இக்கால இசைவாணர் பலர் இருப்பினும் விரிவஞ்சி விடுத்தாம்.

இன்னும் கடைச் சங்ககால நடுப்பகுதி யின் பின்னர், வடநாட்டினின்றும் பௌத் தருஞ், சமணருந் தமிழகம் புகுந்தனர். இவ் விரு சமயத் துறவிகளுந் தஞ்சமயக் கோட் பாடுகளுக்கிணங்க ஆடல் பாடல்களாகிய இன்பக் கலைகளை வெறுத்ததின் விளைவி னற்போலுந் தமிழ்க்கலைகள் புறக்கணிக் கப்பட்டு வளர்ச்சி குன்றத் தொடங்கின. எனவே சங்க காலப் பிற்பகுதியிலிருந்து கி. பி. ஏழாம் நூற்றாண்டு வரையுமுள்ள காலம் தமிழ்க்கலை வளர்ச்சியில் ஓர் இருண்ட காலமாகும் எனலாம்.

தமிழிசை புத்துயிர் பெறல்

கி. பி. ஏழாம் நூற்றாண்டு தமிழக அரசியற்றுறையில் சமய மறுமலர்ச்சியிலுங் கலைவளர்ச்சியிலும் ஒரு புதிய திருப்பமா கும். சைவ வைஷ்ணவ சமயங்கள் தலை யெடுக்கா வண்ணஞ் செய்ய, சமண முனி வர்கள் கங்கணங் கட்டி நின்றனர். இவ் வேளையிற்றான் நாயன்மார்களும் ஆழ்வார் களுந் தோன்றித் தமிழோடிசை பாடினர். தாமியற்றிய பத்திச்சுவை நிறைந்த பாசு ரங்களைப் பண்ணோடிசைத்தனர். தமிழிசை யும் புத்துயிர் பெற்றது. சிறந்த இசை வாணராய்த் திகழ்ந்த திருநீலகண்ட நாய னரும், அவர்தம் மனைவியாரும் ஞானசம் பந்தரைச் சந்தித்ததும் அவரது பண்களுக் குச் சுரமமைத்து யாழிற் பாடியதும் இக் காலத்திற்றானென்க. திருஞானசம்பந்தர் தருமபுரத்தில் "யாழ்முரி" என்னும் பண்ணை இயற்றி யாழில் வாசிக்க இயலாத வாறு செய்த நிகழ்ச்சியையும் நாம் இங்கு நினைவு கூரலாம்.

கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் இசை வளர்த்த பெருமைக்குரியரும், பத்திமான் களுமான இரு பாணர்களைப் பார்க்கின் றோம். அவர்களிலொருவர் பாட்டரனார்; சுந்தரமூர்த்தி நாயனாரும், சேரமான் பெரு மானும் வாழ்ந்த காலத்தவர். மற்றையவர் திருப்பாணாழ்வார்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோழப் பெருமன்னர் ஆளுகையின் போது அரசியல், சமயம், இலக்கியம், கலைகள் என்பன மிக உன்னத நிலையில் இருந்தன. 'பெருங்கதையும்', 'சீவக சிந்தாமணி'யும் இக்காலத்தைச் சார்ந்த நூல்களாம். இந்நூல்களில் யாழ் வாசிப்பது பற்றியும், கதாநாயகனும், கதாநாயகியும் தம்முள் நடாத்தும் போட்டிகள் பற்றிய செய்திகளுங் காணப்படுகின்றன. 11 ஆம்நூற்றாண்டில் திருநீலகண்டநாயனார் மரபில் வந்த இசையாசிரியர் திருமுறை கட்குப் பண் வகுத்துள்ளாரெனவும் அறிகின்றோம். பல்லவர் காலத்தில் ஆழ்வார்களும், நாயன்மார்களும் பாடிய பண்ணெழுகு பாடல்களை நாத முனியும், நம்பியாண்டார் நம்பியும் தொகுத்தது இக்காலத்திலேயாம். ஆழ்வார்களும், நாயன்மார்களும் பல்லவர் காலத்தில் ஏற்றி வைத்த பத்தி விளக்கை சோழர் காலத்தில் வாழ்ந்த அடியார்களும், பாணர்களுஞ் சுடர் விட்டெரியச் செய்தனரெனல் மிகையாகாது.

சைவ வைஷ்ணவ ஆலயங்களிலே தேவாரதிவ்வியப் பிரபந்தங்களை ஓதுதற்குரிய ஒழுங்குகளுஞ் செய்யப்பட்டன. இக்காலத்திலே தமிழ் இசை செழித்தோங்கியது. சோழராட்சிக் காலமாகிய 13 ஆம் நூற்றாண்டிலே சாரங்கதேவர் என்பார் 'சங்கீத ரத்தினாகரம்' என்னும் நூலிற் தமிழ்த் தேவாரப் பண்கள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

கருநாடக இசை தமிழகத்திற் பரவுதல்

சோழப் பேரரசின் ஆட்சியின்பின்பு, தமிழகம் விஜய நகர ஆட்சிக்குட்பட்டதென்பதையும், இக்காலத்தேதான் கருநாடக இசை தமிழ் நாட்டிற் கால் கொண்டதென்பதையும் முன்னர்க் கூறினோம். கி. பி. 1660 ஆம் ஆண்டு வேங்கடமகி என்பார், 'சதுர் தண்டிப் பிரகாசிகை' என்னும் நூலைத் தோற்றுவித்தார். அன்று முதல் இசை முறையிற் புதிய சகாப்தம் தோன்றியது. இவ்விசை புகுந்ததன் காரணமாக நமது அருந் தமிழிசை மெல்ல மெல்ல மறையலாயிற்று. தமிழ்ப் பாக்களும், பண்களும் வழக்கொழிந்தன. விஜய நகர ஆட்சிக்குப்பின் தஞ்சையிலும், மதுரையிலுமிருந்து ஆட்சி செய்த மகராட்டிரரும், நாயக்க மன்னரும் கருநாடக இசையையே ஆதரித்து நன்கு வளர்க்கலாயினர். இன்றும் அது வளர்ந்து கொண்டே வருகின்றது. இக்காலத்திலேயே கருநாடக இசையின் மும்மூர்த்திகளெனத் திகழ்ந்த தியாகராஜ சுவாமிகள், முத்துத்தீக்ஷிதர், சியாமா சாஸ்திரிகள் என்போர் திருவாரூரிலே தோன்றி, கருநாடக இசைக்கு மிதந்த வளமூட்டினர். இவ்விசைப் பரம்பரையிற்றோன்றிய இசைவல்லார் பலராவர். அன்னார் கருநாடக இசைக்குச் செய்த தொண்டு கணக்கிலடங்கா. ஸ்ரீ புரந்தரதாசர், சுவாதித்திருநாள் மகாராஜா போன்றோர் இசை மும்மூர்த்திகளைப் போலவே குறிப்பிடத்தக்க இரு மகான்களாவர்.

கருநாடக இசையும் தமிழ்ப் பாடல்களும்

கருநாடக இசை தமிழகத்திற் பரவியபின், இற்றைக்கு இருபதாண்டுகட்கு முன்பு வரை இசைப் பாடல்கள்யாவுந் தமிழர்களாகிய நமக்கு விளங்காத தெலுங்கு, வட மொழி முதலிய பிற மொழிகளிலேயே பாடப்பட்டன. தமிழ் நாட்டு இசைவல்லார் தாமுந், தங்கள் வீட்டுத் திருமணவேளைகளிலோ, பொது இசை அரங்குகளிலோ பாடும்போது இறுதிப் பாடலாக மட்டும் ஒருசிறிய தமிழ்ப் பாடலைப் பாடி நிறுத்தும் வழக்கமிருந்தது. இச்சிறுமையை நாம் உணர்ந்தும் மொழிப் பற்றின்றி ஊமையராய்ச் செவிடர்களாய் வாழ்ந்தோம்.

கருநாடக இசையில் வேறுமொழிப் பாடல்களை இயற்றியோருக்குச் சற்றுங் குறையாது சங்கீத மும்மூர்த்திகள் காலத்திற்கு முன்பும், அவர் காலத்தும் அவர்தங் காலத்திற்குப் பின்பும் அருந்தமிழ் இசை வல்லார் பலர் இசை உலகில் நிலையான ஓரிடத்தைப் பெற்றுள்ளனர் என்பதை நாம் மறந்திருந்தோம். பண்ணுந் தாளமும் அமைந்த 'பரிபாடல்', 'தேவார' 'திருவாசக' 'திவ்வியப் பிரபந்தங்கள்', செவ்வேட் பெருமானுக்குச் செஞ்சொற் கவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலே புனேந்த அருணகிரி நாதரது 'திருப் புகழ்' என்பவற்றோடு, பதினெட்டாம் நூற் றாண்டிலேயே பேரும் புகழும் பெற்றன வாய முத்துத்தாண்டவர் கீர்த்தனங்கள், அருணுசலக் கவிராயரது 'இராமநாடக'க் கீர்த்தனங்கள், மாரிமுத்தா பிள்ளேயின் கீர்த்தனங்கள் என்பவற்றின் சிறப்பை உணர்ந்து பாடாது அவற்றைப் புறக்கணித் தோம். திரிசிரிபுரம் மகா வித்துவான் மீனுட்சி சுந்தரம்பிள்ளே அவர்களதுபாராட் டைப் பெற்ற கோபால கிருஷ்ண பாரதியா ரின் 'நந்தனர் சரித்திர'க் கீர்த்தனேயின் பெருமையைக் கூறவேண்டுமோ? கவி குஞ் சரபாரதியாரின் 'பேரின்பக் கீர்த்தனேகள்' 'அழகர் குறவஞ்சி' என்பவற்றின் அழகுதான் என்னே! அண்ணுமலே ரெட்டியாரின் சந் தஞ்செறிந்த 'காவடிச்சிந்து' இசைக்கு மேன்மை பயப்பனவன்றே! மாயூரம் வேதநாயகம்பிள்ளே அவர்களின் 'சர்வசமய சமரசக் கீர்த்தனே'களும், அருட்சோதிவள்ள லாரின் 'அனுபூதிக் கீர்த்தனே'களும் பாட எத்துணே இன்பம் அளிக்கக்கூடியன!

இசைத் தமிழ் உணர்ச்சியும் மலர்ச்சியும்

இந்நூற்றாண்டைச் சார்ந்தவர்களான பாரதியார், இசைச் செல்வர் இலக்குமண பிள்ளே, சுத்தானந்த பாரதியார், பாப நாசம் சிவன் என்பாரும், மொழிப் பற்று மிக்க பிறரும் பாடியுள்ள பாடல்கள் தமி ழிசைக்கு ஊட்டங் கொடுத்துக் கேட்பார்ப் பிணிக்குந் தன்மை வாய்ந்தனவன்றே! இவையெல்லாம் இன்று இசையரங்குகளி லும் வானெலி மூலமும் முழங்குவதைக் கேட்குந்தோறும், "இது தமிழராகப்பிறந்து செல்வத்துளெல்லாந் தலேயாய செவிச் செல்வத்தைப் பெற்ற பயனன்றே!" எனப் போற்றுகின்றேம்.

இத்தமிழ் உணர்வைத் தோற்றுவித்தவர் தமிழ்ப் பற்று மிக்கவரும், பெருங் கொடை வள்ளலுமான இராஜா சேர். அண்ணுமலேச் செட்டியாராவர். இவர் சென்னேயில் தமி ழிசைச் சங்கத்தைத் தோற்றுவித்து, தமி ழிசைக் கல்லூரியை நிறுவினர். சிதம் பரம் அண்ணுமலேப் பல்கலேக் கழகத்தில் தமிழிசை வகுப்புக்களே அமைத்தார். ஈழம் முதல் தமிழகத்தின் பல்வேறு இடங்களி லெல்லாம் தமிழிசையை வளர்க்கத் துணே புரிந்தார். இப்பெரியாரையும் இத்துறை யில் இவர் நோக்கினே அறிந்து அரும்பெரும் பணியாற்றிய அருந்தமிழ் அறிஞரையும் தமிழுலகமும், இசை உலகும் என்றும் நன்றியோடு போற்றக் கடமைப்பட்டுள் ளது.

மறைந்துபோன தமிழ்ப் பண்கள் இவையென அறிந்து முடிவுகாண இசை வல்லுனர் இன்று கூடி உழைக்கின்றனர். தமிழும் சைவமும் வளர்க்க திருவாவடு துறை, தருமபுரம் முதலிய ஆதீனங்கள் பண்ணிசையைப் போற்றுகின்றன. தமிழ றிஞரும், இசைக்கலேஞரும் மேற்கொண்ட இப்புத்துணர்ச்சி, தமிழிசைக்கு மீண்டும் புத்துயிரளித்துச் சிறந்தவோர் எதிர்காலத் தையுங் காட்டுகின்றது. பண்டைத் தமிழி சைப் பெருமையினே நன்கு உணர்வதோடு பிறமொழிப் பாடல்களேயும் வெறுப்பு ணர்ச்சியின்றி நன்கு கற்று நம்முடைய இசையினேயும் வளர்க்க முன்வருவது நமது கடனுகும்.

இசைக் கருவிகள்

இறைவன் நமக்கு வாயைப் படைத் தது அவனே வாழ்த்தவும், பாடவுமே யெனலாம். குரலிசைத்துப் பாடும்பொ ழுதுதான் நாம் குரலேப் பெற்றதன் பேற் றை அடைகின்றேம். கைவிரல்களும் ஏதா வதொரு இசைக் கருவியை மீட்டி இன் னிசை எழுப்பும்போதே, அவை தாம் படைக்கப்பட்டதன் பயனே எய்துகின்றன என்பது அறிஞர் கருத்தாகும்.

இசைக்கலே தோன்றிய காலத்தி ருந்து இசைக்கருவிகளுந் தோன்றி இசை வளர்ச்சிக்கு அருந்துணே புரிந்து வருகின் றன. நுட்பமான சுருதிகளே ஆராயவும், அசைவுகளின்—கமகங்களின் நுண்மைகளே உணரவும், ஒலிகளின் தத்துவங்களேத் தெரிந்துகொள்ளவும், இசைக் கருவிகள் பெரிதும் பயன்படுகின்றன. முழுமையான இசையென்பதன் பெருமையை மனித சமு தாயத்திற்கு உணர்த்தியது இசைக் கரு வியேயெனலாம். சிவபெருமான் கையில் உடுக்கையும், கண்ணபிரான் கையிற் குழ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லும், கலைத்தேவியின் கையில் வீணையும் காணப்படுவது இவ்வுண்மையை விளக்க வன்றே!

பார்வைக்கு அழகும், தனித்தனியான நாத இனிமையும் பொருந்திய பல்வேறு வகை இசைக்கருவிகளை நந்நாட்டில் மட்டுமே காணமுடியும். நுட்பமான சுருதிகளையும், அசைவுகளையும் மீட்க இயலாத 'பியானே', 'ஆர்கன்' முதலிய மேனாட்டு இசைக்கருவிகள் நம் நாட்டிற்கு வந்தன வெனினும் அவை இங்கு வளர்ச்சியடைய வில்லை.

இசைக் கருவிகளின் வகை

நாத உற்பத்திக்குக் காரணமாகவுள்ள மூல தத்துவத்தை ஆதாரமாகக்கொண்டு, முன்னோர் இசைக்கருவிகளை நரம்புக் கருவிகள், துளைக் கருவிகள், தோற் கருவிகள், கஞ்சக் கருவிகள் என நான்கு வகையாகப் பிரித்துளர். மேனாட்டார் இவற்றைத் தந்தி வாத்தியம், காற்று வாத்தியம், முழக்கு (கொட்டு) வாத்தியம் என்ற பிரிவில் அடக்குவர்,

இசைக் கருவிகளைத் தனியே இசைத்து இனிமை காண்பது ஒருவிதம்; பலவித இசைக்கருவிகள் சேர்ந்து இசைக்கப்படுவதால் உண்டாகும் இனிமை வேறொரு வகையில் இன்பமளிப்பதாகும். குரலிசை இசைக் கருவியோடு சேர்ந்து குரலுடன் குழைந்து இசைக்கப்படும்போது அவ்விசை செவிக்கு மிக்க இன்பம் பயக்கின்றது.

பழந்தமிழ் மக்கள் இந்த உண்மையை உணர்ந்ததனாற்போலும் பல்வேறு இசைக் கருவிகளைக் கண்டுபிடித்து அவற்றில் மேலான பயிற்சியுடையராய் விளங்கினர்.

யாழ்கள்

பழந்தமிழர் இசைப் பெருமையினை விளக்குவது யாழ். யாழுக்குருகி இராவணனுக்கு ஆற்றலும், ஆயுளும், ஆயுதமும் ஈந்தான் இறைவன்.

முன்னோர் கையாண்ட இசைக் கருவிகளில் முதலில் நம் காதிற் கேட்பது பாணன் கைவழி யாழ் ஒலியே என்க. இந்த யாழ்களில் ஒன்று பேரியாழ். மற்றொன்று செங்கோட்டியாழ். இவ்விரு யாழ்களும் நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்து வந்தன; பின்பு மகரயாழ், சகோடயாழ் எனும் புதிய யாழ்கள் தோன்றின; முன்னைய இரண்டும் சங்க காலத்தன; பின்னைய யாழ்கள் சிலப்பதிகாரத்திற்குப் பிற்பட்டவையாம். இவை முறையே 21, 7, 17, 14 தந்திகளைக் கொண்டன;

கல்லாடம் எனும் மத்தியகால நூலில் 1000 தந்திகளைக் கொண்ட நாரதப் பேரியாழ், 100 தந்திகளையுடைய சேகயாழ் 9 தந்திகளையுடைய மருத்துவயாழ் என்பனபற்றிப் பேசப்படுகின்றன. மேற் கூறப்பட்ட அந்நூலிற் காணும் வருணனையிலிருந்து அவ்விசைக் கருவிகள் அழகிய வேலைப்பாடமைந்தனவென்றும், விலையுயர்ந்த இரத்தினங்களை அக்கருவிகளுக்குள் இட்டிருந்தனர் எனவும், அழகிய மகளிர்மீட்டும்யாழ்களைப்பட்டினற் செய்த பெட்டிகளில் வைத்திருந்தார்கள் எனவும் அறியக்கிடக்கின்றது. பண்டைய யாழ்கள் இன்று மறைந்தொழிந்தன. ஆயின், அவற்றின்பெருமையினை, பண்மொழி வித்தகராம் உயர் திரு. விபுலானந்த அடிகளார் அரும்பாடுபட்டு ஆராய்ந்து எழுதிய 'யாழ்நூல்' என்றும் எங்கும் பறைசாற்றி நிற்கும் என்பதற்கையமில்லை. யாழுடன் குழல், முழவு பற்றிய பிரிவினை சேரன்தம்பி இசைத்த சிலப்பதிகாரத்திற் பரக்கக் காணலாம்.

இதற்குப்பின் யாழிசைப்போரான பாணர் சிலரைப் பல்லவர் காலத்துப் பார்த்துளோம். இக்காலத்துப் போலவே முற்காலத்தவரும் போர்க்களஞ் செல்வோருக்கு வீர உணர்ச்சியை ஊட்டவல்ல இசைக் கருவிகளைக் கையாண்டுள்ளனர். அவைகளின் பெயர்களே போர் முழக்கங் கேட்பது போன்ற உணர்வை உண்டாக்குகின்றன. 'மூர்மூர்' என ஒலிக்கும் முருகும், 'பம்பம்' எனும் பம்பையும், 'சல்சல்' எனவொலிக்கும் சல்லிகையும், இடக் கையால் ஒலிக்கும் இடக்கையும், கரடியின் ஒலியை ஒத்து ஒலிக்கும் கரடிகையும் இவைபோன்ற பலவேறு வாத்தியங்களும் அன்று ஒலித்தன.

கி. பி. 3ஆம் நூற்றாண்டின் பின் வீணை எனும் இசைக்கருவி தென்னாட்டில் வழக்கத்திற்கு வந்துளது. 'எம்மிறை வீணை வாசிக்குமே,' 'பாடல் வீணையர்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனுந் தேவார அடிகளில் வீணை புகுந்துள தைக் காணலாம். பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் காலத்து 'பரிவாதினீ' எனும் பெயரினை உடைய இசைக் கருவியும் வழக்கில் இருந்ததாக அறிகின்றோம். இவ்வாறு பண்டையோர் இசைக் கருவிகளால் இசை வளரத் துணை புரிந்துளர்.

இன்றைய இசைக் கருவிகள்

இன்று இசை பரவத் துணைபுரியும் இசைக்கருவிகள் பலவாம். சில மேலை நாட்டிலிருந்து வந்தவை. 'தம்பூர்' 'வயலின்' போன்றனவற்றை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். தொன்று தொட்டு நந்நாட்டிற்கே உரித்தானவை சில. வீணை, புல்லாங்குழல், நாதசுரம், மிருதங்கம் என்பன அவற்றுள் முதன்மையானவை. இவைகளை இசைக்கக் கேட்குந்தோறும் துல்லியமான நல்லுணர்ச்சிகள் நமதுள்ளத்திற் பொங்குகின்றன. அவற்றுட் சிலவற்றைக் கீழே காண்பாம்.

வீணை

சிறந்த உணர்ச்சியைப் பெற வைப்பதில் நரம்பு வாத்தியமான வீணை முதலிடம் பெறுகின்றது. பத்தி, வீரம், அவலம், அமைதி எனும் உணர்வுகளை நன்கு காட்டவல்லது. தனிக் கச்சேரிக்குரியது. இதன் இசையை உணர்ந்து இன்புற மிக்க புலமை வேண்டும். இக்கருவியைக் கையாண்டு புகழ் ஏணியில் நின்றோர் பலர்; காரைக்குடி சகோதரர் பரம்பரையினர், வீணை தனம்மாள், என்போர் அவருள் இருவராம்.

கோட்டு வாத்தியம்

இது தோற்றத்தில் வீணையைப் ஒத்த தந்தி வாத்தியமாகும்; தனி வாத்தியமாக இசைக்கக் கூடியது. இதனைக் கையாள்பவர் சிலரே. வீணையின் ஒலியிலும் பார்க்கக் காம்பீரியம் உடையது. இதனைக் கையாண்டவர்களில் திருவுடை மருதூர் சகாராமராவ் பெரிய மேதையாவர்; அடுத்தவர் மைசூர் நாராயண ஐயங்கார்.

வயலின்

இது தந்தி வாத்தியங்களில் ஒன்று. ஐரோப்பியநாட்டுக் கருவியாயினும் நந்நாட்டுக் கருவிபோல நன்கு பரவி, கர்நாடக இசைக்கு அளப்பரிய பணியாற்றுகின்றது. தனியாகவும், துணைக்கருவியாகவும் இசைக்கவல்லது. இசைவாணர் பலர் இதைக் கையாண்டுளர். சீர்காழி நாராயணசாமிப்பிள்ளை, வாளாடி இராதாகிருஷ்ண ஐயர் என்போர் பெரும்புகழ் வாய்ந்தவர். இதிற் பிற்காலத்துப் புகழ்பெற்றோர் பலராவர்.

புல்லாங்குழல்

நமது நாட்டில் முதன்முதல் தோன்றிய இசைக்கருவி இதுவே. இது துளைக்கருவிகளிலொன்று. திருமால் கண்ணபிரானாகத் தோன்றி உலகுக்குப் பல நன்மைகள் செய்தருளிய காலையில், அவனது அழகுக் கரத்திலே தங்கும் பேறு பெற்றது. அஃதினை அவன் இசைத்து ஆய்ச்சியர், ஆவினம், அரவு, பறவை, எனும் பல உயிர்களைக் கொள்ளை கொண்டான். அத்தகைய குழலை இசைத்துப் புகழடைந்தவர் கும்பகோணம் சரப சாஸ்திரிகளாம்.

நாதசுரம்

இது துளைக் கருவிகளில் ஒன்றாகும். 'நாக சுரம்' என்றும் இதனை வழங்குவர்; கோயில்களில் இசை வளர்த்த பெருமைக்குரியது. பல்வேறு மங்கல நிகழ்ச்சிகளிலும் இக்கருவி சிறப்பாக இடம்பெறும். இதனை இராச வாத்தியம், மங்கல வாத்தியம் என வுங் கூறுவர். இசையின் ஒவ்வொரு அமிசத்தையும், நீண்டநேரம் சிறப்புற இசைக்கத்தக்க கருவி இதுவே. இதைக் கையாண்ட பழம்பெரும் மேதைகள் பலர்; பந்தணை நல்லூர் வீராசாமிப்பிள்ளை, செம்பொன்னூர் கோயில் ராமசாமிப்பிள்ளை, மதுரை பொன்னுச்சாமிப்பிள்ளை, திருவாவடுதுறை இராசரத்தினம்பிள்ளை என்பாரைக் குறிப்பிடாமலிருக்க இயலாது. இத்தலைமுறை நன்கு சிறந்து வளர்கிறது.

கிளாரினட்

தாள வாத்தியத்தில் ஒன்றான இது, தோற்றத்திலும், இசைக்கும் முறையிலும் நாதசுரத்தை ஒத்தது; ஒலியிலே குளுமையுண்டு; இது தனியே இசைக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வும், துணைக் கருவியாகவும் பயன்படும். தஞ்சாவூர் நாதமுனி, ஏ. கே. சின்னி கிருஷ்ணன் என்போர் இதை இசைத்துப் புகழ் பெற்றோராவர்.

ஜலதரங்கம்

இது தனியாகவும், கூட்டிசையாகவும் இசைக்கப் பயன்படுகிறது. நீரையுடைய கோப்பைகளை வைத்துக் கொண்டு இரு குச்சிகளின் உதவியினல் சப்த ஜாலங்களை எழுப்பி இசைக்கவல்ல வியப்பான கருவியிது. இதிலே தேர்ச்சி பெறுவது இலகுவன்று. அதனல் இதைக் கையாளுவதில் ஈடுபடுவோர் மிகக் குறைந்து காணப்படுகின்றனர். காளையார் கோயில் சுப்பையர், கணபதிஐயர் என்போர் இக்கருவியில் தேர்ச்சிபெற்ற மேதைகளாவர்.

மத்தளம்

தோலாலான தாள வாத்தியங்களுள் தலையானது இதுவே. 'மத்'தென்ற ஒலியைத் தருதலால் மத்தளமென்று வழங்கப் பெறும். மிருதங்கம், முழவு, தண்ணுமை என்ற பெயர்களும் இதற்குண்டு. இசை நிகழ்ச்சிகளிலே தனியழகைக் கொடுப்பது. முன்னளில் இதனைச் சிறப்புறக் கையாண்டு புகழடைந்தவர்களில் தஞ்சாவூர் நாராயண சாயப்பா, புதுக்கோட்டை தட்சணமூர்த்திப்பிள்ளை எனும் இருவரைக் குறிப்பிடலாம்.

தவில்

இது நாதசுரத்திற்குத் துணையாக அமைந்த தாள வாத்தியமாகும். தோல் வாத்திய வரிசையிற் சேர்ந்து, நாதசுரக் கச்சேரிக்கு மெருகு கொடுப்பது. இதில் மேதையாக விளங்கியவர் பலர். வழுவூர் முத்துவீர்பிள்ளை, அம்மாபேட்டை பக்கிரிப்பிள்ளை என்பார் குறிப்பிடத் தக்கராவர்.

கஞ்சிரா

இசைக்கச்சேரிக்கு உறுதுணையாக அமைந்த தோற்கருவிகளுள் இதுவும் ஒன்றாகும். இக்கருவியை மீட்டிப் புகழைத் தேடினர் புதுக்கோட்டை மான் பூண்டியாபிள்ளையும், அன்னரது மாணவர் தெட்சிணமூர்த்திப்பிள்ளையுமாம்.

டோலக்

இதுவும் ஒரு தோல் வாத்தியமே. கும்பகோணம் வேணுசெட்டியார் இக்கருவியிற் கைதேர்ந்தவர் என்பர்.

கடம்

இது மண்ணலாகியது. மண் கருவியைப் பொன் கருவியாக்கி 'கடம்' எனும் இன்னிசைக் கருவியாக முதன் முதல் அறிமுகப்படுத்தியவர் பழனி கிருஷ்ணையர் என்பாரே. உமையாள்புரம் சுந்தரம் என்பாரும் இதைக் கையாண்டு புகழ் பெற்றவரே.

மோர்சிங்

இது கச்சேரிக்கு வந்தது மோர்சிங் சீதாராமையர் என்பாரால் என்க. துணை வாத்தியமாக இதற்குப் பெருமை உண்டானது இவர் காலத்திற்றனகும்.

கெத்து

இது தோற்றத்தில் வீணையையும், வாசிக்கும் முறையில் ஜலதரங்கத்தையும் ஒத்தது. தாளவாத்தியத்திற்குத் துணையாயமைந்தது. இதிற் புகழ் பெற்றவர் ஆவுடையார் கோபில் ஹரிஹர பாகவதராகும்.

இதுகாறும் யான் கூறியவற்றல் மிகப் பழங் காலத்திலிருந்து இன்றுவரை இசையானது நம்முன்னோரளித்த அரும் பெருஞ் செல்வமாக இருந்து வாழ்வை வளம்படுத்தி வந்துள்ளது என்பதும், காலத்திற்குக் காலம் தமிழிசை குன்றியும், வளர்ந்தும் மலர்ச்சி பெற்றும்வந்ததென்பதும், கலைக்கு மொழி வேறுபாடு காட்டுவது பொருந்தாதென்பதும் அறிந்தாம். அன்றிருந்து இன்றுவரை இசையையும், இசைக் கருவிகளை வளர்த்தும், இசைப்பாடல்களை யாத்தும், இசை வளர்த்த இசைவல்லார் இறவாப் புகழுடையராய் நம்முள்ளத்தே நிறைந்து நிற்பவராவர்.

வாழிய நல்லிசை.
வளர்க இசைவல்லார் மரபு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓவியக்கலையும் கற்பித்தலும்

மனிதன் உருவ அமைப்பில் மாக்களை ஒத்திருப்பதாக மனநூலறிஞர்கள் கூறுகின்றனர்; இத்தன்மைவாய்ந்த மனிதனை அறிவு வளர்ச்சியொன்றே மிருகத்தினின்றும் வேறுபடுத்துகின்றது. மனிதர்பால் மிருகங்களிடத்துக் காணப்பெறுத பகுத்தறிவென்னும் பண்பொன்றுண்டு

அறிவிற் சிறந்த மக்களே நாகரிகமுடையவராகின்றனர்; கல்வியிலும் நாகரிக வளர்ச்சியிலும் முன்னணியில் நிற்கும் மனிதன் மனத்தையும் தேகத்தையும் கருவிகளாகக் கொண்டு நடாத்தும் பொருளாகிய ஆத்மா ஒன்றுண்டென உணர்ந்து தெய்வீகத் தன்மை பொருந்திய அவ்வாத்துமபுத்தியை வளர்க்க அரும்பாடு படுகிறான்; அவ்வளர்ச்சியாலுண்டாகும் தெய்வபக்தி, கலைஞானப் பயிற்சியென்ற இன்னோரன்ன வற்றால் இன்பநிலைகளை நுகர்ந்து வாழ எத்தனிக்கின்றான். இதனாலேயே இப்பாரினில் சிற்பம், ஓவியம், இசை, நடனம் என்பன புத்துயிர் பெற்று இக்காலக் கலையுலகில் வளர்பிறைபோல் வளர்ந்தோங்கி வருகின்றன.

இக்கலைகளுள் இசை, நடனம், சிற்பம் என்னும் மூன்றும் தமிழ்நாட்டிற் பண்டைக்காலந் தொட்டு இன்றுவரை குன்றுப் புகழுடன் விளங்குவதற்குக் கோவில் வழிபாடே முழுமுதற் காரணமாகும். கோவில் அமைப்பிற்கும், தொண்டிற்கும் இக் கலைகள் இன்றியமையாத துணையாயமைந்துள்ளன. இத்தகைய சிறந்த கலைகளுள் ஒன்றான சிற்பக் கலையுடன் சித்திரக்கலையும் இணைந்து தொன்றுதொட்டு வளர்ச்சியடைந்தமைக்கு அஜந்தா ஓவியங்கள், சிகிரியாச் சித்திரங்கள் போன்றன சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

கற்பாறைகளிலும் குகைகளிலும் நாம் இன்றும் காணக்கூடியதாகவிருக்கும் கண்ணைக் கவரும் கருத்தமைந்த ஓவியங்கள் நம் மூதாதையர் ஓவியக்கலையில் சிறந்து விளங்கினமையைக் காட்டுகின்றன. இன்னும் வரலாற்று நூல்களை நோக்குமிடத்து, கற்கால மனிதன் வேட்டையாடியபின் இளைத்துக் களைத்துக் குகையைநாடித் தான்கண்ட மிருகங்களையும், பறவைகளையும் பொழுதுபோக்காகக் குகைச் சுவர்களிலும், வாயில்களிலும் பட ரூபமாக வரைந்துள்ளதாக அறிகிறோம்; மனிதர் எழுத்தை அறியுமுன்னர் தமது கருத்துக்களையும், மனக்கிடக்கைகளையும் உருவங்களாக வரைந்து காட்டியே வெளிப்படுத்தினர்களெனச் சரித்திரம் சான்று பகர்கின்றது. இம் மூலாதாரங்களிலிருந்து சித்திரக்கலையானது இன்பம், பொழுதுபோக்கு, கருத்து வெளிப்பாடு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு தோன்றியமையை அறிகின்றோம்.

மேற்கூறிய முறையில் ஆரம்பித்து வளர்ச்சியடைந்த பண்டைய சிற்ப ஓவியங்கள் பல நாட்டவராலும் கண்ணேபோல் போற்றிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன; பண்டைய சிற்ப ஓவியங்களுட் கிரேக்க, உரோமை, இந்திய ஓவியங்கள் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தவை. எம் ஈழத் திருநாட்டிலும் இத்தன்மைய சித்திரங்களைச் சிகிரியா, பொல்லநறுவா போன்ற சரித்திரப் பிரசித்தி பெற்ற இடங்களில் நாம் காணலாம். அண்மையில் அமெரிக்க புகழ்பெற்ற நிபுணர்களால் சிகிரியாச் சிற்ப ஓவியங்கள் புனருத்தாரணம் செய்யப்பட்டமை, இலங்கை அரசாங்கம் இக்கலையிற் காட்டும் அக்கறையின் அத்தாட்சியாகும். இன்றைய உலகில் சித்திரப்படங்கள் எல்லோராலும் விளங்கிக்கொள்ளக்கூடிய சர்வதேச பாஷையெனக் கூறப்படுகின்றது.

முன்னர் பாடசாலைக் கல்வியில் கருத்தியற் பாடங்கட்கே முக்கிய இடமளித்திருந்தனர்; ஆனால், தற்காலக் கல்வித்திட்டத்தில் கருத்தியற் பாடங்களுடன் நுண்கலை, நுண்பணிப் பாடங்களுக்கும் இடமளித்து, இத்துறைகளில் உயர்கல்வியளித்து, தராதரங்களும் வழங்கப்படுகின்றன. மாணவரிடம் தனியாள் வேறுபாடுகளும், சிறப்பாற்றல்களும் உண்டென உளநூல் கூறுகின்றது; எனவே, உளநூலறிவு நிரம்பிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் ஆசிரியர் மாணவனது தனியாள் வேற்றுமைகட்கும், ஆர்வ ஆற்றல்கட்கும் ஏற்ற கல்வியைப் புகட்ட முன்வரும் வேளையில் பெருந்தொகையான மாணவர்களின் சித்திர ஆற்றல், கைத்திறன் என்பவற்றை வளர்க்கும் பணியில் முக்கிய கவனம் செலுத்த வேண்டியவராகின்றார்.

இன்றைய கற்பித்தலில் செய்துகற்றல் முறை சிறப்பான இடத்தைப் பெறுகின்றது; செய்முறைக் கல்விக்குக் கட்பயிற்சியும், கையினது இயக்கப் பழக்கமும் அத்தியாவசியமாகின்றன. கண்ணையும் கையையும் பயிற்றலில் வரைதற் பாடம் பெரும்பங்கு கொள்கின்றது. "சித்திரமும் கைப்பழக்கம்" என்ற முதுமொழிக்கிணங்க கையின் தசைநார்களுக்கு அளிக்கும் சிறந்த பயிற்சியே ஒருவனை நாளாவட்டத்திற் சிறந்த சித்திரக்காரனாக மாற்றிவிடக் கூடும். ஒருவன் தான் கண்ட காட்சிகளையும் மன உணர்வுகளையும் தூரிகை வாயிலாக வெளிப்படுத்த உதவுவது கையே. பாடசாலைகளிற் சித்திரப் பாடம் கற்பிப்பதால், தசைநார்கள் பெலப்பட்டு வளர்ச்சியடையவும், வளைந்துகொடுத்துப் பல செயல்களைச் செய்யவும் தக்க நிலையடைகின்றது.

"மாண்டிசோரி" அம்மையார், "ஜான் டியூயி" போன்ற உளநூலறிஞர்கள் புலன் காட்சிமூலம் கற்றலை வலியுறுத்தியுள்ளனர். புலன் காட்சி அறிவின் தொடக்கமாக அமைவதுடன், வெளியுலகத்தைப் பற்றிய திட்டமான அனுபவம் பெறுவதற்கும் காரணமாகின்றது; கட்புலக்காட்சிக்கான பயிற்சியைச் சித்திரக்கல்வி மாணவனுக்கு அளிப்பதால், அவன் ஏனைய பாடங்களிலும் புலன்வாயிலாக அறிவைப் பெற்று விளக்கமுற அது ஏதுவாகிறது. தொடக்க நிலைப் பள்ளிகளில் ஆசிரியரின் நோக்கமெல்லாம் இயன்றவரை குழந்தையின் அனுபவத்தைப் பெருக்குவதாக இருத்தல் வேண்டும். இவ்வனுபவத்தைச் சித்திரக் கல்வி மாணவர்க்கு அளிக்கின்றது.

இயல்பூக்கங்கள் வாயிலாகக் கல்வியைப் புகட்டுவதால், மாணவன் விருப்புடன், விளையாட்டாகக் கற்றுச் சிறந்த துலங்கலைப் பெற முடிகிறது. சிறு குழந்தைகளின் இயற்கைத் தூண்டல்கள் காரணமாக, அவர்கள் அழகிய படங்களையும், இயற்கைக் காட்சிகளையும், பார்ப்பதிலும் வரைவதிலும், வண்ணம் தீட்டுவதிலும், பெரிதும் ஆர்வம் காட்டுகின்றனர். இத் தூண்டல்கள் தகுந்த துலங்கல்களாக வெளிப்படுவதற்குச் சித்திரப் பாடம் வழி செய்கின்றது. மனத்தின் வியத்தகு ஆற்றல்களுள் ஒன்றான கற்பனை ஆற்றலும் இப் பாடத்தின் வாயிலாகத் தூண்டப்பட்டு மாணவனின் முன்னேற்றத்துக்குக் காரணமாகின்றது. கற்பனை மகிழ்ச்சியைத் தருவதுடன் படைப்பாற்றலுக்கும் துணைசெய்கின்றது.

வரைதல் பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர், மாணவனின் அனுபவம், ஆர்வம், வயது என்பவற்றுக்கமையப் பட்டறிவிற் கண்ட காட்சிகளையும், காட்சிப் பொருள்களையும் வரைதலுக்கேற்ற விடயமாகத் தெரியலாம். பாட ஆரம்பத்தில் பல வினாக்களை வினவி மாணவர்களின் கற்பனையைத் தூண்டி; அவர்களைச் சுயாதீனமாகச் செயற்பட விடலாம். பாலர் வகுப்புப் பிள்ளைகட்கு விரும்பியவற்றை வரையவும் விடலாம். அத்துடன் வடிவங்களிலிருந்து உருவங்களை ஆக்கும் வேலைகளையும் கொடுக்கலாம். மாணவர்கள் பார்க்கக்கூடியதாக ஆசிரியர் கரும்பலகையில் வரைந்து காட்டி அழித்தபின்னரும் அவ்வுருவங்களை மாணவர் தாமாக வரையச் செய்யலாம், காட்சிப் படங்களையும் பொருள்களையும் ஆசிரியர் வகுப்பிற் காட்டி மறைத்த பின்னரும் மாணவரை வரையும்படி தூண்டலாம். கோப்பை, பூ, இலை, காய், போத்தல் போன்ற உருவங்களை மேல் வகுப்பு மாணவர் பார்த்து வரையவிடலாம்; பொருள்களைப்பார்த்து வரையத்தொடங்குமுன் அதன் முக்கிய அம்சங்களான பருமன் உருவம் அதன் பகுதிகளின் பிரமாணம் என்பவற்றை ஆசிரியர் பிள்ளைகட்கு எடுத்துரைத்தலவசியம்.

ஆசிரியர் மாணவரின் குறைபாடுகளைத் திருத்தக்கூடிய வகையிற் சுட்டிக்காட்டி வழிகாட்டலாமேதவிர ஒரு சிறிதளவுதானும் வரைந்து கொடுத்தலாகாது. வர்ணம் தீட்டும்போது ஆசிரியர் குறுக்கீடு இல்லா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல் மாணவர் தமது அழகுணர்ச்சிக்கும், கவர்ச்சிக்கு மேற்றவகையில் சுதந்திரமாகச் செயற்படவேண்டும். வரையப்பட்ட சித்திரங்களுள் திறமானவற்றை ஆசிரியரும் மாணவருமாகத் தேர்ந்தெடுப்பதால் மாணவர் இரச ஞானத்தையும், அழகுணர்ச்சியையும் விருத்திசெய்யலாம். மதிப்பிடுதலின்போது சிறந்த சித்திரங்களைக் கரும்பலகையில் தொங்கவிட்டு, அவை எவ்வகையில் மேம்பாடுடையனவாக இருக்கின்றன என்பதை ஆசிரியர் எடுத்துரைத்து மதிப்பெண் வழங்குதல், பாராட்டுதல்மூலம் மாணவரை ஊக்குவிக்கலாம். மாதமுடிவில் அல்லது வருட முடிவில் சித்திரக் கண்காட்சியைப் பாடசாலைகளில் வைத்துப் பரிசில் வழங்கலாம்.

சித்திரப்பாடத்தைக் கற்பதற்கு அறிவுப் பாடங்களைக் கற்பதற்குத் தேவைப்படுமளவில் விவேகம் தேவையில்லை. ஆனால் அப் பாடத்திற்குரிய விசேட ஆற்றல் அதிகம் தேவைப்படுகின்றது, அப் பாடத்திற்குரிய விசேட ஆற்றலும், சிறிதளவு விவேகமுமிருந்தாற் கல்வியிற் பிற்போக்கான மாணவர் என்று கருதப்படுபவர்களும் சித்திரக் கலையை நன்கு பயில முடியும். ஓவியக்கலையில் ஆர்வமுடைய மாணவர்களை அக் கலையில் முன்னேற்றமடையக் கூடியவகையில் உளநூல் விதிகட்கமையக் கற்பித்தல் சித்திர ஆசிரியர் ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும். சித்திரப் பயிற்சியளிப்பது சித்திரப்பாட ஆசிரியரின் கடமைமாத்திரமன்று; எல்லாப்பாடங்களும் சித்திரப்பாடத்திற் குதவலாம். அப்படியே சித்திரமும் எல்லாப் பாடங்கட்கும் உதவலாம். இதுகாறும் கூறப்பட்டதிலிருந்து ஒரு பாடசாலையின் கல்விச்சிரமத்தில் சித்திரப்பாடம் முக்கிய இடத்தைப் பெறுகின்றதென்பது தெளிவாகின்றது. சித்திரப்பாடம் மாணவர்களின் மெய்ப்பாட்டுக் கற்றலுக்கு மிகவும் உதவவல்லது. மெய்ப்பாடுகள் தூய்மைப்படுத்தப்படுவதற்கும் இயல்பூக்கங்கள் உயர்மடை மாற்றம் செய்யப்படுவதற்கும் சித்திரப்பாடத்தை உதவியாகக்கொண்டு சித்திரப்பாட ஆசிரியர் மாணவர்களின் பூரண வளர்ச்சிக்கு உதவ முன்வரல் வேண்டும். அத்துடன் மாணவன் தனது எண்ணங்கள் கருத்துக்களை யெல்லாம் வெளிப்படுத்துவதற்கும், அதன்மூலம் அறிவின் வளர்ச்சி விரிவடைவதற்கும் ஓய்வு நேரத்தைப் பயனுறு வழியில் செலவிடுவதற்கும் சித்திரம் வாய்ப்பளிக்கவல்லது. எனவே சித்திர ஆசிரியரின் பொறுப்பும், கடமைகளும் மிக மிக முக்கியமானவை என்பதை அறிந்து ஆசிரியர்களாகிய நாம் செயற்படுவது விரும்பத்தக்கது.

திருமதி. பொன்ரூஸ் சந்தாம்பிள்ளை,
விடுகை வருடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டு விழாக்காண வாரீர்!

அன்று ..... சித்திரைத் திங்கள் முப்ப தாம் நாள். எங்கழக மைதானம் புதுப் பொலிவுடன் மிளிர்கின்றது. கடி கார முள் மூன்றை நெருங்கிக் கொண்டிருக் கின்றது. ஆசிரிய மாணவியர், பேராசிரி யர்கள் எல்லோரும் பரபரப்புடன் காணப் படுகின்றனர். மாணவியர் மிகச் சுறுசுறுப் புடன் எறும்பென விரைந்து, நிகழ்ச்சிகள் ஆரம்பித்தற்குரியவகையில் ஆயத்தம் செய் கின்றனர்.

விளையாட்டு மைதானம் கண்கொளாக் காட்சியாயிருக்கின்றது. ஒரு மருங்கில் ஓங்கி நிற்கும் இல்லக் கொட்டகைகள் தேவரின் மாளிகையோவெனக் கண்டோர் வியக்கும் வண்ணம் இந்திரலோகமென இலங்குகின்றது. மூவர்ணக் கொடிகளும் காற்றில் அசைவது அதிதிகளைக் கைய சைத்து அழைப்பன போன்றிருக்கின்றது; பிரதம விழாத் தலைவர் உதவிக் கல்வியதி பதி திருவாளர் டி. எம். ஹெட்டியாராச்சி அவர்கள் வரவேற்புக் குழுவினர் புடை சூழ பீறுநடைபோட்டுப் புன்முறுவலுடன் விளையாட்டுத் தளத்தை அடைகின்றார்; பார்வையாளர்களுக்கென அமைக்கப்பட்ட நீலவிதானத்து நித்திலப் பூம்பந்தலின் கீழ் பிரமுகர்கள் மத்தியில் அமர்கின்றனர்; அதிபர் அவர்களின் அன்புக் கட்டளையை ஏற்று ஆசனத்திலிருந்து எழுகிறார் விழாத் தலைவர்.

அதோ, விழாத்தலைவராம் திருவாளர் ஹெட்டியாராச்சி அவர்கள் கொடிக்கம் பத்தை நெருங்குகின்றார். அரிவையரின் அணிநடை ஆரம்பமாகின்றது. அணி வகுப்பு மரியாதையை ஏற்கப் பீடங்களில் ஏறி நிற்கின்றனர், பிரமுகர்களும், விழாத் தலைவரும். போர்ப்பாசறைகளினின்று புறப் படும் போர் வீரரென இல்லக்கொடிகள் முன்பறக்கப் பின்தொடர்கின்றனர் மாண விகள். கல்வி அமைச்சர் அவர்களின் கவின் பெறு அணிநடைக் கீதம் கணீரென ஒலிக் கின்றது. தாளத்திற்கேற்ப அணிநடை செய்கின்றனர் அனைவரும். அரிவையரின் அழகு நடைகண்டு அகமிக மகிழ்கின்றனர் அனைவரும். கொடிக்கம்பத்தின் முன்பாக வந்து அணியாக நிற்கின்றனர் மாணவியர்; விழாத் தலைவராம் திருவாளர் ஹெட்டி யாராச்சி அவர்கள் சம்பிரதாயப்படி எங் கழகக் கொடியை ஏற்றி உயரப் பறக்க விடுகிறார். மாணவியர் கைதட்டி மகிழ்ச்சி ஆரவாரம் புரிகின்றனர். தொடர்ந்து போட்டிக்குரிய விளையாட்டு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின்றன;

வாருங்கள், மைதான மத்தியைப் பார் வையிடுவோம். அதோ ஓட்டப் பந்தயங் கள் ஆரம்பிக்கின்றன. அவற்றைக் கவ னிப்போம். மின்னலென ஆரம்பத்தானத் தினின்று புறப்பட்டுக் கண் இமைப்பதற் குள் முடிவுத்தானத்தை அடைந்து விடு கின்றனரே. ஆகா! இரசிகர்களின் கர கோஷம் வானைப் பிளக்கின்றது. பந்தய முடிவுகள் ஒலிபெருக்கிகள் மூலம் ஒலிக் கின்றன. இரசிகர் குழாம் கவனத்தைக் கொடித்தம்பத்தருகே இழுத்து விடுகின் றனர் அரிவையர் அறுவர். தமிழ்மணங் கமழும் முத்துக் கோலங்களைப் போடும் அழகே அழகு. அருகிற்போய் வண்ணக் கோலங்களை—சிக்கல் கோலங்களைக் கண்டு வியப்புறுகின்றனர் பலர்.

இடைவேளை நேரம் நெருங்குகின்றது; என்ன நடக்கப் போகிறது? அவர்கள்யார்? கிராமியப் பெண்கள்போற் காணப்படு கின்றனரே! அள்ளிச் செருகிய கொண் டையில் வண்டுகள் மயங்க, மின்னலிடை மடவார்கள் சின்னலம்பட்டுச் சேலை கட் டிக் கைகளிற் கோலேந்தி துள்ளுநடை போட்டு விளையாட்டு முன்றிலை நோக்கி விரைகின்றனர். ஈழத்திருநாட்டின் சீரும் சிறப்பும் சொல்லிக் கோல்கள் கரத்தேந்தி ஆடுகின்றனர் அந்நங்கையர். கைவழி நயனஞ் செல்லக் கண்வழிமனமும் செல்லக் கோல்கொண்டு சுழன்றாடும் அவ்வேளையில் விருந்தினர்க்குக் கோவைக் கோதையர் குய்ப்புகை கமழ தாம்றுழந்து அட்ட சிற் றுண்டிகளை இனிது பரிமாறச் சுவைத்து இன்புறுகின்றனர் அனைவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடன, தேநீர் விருந்தில் ஆழ்ந்திருந் தோரை அறிவிப்பாளரின் '' அடுத்து ஒரு நல்விருந்து '' என்ற ஒலி பிரமிக்கச் செய்து விடுகின்றது: '' விநோத உடைப்போட்டி ஆரம்பிக்கப் போகிறது '' என்ற அடுத்த அறிவிப்பு இரசிகர் குழாமை பேராவலு டன் மைதான மத்தியைப் பார்க்கச் செய் கிறது. ஆனல் அவர்கள் எதிர்பாராத இடத்தினின்று புறப்படுகின்றனர் மூவர்: பிரித்தானிய அரசர் குடும்பம் போலல் லாவா தெரிகிறது! பொறுத்திருப்போம். அறிவிப்பாளர் குரலை அவதானிப்போம்: ஆமாம் அரசகுடும்பமேதான் அதோ எம் நோக்கி வருகின்றனர். 8-ம் ஹென்றியும் மனைவியர் மேரி ஆனும், கதரினுவும். பலர் தம்மை மறந்த நிலையில் எழுந்து நின்று மூவருக்கும் மரியாதை செலுத்துகின்றனர். பிரமுகர்களை நெருங்கி ஏதோ ஆங்கில மொழியில் அழகாகப் பே சு கி ன் ற ன ர்: அடுத்து அனைவர் கவனமும் அருணை இல்ல வாயிலுக்குச் செல்கிறது. அது என்ன? மீனவரிருவர் எதையோ இழுக்க முடியா மல் இழுத்து வருகின்றனரே! மச்சமங்கை போலல்லவா தெரிகிறது. ஆமாம் நிட்ச யமாக நாம் பழங்கதைகளிற் படித்த மச் சக்கன்னியேதான். அவள் எப்படி இங்கே வந்தாள் என்று அறிய எமக்கு ஆவலா யன்றே இருக்கிறது. அதோ மீ ன வ ர் நெருங்கிவிட்டனர். கேட்போம்; அவள் தற்செயலாக மீனவரின் வலையில் அகப்பட் டுக் கொண்டாளாம். அவளை விழாக்காண வந்தோர்க்குக் காட்டிப்போக வந்துள்ள ராம். மச்சக்கன்னியின் பேரழகு தா னென்னே! அவள்தன் மேனியழகும் கண் ணழகும் அனைவரையும் களிபேருவகையுறச் செய்கின்றது. பாதி மனித உருவும், பாதி மச்சஉருவும் கொணட அந்த ஒளிமிக்க மச்சக்கன்னியைக் கண்ணிமையாது கண்டு களித்திருப்போரிடையே திடீரென ஒரு சல சலப்பு. சிறுவரின் ஆரவாரிப்புக்கிடையில் சுவர்ணு இல்லத்தினின்று ஒரு சிறு குரங்கு பாய்ந்து வ ரு கி ற து. குரங்காட்டியும் கூடவே வருகின்ருன். சிறுவரும் மற்ரோ ரும் கல்லெறிந்து குறும்பு புரிகின்றனர். சிலர் குரங்கின் பாய்ச்சலைக்கண்டு அஞ்சி ஒதுங்குகின்றனர். குரங்காட்டியின் கட்ட ளைகளுக்கிணங்க நடனம் புரிகிறது. பாவனை செய்கிறது: எல்லோரது கவனத்தையும் குரங்கு ஈர்த்துவிட்ட அவ் வே ளை யி ல் தொடர்ந்து விளையாட்டுப் போட்டிக்குரிய நிகழ்ச்சிகள் கலகலப்புடன் ஆ ர ம் ப மா கின்றன.

இதுவரை இரசிகர் குழாம் மனதை ஈர்த்த சுறுசுறுப்பான விநோத உடைப் போட்டியின் பின் காரிகையரின் கைவண் ணம் காண விரைகின்றனர் நடுவாளர்கள் சிலர். தத்தம் இல்லங் காணவந்தோரைத் தமிழ்ப் பண்பாட்டிற்கு எடுத்துக்காட்டாக இன்முகங் காட்டி பன்னீர், ச ந் த ண ங் கொடுத்து வரவேற்று உபசரிக்கின்றனர் இல்லத்தாயரும் உறுப்பினர்களும். ஒன் றையொன்று வென்ற நிலையில் நடுவா ளரை மயக்கமுறச் செய்கின்றன இல்ல அலங்கார அமைப்புகள்.

இனித் தொடர்ந்து விளையாட்டுமைதா னத்தைக் கவனிப்போம் வாரீர்! தடை யோட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கி றது. வீர ரமணிகள் காற்றெனவிரைந்து வந்து சேலையை உடுத்துச் சிறிதோடி வர் ணக்கலவையுறையுட் புகுந்து பலவர்ண மேனியுடன் முடிவுத்தானத்தை விரைகின் றனர். சபையினர் அவர்களது செயல் கண்டு நகைத்து இன்புறுகின்றனர். ஒரு புறம் வீராங்கனைகள் குண்டெறிகின்றனர். '' பன்றியைச் சந்தைக்கு நடத்திச் செல் லல் '' நிகழ்ச்சி அனைவரையும் ஆச்சரியத் திலாழ்த்துகின்றது. மின்னலிடையாரின் வீரந்தானென்னே? என வியக்கின்றனர் வந்தோர்.


அடுத்துக் குழு விளையாட்டுகளில் காற் றென ஆடி ஓடி வெற்றியீட்டுகின்றனர். மாணவிகளின் நிகழ்ச்சிகள் முடிவுறுகின் றன. குழந்தைகட்குரிய நிகழ்ச்சியும் இடம் பெறுகின்றது. அடுத்து விருந்தினர்க்குரிய போ ட் டி யி ல் ஆண்களும் பெண்களும் கலந்துகொள்கின்றனர். கயிற்று முடிச்சு அவிழ்க்கும் போட்டியில் விருந்தினர் தம் திறனைக் காட்டிவிடுகின்றனர். போட்டி முடிவடைகின்றது.

எங்கழக அதிபர் அவர்கள், பார்புகழ் உதவிக் கல்வியதிபதி அவர்களையும், பிரமு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. டி. எம். கெட்டியாராச்சி அவர்களிடமிருந்து மெய்வல்லுணர்ப் போட்டியில் முதலிடம் பெற்ற 'சுவர்ணு இல்ல'த் தலைவி வெற்றிக் கேடயத்தைப் பெற்றுக்கொள்ளுகிறார்.



விளையாட்டரங்கில் கலாசாலை மாணவிகள் களிப்புடன் அணிவகுத்து நிற்கின்றனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




விஜேதை உடையிலும் இல்ல அலங்கரிப்பிலும்
வெற்றி பெற்ற இராதா இல்லத்தினர்.



இராதா, அருணை, சுவர்ணை இல்லங்களின் நங்கையர்
விஜேதை உடைப் போட்டியில் கலந்து எம்மைக்
களிகொள்ளச் செய்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்கள், சபையோரையும் வரவேற்று உரை நிகழ்த்துகிறார். அடுத்து திருவாளர் டி. எம். ஹெட்டியாராச்சி அவர்களின் சிறப்புச் சிற்றுரை நிகழ்கின்றது. தொடர்ந்து பரிசளிப்பு விழா நடக்க இருக்கின்றது: கல்வி அதிபதி அவர்களாலேயே வெற்றி பெற்றோருக்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

மெய்வல்லுனர்ப் போட்டியில் வெற்றி வாகை சூடிய இல்லம் மகிழ்ச்சிப் பேராரவாரத்திற்கிடையே வெற்றிக்கேடயத்தைப் பெற்று மகிழ்கின்றது. வீர ரமணிகளுக்கும் தனித்தனி மூன்று கிண்ணங்கள் அளிக்கப்படுகின்றன: அனைவரும் தத்தமக்குரிய வெற்றிச் சின்னங்களைச் சுவீகரித்துக் கொள்கின்றனர்.

நாம் பெருமிதத்துடன் விருந்தினரை வழியனுப்புகின்றோம். தரம் மிக்க விளையாட்டு விழாவொன்றைக் கண்டுகளித்த மகிழ்வுடனும் திருப்தியுடனும் வீடேகுகின்றனர் இரசிகர்குழாம். நாமும் விமரிசையாக மெய் வல்லுனர்ப் போட்டியை நடாத்தி முடித்துவிட்ட மகிழ்வில் பூரிக்கின்றோம்.

பிறர் வியந்து பாராட்டும் வண்ணம் நடந்து கொள்வதற்கான ஆசையும் அறிவும் ஏற்படுத்துவதே குழந்தைகளை கௌரவமானவராக வளர்ப்பதன் அடிப்படையாகும்.

ஹோம்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடி விளையாடு பாப்பா....

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற மூதுரைக்கு உயிர் கொடுத்து வாழவைப்பது விளையாட்டு என்றால் பொய்யாகாது; மக்கள் சாதி, சமயம், அரசன், ஆண்டி, பெரியவன் சிறியவன், என்ற பேதம் பாராது எல்லோரும் கூடும் இடம் விளையாட்டுத்திடலே. இறைவழிபாட்டில் சாதி, பேதம், பாராட்டும் மக்கள் முதலாய்க் கருத்து ஒருமித்துக்கூடி ஆனந்தம் அடையும் ஒரே இடம் விளையாட்டுத்திடலே. நம் படைப்பே ஆண்டவன் விளையாட்டு என்று கூறுவார். ஆண்டவனே விளையாட்டில் இன்பம் கண்டான். அவ்வாறுயின் நாம் எம்மாத்திரம்!

விளையாட்டின் மூலமாக எல்லாம் சாதிக்கமுடியும் என்பது பல அறிஞர்களின் ஏகோபித்த அபிப்பிராயமாகும். அழுது அடம்பிடிக்கும் பச்சிளம் பாலகனையும் கோபங்கொண்ட பெரியோனையும் விளையாட்டின்மூலமாகத் தன் வழிக்குக் கொண்டுவரமுடியும் என்பதை நமது நாளாந்த அனுபவத்திற் கண்டு வருகின்றோம். சிறுவர்களின் பிஞ்சு உள்ளங்களில் நல்லறிவைப் புகுத்தி அவர்களைப் பண்போடு வாழவைப்பதற்கு விளையாட்டு முறையைக் கையாண்டு ஆரம்பக் கல்வியை அளித்து வருகின்றனர்.

விளையாட்டில் சிறந்து விளங்கும் வீரர்களையும், வீராங்கனைகளையும் உலகம் போற்றிப் புகழ்ந்து வருகின்றது. விளையாட்டிற்கு ஊக்கமூட்டி ஆக்கமளித்து வருகின்றார்கள். ஏன் வெளிப்பகட்டிற்கா? இல்லை. விளையாட்டில் திறமையுள்ள வீரர்களிடமும், வீராங்கனைகளிடமும் தான் அறிவும், ஆற்றலும் சிறந்து விளங்கும். அப்போதுதான் அவர்கள் எடுத்த காரியத்தில் நன்கு ஈடுபட முடியும். அதனால் நாட்டில் நல்ல கருமங்கள் பல நடைபெறும்.

ஒவ்வோர் நாட்டிலுமுள்ள சிறந்த விளையாட்டு மெய்வல்லுநர் வீரகளினதும், வீராங்கனைகளினதும் எண்ணிக்கையைக் கொண்டு நாட்டின் வளத்தையும் மக்கள் உடல் நலனையும் மதிப்பிடமுடியும். உலகம் உண்டானது முதல் இன்றுவரை பலவிதமான விளையாட்டுகள் இருந்துகொண்டே வருகின்றன. பண்டைய நாட்களில் மக்கள் வாட்போர், மற்போர், யானையேற்றம், குதிரையேற்றம் என்பவற்றை விளையாட்டாகக் கொண்டு தம்மையும், நாட்டையும் எதிரிகளிடமிருந்து காத்துவந்தார்கள் என்பதை வாலாற்றின் வாயிலாக அறிகின்றோம்.

இன்று உலகின் ஒவ்வோர் நாடும் ஒலிம்பிக் விளையாட்டுகளிற் கூடிய புள்ளிகளை எடுத்துச் சிறந்து விளங்க வேண்டும் என்று கங்கணங் கட்டிக்கொண்டு செயற்படுகின்றது. நம் நாட்டின் நாடாளுமன்றத்தில் இதற்கென ஒரு பகுதியை ஒதுக்கி "விளையாட்டு மந்திரி" என நாமமிட்டு மெய்வல்லுநரான வீரர்களையும், வீராங்கனைகளையும் படைக்கவேண்டும் என்று இளம் சமுதாயம் துடிக்கிறது. உலகின் ஒவ்வொரு நாடும் தனக்கென ஒவ்வொரு விளையாட்டைத் தேசிய விளையாட்டுடன் பிரகடனப்படுத்தியுள்ளனர். நாள் முழுவதும் உழைத்து உளம் சோர்ந்தவனுக்கு மகிழ்ச்சியூட்டுவது விளையாட்டு; பெரியவர்களைக் குழந்தையாக்குவதும் விளையாட்டு; இதன் பெருமையை உணர்ந்த பாரதியார்,

"ஓடி விளையாடு பாப்பா—நீ
ஓய்ந்திருத்தலாகாது பாப்பா"

எனக்கூறிப் போந்தார்.

விளையாட்டுக்கள் மனித வாழ்க்கையில் பல துறைகளிலும் பலவகையான நலன்களைப் புரிகின்றன. மானிடனின் உடல் வளர்ச்சிக்கும் விளையாட்டுக்கள் இன்றியமையாதன. உடல், தசைநார் வளர்ச்சியும், எலும்புகளின் உறுதியும் உண்டாகின்றன. பாலர் தொடக்கம் பெரியவர் ஈறாக விளையாடும்போது மகிழ்ச்சியான மெய்ப்பாடுகளுடன் தொழிற்படுகின்றனர்; சிறுவர்களின் ஊக்கங்கள் தூய்மைப்படுத்தப்பட்டு உயர்மடைமாற்றம் செய்யப்படுகின்றன. இது ஒரு சிறந்த ஓய்வுநேரப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுதுபோக்காக இருப்பதுமன்றி மனே சக்தியுடனும், வேகத்துடனும் மாணவர் தங்கள் பாடங்களில் கவனஞ் செலுத்தத் தூண்டுகிறது. வளர்ந்தவர்களும் விளையாட்டினுல் தம் வாழ்வின் இன்னல்களையும் மறந்து புத்துணர்ச்சி பெற்று மீண்டும் தம் அலுவல்களில் உற்சாகமாக ஈடுபடுகின்றனர்.

பல சமூகத்தினரோடு சேர்ந்து விளையாடும்போது பல சமூகப் பழக்கங்களையும் பழகுகின்றனர். ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கும் மனப்பானமை, வெற்றி தோல்விகளை சமமாக ஏற்றல், சக உணர்வு, ஆகிய நற்பண்புகள் விளையாட்டில் ஈடுபடுவதினுல் உண்டாகின்றன. விளையாட்டில் ஊக்கங்கொடுக்கும் முகமாக பாடசாலைகளும், கிராமமுன்னேற்றச் சங்கங்களும். உழைத்துவரல்வேண்டும். மாணவரின் வயதுக்கேற்றபடி விளையாட்டுக்குரிய உபகரணங்களும் இடமும் அமையவேண்டும். அதுபோன்று வளர்ந்தோருக்கும் இவை பிரத்தியேகமாக அமைய வேண்டும். விளையாட்டுத்திடல்களை முறையாக அமைத்து அரசாங்கம் ஊக்கப்படுத்திவரின் விளையாட்டுக்களினுல் நாம் கருதியபலனை அடையலாம்.

திருமதி. மாணிக்கசோதி இம்மானுவல்,
விடுகை வருடம்.

பிரார்த்தனையானது காலையின் திறவுகோல்; மாலையின் தாழ்ப்பாள். பிரார்த்தனையின்போது இதயமில்லாத சொற்கள் படைத்திருப்பதைவிட, சொற்களில்லாத இதயம் படைத்திருப்பது விசேஷம்.

மகாத்மா காந்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் திருந்த.....

1

புவியியல் பயிற்றும் ஆசான்
புதியதாய் உலகத் தோற்றம்
கவினுறக் காட்டு கின்ற
காகிதம் கொண்டு வந்தார்.

2

வீட்டினில் மேசை மீது
வைத்துவிட் டெங்கோ சென்றார்
நோட்டம்விட் டதனைக் கண்டான்
நோன்பினுற் பெற்ற மைந்தன்.

3

ஒருபுறம் வரைகள் பேர்கள்
ஒழுங்கின்றி நிறையக் கண்டான்
திருப்பினன் அடுத்த பக்கம்
திறந்தனன் அகலக் கண்கள்.

4

புடைத்திடும் புயங்கள் மீசை
முறுக்கிய தோற்றம் நல்ல
நடை மலை யோவென் றெண்ணும்
நரன்பலி தூக்கல் கண்டான்.

5

வைத்தகண் வாங்கா தந்த
வடிவுடைத் தோற்றம் கண்டான்
சித்திரம் கொண்ட தாள்பின்
கிழித் தனன் வேகமாக.

6

பைச்சிளம் பாலன் செய்கை
பதைப்புடன் கண்ட ஆசான்
பொய்ச்சினம் காட்டிச் சித்ரம்
பொருந்திடு கணத்தி லென்றான்.

7

மனிதனின் உருவைக் கொண்டு
மாநிலம் திருத்தி விட்டான்
நனிசிறு பாலன் ஞால
நூலறி வேது மில்லான்.

8

திருந்திடில் மனிதன் இந்த
மாநிலம் திருந்து மென்னும்
அருமருந் தன்ன கொள்கை
அறிந்தனன் மகிழ்ந்தான் ஆசான்.

செல்வி : மே. பி. ஸ்ரனிஸ்லாஸ்.
விடுகைவருட மாணவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளரு மெங்கழகம்

இந்து சமுத்திரத்தின் முத்துப்போன்று இயற்கை எழில் நிறைந்திலங்குவது எங்கள் ஈழமணித்திருநாடு. இந்நாட்டின் கல்வி கேள்விகளிற் சிறந்து விளங்குவோர் கணக்கிலடங்கார். அன்னரை உருவாக்கிக் கொடுப்பது ஆசிரிய உலகமெனின் மிகையாகாது.

ஈழவளநாட்டின் கல்வி வரலாற்றினை ஆராயும்போது சுயமொழி ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகள் சமயச்சார்புடையனவாக இருந்துவந்தன எனத் தெரிகின்றது. சுயமொழி ஆசிரியர்களைப் பயிற்றுவதற்கு ஈழத்தின் பல பாகங்களிலும் சைவ, கிறித்தவ சமயத்தவர்கள் பல பயிற்சிக் கூடங்களை நிறுவி, ஆசிரியர்களையும் ஆசிரியைகளையும் தோற்றுவித்தனர். அவ்வேளை அரசினர் யாழ்நகரில் ஓர் ஆசிரிய பயிற்சிச் சாலையை ஆரம்பிக்க எண்ணிச் சிறப்புடைய வீரன் சங்கிலியனுடைய இராசதானியை அடுத்து, அறிவிற் சிறந்த அரிய நாவலரும், பாவலரும் குழுமிப் பல வளமும் பல்கிப் பெருகி விளங்கும் கோப்பாயைத் தெரிந்து ஆண்கள் ஆசிரிய கலாசாலையைத் தொடக்கினர்.

இந்நிலையிலே தமிழ்ப் பெண்மணிகட்கும் தனிப் பயிற்சிக் கழக மொன்றினைத் தோற்றுவிக்க அரசினர் முன்வந்தமை நம்மவர் நல்லதிர்ஷ்டமன்றே! அறிஞர் சிலரதும், ஆட்சியாளரதும் சிந்தனையிலே தோன்றிய இந்நோக்கம் 1946-ம் ஆண்டு வைகாசித்திங்கள் திருநெல்வேலியில் உள்ள சிறிய கட்டடமொன்றில் நிறைவேறலாயிற்று. ஆயின், இதன் அருகே ஆண் பெண் இருபாலாருக்குஞ் சேர்ந்து பயிலும் சைவாசிரிய பயிற்சிக்கழகமிருந்தமையால் இக்கழகம் அங்கிருப்பது பொருத்தமற்றதென்பதை அரசினர் உணர்ந்தனர். இதற்கு ஏற்ற இடத்தைக் கண்டுகொள்வதற்கு அரசினர்க்கு ஒரு வருடஞ் சென்றது. ஈற்றில் பல ஆண்டு காலமாக ஒப்பாரு மிக்காரு மின்றிக் கனி தரு மரங்களும், நிழல் தரு மரங்களும், பூவுதிர் மரங்களும் நிறைந்து, ஆண்கள் அரசினர் பயிற்சிக் கூடமாகக் கோவையம்பதியில் விளங்கிய இக் கட்டடமே கோதையர்க்கு ஏற்றதெனத் தீர்மானித்தனர். அங்கிருந்த ஆண்பாலவர் தம்மரிய சகோதரிகளின் உயர்வை எண்ணி அன்னரை வரவேற்றுத் தாம் பலாலி நோக்கிப் பயணமாயினர்.

இக்கழகம் 1947-ம் ஆண்டு வைகாசித்திங்கள் அறிவிற் சிறந்த அதிபராகச் செல்வி ஞானம் முருகேசு அம்மையாரையும், பேராசிரியர்கள் சிலரையுங் கொண்டு கோவை அரசினர் மகளிர் ஆசிரிய பயிற்சிக் கழகமாகச் சமத்துவம், சகோதரத்துவம், சமயம், பொறுமை, தமிழ்மக்களின் பண்பு, மகளிரின் மாண்பு, நங்கையரின் நலம் என்பன மிளிர "வாழக் கல்மின்" என்ற குறிக்கோளை முன்வைத்து இக்கழகம் மிளிரத் தொடங்கியது. காலங் கடந்துகொண்டிருந்தது. கண்ணியமிக்க பேராசிரியர்கள் சிலர் பலராயினர். கணிதம், தமிழ், புவியியல், மனையியல், பாலர்கல்வி, உளவியல், சரித்திரம், சித்திரம், கைப்பணி, உடற்கல்வி, சங்கீதம் எனத் தனிப்பாடங்களும், தனிப்பாட விரிவுரையாளர்களும் பல்கினர். அன்புநிறைந்த அதிபர் அவர்கள் தம்முடல் பொருள் ஆவி அனைத்தையும் கலாசாலைக்குக் காணிக்கையாக்கி வாழ்ந்தார். சாதி, சமய, கலாச்சார வேறுபாடின்றிச் சிங்களச் சகோதரிகளும், இஸ்லாமியச் சகோதரிகளும் எங்கலாசாலையிற்பயின்று நாடெங்குமுள்ள பெண்பாடசாலைகளிற் பண்புமிகு அதிபராகவும், ஆர்வமுள்ள ஆசிரியைகளாகவும் கடமையாற்றுவது அனைவரும் அறிந்ததே. இங்கு பயிற்சிபெற்று வெளியேறிய முஸ்லீம் சகோதரி ஒருவர் அழுத்கம ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் தமிழ்ப் பேராசிரியையாக இருப்பது பெருமைக்குரியதாகும்.

இவ்வண்ணம் வளர்பிறைச் சந்திரன் போன்று வளர்ந்துவருநாளில், அந்தோ பரிதாபம்! 1963-ம் ஆண்டு எங்கழகத்தைக் கிரகணஞ் சூழா நின்றது. கலாசாலை மூடப்பட்டு அனைவரும் நல்லூர் ஆசிரிய கலாசாலைக்கு அனுப்பப்பட்டனர். அம்மம்மா! எம்மவர் அடைந்த துயர் சொல்லுந்தரமன்று; எமது அரிய பேராசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள்து அயராத உழைப்பினாலும், எங்கலா சாலைமீது கருத்துக் கொண்ட கண்ணிய வான்களினது இடைவிடா முயற்சியினாலும் மீண்டும் கலாசாலை திறக்கப்பட்டது; மறைந்த ஒளி மீண்டும் ஒளிவிடத் தொடங் கியது. அறிவுடைச் செல்வி. ஞானம் அம்மை யார் அதிபர் அவர்கள் தம் சேவையை விட்டுச் சிறப்புடன் விலகினர்.

அருணோதயம் போன்று அறிவாற்ற லும் அன்பும் பண்பும் நிறைந்த அதிபரா கத் திருமதி இரதிலக்ஷ்மி ஆனந்தக்குமார சாமி அவர்களை எமது அதிர்ஷ்டத்தினால் அதிபராக அடைந்தனம். வருடங்கள் வந்துபோய்க்கொண்டிருந்தன. மரஞ்செடி கள் நின்ற இடங்கள் எல்லாம் மண்டபங் களாயின. விடுதிஅறைகள் யாவும் விஸ்வ ரூபம் எடுத்து விசாலமாயின. படுக்கை யறைகள் பலவாகப் பெருகின. பாழாய்க் கிடந்த பழைய சமையற்கூடமும் உணவுச் சாலையும் மாற்றப்பட்டு நவீனமுறையில் அமைக்கப்பட்டது. எங்கழகத்தின் முன் னாள் அதிபர் செல்வி. ஞானம் முருகேசு அவர் களின் ஞாபகமாக மண்டபத்துள் பழைய மாணவிகளால் மணியான மேடையொன்று அமைக்கப்பட்டது. மின்மினி போன்று மண்ணெய் விளக்குகளுடன் மங்கையர் சங்கடப்பட்ட காலம் மறைய, மின்சார தீபங்களை யெமக்களித்து அனுசரணைசெய் தனர் அரசினர். துருப்பிடித்த தண்ணீர்த் தாங்கியை விடுவித்துப் புதியதோர் நீர்த் தாங்கி நீலவர்ணத்துடன் வானளாவ நிமிர்ந்து நிற்கின்றது; இவைமட்டுமா?

பல பெரியார்களின் விஞ்ஞானம், அறிவியல், உளவியல், சரித்திரம், புவி இயல், இலக்கியம் என்னும் பல்வேறு நூல்களை நாம் "ஆசி வாசி விசுவசி" என்பதற்கு இணங்க வாசித்து வழி நடப் பதற்கென எம்மதிபர், பேராசிரியர் அவர் களின் அயரா உழைப்பினால் அரியதொரு அழகிய நூலகம் எழும்ப ஆயத்தமாக இருக்கின்றது. இன்றும் எங்கழகத்தில் நடாத்தும் விழாக்களின்போது அன்பர்கள், நண்பர்கள், அரிய சகோதரர் அனைவரை யும் ஆவலுடன் அழைத்து உபசரித்து உள் ளம் மகிழ இடவசதியின்மையால் அதற் கென ஒரு திறந்தவெளியரங்கு உருவாகும் திட்டமும் உதித்துவிட்டது. மங்கையர் ஸ்நானம் செய்யும் புதிய தொட்டியறை களும் மல, சலகூடங்களும் புத்தம் புதியன வாக உருவாகியுள்ளன. பார்க்கும் இட மெங்கும் பலவர்ண மலர்த் தோட்டங் களும், காணும் இடமெல்லாம் காய்கறித் தோட்டங்களும் காட்சிதருகின்றன. எங் கழக மாணவிகள் எம் நாட்டில் மாத்திர மன்றி இந்திய நாட்டிலும் சுற்றுலாச் சென்று அரும்பெரும் ஆலயங்களைத் தரி சித்து ஆனந்தமடைந்தனர். ஒப்பற்ற அறிவுடன் உயர் பண்புகளுடைய விரிவுரை யாளர்களாகச் செல்வி. சி. செல்லையா பிள்ளை அவர்களும், திருமதி. ம. திருச்சிற் றம்பலம் அவர்களும், செல்வி. செல்லப்பா அவர்களும் எம்மிடை வந்துள்ளனர். விவ சாயத்தை விருத்தி செய்வதற்கென விவ சாய ஆசிரியராகச் செல்வி. ஜெ. பாக்கிய நாதர் அவர்களும், விடுதி மேற்பார்வை யாளராகத் திருமதி. பரமானந்தன் அவர் களும் வருகை தந்துள்ளனர். இவற்றிடை பரிமளிப்புடன் பாலர் முறைபுகலும் பேரா சிரியை திருமதி. ஜெ. டி. பெரேரா அவர் கள் தம் சேவையினின்று ஓய்வுபெற்றுள் ளார். எமது முன்னாள் உதவி விடுதி மேற் பார்வையாளராகிய திருமதி. நா. வேலா யுதம் அவர்கள் மட்டக்களப்பு ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு மாற்றலாகிச் சென்றுள்ளார்.

இன்னும், சைவ மங்கையர் கழகம், கிறிஸ்தவ மங்கையர் கழகம், தமிழ்மன் றம், நுண்கலை மன்றம், சமூக இயல் மன் றம், விளையாட்டு மன்றம் என்பவற்றின் மூலம் இயல், இசை, நாடகப் போட்டிகளை யும், உடற் பயிற்சிப் போட்டிகளையும், நடாத்தி ஆசிரிய மாணவிகளின் அறிவைப் பன்மடங்காக உயர்த்தி ஒளிவீசி நிற்கின் றது எங்கழகம்.

இவ்வாறு கால் நூற்றாண்டளவினதா கத் தன்னிகரில்லாத் தனிப்பெருமையுடன் வளருமெங்கழகம் அறிவொளியும் அன்பு நிறைவும், அளவின்றிப் பெற்ற எம்மதிபர் பேராசிரியர்களினதும் ஆசிரிய மாணவிகளி னதும் அயர்விலா ஊக்கத்தினால் 1946-ம் ஆண்டு ஐம்பத்தெட்டு மாணவிகளைக் கொண்ட நம் கழகம் இன்று நூற்றிமுப்பது மாணவிகளைக்கொண்டு உதயதாரகை போன்று மிளிர்கின்றது.

வாழ்க எங்கழகம்!
வளர்க நம் பணிகள்!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு இவ்வாண்டில்—1969

முதலாம் பருவம்

2- 1-69	பயிற்சி பெறும் அனைவரும் பெட்டி படுக்கைகளுடன் பயிற்சிக் கலாசாலையை அடைகின்றோம்.
3- 1-69	புதுப் பொலிவுடனும் புத்தகக் கட்டுகளுடனும் வகுப்பறைகளில் நுழைகின்றோம்.
9- 1-69	சர்வோதய இயக்கத்தலைவர் திரு. ஜயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் வருகைதந்தபோது எங்கழக இசைக் குழுவினர் இராமகீதம் இசைக்கின்றனர்.
14- 1-69	பொங்கல் படைத்து மகிழ வீடுசெல்கின்றோம்.
20- 1-69	பாலித்தீவுப் பிள்ளையாரைப் பயபக்தியுடன் வரவேற்றுப் பாடித் துதிக்கின்றோம்.
22- 1-69 23- 1-69	விடுகை வருடமாணவிகள் சிரமதான இயக்கத்தில் விருப்புடன் ஈடுபடுகின்றனர்.
30- 1-69	அண்ணல் காந்தியின் அமரதினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.
4- 2-69	தேசியக் கொடியைப் பறக்கவிட்டுச் சுதந்திரதின விழாவைக் கொண்டாடுகின்றோம்.
11- 2-69	இல்லங்கள் மூன்றினிடையே இன்பமான கதைப்போட்டி நடைபெறுகின்றது.
15- 2-69	நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் சிவராத்திரி விழாவில் பேராசிரியை செல்வி. சௌந்தரம் சந்தனநங்கை தலைமையில் எங்கழக இசைக் குழுவினர் கலந்து வழிபாட்டிசையால் பக்தர்களைப் பக்தியில் ஆழ்த்துகின்றனர்.
17- 2-69	விடுகை வருட வனிதையர் யாவரும் விருப்புடன் படிப்பித்தற் பயிற்சிக்குச் செல்கின்றனர்.
25- 2-69	முதலாம் வருடத்தவரான எழுபத்துமூன்று முத்துமணிகளை முகமலர்ந்து வரவேற்கின்றனர்.
10- 3-69	சுகாதார விழாவையிட்டுச் சுற்றுடலைச் சுத்தம் செய்கின்றோம். அயலிலுள்ள இராமகிருட்டின பாடசாலையின் சுகாதார விழாவில் பங்குகொள்கின்றோம்.
12- 3-69	வடமாநில கல்வி அதிகாரி திருமதி. பாமர் அவர்கள் தலைமையில் இல்லங்களிடையே நாடகப்போட்டி விறுவிறுப்பாக நிகழ்கின்றது.
31- 3-69	முதலாம் பருவ விடுமுறைநாள்; முகமலர்ச்சியுடன் மனைகளை அடைகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் பருவம்

25- 4-69 வனிதையர் விடுமுறை முடிந்து விருப்புடன் வந்து கலாசாலையைக் கலகலப்பாக்குகின்றனர்.

1- 5-69 1963-ம் ஆண்டு இங்கு கடமையாற்றிய பேராசிரியை திருமதி. ம. திருச்சிற்றம்பலம் அவர்கள் மீண்டும் எங்கழகத்திற்கு வருகை தருகின்ரூர்.

5- 5-69 } கலாசாலைக் காரிகையர் அனைவரும் கருத்துடன் சிரமதானப்
6- 5-69 } பணியில் கலந்துகொள்கின்றனர்.

12- 5-69 மெல்லியலார் இல்லங்களிடையே மெய்வல்லுனர்ப் போட்டி நடைபெறுகின்றது.

18- 5-69 இல்லங்களிடையே செய்யுள் அபிநயப்போட்டி நிகழ்கின்றது.

20- 5-69 சித்தாந்த செம்மல் திரு. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் இங்கு வருகைதந்து கருத்துநிறை உரைநிகழ்த்துகின்ரூர்.

24- 5-69 விடுகை வருட மாணவிகளின் படிப்பித்தற் பயிற்சி பரபரப்புடன் ஆரம்பிக்கின்றது.

2- 6-69 வள்ளுவப் பெருந்தகைக்கு நல்ல விழா எடுக்கின்றனர்.

9- 6-69 சங்கீத கலாநிதி சித்தூர் திரு. சுப்பிரமணியம்பிள்ளை அவர்களை இன்முகத்துடன் வரவேற்கின்ரோம்.

24- 6-69 அரிவையர் அனைவர்க்கும் நடுப்பருவத் தேர்வுப் பரீட்சை ஆரம்பமாகின்றது.

27- 6-69 ஊர்வலமாகவந்த நாவலர்சிலைபக் கோவைக் கழகப்பாவையர் அனைவரும் குதூகலத்துடன் கீதம்பாடி வரவேற்கின்றனர்.

30- 6-69 இந்தியா தந்த இலக்கிய மேதையாகிய திரு. ஜனர்த்தனம் பிள்ளை அவர்கள் எங்கழகத்திற்கு வருகைதந்து 'கம்பன் கண்ட விசுவாமித்திரரிடம்' எம்மை அழைத்துச் செல்கின்ரூர்.

5- 7-69 காரிகையர்கூடி கிறிஸ்தவதின விழாவைக் களிப்புடன் கொண்டாடுகின்றனர்.

5- 7-69 இல்லங்களிடையே இன்னிசைப் போட்டி இனிதே நடந்தேறுகின்றது.

10- 7-69 இசை மன்னர் திரு. சித்தூர் சுப்பிரமணியம்பிள்ளை அவர்கள் இசைவிருந்து அளித்து எம்மை மகிழ்விக்கின்றனர்.

11- 7-69 விடுகை வருட மாணவிகள் கிளிநொச்சி முகாமுக்குச் சென்று குருளையர் பயிற்சிபெற விரைகின்றனர்.

13- 7-69 குருளையர் பயிற்சிமுடிந்து அரிவையர் கழகம் அடைகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16- 7-69 விவசாயப் பேராசிரியை செல்வி. மே. ஜை. மே. பாக்கியம் அவர்கள் எங்கழகத்துக்கு வருகை தருவதைக் கண்டுவகை கொள்ளுகின்றோம்.

27- 7-69 செந்தமிழ்ச் செல்விக்கு சிங்காரிகள் சேர்ந்து சிறப்புவிழா எடுக்கின்றனர்.

2- 8-69 கல்வி நூற்றாண்டு விழாவின் காரணமாய் அமைந்த சியவசக் கண்காட்சியைக் கண்டுகளிக்கக் கழகத்தினர் கொழும்புமா நகர் விரைகின்றனர்.

7- 8-69 நடுப்பருவ இறுதிநாள்; ஆசிரியமாணவிகள் அனைவரும் இல் லங்கட்கு ஏகுகின்றனர்.

மூன்றும் பருவம்

1- 9-69 1963 ஆம் ஆண்டு பணியாற்றிய செல்வி. செல்லப்பா அவர் கள் மீண்டும் இங்கு வருவதைக்கண்டு உவகை கொள்கின்றோம்.

11- 9-69 3-ம் பருவத் தொடக்கம் பாவையரனைவரும் பயிற்சிக் கழ கத்தை அடைகின்றனர்.

26- 9-69 யாழ். நகர்த் திறந்தவெளி அரங்கில் "தேரோட்டிமகன்" என்னும் நாடகத்தை நடாத்தி ரசிகர்களை மகிழ்விக்கின்றனம்.

27- 9 69 இலவசக் கல்வித்திட்டத்தை ஈழத்துக்குதவிய முன்னாள் கல்வி மந்திரி கௌரவ C. W. W. கன்னங்கரா அவர்களின் மறைவை யொட்டி அன்னாரின் ஆன்ம சாந்திக்காக அனைவரும்கூடி இறை வழிபாடாற்றி அவர் பணியைப் பாராட்டிப்பேசுகின்றோம்.

2-10-69 காந்தி மகானின் நூற்றாண்டு விழாவைக் கலாசாலை மாண விகள் குதூகலமாகக் கொண்டாடுகின்றோம்.

6-10-69 விடுகைவருட மாணவிகள் வீட்டுப் பராமரிப்பாளர் பயிற்சிப் போட்டியிற் கலந்து கொள்கின்றனர்.

10-10-69 சென்ற் யோன்ஸ் பிறிக்கேட் விழாவில் பங்குகொண்டு எங்கழக மாணவிகள் வீட்டுப் பராமரிப்பாளர் பயிற்சிப் போட்டியிற் கலந்து முதலாம், இரண்டாம் இடத்தைப் பெற்று வெற்றிக் கேடயமும், கிண்ணமும் பெறுகின்றனர்.

11-10-69 இரண்டாம் வருட இறுதிப் படிப்பித்தற் பரீட்சை தொடங்கு கின்றது.

3-12-69 கழகப் பயிற்சியை முடித்துக்கொண்டு கலாசாலை நினைப்புடன் இல்லம் ஏகுகின்றனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கழக ஆளுமன்றம்

ஆள்பதி

திருமதி. இ. ஆனந்தக்குமாரசாமி (அதிபர்)

முதல் அமைச்சர்

செல்வி. பராசக்தி சுப்பிரமணியம்

உதவி அமைச்சர்

திருமதி. மாணிக்கசோதி இம்மானுவல்

கல்வி அமைச்சர்

செல்வி. மகிழ்மணி செல்லையா

கலாச்சார அமைச்சர்

செல்வி. தனேஸ்வரி ஆறுமுகம்

போக்கு வரத்து அமைச்சர்

திருமதி. சந்திரகாந்தி சிவரட்ணம்

சுகாதார அமைச்சர்

செல்வி. மேபிள் பெர்னன்டோ

விவசாய அமைச்சர்

திருமதி. சரோஜினி இராசசுந்தரம்

உணவு அமைச்சர்கள்

1-ம் தவணை :— திருமதி. செல்வமணி கந்தப்பு
2-ம் தவணை :— திருமதி. நவமணி தங்கராசா
3-ம் தவணை :— திருமதி லூர்த்தம்மா சந்தியாப்பிள்ளை

வகுப்புத் தலைமை மாணவிகள்

2-ம் வருடம் A :— செல்வி. இராசேஸ்வரி சின்னத்துரை
2-ம் வருடம் B :— செல்வி. பிறிஜற் ஸ்ரனிஸ்லாஸ்
1-ம் வருடம் A :— செல்வி. பரிமளம் சின்னத்தம்பி
1-ம் வருடம் B :— செல்வி. ரோசலின் சீமாம்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதிபருடன் கழக ஆளுமன்ற உறுப்பினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்துத்தமிழ் மகளிர்க்கென்று இயங்கி வருவது கோப்பாய் ஆசிரியர்கழகம்; இதன் புகழ் குன்றின் மேலிட்ட தீபமென ஒளிகாணக் காரணியாக இருப்பது எங்கழக ஆளு மன்றம்;

தமிழ்மகளிர் நிலைக்கண்ணுடியாகவும், தமிழர் சமுதாயப் பிரதிபிம்பமாகவும் காட்சி தருவது நமது கலைக்கழகம். இதற்கு ஆணிவேராக நின்று தொழில்புரிவது நமதுமன்றம்: எங்கழக ஆளுமன்றம் கலாசாலையின் வளர்ச்சிக்காகவும் மாணவர்களின் முன்னேற்றத் திற்காகவும் அரிய சேவையாற்றிவருகின்றது. எமது மாணவ சமுதாயத்தின் குறைகளைக் களைந்து பொதுச் சேமத்தையும் கூட்டுறவையும் வளர்க்கிறது. அன்றியும் ஜனநாயக ஆட்சிமுறையில் பயிற்சியும் தேர்ச்சியும் நல்கி எமது மாணவிகளைச் சிறந்த பிரசைகளாக வாழவகுப்பதும் எமது ஆட்சி மன்றம்.

எமது கழகத்தின் நிர்வாக அலுவல்களில் உயர் திரு. அதிபர் அவர்கட்கும் பேரா சிரியர்கட்கும் நம் ஆளுமன்ற உறுப்பினர்கள் உதவிவருகின்ருர்கள். ஆட்சிமன்றத் துணையின்றி விழாக்களோ, கலைநிகழ்ச்சிகளோ, வேறுகூட்டங்களோ நடைபெறுவதில்லை என்று சொல்வதில் பெருமைப்படுவதோடு நமது மன்றத்தின் தலையாயபணியின் சிறப் பினையும் பிரகடனப்படுத்திக் கொள்கின்றேன். இம்மன்றத்தின் ஆள்பதியாக உயர் திரு. அதிபர் அவர்களே அமர்ந்தமை எமது பெரும்பேறே. அன்னர் ஆள்பதியாக மட்டு மன்றி எமது ஆதர்ஸ புருடராகவும் ஒளிர்பவர். அப்பெருந்தகைக்கும் ஆட்சிமன்றத் தின் உயர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருக்கும் பேராசிரியர் பெருமக்கட்கும் உறுப்பினர்கட்கும் எமது உளமார்ந்த நன்றி;

வாழ்க எமது ஆசிரியர் கழகம்; வளர்க எமது ஆட்சிமன்றம்.

செல்வி. பராசக்தி சுப்பிரமணியம்.
முதல் அமைச்சர்;

உள்ளத்தின் அந்தரங்கமான சுத்தமான ஆசை எப் போதும் நிறைவேறிக் கொண்டுதான் வருகிறது. என் சொந்த அனுபவத்திலேயே இந்த நியதியை அடிக்கடி கண் டிருக்கிறேன்.

மகாத்மா காந்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மன்றம்

காப்பாளர் : செல்வி. க. சௌந்தரம் சந்தனநங்கை

தலைவர் : செல்வி. புனிதவதி பொன்னம்பலம்

செயலாளர்கள் : திருமதி. இராஜராஜேஸ்வரி வல்லிபுரம்
திருமதி. பரமேஸ்வரி முருகேசு

பொருளாளர் : திருமதி. தங்கமணி சிவபாலன்

தேனினுமினிய நந் தமிழ்மொழியின் சீரினையும் சிறப்பினையும் மேன் மேனும் மிளிரச்செய்தல் வேண்டுமென்ற இலட்சிய அடிப்படையில் எமது கோவைக் கழக நங்கையரால் அமைக்கப்பட்டதே இம்மன்றமாகும்.

இம்மன்றத்தில் அங்கம்வகிக்கும் எங்கழக நங்கையர் யாவரும் திங்க ளொருமுறை கூடுவோம். தமிழ்த்துறையில் பாண்டித்தியம் பெற்றுவிளங்கும் பெரியார் பலரையும் அழைத்து அவர்கள் சொரியும் செந்தமிழ் மழையில் நாமும் நனைந்து நனைந்து இன்புறுகின்றோம். தமிழ்த்தொண்டாற்றிய பெரியார் களுக்கு விழாவெடுத்து அப்பெருமக்களைப்பற்றிய மேன்மையான எண்ணங் களில் மூழ்கித் திளைக்கின்றோம். இவைமட்டுமன்றி உரையரங்கம், கருத்தரங் கம், நாடகம், நடனம், அபிநயம், ஈற்றெழுத்துப்போட்டி போன்ற பல்வகை யான நிகழ்ச்சிகளுக்கும் இடமளித்து எங்கழக நங்கையர் தத்தம் ஆற்றல் களை வெளிப்படுத்த வாய்ப்பளிக்கின்றோம்.

எங்கழகம் தோன்றிய காலந்தொட்டுக் கடந்த இருபத்துமூன்று ஆண்டு களாக எம்மன்றம் தமிழ்மொழியின் வளர்ச்சிக்கென அளப்பரிய தொண்டு களைச் செய்துவருகின்றது.

இம்மன்றத்தின் வளர்ச்சிக்கு ஆதரவு தந்து எம்மை ஊக்குவித்துவரும் எங்கள் அன்பிற்குரிய அதிபர் அவர்கட்கும் மன்றத்தின் காப்பாளராக இருந்து மன்றம் திறம்படச் செயலாற்றுவதற்கு வேண்டிய அறிவுரைகளை நல்கி எம்மை வழிநடாத்தும் எங்கள் தமிழ்ப் பேராசிரியர் செல்வி. க. சௌந்தரம் சந்தன நங்கை அவர்கட்கும், மன்ற நிகழ்ச்சிகளிற் பங்குகொண்டு சிறப்பிக்கும் எம் மாணவ சகோதரிகட்கும் எமது உளமார்ந்த நன்றி உரித்தாகுக.

திங்களொருமுறை கூடும் எம்மன்றம் வளர்பிறைத் திங்களைப்போல மேன்மேலும் வளர்ச்சியடைந்து நற்பணிகள் புரியவேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

திருமதி. இ. வல்லிபுரம், திருமதி. ப. முருகேசு.
மன்றச் செயலாளர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுண்கலை மன்றம்

மன்றக் காப்பாளர் : திருமதி. பொ. பத்மநாதன்

தலைவர் : திருமதி. இ. மயில்வாகனம்

செயலாளர் : திருமதி. பூ. அந்தோனிப்பிள்ளை

செவிக்கும் மனதிற்கும் இன்பம் பயப்பது கலையாகும். அது உள்ளத்தை உருக்கி மனத்தைத் தூய்மை பெறச்செய்யும்.

கலைமகளின் அருளினைப் பெற்ற எம் கலாசாலை நுண்கலை மன்றம் பல கலைகளிலும் தேர்ச்சிபெற ஆசிரிய மாணவிகளுக்கு அரிய சந்தர்ப்பத்தைக் கொடுத்திருக்கிறது.

மாதம் ஒருமுறை கூடும் இம்மன்றத்திலே இசைவல்லுனர், நடன வல்லுனர் என்பவர்கள் தமதறிவை விருத்தியாக்குவதுடன் மற்றையோரும் பயன்பெற உதவிவருகின்றனர்.

இங்கு இவ்வாண்டிலே சித்தூர் சுப்பிரமணியஐயர் நுண்கலை மன்றச் சார்பில் இசைவிருந்தளித்தமை மகிழ்ச்சிக்குரியதாகும்.

இந்நுண்கலை மன்றம் ஊக்கமுடன் வளர உதவிய எம் அதிபர் அவர்கட்கும் அரிய உதவிகளைப் புரிந்து எம்மை ஊக்குவித்த மன்றக் காப்பாளரான சங்கீத விரிவுரையாளர் அவர்கட்கும் எம்மன்றச் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்மன்றம் மேலும் அரிய கலைகளை எல்லாம் வளர்த்துச் சிறப்புற வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

அ. பி. பூமணி.
மன்றச் செயலாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக இயல் மன்றம்

காப்பாளர் : திருமதி. சு. செல்வத்துரை

தலைவர் : திருமதி. க. நவரத்தினம்

செயலாளர் : திருமதி. தெ. விசுவலிங்கம்

பொருளாளர் : திருமதி. செ. இராசரத்தினம்

நாம் இன்று ஜனநாயக உலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இன்றைய சிறுர்களே நாளைய தலைவர்கள். அத்தலைவர்களை உருவாக்கும் பொறுப்பு ஆசிரியர் கையிலேயே தங்கியிருக்கின்றது. ஆகவே, ஆசிரியர் சிறந்த முறையில் பயிற்சிபெறவேண்டியது அவசியம். எங்கலாசாலையிலிருக்கும் இச்சமூக இயல் மன்றம், ஆசிரிய மாணவிகளுக்கு இத்துறையிற் பயிற்சிபெற அரிய சந்தர்ப்பத்தைக் கொடுக்கிறது

மாதம் ஒருமுறை கூடும் இம்மன்றத்தின் பல்வேறுவகைப்பட்ட நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன. இம்மன்றத்தின் சார்பில் சமூகசம்பந்தமான கருத்தரங்குகள், விவேகச்சக்கரம், நாட்டுப்பாடல்கள்போன்ற நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன. சென்ற ஒக்டோபர் மாதம் 24-ம் திகதி எமது கலாசாலையில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம்பற்றிய கட்டுரைப்போட்டியும், பொது அறிவுப் போட்டியும் நடைபெற்றது. இதனால், ஒருவன் பலருக்காகவும், பலர் ஒருவருக்காகவும், வாழவேண்டுமென்ற கோட்பாட்டின்படி சமூகத்துடன் வாழ வேண்டுமென்ற முறையைப் பண்புடன் பயின்றுகொள்கிறோம்.

இம்மன்றத்தின் வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் அயராது அளித்து உற்சாகப்படுத்தும், மாண்புமிக்க அதிபர் அவர்களுக்கு எமது நன்றி உரித்தாகுக. இம்மன்றக் காப்பாளராக இருந்து, இம்மன்றம் மேலான வளர்ச்சி பெறவும், நன்முறையில் திறம்படச் செயலாற்றவும், அரிய ஆலோசனை பல கூறி எம்மை ஊக்குவித்துச் செயற்படுத்தும் அறிவுசால் பேராசிரியர் திருமதி. சு. செல்வத்துரை அவர்கட்கு நாம் என்றென்றும் கடப்பாடுடையோம். எம்மன்றத்தினுல் நடாத்தப்படும் நிகழ்ச்சிகளிற் பங்குகொண்டு தமது ஒத்துழைப்பை நல்கி எமது மன்றத்தைச் சிறப்பித்த மாணவ சகோதரிகட்கும் எமது நன்றி உரித்தாகுக.

இம்மன்றம் மேன்மேலும் சிறந்து விளங்கி நற்பணிபுரிய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

திருமதி. தெ. விசுவலிங்கம்,
மன்றச் செயலாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து மகளிர் மன்றம்

காப்பாளர் : செல்வி. க. சௌ. சந்தனநங்கை

தலைவர் : திருமதி. இ. சிங்காரவேலு

செயலாளர் : திருமதி. க. நவரத்தினம்

பொருளாளர் : திருமதி. ந. கெங்காதரம்

நாம் மானிடப்பிறவி எடுத்ததன் நோக்கம், பரமகருணைநிதியாகிய இறைவனை வழிபட்டு, அவர் திருவடி நீழலையடைதலேயாகும், இதனைக் கருத்திற் கொண்டே எங்கழக இந்து மகளிர் மன்றம், உரிய முறையில் இறை வழிபாட்டை நடாத்திவருகின்றது. காருண்ணியசீலராகிய சிவனின் மகிமை மிக்க இரவை நான்கு சாமமும் பூசனைசெய்து சிறப்புறச்செய்கிறது. சைவம் தழைத்தோங்கும் வண்ணம் தோன்றிய சமய குரவர்களின் குருபூசைத் தினங்களைப் பண்பொடு பாடிக்கொண்டாடி வருகின்றது. மேலும் சகல கலைகளையும் நல்கும் சக்தியின் விழாவாம் நவராத்திரியைப் பக்திசிரத்தையுடன் பாங்காக நடாத்தி வருகின்ரோம்.

தமிழகத்திலிருந்து ஈழநாட்டிற்கு வருகைதந்த சித்தாந்த வித்தகர் சோமசுந்தரஞ் செட்டியார் அவர்களின் இனிய சொற்பொழிவை இன்புடன் கேட்கும் வாய்ப்பை எம்மன்றம் ஆக்கித்தந்தது. மேலும் பாலித் தீவிலிருந்து ஈழத்திற்கு எழுந்தருளிய வினைகள் தீர்க்கும் விக்னேஸ்வரனைத் தரிசிக்கும் பேற்றையும் எம்மன்றம் எமக்களித்தது. இவ்வாறு சமய முயற்சியில் ஈடுபட எமக்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்தவர் எம்மன்றக் காப்பாளர் செல்வி. க. சௌ. சந்தனநங்கையாவர். அன்னருக்கு எம்மன்றம் நன்றி நவில்கின்றது. அன்றி அன்னையாம் அதிபர் திருமதி. இ. ஆனந்தக்குமாரசாமி அவர்களுக்கும், மற்றும் ஏனைய பேராசிரியர்களுக்கும் மன்ற உறுப்பினருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிரோம்.

இன்றைய சிறார்களிடையே சமயப்பற்றை மாணவர்கள் உணரும்வண்ணம், போதிக்கவும், சாதிக்கவும் ஆற்றல்பெற்ற ஆசிரியர்களை உருவாக்கி உலகிற்கு உதவுவதையிட்டு நாம் பெருமிதம் அடைகிரோம்.

திருமதி. க. நவரத்தினம்.
மன்றச் செயலாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறீஸ்தவ மகளிர் மன்றம்

காப்பபளர்: { சங். சகோதரி ஜெறடீன்
திருமதி. R. H. ஹூல்

தலைவர் ; சங். சகோதரி வுளோரு

செயலாளர் : திருமதி. இராஜராஜேஸ்வரி மயில்வாகனம்

பொருளாளர் : திருமதி. பொன்ரூஸ் சந்தாம்பிள்ளை

மகிழ்ச்சிக்குரியதான இவ்வாண்டிற்குரிய கிறீஸ்தவ மன்ற அறிக்கையைச் சமர்ப்பிப்பதில் நான் பேருவகை கொள்கிறேன். இங்கு இவ்வாண்டுத் தொடக்கத்தில் புதிய இருபத்தேழு அங்கத்தவர் சேர்ந்தனர். இதனுல் இம்மன்ற அங்கத்தவர் நாற்பது ஆகியது எங்கழகத்தில் எம் அங்கத்தவர் தொகை குறைவாயினும் ஏனைய மாணவர்களுக்குக் கிடைக்கும் சகல உரிமைகளும் சலுகைகளும் எமக்கும் அளிக்கப்பட்டிருப்பது போற்றுதற்குரியது.

மறைக்கல்வி அளிக்கும் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருப்பதுடன் கிறீஸ்தவதினம் கிறீஸ்து ஜனனதினம் என்னும் திருநாட்களை ஏனைய சோதரிகளுடன் சேர்ந்து சிறப்புடன் நடாத்தி வருகிறோம் இங்கு இவ்வாண்டு கிறீஸ்தவதினம் திவ்விய பலிப்பூசையுடனும் விவிலிய வழிபாட்டுடனும் கிறீஸ்து பிறந்ததினம் குதூகலத்துடனும் நிறைவெய்தியது மகிழ்ச்சிக்குரியது.

இவ்வரிய சலுகைகளை எமக்குஉதவி ஆலோசனைகளையும் நல்கி எம்மை ஊக்குவிக்கும் எம் அதிபரின் உள்ளப்பாங்கினை நாம் மெச்சுவதுடன், எம் மன்றம் உளங்கனிந்த நன்றியினையும் சமர்ப்பிக்கின்றது. இம்மன்றம் மேன்மேலும் வளர்ந்துவர உதவி அளிக்கும் எமது சமய விரிவுரையாளருக்கும், ஏனைய பேராசிரியர்களுக்கும் பயிற்சிபெறும் எம் சகோதரிகட்கும் மனமுவந்த நன்றியைத் தெரிவித்து நிற்கின்றோம்.

திருமதி. இராசேஸ்வரி மயில்வாகனம்,
செயலாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டு மன்றம்

போஷகர் : திருமதி. டி. தர்மராசா

விளையாட்டுத் தலைவி : திருமதி. ம. மனோகரன்

விளையாட்டு உபதலைவி : திருமதி. பா. கந்தையா

விளையாட்டு சமுதாயத்திலே பிரிக்கமுடியாத ஓர் அங்கமாக அமைந் திருக்கின்றது. அது மனித பண்புகளையும், சமுதாயப் பண்புகளையும் வளர்ப்ப தோடு உறுதியான உடலையும் தந்து ஒவ்வொரு மனிதனையும் மனிதனுக்கின் றது. வளமான சீரிய வாழ்விற்கு வேண்டிய நற்பண்புகளைப் பயிற்றி நல்ல தோராசானுக விளங்க எங்கழகம் உதவிபுரிகின்றது.

இன்னும் வருடந்தோறும் இல்லங்களிடையே வலைப்பந்தாட்டப்போட்டி, மெல்வல்லுனர்ப்போட்டி, விளையாட்டுப்போட்டி முதலியவற்றையும் நடத்து கின்றது. தனி ஒரு நிகழ்ச்சியில் வெற்றி பெற்ற இல்லத்திற்கும் முழுமை யாகத் திறமைமிக்க இல்லத்திற்கும், கலாசாலை வீராங்கனைகளுக்கும் முறையே வெற்றிக்கிண்ணமும், கேடயமும். வீராங்கனைக் கிண்ணங்களும் அளித்து எங்கழகம் மகிழ்கிறது. இவ்வாண்டில் கோவைமக்கள் வியத்தகுமுறையில் வெகு சிறப்பாகத் தம் விளையாட்டுப்போட்டியை நடாத்தியமை குறிப்பிடத் தக்கதாகும்.

ஆங்காங்கு குடாநாட்டின் பல திசைகளையும் துருவிப் பார்த்துத் திறமை மிக்கோரை அழைத்து மத்தியஸ்தம் வகிக்கச் செய்வதும், அவர்களின் அறி வுரைகளைக் கேட்பதும் எம் வழக்கமாகும். ஆண்டுதோறும் நிகழும் போட்டி களைச் செவ்வனே நடாத்த அதிபர், போராசிரியர்கள் அயராது உழைத்தமை மன்றத்தை மேன்மேலும் பலப்படுத்தியது. அவர்களுக்கும் விசேடமாக உடற் பயிற்சிப் போராசிரியருக்கும் எனது நன்றி உரித்தாகுக. எம் மன்றம் மேன் மேலும் ஓங்க மனமார வாழ்த்துவோமாக.

வாழ்க எங்கழகம் !

ம. மனோகரன்.
விளையாட்டுத் தலைவி;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருணை இல்லம்

இல்லத் தாய்மார்கள் : திருமதி. சு. செல்வத்துரை
திருமதி. பொ. பத்மநாதன்

இல்லத் தலைவி : திருமதி. செ. இராசரத்தினம்

இல்ல உபதலைவி : திருமதி. நா. மோகன சுந்தராராசா

இவ்வுலகின் கண் இருள் கடிந்து இன்னுயிர் எல்லாம் இறும்பூதெய்த இலங்கிடும் இரவியின் நாமம் பூண்டு மாண்புறு மன்னுயிரிலும் மேம்பட்ட தெங்கினைச் சீர் பெறு சின்னமாகக் கொண்டு திகழ்வது எமதில்லம். செங் கதிர் கொண்டு செம்மலகற்றும் செஞ்சுடரினை விளக்கச் செந்நிறம் எமதில் லத்திற்குச் சாலவும் பொருத்தமாய் அமைந்துள்ளது.

நலமிக்க நங்கையர் நாற்பத்தைவரைக் கொண்ட தெமதில்லம். சகல நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றி இல்லத்தின் மாண்பை மிளிரச் செய்கிறது. நாடகப் போட்டி, செய்யுள் போட்டி, பேச்சுப் போட்டி என்பவற்றில் முதலி டத்தைப் பெற்று வெற்றிவாகை சூடியிருக்கின்றது.

வீர ரமணிக்கென அளிக்கப்பட்ட 2-வது வெற்றிக் கிண்ணத்தையும் பெற்றுப் பெருமித மடைகின்றது.

எமது இல்ல அன்னையராகிய திருமதி. சு. செல்வத்துரை, திருமதி. பொ. பத்மநாதன் ஆகிய இருவரும் தம் சிரமம் பாராது அல்லும் பகலும் அயராது சகல உதவிகளையும் நல்கி எம்மை ஊக்குவித்து வருகின்றனர். அன்னருக்கு எமது உள்ளம் கனிந்த நன்றி உரித்தாகுக. நாம் வேண்டிய போதெல்லாம் எமக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த அதிபர் பேராசிரியர் அவர்களுக்கும் நாம் என்றென்றும் கடமையுடையோம். உதவி கோரிய போதெல்லாம் இன்முகத்துடன் தனது சிரமத்தையும் பொருட்படுத்தாது உதவி தந்த உடற்பயிற்சிப் பேராசிரியர் அவர்கட்கும் எமது மனங்கனிந்த நன்றி உரித்தாகுக. இந்தக் கழகம் நன்கு முன்னேறுவதற்குப் பல துறை களிலும் உதவி புரிந்த இல்லச் சகோதரிகளுக்கு எம் நன்றி உரித்தாகுக. எமது இல்லம் நலம் பெற்றுத்திகழ இறைவனை இறைஞ்சுகின்றோம்.

திருமதி. செ. இராசரத்தினம்
இல்லத் தலைவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதிபர், இல்லத்தாய்மாருடன் அருணை இல்ல ஆரணங்குகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதிபர், இல்லத் தாய்மாருடன் இராதா இல்ல இரமணிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராதா இல்லம்

இல்லத்தாய்மார்கள் : { திருமதி. J. D. பெரேரா
திருமதி. R. H. R. ஹஸன்
திருமதி. M. திருச்சிற்றம்பலம்

இல்லத்தலைவி : செல்வி. வே. திரவியநாயகம்

உபதலைவி : திருமதி, ரே. பாலகிருஷ்ணர்

மங்கையர் மனதெலாம் நிறைந்த மாண்பு மிகு பெயரைத் தன் நாம மாகவும், உலகுக் கெல்லாம் பயிர் பச்சைகளை வளர்த்து உணவும் சீரும் அளித்து, உயிர் ஓம்பும் இளஞாயிறைத் தன் சின்னமாகவும் பெற்றுப் பெருமை கொண்டதுதான் நம் இராதா இல்லம்.

கடமையே கண்ணியமாகக் கொண்ட பண்புசால் மங்கையர் நாற்பத் தொருவரைக் கொண்ட நமதில்லம் வருடா வருடம் நடந்து கொண்டிருக்கும் பல நிகழ்ச்சிகளிலும் வெற்றி பெற்று முன்னணியில் நிற்பது யாவரும் கண் டதே.

பேச்சுப்போட்டி, கதைப்போட்டி, உடற்பயிற்சி போன்றவற்றில் மற்ற வர்கள் பாராட்டக்கூடிய அளவிற்கு வெற்றியைப் பெற்றும், இசைப்போட்டி நாடகப் போட்டி மெய்வல்லுனர்ப் போட்டிகளில் முன்னணியில் நிற்பது நமதில்லமே. இல்ல அலங்காரப் போட்டியில் எமது இல்லம் முதலாம் இடத் தைப் பெற்றிருந்தும் என்றுமில்லாதவாறு பார்வையாளரின் பெரும் பாராட்டு தலுக்குள்ளானது குறிப்பிடக்கூடியது. வலைப்பந்தாட்டப் போட்டியில் முன் னணியிடங்களைக் கைப்பற்ற முடியாவிட்டாலும் மற்றைய வீர ரமணிகளை எளி தில் வெற்றிசூடி விடமுடியாதபடி களைக்க வைத்தமை பெருமைக்குரிய விடயம்.

எமதில்லத்தில் தாய்மார்களான J. D. பெரேரா அவர்களினதும், திருமதி. R.H.R. ஹஸன் அவர்களினதும், திருமதி. M. திருச்சிற்றம்பலம் அவர்களினதும் பண்பும், இளகிய குணநலமும் அவர்களது அயராத உழைப்புமே எமதில்ல வெற்றிக்குக் காரணமாகும். வெற்றியையும் தோல்வியையும் மனம் சலிக் காது, சமநிலையில் ஏற்றுக் கொள்ளும் இவர்களது இனியபண்பே எமதில்ல மாணவர்கள் உற்சாகத்துக்கு உறுதுணையாக நின்றது. அவர்களுக்கு எம தில்லம் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றது.

எமக்கு வேண்டிய வேண்டிய நேரங்களில் எல்லாம் இன்முகம் காட்டி உதவி புரிந்த அதிபர் அவர்கட்கும், கலைத்துறைப்பணியில் எமக்குத் தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடம்பையே கவனியாது ஆசிரிய மாணவர்களின் முன்னேற்றத்துக்கு அளப் பரும் உதவிகள் புரிந்த தமிழ்ப் பேராசிரியர் அவர்கட்கும், எமக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து உழைத்த உடற்பயிற்சிப் பேராசிரியர்களுக்கும், மற்றும் உதவி நல்கிய பேராசிரியர்களுக்கும், கலாசாலை ஊழியர்களுக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம். கடந்த வருடங்களில் இராதா இல்லம் பெற்ற பெருமையைத் தொடர்ந்து காப்பாற்ற என்னுடன் ஒத்து ழைத்த என் இல்லச் சகோதரிகளுக்கும் என் உள்ளங் கனிந்த நன்றி உரித் தாகுக.

என்றும் எமதில்லம் இளஞாயிறென இலங்க எல்லாம் வல்ல இறை வனைப் பிரார்த்திக்கின்றேன்.

வே. திரவியநாயகம்
(இல்லத்தலைவி)

நேரிய பார்வையானது தொழிற்படும்போதுதான் உண் மையிலே அழகிய சிருஷ்டிகள் பிறக்கின்றன. இப்படிப்பட்ட சந்தர்ப்பங்கள் வாழ்க்கையில் அபூர்வமாக இருக்கின்றன என் ருல், கலையிலும் அவை அபூர்வமாகத்தான் இருக்கும்.

மகாத்மாகாந்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதிபர், இல்லத்தாய்மாருடன் சுவர்ணை இல்லச் சுந்தரிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவர்ணை இல்லம்

இல்லத் தாய்மார்கள் : திருமதி. லூடிவிக்கா ஜேக்கப்
திருமதி. மிதிலாதேவி தாஸ்

இல்லத் தலைவி : திருமதி. பிரான்சிஸ்கா பூமணி அந்தோனிப்பிள்ளை

உபதலைவி : திருமதி. தங்கமுத்து தம்பித்துரை

சுவர்ணம் என்னும் பெயருக்கேற்ப சுடர்ஒளி வீசிப் புகழ் கொண்டது நம் சுவர்ணை இல்லம். ஈழத்தின் வடபகுதிக்கு இயற்கை அளித்த ஒரே ஒரு செல்வமான பனைமரத்தை எம் இல்லக் கொடி சின்னமாகப் பெற்றுள்ளது.

'ஒற்றுமையே பலம்'என்ற நோக்கத்தோடு ஊக்கங் காட்டி உழைத்த நாற்பத்திரண்டு மங்கையர்களும் எம் இல்லத்தின் வெற்றிக்குப் பலவழிகளி லும் பங்குள்ளவர்கள். தளராத உள்ளத்துடன் அயராது உழைத்து கலாசாலை நிகழ்ச்சிகள் பலவற்றில் அமோக வெற்றியீட்டிப் புகழ் கொண்டது எம் இல்லம்.

ஆண்டில் அடுத்தடுத்து வந்த பல்வேறு நிகழ்ச்சிகளில் எம் இல்லம் ஈட்டிய வெற்றியை இங்கு குறிப்பிடாமல் விடமுடியாது. கலாசாலை இல்லங் கட்கிடையே நடைபெற்ற மெய்வல்லுனர்ப் போட்டியில் வீர ரமணிகளாகத் திகழ்ந்து முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டோம். அணி நடைப் போட்டியிலும் ; அபிநயப் போட்டியிலும் ; கதைப் போட்டியிலும் ; இசைப் போட்டியிலும் முதலாம் இடத்தைப் பெற்றதுடன் வலைப்பந்தாட்டப் போட்டி யில் மிகக்கூடுதலான புள்ளிகளைப் பெற்றுப் பலரின் பாராட்டையும் பெற்றுக் கொண்டோம்.

இவ் வெற்றிகள் அனைத்திற்கும் காரணராய் விளங்கிய எம் இல்லத் தாய்மார்கள் திருமதி. லூடிவிக்கா ஜேக்கப், திருமதி. மிதிலாதேவி தாஸ் அவர் கட்கும், அயராது உழைத்த சாந்தமே உருவான உடற்பயிற்சிப் போராசிரி யருக்கும் எம் உளங் கனிந்த நன்றிகள் உரித்தாகுக.

இந்நிகழ்ச்சிகளை நாம் திறம்பட நடாத்த எமக்குப் பேருதவிகளை மன மூவந்து அளித்த பெருமைமிக்க அதிபர் அவர்கட்கும் தமிழ் நிகழ்ச்சிகளில் நாம் திறமைபெற அரும்பணி புரிந்த தமிழ்ச் செல்வியாம் எம் தமிழ்ப் போரா சிரியர் அவர்கட்கும், இசையில் எம்மை முதலிடம் பெறவைத்த இசைப் போரா சிரியர் அவர்கட்கும் எமது இதயங்கனிந்த நன்றியைத் தெரிவிக்கிறோம்.

மிகுந்த அபிமானத்துடன் கடமையில் தம்மை அர்ப்பணித்துப் பண்பு டன் உழைத்த எம் இல்லச் சகோதரிகள் ஒவ்வொருவர்க்கும் எம் நன்றி யையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

எம்மில்லம் மேலும் மேலும் ஓங்கி உயர்வு பெற வேண்டுமென்பதே எமது வேண்வா. எம் இலட்சியம் நிறைவுபெற இறைவன் அருள் புரிவாராக.

அ. பி. பூமணி
இல்லத் தலைவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1969-ம் ஆண்டு பயிற்சி பெற்று ஆசிரியைகளாக வெளியேறும் மாணவிகள்

திருமதி	ஆச்சி சின்னத்தம்பி	கரவெட்டி
திருமதி	அன்னப்பிள்ளை குமாரசாமி	கொடிகாமம்
திருமதி	அந்தோனியா பிரான்சிஸ் குறூஸ்	மன்னார்
திருமதி	கனகாம்பிகை நவரத்தினம்	அரியாலை
திருமதி	கமலாம்பிகை சேதுநாதன்	புங்குடுதீவு
திருமதி	கண்ணம்மா தணிகாசலம்	நெடுந்தீவு
திருமதி	மகேஸ்வரி மனோகரன்	மட்டுவில்
செல்வி	மகிழ்மணி செல்லையா	சாவகச்சேரி
செல்வி	மங்கையற்கரசி கார்த்திகேசு	பண்டத்தரிப்பு
சிஸ்.	மேரி பொனவெஞ்சர்	யாழ்ப்பாணம்
செல்வி	மேரி பிறிச்சற் ஸ்ரனிஸ்லாஸ்	வவுனியா
சிஸ்.	மேரி வளோறு	,,
திருமதி	மேரி செல்வமணி கந்தப்பு	வெள்ளவத்தை
திருமதி	எம். ரி. மாணிக்கசோதி இம்மானுவேல்	சண்டிலிப்பாய்
செல்வி	நாகரத்தினம் இராமன்	,,
திருமதி	நல்லம்மா கெங்காதரம்	நெடுங்கேணி
திருமதி	நவமணி தங்கராசா	உடுப்பிட்டி
திருமதி	பரமேஸ்வரி முருகேசு	தருமபுரம்
செல்வி	பரமேஸ்வரி மயில்வாகனம்	வவுனியா
செல்வி	பராசக்தி சுப்பிரமணியம்	அனுராதபுரம்
திருமதி	பிராஸ்சிஸ்கா அந்தோனிப்பிள்ளை	திருநெல்வேலி
திருமதி	பொன்ரோஸ் சந்தாம்பிள்ளை	முருங்கன்
திருமதி	புனிதகுணமலர் பேரம்பலம்	ஊர்காவற்றுறை
செல்வி	புனிதவதி பொன்னம்பலம்	புன்னாலைக்கட்டுவன்
திருமதி	இராஜராஜேஸ்வரி வல்லிபுரம்	பருத்தித்துறை
திருமதி	இராஜராஜேஸ்வரி மயில்வாகனம்	பரந்தன்
செல்வி	இராஜேஸ்வரி சின்னத்துரை	சுன்னாகம்
திருமதி	இராசம்மா செல்லப்பா	கொடிகாமம்
திருமதி	இராசம் சிங்காரவேலு	நல்லூர்
திருமதி	இரத்தினபூபதி தெல்வேந்திரம்பிள்ளை	புங்குடுதீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி	இராசம்மா சண்முகநாதன்	நல்லூ··
செல்வி	இரத்தினேஸ்வரி செல்வத்துரை	அச்சுவேலி
திருமதி	ரோஸ்மலர் ஞானப்பிரகாசம்	செம்பியன்பற்று
திருமதி	சந்திரகாந்தி சீவரத்தினம்	கொடிகாமம்
செல்வி	சரஸ்வதி பரமலிங்கம்	புளியங்கூடல்
செல்வி	சரஸ்வதி வேலுப்பிள்ளை	கரவெட்டி
திருமதி	செல்வரஞ்சிதம் இராசரத்தினம்	சண்டிலிப்பாய்
திருமதி	சரோஜினிதேவி இராஜசுந்தரம்	யாழ்ப்பாணம்
செல்வி	செல்வரத்தினம் சின்னத்தம்பி	சாவகச்சேரி
செல்வி	சிவபூசணம் சுப்பையா	,,
திருமதி	சிவயோகம்மாள் செல்வரத்தினம்	சிலாபம்
செல்வி	தனேஸ்வரி ஆறுமுகம்	அச்சுவேலி
திருமதி	தங்கரத்தினம் கதிரேசு	வசாவிளான்
திருமதி	தங்கமணி சிவபாலன்	வற்றுப்பளை
திருமதி	தெய்வானை விசுவலிங்கம்	சுழிபுரம்
செல்வி	திரவியநாயகம் வேலுப்பிள்ளை	கச்சாய்
செல்வி	மேபிள் கத்தரின் பெர்ணண்டோ	நீர்கொழும்பு
திருமதி	மேரி பிலிசியா பெர்ணண்டோ	,,
செல்வி	யோகரத்தினம் செல்லையா	ஏழாலை
திருமதி	இராசம்மா இராசரத்தினம்	நவாலி
திருமதி	தையலம்மா அந்தோனிப்பிள்ளை	உருத்திரபுரம்
திருமதி	சிவயோகம் தம்பிமுத்து	மட்டுவில்
திருமதி	வரதலக்ஷ்மி குலசேகரம்பிள்ளை	கரம்பன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையத்து வாழ்வாங்கு வாழி நீவிர்

1. செல்வி. நாகரத்தினம் நடராசா
திருமதி. நா. தர்மதேவன் 1963—1964

2. செல்வி, சாருகாசினி வேலுப்பிள்ளை
திருமதி, சா. சீனிவாசகம் 1966—1967

3. செல்வி. தெய்வானைப்பிள்ளை கந்தப்பு
திருமதி, ப, தெ. நடராசா 1951—1952

4. செல்வி. பரமேஸ்வரி சின்னத்துரை
திருமதி. ப. வைத்தீஸ்வரன் 1967—1968

5. செல்வி. விமலேஸ்வரி படைவீரசிங்கம்
திருமதி. வி. நடராசா 1967—1968

6 செல்வி. செல்லப்பாக்கியம் செல்லத்தம்பி
திருமதி. செ. சிவானந்தன் 1967—1968

7. செல்வி. அம்பாலிகை விசுவலிங்கம்
திருமதி. அ. நரசிங்கவேல் 1967—1968

8. செல்வி. சரோஜினி நவரத்தினம்
திருமதி. ச. மோகன் 1967—1968

9. செல்வி. இராதா மனோன்மணி சின்னத்துரை
திருமதி. இ. குமாரசுவாமி 1967—1968



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Feel fine and look lovely

in our

Pure Silk Kanchipuram

and

Cotton Decca Sarees

Manufactured by us.

Saree Emporium

124, K. K. S. Road,

JAFFNA.

Phone 418

எங்களிடம்
சயிக்கிள்-சயிக்கிள் சாமான்கள்,
றேடியோ, பெற்ரோமாக்ஸ்,
அதற்குரிய சாமான்கள்
கைக்கடிகார வகைகள்,
கமராவகைகள், பிலிம் ரோல்கள்,
றேடியோ பற்றிகள்,
இன்னும் பலவிதமான
சாய்ப்புச் சாமான்களும் கிடைக்கும்.

ரதி வாச் வோக்ஸ் & ஸ்ரோர்ஸ்

44-46, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

மணிக்கூடு திருத்துவதில் பிரசித்தி
பெற்றவர்.

இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கட
வுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்.

நாவலர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீடி புகைப்பவர்களே—786 கல்கி பீடியைப்
உபயோகித்துச் சுறுசுறுப்பாகவும்
உற்சாகமாகவும் இருங்கள்.

வீட்டு உபயோகத்துக்கு B. C. C. தரம் மிக்க
பொருட்களை உபயோகியுங்கள்.

மற்றும் பலசரக்கு சாய்ப்புச் சாமான்களுக்கும்
இன்றே வருகை தாருங்கள்.

சி. சின்னத்துரை அன் பிரதர்,

39, காங்கேசன்துறை வீதி,

யாழ்ப்பாணம்.

போன் 284

உங்கள் நவ நாகரிகத் தேவைகளுக்கு

பல ரக மோஸ்தரில்

கிடைக்கும் பிரபல புடவை மாளிகை

ராஜ் கோபால்ஸ்

36/1, பெரியகடை, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7168

தந்தி: ராஜ்கோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தில்
பிரபல பாதரட்சை
விற்பனையாளர்கள்
டி. ஐ. டி. எஸ். ஐ. சின்வா,
பாட்டா, இலாஸ்ரோ ஆகியவற்றைக்
குறைந்த விலையில்
பெற்றுக்கொள்வதற்கு
பிரகாஸ் ஸ்ரோஸுக்கு
விஜயம் செய்யுங்கள்.
31, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

போன்: 7034
வட இலங்கையில்
முதன்மை பெற்ற
ஸ்தாபனம்
த. குமாரசாமி
ரெக்ஸ்ரையில்ஸ்
பெரியகடை, யாழ்ப்பாணம்.

அம்பிகாபதி ரெக்ரைல்ஸ்
66, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

- நீல்நூல்கள்
- நேந்தைகள்
- சில்க் நூல்கள்
- கழி நூல்கள்
- பட்டன்கள்
- எலாஸ்ரிக்

சகலவிதமான
சாய்ப்புச் சாமான்கள்
மொத்தமாகவும், சில்லறையாகவும்
மலிவாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

வெளிவந்துவிட்டது!
1: கல்விப் பொதுத் தராதரப்பத்திர
(சாதாரணப் பரீட்சை) G.C.E.(O/L)
பகுதி 1—2
பரீட்சைச் சித்திக் கேற்ற
தமிழ்மொழிப் பயிற்சிகள்
(1969 ஆம் ஆண்டு தொடக்கம் நடை
பெறும் க. பொ. த. ப. (சாதாரண)
பரீட்சைக்குரியது)
2. புதுமுறைச் சூழற்பயிற்சி 5-ம் வகுப்பு
வித்துவான் பொன். கந்தசாமி.
கிடைக்குமிடம்:
ஸ்ரீ லங்கா புத்தகசாலை,
234, கே. கே. எஸ். ரோட்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோப்பாய் அரசினர் மகளிர் கலாசாலை உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், 20 ஆம் இலக்க 5-ம் குறுக்கு வீதியில் வதியும் நிக்கலஸ் ஜேம்ஸ் அவர்களால் யாழ்ப்பாணம் பிரதான வீதியிலுள்ள அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் பதிப்பிக்கப் பெற்று 23-12-69 இல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்திற்கு நாம் ஆற்றிய 50 வருட சேவை பூர்த்தியானதை மிக மகிழ்ச்சியோடு தெரிவித்து இவ்வளவு காலமும் எங்களுக்கு ஆதரவளித்த வாடிக்கையாளர் சகலருக்கும் எமது நன்றியைக் கூறுவதுடன் மேன் மேலும் தொடர்ந்து தங்கள் பூரண ஒத்துழைப்பையும் ஆதரவையும் தருமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம்,

420, ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி எண்: **438, 537, 370.**
தந்தி; "லக்ஷ்மி", யாழ்ப்பாணம்:

யாழ்நகர் மக்களைக் கவர்ந்த சிறந்த தயாரிப்புகளுக்கு

லடன்

லடன்

- பெனியன்கள்
- ஸ்போர்ட் சேட்டுகள்

தரத்தில் உயர்ந்தவை!

LEYDEN

- ரீ சேட்டுகள்
- கால் மேசுகள்

விலையிற் குறைந்தவை!!

எங்கும் கிடைக்கும்.

ஒரு தரம் உபயோகித்துப் பாருங்கள்; உண்மை விளங்கும்.
'லடன்' என்று கேட்டு வாங்குங்கள்.

லடன் இன்டஸ்றீஸ் லிமிட்டெட்,

7, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org